உ

நவக்கிரகாய நமஃ

குருநூல் என்னும்

ஜாதக

தெளிவானந்தமணி

மூலமும் உரையும்.

இது

மார்க்கலிங்கசோதிடர் மாணுக்கர்

ஆ[illegible]ரம்பேடு. அப்பாவு சோதிடரிடம்

இருந்த ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு

காஞ்சிமாநகரம்

ஏகாம்பர முதலியார் அவர்களால்

எழுதியதை,

K. M. தெய்வசிகாமணி சோதிடரால்

புதுக்கியும் திருத்தியும் விளக்கியும்

தரப்பெற்று,

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

ரிஜிஸ்டர் காபிரைட்]

1941 [விலை ரூபா 0-0

கெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமானபேர்களுக்குக் தெரிவிப்பது யாதெனில்:— "ஜாதக தெளிவானந்தமணி" என்னும் இப்புத்தகத்தை, செஞ்சி-ஏகாம்பர முதலியார் அவர்களால் இயற்றப்பட்டு, கோளப்பஞ்சேரி-செல்லப்பமுதலியார் அவர்கள் சர்வ சுதந்தரமும் பெற்றுக்கொண்டு கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்து தான் அனுபவித்துவந்த இந்நூலை, ஷை கோளப் பஞ்சேரி. செல்லப்ப முதலியார் அவர்களிடம் சர்வ சுதந்தரமும் பெற்று எம்மால் அச்சிட்டு காபிரைட் செய்து வெளியிட்டுள்ளோம். ஆகையால் இதனை எமது உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரிவித்திருக்கிறோம்.

இப்படிக்கு,

அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்,

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

முகவுரை

ஸ்ரீசிவபெருமான் திருவருளால் இப்பூமியின்கண் உதித்த மாந்தர்கள் அனைவரும் வேதத்திலுள்ள கன்மகாண்டத்தின் வழியொழுகி ஞானம்பெற்று மோக்ஷவீடடைதலே மானிடர் கடமையாகும். இதை நிறைவேற்றுமாறு வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள யாகம் விரதம் முதலிய கிரியைகளைச் செய்வதற்கு வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் முதலிய நியதிகளை ஏற்படுத்தியுள்ளனர். மற்றும் அவர்கள்செய்த பிராரத்துவ கன்மானுபவங்களை அவரவர்கள் ஜாதகவாயிலாயுணர்ந்து பிராயச்சித்த முதலியவற்றைச் செய்து துன்பம்நீங்கி இன்புற்று வாழலாம் எனவே இச்சோதிட சாஸ்திரம் உண்டாயின. ஒருவன் தன் வாழ்நாளின் பயனை முன்னதாய்த் தெரிந்துகொள்ளவேண்டும் எனின் அதற்கு வழிகாட்டியாய் விளங்குவது சோதிட சாஸ்திரமேயாகும் என்பதில் ஐயமில்லை.

இதுவன்றி உலகில் பிறந்த மாந்தர்கள் அனைவரும் தாம் இன்புற்றிருக்கவேண்டும் என்னும் விருப்ப முண்டாகுமேயன்றி துன்பப்படக் கோருவதில்லை. அப்படி துன்பமுண்டாகிய காலத்தில் நாம் எப்போது சுகமடைவோமோ என்னும் விசாரம் அவர்களை நாடோறும் வாட்டும். தன் சுகமடையும் காலத்தையோ அல்லது கஷ்டமடையும் காலத்தையோ எவ்விதமாய் அறிந்துகொள்ளலாம் எனில், இந்த சோதிடசாஸ்திரம் ஒன்றினால் மாத்திரமே அறிய முடியும். எப்படியெனில்? இந்த சோதிடசாஸ்திரத்தின் வாயிலாய் அவ்வவர்கள் செய்துள்ள கன்மானுசாரப்படி (ஜாதகமூலமாய்) இந்த வயதில் சுகப்படுவாய் என்பதையும், இந்தவயதில் சுகப்படமாட்டாய் என்பதையும் செவ்வனே அறிதற்கு வேண்டிய மார்க்கங்களை சித்தர் முனிவர்களாலும் பண்டையகாலத்துக் கல்வியிற் சிறந்த மேதாவிகளாலும் எழுதிவைத்துள்ளதாலே யறியலாகும்.

குளிருடையவன் அக்கினியையும், தாகமுடையவன் ஜலத்தையும், பசியுடையவன் கற்பகவிருக்ஷத்தையும் நாடல் வேண்டுவது எப்படி அவசியமோ அப்படிப்போல, சுகத்தைக் கோருபவன் சோதிடத்தை நாடல்வேண்டுவது அவசியம். இவ்வகையறியாச் சிலர் சர்வேஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்கள் பலருள் சிலர் ஏழைகளாயும், சிலர் தனவந்தராயும் உள்ளனர். மற்றும் சிலர் நோயாளியாயும், சிலர் நோயற்ற வாழ்வினராயும் உள்ளனர். சிலர் அங்க ஈனராயும், சிலர் சகல லக்ஷண தேஜசு அமைந்தவராயும் உள்ளனரே;

இது கடவுளின் வஞ்சனைதானே என நிந்திக்கின்றனர். இவை அறியாமையேயாகும். எப்படியெனில்? ஒவ்வொருவரும் தாம்தாம் செய்த பூர்வ கர்மத்திற்கிடாகவே சரீரமெடுத்து அவரவர்கள் வினைக்குத் தக்கபடி சுகத்தையோ அல்லது துக்கத்தையோ அனுபவிப்பர் என்பது சித்தாந்தம். தாம் செய்த பூர்வ கர்மத்தை யறியாதவரே கடவுளை நிந்திப்பர்.

அவ்வாறு தாம்தாம் செய்த பூர்வ கர்மத்தை எவ்விதத்தால் அறியலாம் எனின்? இங்கு கூறும் சோதிட சாஸ்திரத்தின் மூலமா யறியலாம் என்பதை முன்பே கூறியுள்ளேன். அவற்றின் காரணமாகவே இந்த ஜாதக தெளிவானந்தமணி என்னும் சாஸ்திரத்தில் ஒவ்வொருவரும் விவரமாய் அறிந்துகொள்ளும்வண்ணம் நவகோட்களினது பஞ்சபலம், கிரக சத்துரு மித்துரு அங்கலக்ஷணம், அங்கஈனம் ஆகியவற்றையும் முதல்பாவகமுதல் பன்னிரண்டு பாவகபலனையும் தெரிந்துகொள்ளும் விதி, கிரக தாரதம்மியம், கிரக தாரதம்மியத்தால் அவ்வவர்கள் அடையும் பயன், இவ்வனைத்தையும் ஒருங்கே சேர்த்துத் திரட்டியுள்ளன.

இவ்வாறு செஞ்சிமாநகரம். ஏகாம்பர முதலியார் அவர்களால் சேர்த்துத்திரட்டி, கோ. செல்லப்பமுதலியார் அவர்களால் அச்சிட்டு விற்றுவந்ததைக் கிரயம்பெற்ற அ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ் அவர்கள் இந்நாலிலிருந்தவை போக மற்றுமுள்ள அரியவிஷயங்களையும் சேர்த்துத் தரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டமையால் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, பல வேறு நூற்களினின்று பாவகபலாபலன்களை விளக்கமாயும், மற்றும் அஷ்டவர்க்கம், காலசக்கரம், மாரகவிஷயம், நவாங்கிசம், பொருத்தநிர்ணயம் முதலிய விஷயங்களை விவரமாய் எவரும் எளிதில் அறியும்வண்ணமாய் சேர்த்துள்ளமையால் இதனை வாசிக்கும் எமது நண்பர்களுக்கு தமது ஐயம் ஒழிந்து தம்மிடம் வருவோரின் வாழ்நாளின் பயனை நிச்சயமாய்த் தெரிந்துரைப்பீர்கள் என நம்புகிறேன். இதிற் காணப்படாத சில விஷயங்களை எம்மால் உரை எழுதி வெளியிட்டுள்ள சோதிடக் களஞ்சியத்தில் மிகத் தெளிவாய்க்காண்க. எல்லாம் வல்ல இறைவன் இணையடியினை வாழ்த்துவோமாக.

காவேரிப்பாக்கம் }
19—7—41 }

இங்ஙனம்:
K. M. தெய்வசிகாமணி சோதிடர்.

உ

சுந்தரகணேசர் துணை

வியாழபகவான் சீஷனுக்கு உபதேசித்த

ஜாதக தெளிவானந்தமணி

குருவணக்கம்

வேதசாஸ்திர புராணங் கலைக்யானங்கள்
வேள்வியோகாதி விரதங்கள் செய்ய
போதனைசெய்திடு குருவின் பாதந்தன்னை
போற்றியே ஜோதிஷநா லாராய்ந்தன்பாய்
சாதனையாய் பிராரத்வஞ் சஞ்சிதத்தை
சார்ந்த ஆகாமியத்தின் சார்புக்கேற்க
பூதலத்தில் சுகாசுகத்தை யனுபவிக்கும்
பொருத்தமெல்லாம் போதிக்குங் குருவேபோற்றி.

சீஷன் வினவுதல்

அன்பான யென்குருவே பூலோகத்தில்
அவதரித்த மனிதர்களில் பலவாறாக
நன்மையுறுஞ் சுகமுள்ளோர் வறுமையாளர்
நல்தேகி பிணியாள ராயிருக்கும்
வன்மமென்னவென்று சந்தேகிக்கும் மாந்தர்
வையகத்தில் கடவுள்செயலென் றுரைத்தால்
இன்னவிதமாய் பகவான் செய்வதேனோ
இதன்விபர மெந்தனுக்குப் புகலுவீரே.

(இதன்பொருள்) அமராதியோர்க்குக் குருவாய் விளங்கிய வியாழபகவான் மனமகிழ்ந்து, தமது அன்பான சிஷ்யவர்க்கங்கள் சூழ்ந்திருக்கும் அலங்காரமான சபையில் பகவத்பக்தியானந்தமாய் ஞானானந்த பிரசங்கஞ் செய்துக் கொண்டிருக்கையில், பிரசங்கஞ் சிரவணஞ் செய்துக்கொண்டிருந்த சிஷ்யவர்க்கங்களில் ஒரு சிஷ்யனெழுந்து அஞ்சலியஸ்தனாய் நின்று; ஞானானந்த பிரகாசமே! காருண்யமூர்த்தியெனுங் குருநாதரே! தமது சமுகத்தில் அடியேன் மனதில். விளங்கிய சந்தேகநிவர்த்தி செய்வீரென நமஸ்கரிக்கின்றேன். சுவாமி! உலகில் பிறந்த மனிதர்களில் சிலர் தனவந்தராகவும், சிலர் ஏழைகளாகவும், சிலர் வியாதியஸ்தராகவும், சிலர் அழகானந்த முகவஜ்ஜிகாரதேஜஸமைந்த சுகதேகிகளாகவு மிருக்கின்றார்களே. இதன் காரணமென்ன? சகலரையும் பகவான்தானே சிருஷ்டிக்கின்றார். அவர் வஞ்சகமாய் சிருஷ்டிப்பாரா? அன்றியும், பகவானுக்குக் காருண்யசேகரனெனும் திருநாமம் புனைந்திருக்கின்றதை சகலரும் கவனித்திருக்கின்றார்களே; அவ்விதயிருக்க; மனிதர்களில் ஏழையாகவும், தனவந்தராகவும், அங்கஈனராகவும், அவயவலக்ஷண முடையோராகவுமிருக்கும் விபரமனைத்தும் அடியேனுக்கு விபரமாய்ச்சொல்லுவீர் சுவாமி.

வியாழபகவான் சொல்வது

என்னருமையான யெந்தன் சிஷ்யாநீயும்
　　எளிதிலுணர்ந் துன்சந்தேகங்கள் தீர்ப்பாய்
முன்செய்த வினையதனால் மனிதர்கட்கு
　　மூண்டதப்பா சுகதுக்கம் பகவானாலே
நன்மைதுன்ப மவரவர்க ளனுபவிக்க
　　நவக்ரகாதிகள் நடத்தும்வகை தானப்பா
அன்பாய்ஜாதக தெளிவானந்த மணியில்நன்றாய்
　　அறிவிப்பேன் நீஇதனைக் கவனிப்பாயே.

(இ-ள்) எனது அன்பான சிஷ்யா! நீ மிகவும் ஆவலோடுகேட்ட கேள்விக்கு யான் விபரம் சொல்கின்றேன் கவனிப்பாய். ஆதியில் பகவானால் சிருஷ்டியான மனிதர்கள் முன்செய்த பாபபுண்ணியவசத்தினால் மறுஜனனமெடுத்து சுகதுக்கமனுபவிப்பதற்காகவே பகவான் நவக்கிரகங்களெனும் அதிகாரிகளை நியமித்திருக்கின்றார். அவர்கள்தான் மனிதர்களின் பாவபுண்ணியத்திற்கிசைந்தபடி சுகாசுகவைபவங்களை அனுபவிக்கும்படியாய்ச் செய்து வருகின்றார்கள். இதன் விபரத்தை இந்த ஜாதக தெளிவானந்த மணியெனும் ஜோதிஷ சாஸ்திரத்தில் விபரமாய்க் குறிப்பித்துச் சொல்லுகின்றேன் கவனிப்பாயாக.

சிஷன் வினவுதல்

அருமறைநூல் சாஸ்திரங்க ளெந்தனுக்கு
　　அன்புடனே போதித்து ஜோதிஷத்தைத்
தருணமெனக் குரைத்திடுதற் கன்பாய்ச்சொன்னீர்
　　தயாபரரே கிரகநிலை விபரந்தன்னை
கருணையுடன் புகல்வீரென் றுமதுபாதம்
　　கருத்திலெண்ணி துதிபுரிந்து நமஸ்கரித்தேன்
குருவேஜாதக தெளிவானந்தமணி ஜோதிடத்தைக்
　　கூறுவீ ருன்பாதந் தொழுதிட்டேனே.

(இ-ள்) குருநாதா! அடியேனுக்கு நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், கலைக்யானம், மனுவிக்யானமனைத்தும் தெளிவாய்போதித்த கருணையினால் ஜோதிஷ நிலையையும், நவக்கிரகங்களின் செயலையும் இந்த ஜாதக தெளிவானந்தமணியில் எவ்விதமாய் யான் கவனிப்பதோ தெரிவிக்க வேணும் குருநாதா.

வியாழபகவான் சொல்வது

அவரவர்கள் பிறந்ததினத் தினிலமைந்த
　　அளவுபடி லக்கினங்கள் வரைந்துகொண்டு
தவறாமல் காலசக் கரமும்பின்பு
　　தசாபுத்தி அந்தரமும் பிரித்துப்பார்த்து
நவக்கிரக மொன்பதுபே ராலேவந்த
　　நற்பலனும் துர்ப்பலனும் சோதித்தெண்ணி

சிவனரு ளென்றெண்ணியே கவனிப்போர்கள்
　　சிறிதேனுங் கவலையில்லா வாழ்குவாரே.

(இ-ள்) மனிதர்கள் முன்செய்த வினையினால் மறுஜன்மமெடுக்குந் தினத்திலுற்ற வருஷம்-மாதம்-தேதி-நாழிகை-விநாடி யனைத்தும் குறிப்பித்து இலக்கின கணிதமிட்டு, அந்த சமயத்தின் நக்ஷத்திரத்திற்கிசைந்த கிரகங்களின் தன்மையை அனுசரித்து, திசாபுக்தி அந்தரபலனும் காலசக்கரம், அஷ்டவர்க்கபலனும் விபரமாய்க் கணக்கெடுத்துப் பார்த்தால் அவரவர்கள் சுகாசுகபலன்கள் விபரமாய்த் தெரியும். இதுதான் ஜாதக தெளிவானந்த மணியின் நிலையென்றறிந்து கொள்வாய்.

சிஷன் வினவுதல்

ஆசிரியா யென்குருவே நின்சொற்போல
　　அடியேனும் கவனிக்கின்றே னன்பாக
மாசிலா ஜோதிடத்தின் விபரமெல்லாம்
　　மனதிலமைந்திட வெனக்கு போதிப்பீரேல்
காசினியில் யானிதனை சகலருக்கும்
　　கணிதசாஸ்திரப் படியே சொல்லுகின்றேன்
பேசுபுக ழென்குருவே உமதுபாதம்
　　பேரோங்க யான்பணிந்து துதித்திட்டேனே.

(இ-ள்) எனது குருநாதரே! தாங்களென்மீது அருள்புரிந்து, ஜாதக தெளிவானந்தமணியின் விபரத்தை அடியேனுக்குப் புகல்வீராயின் யான் அவைகளின் உண்மை ரகஸ்யத்தை கவனித்துணர்ந்து உமது திருவருளால் உலகத்தினர்கட்குக் கற்பித்துச் சகலரும் தெளிவானந்தமாய் இருக்கும் படியாய் போதித்திடுவேன் சுவாமி.

இவ்விதங் குருவைச்சிஷன் இனிதுடன் கேட்டபோது
அவ்வியமில் லாமற்றான் அவனியிற் சகலருக்கும்
செவ்வையாய் கிரகத்தன்மை தெளிவுடன் விளங்குதற்கு
ஒவ்வியே புகலலானார் ஒழுங்குடன் கவனிப்பீரே.

(இ-ள்) இவ்விதமாய் சிஷன் குருநாதனைக் கேட்டதற்கு அவர் மனமகிழ்ந்து ஜோதிஷத்தின் தன்மையையும், கிரகங்களிருக்கும் ஸ்தானத்தின் பலாபலனையும் விபரமாகச் சொல்லுகின்றார் எ-று.

கேந்திரமும் அதன்பலனும்

வடமொழியில் கண்டகம் என்னும் பெயரானது தென்மொழியில் கண்டம் என விளங்குவதாம். அவையாவன: 1-ஜென்மலக்கினம், 2-நான்காமிடம், 3-ஏழாமிடம், 4-பத்தாமிடம் என்பனவாம். மேற்சொன்ன 1-4-7-10-ஆகிய இடங்களுக்கு ஜென்மலக்கினம் தவிர, மற்றுமுள்ள 4-7-10-ஆம் இடங்களுக்கு சுபகோட்களான சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் முதலியோர் ஆக்ஷிநாதர்களாயிருக்க, அவர்கள் கொடிய பலனைத் தருவர் எனவும், கொடியோர் என்னும் சூரியன்-செவ்வாய்-சனி முதலியோர் ஆக்ஷிநாதர்களாயின் தீயபலனைச் செய்யார் என்பதும் பொதுவிதி. அவையாவன: தாண்டவ மாலையில், "கொடியோர்கள் கேந்திரத்தோராயின் கொடார்கள் கொடிய

பலன் நல்லோர் கொடுப்பர்" என்பதால் விளக்கும். ஏனைய ஜாதக கணிதாசிரியர்களோவெனின் 1-4-ஆம் இடங்களில் சுபர்களிருக்க விசேஷ சுபபலனும், பாவர்களிருக்க அசுபபலனும், மேற்படி கேந்திரங்களான 4-7-10-க்குடையவர் குருவாயின் முழுப்பாபியும், சுக்கிரனாயின் முக்காற்பாபியும், புதனாகில் அரைப்பாபியும் ஆவர். ஏனையகோட்களாகில் விசேஷ சுபபலமென்றும் கொள்க.

திரிகோணமும் ஏனையபலன்களும்

திரிகோணம் என்பது 1-5-9-ஆம் இடங்களாகும், மேற்படி திரிகோணங்களுக்கு சுபகோட்கள் ஆதிபதர்களாக வருவது மகா சுபபலத்தைத்தரும் எனவும், கொடிய கோட்களுக்கு ஆதிபதியாகவரின் மேற்படி சுபபலத்தைத் தரமாட்டாதவர் என்பதும் பொது. மற்றும் மேலே கூறப்பட்ட 5-9-க்கு சுபர்களாயினும் பாவர்களாயினும் ஆதிபதர்களாக வரினும் அவர் தங்கள் தங்கள் திசையிலும் புக்தி அந்தரங்களிலும் விசேஷ நன்மையைத் தருவர் என்பது சிறப்புவிதியாகும்.

2-11-ஆம் இடத்தியல்பு

ஜென்ன லக்கினத்திற்கு 2-11-ஆம் இடங்களுக்கு ஆதிபதர்கள் சுபகோட்கள் என்னும் சந்திரன்-புதன்-குரு-சுக்கிரன் முதலியோராய் வருவது மகா உசிதமெனவும் மேற்சொன்ன சுபகோட்கள்போக ஏனைய கோட்கள் ஆதிபதர்களாக வருவது அசுபம் என்பதும் பொதுவிதி. மற்றும் பலன்களை மேற்படி 2-11-க்குடையவர் தத்தமது க்ஷேத்திரங்களுக்கு எத்தனையாம் ராசியிலிருக்கின்றனர் என்பதை ஆராய்ந்து பலாபலன்களை நிச்சயித்தல் வேண்டும்.

3-6-8-12-ஆம் ஸ்தானங்களினியல்பு

3-6-8-12-ஆம் ஸ்தானங்களைப் பொதுவிதியால் கொடிய ஸ்தானம் என்பர். அதில் மூன்றும் இடம் என்பது கால் பாபம். 6-ஆம் இடம் என்பது அரைப்பாபம். 8-ஆம் இடம் என்பது முக்கால் பாபம். 12-ஆம் இடம் என்பது முழுப்பாபம் எனவுங் கூறுதல் வேண்டும். இந்நான்கு ஸ்தானங்களையுங் கொடிய ஸ்தானம் எனக் கூறியதற்குக் காரணம் என்னவெனில், சுகஸ்தானம் என்பது 4-ஆம் இடம் ஆதலால் மேற்படி சுகத்தானத்திற்கு விரயம் என்னும் 12-ஆம் ராசியானது ஜென்மலக்கினத்திற்கு மூன்றாமிராசியாவதாலும், களத்திரத்தானம் என்னும் 7-ஆம் ராசிக்கு விரயம் என்கிற 12-ஆம் ராசியானது ஜென்மலக்கினத்திற்கு 6-ஆம் ராசி யாவதாலும், பாக்கியத்தானம் என்கிற 9-ஆம் ராசிக்கு விரயமாகிய 12-ஆம் ராசியானது ஜென்மலக்கினத்திற்கு எட்டாம் ராசி யாவதாலும், இந்த ஸ்தானங்களைக் கொடிய ஸ்தானம் எனக் கூறியுள்ளனர். இதுபற்றியே மேற்படி 3-6-8-12-ல் பாவர்களிருக்கவேண்டும் என்றனர். அவையாவன: கொடியவர்களில் பெயர்பெற்ற ராகு-கேது மேற்படி ராசியிலிருப்பது நன்மையாம்.

இதுகாறுங் கூறிவந்த ஸ்தான விவரங்கள் யாவும் பொதுவிதியேயன்றி சிறப்புவிதி யல்லவாதலால், சிறப்புவிதியினை அந்தந்த பாவங்களிற் கண்டு பலன் சொல்லுக.

கிரககாரகங்கள் சூரியன்

சூரியன் சிவதேவதை, தாம்பிர வஸ்து, பிதுர்காரகன், பாக்கியத்தைத் தரவல்லவன், ஆத்துமகர்த்தா, நேத்திரகாரகன், பிரதாபத்தைத்தரவல்லவன்,

சௌரியத்தைத் தருபவன், தைரிய மளிப்பவன், விஷய ஆராய்ச்சி கர்த்தா, ராஜசேவை யளிப்பவன், உத்தியோககாரகன், சைவத்து விஷயங்களைத் தருபவன், அனுஷ்டானங்களுக்குக் காரகன், தபசு எக்யம் முதலியவற்றின் ஆதாரகர்த்தா, சிரரோகம் ஜுரம் முதலியனவற்றை யளிக்க வல்லவன்.

சந்திரன்

சந்திரன் - மகா பரமேஸ்வரி, மாதுருகாரகன், இராஜாக்கள் உறவு, சித்தசுத்தம், சுவாதீனம், உத்தியோகம், ஸ்நானுதி காரியகர்த்தா, கந்த புஷ்ப சாமரை முதலியவை, சத்திரம், கீர்த்தி, முத்தாபரணம், ரூபாய், வஸ்திரம், பீதாம்பரம், சுகபோஜனம், ரூபம், சீதபாதை முதலியவைகளுக்கெல்லாம் காரகன் என்க.

செவ்வாய்

பூமி பலிதம், சகோதரம், கொலை செய்தல், அகாலமரணம், விதவை, ஸ்திரீபோகம், துர்க்கை, சௌரியம், சாகச காரியம், ரோணம், துவேஷம், அக்கினிபயம், திருடு, யுத்தம், உத்சாகம், வீரியம், சேனாதிபதி, பத்தியம், பிளவை முதலிய இரணபாதைகளுக்கெல்லாம் காரகன் என்க.

புதன்

புதன் - விஷ்ணுதேவதை, அலி, அண்டரோகி, ஞானம், வித்தை, அம்மான், வாக்கு சாதுரியம், உபாசனை, வைணவ கர்மம், சத்தியவசனம், பொறுமை, வியாபாரம், லிகிதகாரியம், போகம், அபுத்திரன், வாதநோய் முதலியவைகளுக்கெல்லாம் காரகன் என்க.

குரு

குரு - ஞானம் முதலிய சாதனம், யோகாப்பியாசம், அஷ்டமாசித்து, ஆசாரியத்துவம், உபதேசம், சுருதி, ஸ்மிருதி, தேவபிராமணத்துவம், சாந்த தேவதை, பிரம்ம வித்தை, இராஜ சன்மானம், ராஜ்யாதிகாரம், ஆலோசனை, விவகாரம், புத்தி, புத்திரர் முதலியவைகளுக்கெல்லாம் காரகன் என்க.

சுக்கிரன்

சுக்கிரன் - சம்பத்து, வாகனம், வஸ்திராபரணம், நிதி, களத்திரம், மதன வியாபாரம், ஜலயாத்திரை, கப்பல் வியாபாரம், ரத்தின வியாபாரம், ஆலயம், தேவப்பிரசாதம், சம்போகம் முதலியவைகளுக்குக் காரகன் என்க.

சனி

சனி - புலாலாதி நீசத்துவம், மயக்க போஜனம், நீசலாபத்துவம், ஸ்திரீயோகம், எருமை விருத்தி, கடன், அடிமை, ஜெயில், இராஜ தண்டனை, கனவு, ஆயுள், பரதேசி, ஜாதிப்பிரட்டம், ஒழுக்கந் தவறல், எவருக்கும் விரோதமாகவே நடத்தல், அவயவக் குறைவு, அற்ஜன ஸ்திரீபோகம், மேகநீர் உபத்திரவம், பித்த வியாதி, சித்தப்பிரமை முதலியவைகளுக்குக் காரகன் என்க.

இராகு

இராகு - பிதுர்பாட்டன் வம்சம், விஷபயம், மோக்ஷத்துவம், லோகாலோகப்பதவி, பிரமதவாசம், ஜெயில் முதலிய கொடூர தண்டனை, எதிரிகளால் துன்பமுண்டாதல், கப்பல் நஷ்டம், சாதிப்பிரட்டம், ரோகஸ்திரீ,

உத்தியோக அவகேடும் செய்யாத தொழில் செய்தல், விகட வித்தை, அவயவபின்னம், பிளவை, குத்து, வெட்டு முதலிய காயம், குன்மம், வாய்வு, பவுத்திரம், பித்த வலிப்பு, மூர்ச்சை உண்டாதல் இவைகளுக்கெல்லாம் காரகன் என்க.

கேது

கேது - சித்தப்பிரம்மை, விஷப்பாண்டு, !குஷ்டரோய், உதிரவலி, ஞானசாதனே, மாதருபாட்டன் வழி, இரணகர்யம், நெருப்பின் வாதை, கீழ்குலத் தொழில், யுத்தாங்கம், சபையில் அவமானம், அக்கினி மரணம், பரதேச ஜீவனம், பாபத்தொழில், மயக்க வஸ்து, புலால் புசித்தல், அகங்காரம், தரித்திரம், இராஜ தண்டனே முதலியவைகளுக்கெல்லாம் காரகன் என்க.

இராசி அங்கங்களாவன

மேஷம்-தலே, ரிஷபம்-முகம், மிதுனம்-கழுத்து, கடகம்-தோள், சிங்கம்-மார்பு, கன்னி - விலா, துலாம் - முதுகு, வயிறு. விருச்சிகம் - பீசம், தனுசு-துடை, மகரம்-முழந்தாள், கும்பம்-கணுக்கால், மீனம்-பாதம்.

கிரக அங்கம்

சூரியன்-சிரசு, சந்திரன்-முகம், குஜன்-மார்பு, புதன்-இடை, முதுகு. குரு - வயிறு, சுக்கிரன் - ஆண்குறி, சனி - துடை, இராகு - கைகள், கேது-கால்கள்.

கிரக பார்வை

சூரியன் தானிருந்த ராசிக்கு 7-ஆமிடம் பார்வை, சந்திர்ன் தான் இருந்த ராசிக்கு 7-ஆமிடம் பார்வை, குஜன் தானிருந்த ராசிக்கு 4-7-8-ஆமிடம் பார்வை, புதன் தானிருந்த ராசிக்கு 7-ஆமிடம் பார்வை, குரு தானிருந்த ராசிக்கு 5-7-9-ஆமிடம் பார்வை, சுக்கிரன் தானிருந்த ராசிக்கு 7-ஆமிடம் பார்வை, சனி தானிருந்த ராசிக்கு 3-7-10-ஆமிடம் பார்வை, இராகு தானிருந்த ராசிக்கு 7-ஆமிடம் பார்வை, கேது தானிருந்த ராசிக்கு 7-ஆமிடம் பார்வை.

காரகர்கள்

பிதருகாரகன்-சூரியன், மாதருகாரகன்-சந்திரன், சகோதரகாரகன்-குஜன், விதத்தையாகாரகன்-புதன், புத்திரகாரகன்-குரு, களத்திரகாரகன்-சுக்கிரன், ஆயுள்காரகன்-சனி, வைராக்கியகாரகன்-இராகு, மோக்ஷகாரகன்-கேது.

கிரக சுபாசுப பலன்கள் அறிய

சுக்கிலபக்ஷத்தில் ஜனனமானவர்களுக்கு குரு-சந்திரன் முழுச்சுபன், சுக்கிரன் முக்கால்சுபன், புதன் அரைச்சுபன், சூரியன்-சனி-இராகு முழுப் பாபி, கேது குஜன் முக்கால்பாபி, புதன் அரைப்பாபி.

அமரபக்ஷத்தில் ஜனனமானவர்களுக்கு சனி-இராகு-சூரிமன் முழுச் சுபர், குஜன் - கேது முக்கால்சுபன், புதன் அரைச்சுபன், குரு-சந்திரன் முழுப்பாபி, சுக்கிரன் முக்கால்பாபி.

கிரக நட்பு

சூரியனுக்கு நட்பு சந்திரன் - செவ்வாய் - குரு, சந்திரனுக்கு நட்பு புதன் சூரியன், செவ்வாய்க்கு நட்பு குரு-சந்தின்-சூரியன், புதனுக்கு நட்பு

சுக்கிரன்-சூரியன், குருவுக்கு நட்பு சூரியன் - சந்திரன் - செவ்வாய், சுக்கிரனுக்கு நட்பு சனி-புதன், சனிக்கு நட்பு புதன்-சுக்கிரன், இராகுவுக்கு நட்பு புதன்-சுக்கிரன், கேதுவுக்கு நட்பு சூரியன்-குரு.

கிரக பகை

சூரியனுக்கு பகை சனி-சுக்கிரன் - இராகு - கேது, சந்திரனுக்கு பகை இராகு - கேது, செவ்வாய்க்கு பகை புதன், புதனுக்கு பகை சந்திரன், குருவுக்கு பகை புதன்-சுக்கிரன், சுக்கிரனுக்கு பகை குரு சூரியன்-சந்திரன், சனிக்கு பகை சூரியன்-சந்திரன், இராகுவுக்கு பகை சூரியன், கேதுவுக்கு பகை சந்திரன்.

கிரக சமம்

சூரியனுக்கு சமம் புதன், சந்திரனுக்கு சமம் குஜன் - குரு - சனி-சுக்கிரன், செவ்வாய்க்கு சமம் சனி - சுக்கிரன், புதனுக்கு சமம் சனி, குருவுக்கு சமம் சனி, சுக்கிரனுக்கு சமம் சனி - இராகு - கேது, சனிக்கு சமம் குரு-வெள்ளி-புதன், இராகுவுக்கு சமம் சுக்கிரன், கேதுவுக்கு சமம் கேது.

பாவங்கள் 12-க்கு விவரம் 1-லக்னம்

1-ஆம் இடமாகிய லக்கினத்தால் அந்த ஜாதகனது கிரம், தேகம், சிரசு, புலன், .பொரி, கிளேப்பு, கிலேசம், கீர்த்தி, கெமனம், கடவுள் வணக்கம், சுபமங்களம், சந்தோஷம், வயது, மறுஜென்மம் ஆகியவற்றைக் குறித்துச் சொல்லும் இடமாகும்.

2-ஆம் இடம்

லக்கினத்திற்கு இரண்டாமிடம் என்பது குடும்பம், தனம், நேத்திரம், வாக்கு, வித்தை, பூ, செல்வம், வாக்குசத்தியம், சாஸ்திரபரிசயம், கவனம், உத்தேசம், பொன், பொருள், நவரத்திநம் யோகவிஷயங்களேக் குறித்த இடமாகும்.

3-ஆம் இடம்

லக்கினத்திற்கு மூன்றுமிடம் என்பது போகம், அடிமையாள், கியான வித்தை, வீரியவித்தை, சகோதரம், கண்ணேய், கடுக்கன் முதலிய ஆபரணம், போஜனபாத்திரம், தேவதாபக்தி, ஜெயம் பெறல், ஆயுள்களுடன் முதலியவற்றைக் குறித்த இடமாகும்.

4-ஆம் இடம்

லக்கினத்திற்கு நான்காம் இடம் என்பது மாதருவிஷயம், வித்தை, வாகனம், சுபம், வியாபாரம், இல்லம், ஜெயம், மேன்மை, சௌக்கியம், கிக்ஷேபம், பாவிஷயம், பசுவாகனம், தேவஸ்தானம் முதலியவற்றைக் குறித்த இடமாகும்.

5-ஆம் இடம்

லக்கினத்திற்கு 5-ஆம் இடம் என்பது தாய்பாட்டன் தாய்மாமன் பூர்வபுண்ணியம், தமிழ்வித்தை, சாகித்தியம், புத்திரர், கெற்பம், வித்தை, மந்திரம், விதாணம், புத்தி, மேல்வரும் ஜென்மம், யோகாப்பியாச சாதன முதலியவற்றைக் குறித்த இடமாகும்.

6-ஆம் இடம்

லக்கினத்திற்கு 6-ஆம் இடம் என்பது வியாதி, பீடை, ஆயுத இரணம், சத்துரு, ஜலகண்டம், ஞாதிவிரோதம், தேகவாதை, மரணவாதை, ரொணம், கள்ளரால் பயம், பெண்ரோகம், விஷபாதை, சிறைவாசம் இவைகளைக் குறித்த இடமாகும்.

7-ஆம் இடம்

லக்கினத்திற்கு ஏழாம் இடம் என்பது பந்தகூட்டம், கெமனத்துவம், பச்சிமதிசை, களத்திரம், கலியாணம், விவாதவியாஜ்ஜியம், இளையமனைவியின் சந்ததி, இராஜ சன்மானம், அனைவரும் சினேகமாதல், வியாபாரம் என்னு மிவைகளைக் குறித்த இடமாகும்.

8-ஆம் இடம்

லக்கினத்திற்கு எட்டாம் இடம் என்பது யுத்தகளமரணம், கூட்டத்தார் பீடை, மலை மரங்கள் முதலிய உயரத்திலிருந்து வீழ்தல், நீண்டவியாதி, முயற்சி கெடுதல், கெடுதற்சிலவு, மரணம், விஷபயம், அபஜெயம் முதலியவற்றைக் குறித்த இடமாகும்.

9-ஆம் இடம்

லக்கினத்திற்கு 9-ஆம் இடத்தால் பிதாபலன், பிதாபொருள், தருமம், பாக்கியம், மடம், சத்திரவிருத்தி, பாடகசாலை, திருப்பணி, உபதேசம், அஷ்டமாசித்தி, குளம், தடாகப்பிரதிட்டை, ஞானபதம், வனவாசம் இவைகளைக் குறித்த இடமாகும்.

10-ஆம் இடம்

லக்கினத்திற்கு பத்தாமிடம் என்பது பல புண்ணியங்கள், சத்கருமஜீவனம், கிராமாதிக்ஷேத்திரலாபம், இரக்கம், தயவு, மெய்ஞானபூசனை, மனை, வீடு, தேவதாபக்தி, சவுரியம், பிரதாபக்கீர்த்தி, கருப்பஸ்தான், வஸ்திராபரணம், தேசாடனவாசம் என்னு மிவைகளைக் குறித்த இடமாகும்.

11-ஆம் இடம்

லக்கினத்திற்கு பதினோராம் இடம் என்பது மூத்தசகோதரம், மூத்தசகோதரயோகம், பலதார சம்போகம், இராஜவித்தையாபிரபலம், பூமியால் விருத்தி, தண்டிகை, வாகனம், மனோதுக்க நிவர்த்தி, வஸ்திராபரணம், நடனநாடக சங்கீதத்தொழில், ஞான அறிவு, ராஜாங்கலிகித அனுகூலம், ஜெலத்தின்மேல் பிரயாணம் என்னு மிவைகளைக் குறித்த இடமாகும்.

12-ஆம் இடம்

லக்கினத்திற்குப் பன்னிரண்டாம் இடம் என்பது பூப்பிரதக்ஷணமலை நாடு சஞ்சாரம், அன்னியதேச உத்தியோகம், தனவிரயம், சகல விஷயபோகம், அசனசயனம், விவாதராஜதண்டனை, போகசுகம், மந்திராதி பலவகைத்தொழில், கப்பல் வியாபாரம், கருமானுபவம், புண்ணியதியாகம், யாகயெக்ஞம் முதலியவைகளைக் குறித்த இடமாகும்.

லக்னபலன் விவரம் 1-மேஷம்

மேஷலக்கினத்தில் பிறந்தவன் ராஜபூஜ்ஜியன், திரபுத்தியுடையவன், ஆபரணம் சேர்ப்பான், அடிமையுள்ளவன், இளைத்த சரீரன், ரோகி, தனமுடையவன், சாமார்த்தியன், தர்மசாஸ்திர விருப்பமுடையவன், நீண்ட கழுத்து, கோபி, ஜீவ இம்சை செய்வோன்.

2 இடபம்

ரிடப லக்கினத்தில் பிறந்தவன் அன்பு, பூஜைபுரிதல், சத்தியவிரதன், மிதமான போஜனம் செய்பவன், தூலதேகி, அடிமையுடையவன், புளிப்பில் பிரியமுடையவன், கணிதவல்லவன், வஸ்திராபரணமுடையவன், நீண்ட காதுடையவன், நற்புத்தி, குழந்தைகள்போல் விளையாடுபவன், அன்னியர் பொருளைக் கொள்பவன், இருமலுடையவன், குழந்தைகள்மீது விருப்பமுடையவன்.

3 மிதுனம்

மிதுன லக்கினத்தில் பிறந்தவன் புகழுடையவன், லச்சையுடையவன், கபடி, ஆசாரமுடையவன், இருவிதவார்த்தை சொல்வன், விரதமிருப்பவன், நல்ல வசனமுடையவன், தன்காரியத்தில் மிக்க கவனமாயிருப்பவன், பித்தரோகி, சாமளதேகியாகும்.

4 கடகம்

கடக லக்கினத்தில் பிறந்தவன் சிவந்தமேனி, பலத்த நடையுடையவன், வேசைப்பிரியன், நவதான்னியங்களை சேர்த்துவைப்பவன், செல்வவிருத்தி, குரு விஸ்வாசமுடையவன், தந்தை சொல்லை மீறி நடப்போன், காணுவிடத்தில் மறவுடையவன், கொஞ்சநாள் தரித்திரமுடையவனாகும்.

5 சிங்கம்

சிங்க லக்கினத்தில் பிறந்தவன் அதிக போஜனப்பிரியன், அருச்சனை செய்வதில் விருப்பமுடையவன், தருமசிந்தை யுடையவன், பெரும்பசியாளன், கூர்மையான புத்தியுடையவன், நோய் வந்து உடனே நீங்கும், தொழில் செய்வதில் பிரீதியுடையவன் ஆகும்.

6 கன்னி

கன்னியா லக்கினத்தில் பிறந்தவன் தருமம் செய்ய ஆசைப்படுவன், தரித்திரமில்லாதவன், ஆசாரமுடையவன், பல விஷயங்களைத் தெரிந்து கொள்வோன், பின் வயதில் செல்வன், சிற்சிலகாலங்களில் இருமல் முதலிய நோயுண்டாகி நீங்கும் என்பதாம்.

7 துலாம்

துலா லக்கினத்தில் பிறந்தவன் இரண்டு மனைவிகளை யுடையவன், திரண்ட ஜாதி அபிமானமுடையவன், சம்பத்துடையவன், தனம் தேடுவோன், அரசர்களுக்குப்பிரியன், சுகவான், பரிமளவஸ்துக்களில் பிரியமுடையவன், தருமசிந்தை யுடையவனுமாவான்.

8 விருச்சிகம்

விருச்சிக லக்கினத்தில் பிறந்தவன் தாய் தந்தையர்களிடம் நேசமுடையவன், மனைவியிடத்தில் பிரியமுடையவன், இனிமைசொல் பேசுவோன், எடுத்தகாரியம் முடிப்பவன் என்பதாம்.

9 தனுசு

தனுசு லக்கினத்தில் பிறந்தவன் மூத்தவனுக்குப் பயப்படாதவன், இளையவர்களுக்கு பயப்படுவோன், புகழ்ச்சியுடையவன், போக மதிகமுடைய

வன், சத்துருவை ஜெயிப்பவன், பெரிய வித்தை வாசிப்போன், சிறுவயதிற் செல்வமுடையவன், அலைச்சலுடையவனாகும் என்பதாம்.

10 மகரம்

மகரலக்கினத்தில் பிறந்தவன் காணாவிடத்தில் மறுவுடையவன், புஷ்பத்தில் பிரியமுடையவன், திரபுத்திமான், அபிமானமுடையவன், பருத்த சரீரம், சிவந்தமேனி, மனையாளுக் கினிபவன், பட்சிகளைக் கொலைசெய்வோன் என்பதாம்.

11 கும்பம்

கும்பலக்கினத்தில் பிறந்தவன் தன்னைத்தானே புகழ்ந்து பேசிக்கொள்வோன், பழிசொல்வோன், அல்லது பிறரையேனும் பழிப்பன், குறுகியமெய்யுடையவன், அற்பவித்தையுடையவன், பித்தசரீரம், செய்நன்றிமறப்போன், செங்கண்ணுடையவன், சுகவான், ஸ்திரீகளிடம் பிரியமாயும் உண்மையாயுமிருப்போன் என்பதாம்.

12 மீனம்

மீனலக்கினத்தில் பிறந்தவன் மிக்கசூரத்தன்மை யுடையவனாகியும், உண்மை பேசுவோன், ஞானமதிகமுடையவன், பரதார இச்சையுடையவன், இருமனைவியை யுடையவன், கந்தம் முதலிய வாசனைத் திரவியங்களில் விருப்பமுடையவன், காதுநோய் உடையவன், பிறருடைய பொருளின்மீது விருப்பமுடையவன் என்பதாம்.

நட்சத்திரபலன்

1 அச்சுவினி

அச்சுவினி நட்சத்திரத்திற் பிறந்தவன் தான் செய்யவேண்டிய கடமைகளைத் தவறாது செய்வன், ஸ்திரீகளுக்கு நண்பன், தியாகம் செய்வோன், தீரவான், பொய்யுரையான், ஆபரண விருப்பமுடையவன், அற்பத்தில் கோபவான். சிவந்த விழியுடையவன், அகன்ற மார்பன், சமர்த்துடையவன், தூயநெஞ்சினன், உயர்ந்த நெற்றியுடையவன், சாந்தமுடையவனாகி இருப்பான் என்பதாம்

2 பரணி

பரணி நட்சத்திரத்தில் பிறந்தவன் தாய்தந்தையர்கள்மீது விருப்பமுடையவன், அற்ப நித்திரையும் அற்ப கோபியாவன், தருமம் செய்பவன், ஐஸ்வர்யவான், புகழ்ச்சிபெற்ற அரசனுக்குச் சமமானவன், தாம்பூலத்தில் விருப்பமுடையவன், இளைத்த சரீரமுடையவன், இடதுபுறத்தில் மறுவுடையவன், சாத்திரங்களின்மீது விருப்புடையவன், மோவாய் சிறுத்தவன் என்க.

3 கார்த்திகை

கார்த்திகை நட்சத்திரத்திற் பிறந்தவன் ரசவஸ்துக்கள்மீது விருப்பமுடையவன், அற்பநித்திரை செய்வோன், இனிமையான வசனம் சொல்லுவோன், பொய் சொல்லிப் பணம் சம்பாதிப்பவன், மனோவற்மி, அரசர்களுக்கு விருப்பமுடையவன், திடகாத்திர தேகமுடையவன், எக்காரியத்தையும் பிறரறியாது செய்து முடிக்கும் வல்லமையுடையவன், பிறர் மெச்சத் தகுந்த வார்த்தையைப் பேசுவோன் என்பதாம்.

4 உரோகணி

உரோகணி நட்சத்திரத்தில் பிறந்தவன் தாகம் அதிகமுடையவன், சொல்லிய வார்த்தை மறவான், புலவன், இப்பூமியின்கண் அனேகருக்கு அன்னதானம் செய்வோன், அரசனைப் போன்றவன், வியாபார விருப்பமுடையவன், பால் நெய் முதலியவற்றில் விருப்பமுடையவன், உயர்ந்த புருவங்களும் பருத்து உருண்ட விழிகளும் உடையவன், பிறர்க்கு வஞ்சக வார்த்தை பேசாதவன், பலத்த நடையினை உடையவனாகும்.

5 மிருகசிரம்

மிருகசிர நட்சத்திரத்திற பிறந்தவன் அதிகாலையில் ஸ்நானம் செய்வதில் விருப்பமுடையவன், விசால நேத்திரமுடையவன், அழகிய உரோமமுடையவன், கல்வியாளன், திரண்டுருண்ட சரீரமும் மனோவற்மியுமாகும், ஆடல் பாடல்களில் விருப்பமும், தாம்பூலப் பிரியனுமாகும், நினைத்ததைச் செய்து முடிப்போன், சண்முகக்கடவுளையொத்த தன்மையுடையவன், உயர்ந்த நெற்றியும் ஞானமும் உடையவன் என்பதாம்.

6 திருவாதிரை

திருவாதிரை நட்சத்திற் பிறந்தவன் பொய் சொல்வதில் சாமர்த்தியன், ஆயினும் கீர்த்தியுள்ளவன், வறுமையுடையவன், நெடியதேகி, பூட்டுகளில் நோயுண்டயவன், சிலுகுடையவன், சுத்தமாயிருக்க ஆசைப்படுவோன், சிவந்த கண்களும் கருத்து நீண்ட உரோமமும் உடையவன், பலவான், அடிக்கடி கோபிப்பன், அனைவரையும் சினேகிப்பன், அனைவரும் மதிக்கத் தகுந்தவனுமாவன்.

7 புனர்பூசம்

புனர்பூச நட்சத்திரத்திற் பிறந்தவன் பேசுவதில் சாமார்த்தியன், மனோ அகங்காரி, விசாலமாகிய புயமுடையவன், சிக்கனச் சிலவு செய்பவன், நடப்பதற்கு அஞ்சான், கொடூரமாய்ப் பேசுவோன், மெல்லிய காமுடையவன், உண்மையே பேசுவோன், பித்ததேகி, எல்லவர்க்கும் நல்லவன், தன் வயது ஐந்தில் கால் ஊனமுடையவன் எனக்கூறுக.

8 பூசம்

பூச நட்சத்திரத்தில் பிறந்தவன் குதிரை முதலிய வாகனங்களில் ஊர்ந்து செல்வோன், ஞாயம் எதுவென்றம் அநியாயம் எது என்பதை ஆராய்ந்துரைப்போன், சூஸ்திரவார்த்தை சொல்வோன், தனது தாய் தந்தையரிடத்திலும், மற்றுமுள்ளவரிடத்திலும் ஆசையதிகம் உடையவன், நல்வாக்கு நன்னடத்தை உடையவன், அறும்பசியாளன், கண்களும் மூக்கும் அழகாய் அமைந்திருக்கப் பெற்றவன், வாசனை வஸ்துக்களில் விருப்பமுடையவன், நற்குணம் வாய்ந்தவனாகிச் செல்வமுடையவனாகி இருப்பன்.

9 ஆயில்யம்

ஆயில்ய நட்சத்திரத்திற் பிறந்தவன் அனைவரையும் பகைக்க விரும்புவோன், அவ்வாறு பகைக்கினும் மிக்க சாமர்த்தியமாய்ப் பேசுவோன், நீங்கா துக்கமுடையவன், காடு முதலிய பிறர் காணாவிடங்களிலும் பயமின்றிச் சஞ்சரிப்போன், ஹிதம் செய்வதில் விருப்புடையவன், தன் சுகத்திற்கு எவ்வித குறைவும் உண்டாகாவண்ணம் நடந்துகொள்வோன்,

எளிதம் செய்வதில் கெட்டிக்காரன், எங்குசென்றாலும் தாய் தந்தையர்களை கவனிப்போன், உண்மை பேசுவோன், தன்னைக்காட்டிலும் பலசாலியாயினும் அவர்களை மதியான், புருவம் உயர்ந்திருக்கும் என்பதாம்.

10 மகம்

மக நட்சத்திரத்திற் பிறந்தவன் பற்பல தேயங்களுக்குச் சென்று சஞ்சரிக்கப் பிரியமுடையவன், எவரும் அதிசயிக்கத்தகுந்த அழகுவாய்ந்தவன், இராகதாளம் அறிந்தவன், சுத்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்ய விருப்பமுடையவன், வாசனைத் திரவியங்களை அணிந்துகொள்ள விருப்பமுடையவன், தான் சுயார்ச்சிதமாய்த் தேடும் செல்வம் அதிகமுடையவன், வலது பக்கத்தில் மரு ஒன்றுடையவன், நியாயஸ்தல அதிகாரியாவன், அற்ப நித்திரை செய்வோன் என்பதாம்.

11 பூரம்

பூர நட்சத்திரத்திற் பிறந்தவன் அனைவருக்கும் பிரியமான வசனங்களைச் சொல்வோன், கல்விமான் என எவரும் அறிந்துகொள்ளும்படி நடப்போன், சிவந்த விழியினை யுடையவன், செல்வர் தேடுவானாயினும் மகா வருத்தப்படுவன், முக்காலங்களையும் அறிந்துகொள்ளும் சக்தி வாய்ந்தவன், எல்லவற்கும் நல்லவனாகி நடந்துகொள்வன் என்பதாம்.

12 உத்திரம்

உத்திர நக்ஷத்திரத்திற் பிறந்தவன் திடசரீரமுடையவன், எல்லவற்கும் நண்பனாகியிருப்பன், சகல காரியங்களிலும் மிக்க சாமர்த்தியனாகியும் வல்லவனாகியும் இருப்பன், எக்காரணத்தைக்கொண்டும் பிறருக்கஞ்சான், தன் பிதா சம்பாதித்த தனத்தைக்காட்டிலும் தான் சுயார்ஜிதமாய் அதிகம் சம்பாதிப்போன், ஸ்திரீகளிடம் மிக்க சாமர்த்தியமாய்ப் பேசுவோன் என்பதாம்.

13 அத்தம்

அத்த நட்சத்திரத்திற் பிறந்தவன் அடிக்கடி கோபம்செய்துக் கொள்வோன், சகல சாஸ்திரத்தையுமறிந்து கொள்வோன், தருமம் செய்வதில் விருப்பமும், இன்சொல் கூறுவதிலும், இன்னிசைக் கேட்பதிலும், இன்பமாகிய காரியங்களைச் செய்வதிலும் விருப்பமுடையவன். தன் வயது 35-க்குப்பின் தனம் தேடும் செல்வன். நன்நடக்கையும், நற்கீர்த்தியும் உடையவன் என்பதாம்.

14 சித்திரை

சித்திரை நட்சத்திரத்திற் பிறந்தவன் பலமான சரீரமும், அகன்ற மார்பும், பருத்த துடையும் உடையவன். தனக்குத் தெரியாவிடங்களில் மரு உடையவன். கடவுளிடத்தும், தாய் தந்தையர்களிடத்தும் நீங்காத பக்தியும், விஸ்வாசமும் உடையவன். அரசர்களிடம் சேவை செய்வதில் விருப்பமுடையவன். இவை நியாயம் என்பதையும், இவை அநியாயம் என்பதையும் அறிந்துரைக்க வல்லவன். தருமசாஸ்திர முதலியனவற்றையறிந்து அதன்படி நடப்பதோடு, அன்னதானம் முதலியவற்றைச் செய்வதில் விருப்பமுடையவன்.

15 சுவாதி

சுவாதி நட்சத்திரத்திற் பிறந்தவன் சிவந்த நிறமும், பறந்ததோளும் உடையவன், நானாவிதத்தொழில் செய்வோன், இன்சொல் கூறுவோன்,

பிராதாக்களிடம் அன்பும் ஆசையுமுடையவன், கல்வியில் வல்லவன், நானாவிதத்தொழிலையும் தெரிந்து கொள்ளுபவன், இயந்திரத்தொழில் செய்வன் மனதுக்குப் பிடிப்படாத காரியங்களைச் செய்யான் என்பதாம்.

16 விசாகம்

விசாக நட்சத்திரத்திற் பிறந்தவன் முகத்தில் மருவுடையவன், உயர்ந்த தேகி, நீதியை எடுத்துரைப்போன், நித்திரைசெய்ய விருப்பமதிக முடையவன், தனது சுற்றத்தவர்களிடத்திலும், அரசர்களிடததிலும் ஆசையதிகமுடையவன். பிறரிடம் பேசி ஜெயிக்கும் வல்லமை வாய்ந்தவன், நல்வசனமும், பொருமையுமுடையவன். பெண்களிடம் பிரியமாயிருப்போன், செல்வமும், சகல சாஸ்திரபண்டிதனாகியு மிருப்பான். தெய்வபக்தியும், தேவதாபூஜை செய்வதில் விருப்பமுள்ளவனாகியு மிருப்பான் என்பதாம்.

17 அனுஷம்

அனுஷ நட்சத்திரத்திற் பிறந்தவன் திரண்டுருண்ட புயத்தினையுடையவன், கொடியோர்கள் சேர்க்கையுடையவன், ஆயினும், கடவுளிடம் நீங்காத பக்தியும், மிக்க சாமர்த்தியத்துடன் தன் ஜீவனத்தை நடத்திக்கொள்ளுபவனுமாவன், சிற்றுண்டி புசிப்பதிலும், ஸ்நானம் செய்வதிலும் விருப்பமுடையவன்; பொய்யை மெய்யாய்ப்பேசி ஜெயிப்பன் என்பதாம்.

18 கேட்டை

கேட்டை நட்சத்திரத்திற் பிறந்தவன் குரூரசித்தன், பொய் சொல்லுவோன், உபாயமாய்த் தனது காரியத்தை ஜெயம் செய்வன், கூர்மையான புத்தியுடையவன், மிக்ககோபவான், புலால் புசிப்பதில் பிரியமுடையவன், துஷ்டர்களது நேசமுடையவன்; இறப்போர்க்கு இல்லையென்னாது உதவுவான், இனஜனப்பிரியன், தன்னுடன்பிறந்த சகோதர சகோதரிகளை ரக்ஷிக்கும் குணவான் என்பதாம்.

19 மூலம்

மூல நட்சத்திரத்திற் பிறந்தவன் மிக்க நித்திரைப்பிரியன், அழகு வாய்ந்தவன், தான் செய்யவேண்டிய கடமையினைச் சரியாய்ச்செய்து முடிப்போன், பற்பல கருவிகளைச் செய்து அதனால் ஜீவனம் செய்வோன், தாய் தந்தையர்கள்மீது மகா விருப்பமுடையவன், சிவந்தவிழியும், பருத்தசரீரமும் உடையவன், நானாவித காரிய சமர்த்தன், பிறருக்குத் தீங்கிழைக்க அஞ்சாதவன் எனவுங் கூறுக.

20 பூராடம்

பூராட நட்சத்திரத்திற் பிறந்தவன் நீண்ட உடலும், உயர்ந்த நெற்றியுமுடையவன், வாசனைநிறைந்த புஷ்பங்களின்மீதும், வாசனைவஸ்துக்கள் மீதும் பிரியமுடையவன், வாயாடி, தாய் தந்தையர்களால் செல்வமுடையவன், பின்வயதில் துன்பப்படுவோன், சாமர்த்தியமும், புயவலிமையுமுடையவன், பொய்சொல்வோன், யாத்திரைப்பிரியனு மாவான்.

21 உத்திராடம்

உத்திராட நட்சத்திரத்திற் பிறந்தவன் பெண்களிடம் பிரியமுடையவன், தனது தேகத்திற் சில இடங்களில் மருமச்ச முடையவன், மனோ

பலமும், சரீரபலமும் உடையவன், சகல சாஸ்திரத்தையும் அறிந்துரைப்பவன், சுற்றத்தவர் முதலியோருக்கு நண்பன், போஜனப்பிரியன், ஜலயாத்திரை செய்வோன், வற்மி, பிறர்பொருளின்மீது இச்சைவையான், நல்லவர்க்கு நல்லவன், உதாரகுணமுடையவன்.

22 திருவோணம்

திருவோண நட்சத்திரத்திற் பிறந்தவன் மிக்க கல்விமான், தன் மனம்போல் நடந்து கொள்வோன், அடிக்கடி கோபித்துக்கொள்வோன், மெதுவாய் நடப்போன், உள்ளங்கால் உயர்ந்திருப்போன், பெண்களிடம் நேசம் செய்வதில் பிரியன், சிக்கனச்சிலவு செய்வோன், தருமம் செய்யான், பின்வயதில் தனம் தேடுபவனும் ஆவன் என்பதாம்.

23 அவிட்டம்

அவிட்ட நட்சத்திரத்திற் பிறந்தவன் உண்மையான காரியங்களைச் செய்வன், நெறியான காரியங்களையேசெய்து சம்பாதிக்கவேண்டும் என்னும் விருப்பமுடையவனும், எவருக்கும் அஞ்சாது தன் மனம்போல் நடந்துக் கொள்ளுபவனுமாகும், கலவி செய்யப் பிரியமும், பிறர் பொருளின்மீது இச்சை வையான், பிறர்சொல் கேளான் என்பதாம்.

24 சதயம்

சதய நட்சத்திரத்திற் பிறந்தவன் கோபிகளிடத்தில் சவகாசம் செய்யாதவன், வியாதியுடையவன், நற்புத்தியுடையவன், சாந்தமுடையவன், அழகிய சரீரமும், எவர்களையும் நேசிப்பதில் மகாவல்லவன், தூயன், சத்துருவை ஜெயிப்பன், அனைவருக்கும் மேம்பட்டவனாக வாழ்வன், ஞாயமுறைப்போன் என்பதாம்.

25 பூரட்டாதி

பூரட்டாதி நட்சத்திரத்திற் பிறந்தவன் பிறர் சொற் கேளான், வழக்கு செய்வதில் மகா கெட்டிக்காரன், பால் நெய் முதலியவற்றை ஆசையுடன் அருந்துவோன், மாதர்களால் பொருளுடையவனும், மாதர்கள்மீது இச்சையுடையவனுமாகும், பிறரை வணங்கான், கல்வியுள்ளவன், மேம்பட்டவன் எனப் பிறர் கூறத்தகுந்த நெறியிலிருப்போன் என்பதாம்.

26 உத்திரட்டாதி

உத்திரட்டாதி நட்சத்திரத்திற் பிறந்தவன் ஸ்நானம் செய்வதில் மிக்க விருப்புடையவன், பந்துஜனங்கள் அனேகருடையவன், கலகம் செய்வதில் மகாகெட்டிக்காரன், நீதிவார்த்தை பல சொல்லுவோன், பிறருக் குதவிசெய்வோன், வாசிப்பதில் பிரியமுடையவன், தாம்பூலப்பிரியன், தேசசஞ்சாரம் செய்ய விருப்புடையவன், நீண்ட காதுகளுடையவன் என்பதாம்.

27 ரேவதி

ரேவதி நட்சத்திரத்திற் பிறந்தவன் சிலநாள் செல்வமுடையவனும், சிலநாள் தரித்திரமுடையவனுமாகும், துக்கி, நற்குணமுடையவன், தந்திரமாய் பேசித் தன்காரியம் முடிப்போன், கடவுளிடத்து பக்தியும் பிராமண நேசமும் உடையவன், இரப்போர்க்கு இல்லை என்னுதவன், பழிபாவத்திற்கு அஞ்சுவோன் என்பதாம்.

இதுகாறுங் கூறிவந்தவாற்றால் லக்கினபலனும் நட்சத்திரபலனுங் கூறிவந்துள்ளன. இவை பொதுப்பலனாகும். இவ்வாறு பொதுப்பலனை யறிந்தபிறகே, நவகோட்களும் ஜென்மலக்கினமுதலாய் எங்கெந்த ராசியி லிருந்துள்ளன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுவது அவசியம். அவை யாவன சூரியன் முதலிய நவகோட்கள் ஜென்மலக்கின முதலாயுள்ள பன்னிரண்டு ராசியினுள் எந்தராசியிலிருந்துள்ளன என்பதையும், அதற்குப் பலன் யாது என்பதையும் ஆராய்ந்தறியவேண்டும். இவ்வாறான பலன்களை பல நூலாராய்ச்சியால் இங்கு விளக்குவாம்.

1ல்-சூரியன் நின்றபலன்

மெலிந்து சிவந்து நீண்ட சரீரமும், படபடப்பாய் பேசத்தகுந்தவனுமாகும், சிற்சிலகாலங்களில் உஷ்ணநோயும், சமயோகமும் தருமவானும் எல்லவர்க்கும் தெரிந்தவனும் நல்லவனுமாவன்.

2-ல் சூரியன்

வித்தையில் சிறப்புடையவன், தன்குடும்பம் மிக்கப் பெரிதாயினும் வறுமைப்படும், சிலகாலம் யோகமும், சிலகாலமும் துன்பமுமாயிருக்கும், வாய்சாதுரியன், சரீரசிறமப்பட்டு பணம் சம்பாதிப்போன், எவருக்கும் தெரிந்தவன் என்பதாம்.

3-ல் சூரியன்

சகோதரத்துவேஷி, அலைச்சல் அதிகமுடையவன், சகல காரியங்களிலும் வெற்றியுடையவன், ஆபரணச்சேர்க்கையில்லான், போகவன்மை அதிகமுடையவன், நானுவித காரியங்களையும் செய்து பணம் சம்பாதிப்போன்.

4-ல் சூரியன்

மாதுருவகை துக்கமுடையவன், தாயின்மீது வெருப்புடையவன், சுகயீனன், நல்வசனமும், அனைவருச்கும் நல்லவனாகி விளங்குவன், யதேச்சாதிகாரி, பிறர் பொருளைக்கொண்டு ஜீவனம் செய்வோன், வண்டி வாகனங்களையுடையவன்.

5-ல் சூரியன்

அம்மான்வகை க்ஷீணமுண்டு, பிதாவுக்குத் துன்பம், பிதுருவகை பூஸ்திதியுடையவன், மன்னுதிமன்னர் நேயன், வரவுக்கு மீறிய சிலவுசெய்வோன், ஆபரணப்பிரியன், பந்துவகையில் பொருள் சிலவுடையவன்.

6-ல் சூரியன்

சத்துரு ஜெயம் செய்வோன், சகலகாரியங்களிலும் வெற்றியுடையவன் பிதுருதுவேஷி, உஷ்ணதேகி, சிலகாலங்களில் இவனது சரீரத்தில் ரணம் கட்டி முதலியன உண்டாகி அதனுல் வாதைப்படுவன்.

7-ல் சூரியன்

அலைச்சல் அதிகமுடையவன், மனைவிக்கு நோயுண்டு, சிலகாலங்களில் சரீரம் வருந்தத்தகுந்த காரியங்களைச் செய்வன், நானுவிதகாரியங்களையும் தெரிந்தவன், தன்மனம்போல் நடந்துகொள்வன், ஒருவருக்கும் அஞ்சான் என்னு மிவ்வியல்புகளை யுடையவனாகும்.

8-ல் சூரியன்

சிறுவயதிற்றானே கெண்டாதி கெண்டங்களை யுடையவன், நானாவித காரியங்களிலும் சமர்த்தன், பகைவரால் அதிகாரமுடையவனும், பகைவரால் துன்பமுடையவனுமாகும். தான் நடுவயதில் மகா துன்பப்படுவோன் என்பதாம்.

9-ல் சூரியன்

தன் பிதாவுக்குப் பீடையுண்டு. பிதுர்பாக்கியம் உண்டெனினும் சில வற்றைச் சிலவழித்து விடுவன், நடுவயதில் கொஞ்சம் கஷ்டமுடையவன், தருமார்த்த காரியங்களில் பொருள் செலவுசெய்ய விருப்பமுடையவன்.

10-ல் சூரியன்

வேதம் முதலியவற்றை ஆராய்ந்தறிபவன், குருவுபதேசம் பெறுவன், பொருளாசையற்றவன், பின் வயதில் சன்னியாசியாயினுமாவன், அனேக பந்துக்களும் நண்பர்களுமுடையவன் எவர்களையும் மதியான் என்பதாம்.

11-ல் சூரியன்

மனைவர்மி, பரதார இச்சையுடையவன், பந்துதுவேஷி, பலருக்கும் தெரிந்தவன், அலைச்சல் அதிகமுடையவன், இருதார முடையவன், பின் வயதில் கஷ்டப்படுவோன், மேகரோய் உடையவுன் என்பதாம்.

12-ல் சூரியன்

நித்திரையற்றவன், துக்கம் அதிகமுடையவன், தன் பொருளென்றும் பிறர் பொருளென்றும் பாராது சிலவு செய்பவன், இனஜனத் துவேஷி, வறுமையுடையவன், பிறதேசங்களில் சஞ்சரிக்கப் பிரியமுடையவன், தன் பிதாவினாலும் மனைவியாலும் துன்பமுடையவன் என்பதாம்.

1-ல் சந்திரன் நின்றபலன்

சிவந்த தேகி, பொறுமையாய்ப் பேசுவோன், நல்லோர் நேயன், ஸ்திரீகளுக்கு நண்பன், பொன் வெள்ளி முதலிய ஆபரணங்களை அணிந்துகொள்வதில் விருப்பமுடையவன், சரீரம் வருந்தத்தக்க காரியங்களைச் செய்யான் மனைவற்மி.

2-ல் சந்திரன்

வடமொழி தென்மொழி என்னும் இரண்டையும் அறிவன், கல்வி கற்கப் பிரியமுடையவன், தாய்வகையில் சந்தோஷமுடையவன், பந்துக்களிடத்தும் தாய் தந்தையர்களிடத்து பிரியமுடையவன், நன்மொழி பேசுவோன் என்பதாம்.

3-ல் சந்திரன்

பெண்களிடத்து விருப்பமுடையவன், பெண் சகோதரர்கள் அதிகமுடையவன், பெண்களைப்போன்ற நடையுடையவன், எக்காரியத்தையும் துணிந்து செய்யான், நல்லவரிடம் சேர்ந்து வாழ இச்சை கொள்வோன் சுகதேகி என்பதாம்.

4-ல் சந்திரன்

மாதுருக்குப் பீடை, பால் பசு வாகனமுடையோன், எல்லவர்க்கும் நல்லவனாகி நடப்போன், எக்காரணத்தாலாயினும் தான் நீண்ட சுகத்துடன்

இருக்கவேண்டும் என்னும் விருப்பமுடையவன், பொன் முதலிய பூஸ்திதியுடையவன்.

5-ல் சந்திரன்

பெண் குழவிகள் அதிகமுடையவன், தன் அம்மான் அல்லது மாதாவினாலும் பிதாவினாலும் பூஸ்திதி யுடையவன், பலரிடம் சென்று பல ரகஸ்யங்களைத் தெரிந்துகொள்வோன், சுயார்ச்சிதப் பொருள் அதிகம் உடையவன்.

6-ல் சந்திரன்

வியாதி அதிகமுடையவன், தன்னால் பிறருக்கு நன்மை உண்டாகுமேயன்றிப் பிறரால் தனக்கு நன்மை உண்டாகாது, :சண்டை முதலிய வழக்குவாதுடையவன், உலக உபகாரி, சிக்கனமாகச் சிலவு செய்வோன் என்பதாம்.

7-ல் சந்திரன்

சிவந்த நிறமும், மெல்லிய வார்த்தையுமுடையவன், சுகதேகி, எவரையும் அன்புடன் ஆதரிப்பவன், மேற்படி சந்திரன் வளர்பிறையாயின் பூரண சுகமும், தேய்ப்பிறையாயின் சில காலங்களில் கொஞ்சம் வறுமை கஷ்டங்களும் உடையவன்.

8-ல் சந்திரன்

ஜலத்தாலும், நாற்காலிகளாலும் கெண்டாதி கெண்டமுடையவன், தாய்வகை சுகமில்லான், சிலகாலங்களில் கொடுமையாகிய நோயுடையவன், எக்காரியத்தையும் மிக்க சிரமத்துடன் முடிக்க வல்லவன்.

9-ல் சந்திரன்

வண்டி வாகனங்களும், பூமி முதலியனவும் உடையவனாகி, தானிருக்கும் கிராமத்திற்குத் தலைவனாகி, கிருஷி முதலியவற்றால் நீண்டசெல்வமுடையவன்.

10-ல் சந்திரன்

சகலவிதமான தொழிலையும் செய்து ஜீவனம் செய்பவனும், தாய்வகையில் நீண்ட சுகமுடையவனும், கொஞ்சம் அலைச்சலும், பற்பலவிதமான யோசனை செய்பவனும் ஆவன்.

11-ல் சந்திரன்

தாய்வர்க்கத்தவராலும், தன் சுயார்ச்சிதமாயும் அனேக பூஸ்திதியைச் சம்பாதிப்பவனும், எக்காரியத்தைச் செய்யினும் லாபமுடையவன், எல்லோர்க்கும் நண்பனாய் இன்புற்றிருப்பன் என்பதாம்.

12-ல் சந்திரன்

சிலவதிகமுடையவனும், தாய்வர்க்கத்தவரால் விரயமும், சிலகாலம் மிக்க வறுமையும், தனது தேகத்தை வாட்டத்தகுந்த நோயும் அதனால் பொருள் சிலவும், கடவுளிடம் நீங்காதபக்தி யுடையவனும் ஆவன்.

உ

கடவுள் துணை

வியாழபகவான் சிஷனுக்கு உபதேசித்த

குருநூலென்னும்

ஜாதக தெளிவானந்தமணி

மூலமும் உரையும்

விநாயகர் காப்பு

ஆதரவாக வேதனருள் பெருமுலகி னேற்கு
தீதரக் குரவனுர்தான் திகழுட னுரைத்தவாறே
ஜாதகத் தெளிவானந்த மணியெனும் நூலேவோதக்
கோதிலா தென்றுங்காக்கக் குமரனைங்கான்றுள் காப்பு.

எண்சீரடியாசிரிய விருத்தம்

பலனது வுரைத்தபடி பஞ்சமம் பெற்றிடினும்
பலதீர்த்த மாடிவரினும்
பாபமது போக்கினும் யாத்திரைகள் செய்யினும்
பரமன்றனைப் பணியினும்
நலமான தருமங்கள் நாலெட்டு செய்யினும்
நற்றரைமெழுகி னுணினும்
நாகப்பிர திஷ்டையது செய்யினு முனிவர்களை
நாடிப்பணிந்து வரினும்
குலவுமண மற்றொன்று செய்யினும் வாராது
குரவன் விதித்தவிதிமுன்
கூறுமொரு ராசியிற் சுபருடன் பாபருங்
குழவி செனித்துமடியும்
குலமீதனி லக்குற்றந் தீரமுன் சொல்லிவரும்
தருமங்கள் செய்துவரிலோ
தாரந் தனக்குவரு மங்கைசெய் பூசையால்
தனையன் உதித்துவருவான்.

1-வது பிறகூநலக்ஷணம்

உதயமெனு ராசிதனை சசியேதானும்
உற்றுமே பாராம லிருப்பாராகில்
பதியாகப் பாலனுயே பிறக்குங்காலம்
பகரப்பா தகப்பனய லில்லமென்றே
கதியாக யேழுயெட்டு வொன்பான்வெய்யோன்
தானிருக்கச் சரமாகில் வழியிலாகும்
துதியாகும் திரமெனிலோ வூர்க்குள்ளாகும்
துலங்கிடிலோ வுபயம்பொது விடமென்றோதே.

(இ-ள்) ஒருபிரஜை ஜெனனகாலத்தில் சந்திரன் உதய ராசியைப் பாராதிருக்க ஜாதகன் ஜெனனகாலத்தில் தகப்பன் அயல்வீட்டில் வாசஞ் செய்குவன். 7-8-9 இந்தவிடங்களில் சூரியன் நிற்க, அது சராசியாயின் குழவி வழியில் ஜெனிக்கும், திராசியாகில் ஊருக்குள்ளாகும், உபயராசியாகில் பொதுவான யிடங்களில் பிறக்குமென அறியவும் எ-று. 1

ஓதவே லக்கினத்திற் காரிநிற்க
உத்தமனே களத்திரத்திற் செவ்வாய்நிற்க
போதவே சசிதனக்கு முன்பின்னுக
பொருந்தியே சுங்கன்மால் புகழ்ந்துநிற்க
மேதினியிற் சிசுபிறக்குங் காலந்தன்னில்
மைந்தனே தந்தைபர தேசமாகும்
கோதிலா யிந்திரர்க்கு வியாழஞ்சொன்ன
குருமொழியை விண்டுமனந் திடங்கொள்வாயே.

(இ-ள்) ஜென்மலக்கினத்தில் சனிநிற்க, களத்திர ஸ்தானமாகிய 7-ஆம் இடத்தில் செவ்வாய் நிற்க, சந்திரனுக்கு முன்பின்னுக சுக்கிரனும் புதனும் நிற்க, சிசுபிறக்குங்காலம், தகப்பன் பரதேசத்தில் வாசஞ்செய்குவன் எ-று. 2

கொள்ளவே பிறைதனக்கு ஐந்தாறொன்பான்
கூடியே காரிசேய் குலவிநிற்க
தள்ளவே குழவிதனைத் தாய்தவிர்ப்பாள்
தங்குஞ்சசி லக்கினமோ டலதுகேளும்
புள்ளவே ஜென்மமதைப் பரிவாய்த்தானும்
பூசுரனுந் தேவகுரு புகழ்ந்துபார்க்கில்
விள்ளவே வயது பூரணமாய்க்கொண்டு
விளங்கவே சுகஜீவி யாயிருப்பான்.

(இ-ள்) சந்திரன் நின்ற இராசிக்கு 5-6-9 இந்த விடங்களில் சனியுஞ் செவ்வாயுங் கூடிநிற்க, அவன்தாய் அப்பிள்ளையைத் தவிர்த்துபோய்விடுவள், சந்திரலக்கினம், அல்லது ஜென்மலக்கினத்தை தேவகுருவாகிய வியாழ பகவான் பார்க்க, பூரணவயதோடு சுகஜீவியாக இருப்பன் எ-று. 3

இருக்கவே சிலையினின்ற சந்திரன்றன்னை
இயலாகக் காரிசே யிருவர்பார்க்கில்

பெருக்கவே சுபக்கிரகம் னோக்கற்றாலும்
பாலியத்தில் தாயவள் மரணமாவாள்
சிரக்கவே சசிதனக்குப் பதினொன்றில்தான்
செவ்வாயுஞ் சனிகூடிச் சேர்ந்துநிற்க
மருக்கவே சுபர்களைய மதியும்பார்க்க
மறுதாயின் கைவசமாய்க் குழவிவாழும்.

(இ-ள்) தனுசு இராசியில் நின்ற சந்திரனை செவ்வாய் சனி பார்க்க சுபக்கிரகங்கள் பார்வையில்லாதிருக்க, அவன்தாய் பாலியவயதில் மரண மாவாள். சந்திரன் நின்ற இராசிக்கு 11-ஆம் இடத்தில் செவ்வாயும் சனியுங் கூடிநிற்கப் பிறந்தசேய் மறுதாயின் கைவசமாக வளரும் எ-று. 4

வாழவே வுதயமெனும் லக்கினத்தை
வளமாக ஆதித்தன் பார்ப்பாராகில்
சூழவே தகப்பனுக்குச் சொந்தமான
சுகமாகு மனையிடத்துப் பிறந்தோனாகும்
மீழவே மதிநின்று பார்ப்பாராகில்
மிக்கநலந் தாய்மனையிற் பிறந்தோனாகும்
ஏழவே வெள்ளிக்குத் தாய்வீடாகும்
இகலவே பகலுதிக்கிற் றந்தையில்லம்.

(இ-ள்) உதய இராசியை சூரியன் பார்க்கப் பிறந்த குழவி தகப்ப னுக்கு இஷ்டமான சொந்தமனையிற் பிறந்தவனாகும். சந்திரன் பார்க்கப் பிறந்தவன் தாயாருடைய மனையிலாகும். சுக்கிரன் பார்க்கப் பிறந்தவன் தாய்வீடாகும். சூரியனாகில் தகப்பன்வீடாகும் எ-று. 5

இல்லமென வில்லில்நின்ற சந்திரன்றன்னை
ஏழிடத்தில் கிரகமெல்லா மிருந்துபார்க்க
தொல்லையுறும் பிறர்மனையிற் பிறந்தோனாகும்
தோதகமாய்க் கேட்டிடுவாய் துலங்கவின்னம்
நல்லமதி மகரகும்பக் காலிலேறி
நண்ணியே தானிருக்க வண்ணமாக
புல்லுவா யிருட்டகத்தில் பிறந்தானென்று
புகழாகுங் குருமொழியைப் புவியின்மீதே.

(இ-ள்) தனுசு இராசியில் நின்ற சந்திரனை கிரகங்களெல்லாம் 7-ஆம் இடத்தில்நின்றுபார்க்க அந்தஜாதகன் பிறருடைய மனையிற்பிறந்தோனாகும். சந்திரன் மகரக்கால் கும்பக்காலிலே நிற்க, இருட்டுவீட்டில் பிறந்த பிள்ளை யாகுமென குருமொழியாகச் சொல்வாய் எ-று. 6

மீதெனவே உதயத்திற்கு நாலில்நின்ற
மதியவரைச் சனிபார்க்கில் இருட்டுவீடாம்
தோதெனவே சனிசசியும் நாலில்நிற்க
தொடுத்திட்ட பானைமுதல் நண்டிருட்டாம்
வாதெனவே யதில்பிறக்கு மிருட்டுவீடாம்
வஞ்சகமா மூன்றுகோள் நீசம்நிற்க

ஓதெனவே பிறந்தபிள்ளை தரையிலாகும்
ஒழியாத தரித்திரனு மாவான்பாரே.

(இ-ள்) இலக்கினத்திற்கு 4-ஆமிடத்தில் சந்திரன் நிற்க, அவரைச் சனி பார்க்க இருட்டுவீட்டில் பிறந்த பிள்ளையாகும். சனியும் சந்திரனும் 4-ஆமிடத்தில் நிற்க, கும்பராசிமுதல் கடகராசிவரைக்கும் இருட்டு ராசி யாகையால் அதில் ஜெனனமாகில் இருட்டுவீடாகும். மூன்று கிரகங்கள் நீசத்தில் நிற்க, தரையில் பிறந்தவனும் தரித்திரனுமாக இருப்பான் எ-று. 7

பார்க்கவே நண்டுகன்னி பானைமானும்
பரிவாகு மிதிலொன்று லக்கினமாக
சேர்க்கவே சனிநிற்க ஆறேழ்பத்தில்
செவ்வாயுந் தான்நின்று செறிந்துபார்க்க
வேர்க்கவே பிறந்தபிள்ளை சுடுகாடேகும்
வெள்ளியுமே மீனத்தில் நின்றுபார்க்கில்
பூர்க்கவே மாதாவுக் கிஷ்டமாகும்
புகழ்மனையிற் பிறந்தபிள்ளை யெனறுசொல்லே.

(இ-ள்) மிதுனம்-கன்னி-கும்பம்-மகரம் இந்த நான்கு ராசியிலொன்று இலக்கினமாக, அதில் சனி நிற்க, 6-7-10 இந்த இடங்களில் செவ்வாய் நின்று பார்க்க பிறந்தபிள்ளை சுடுகாட்டிற்கேகும். சுக்கிரன் மீனராசியில் நின்று பார்க்க தாயாருக்கு இஷ்டமான மனையிற் பிறந்த குழவியாகுமெனச் சொல்லவும் எ-று. 8

சொல்லவே நிறைந்தமதி யேழில்நின்று
சுத்தமுடன் லக்கினத்தைச் சுகமாய்ப்பார்க்கில்
அல்லலில்லை தாய்க்குறவோர் மனைஜெனித்தோன்
ஆதித்தன் பார்த்திடிலோ அரசர்வீடாம்
புல்லுவா யாலயமு மாகுமென்று
புகழ்குருவும் பார்த்திடிலோ பூஜைவீடாம்
வெல்லவே மால்பார்க்கில் சித்திரங்கள்
வரைந்திட்ட வீடெனவுந் தெரிந்துபேசே.

(இ-ள்) பூர்வபக்ஷத்து சந்திரன் 7-ஆமிடத்தில் நின்று இலக்கினத்தைப் பார்க்கப் பிறந்தவன் தாயாருக்கு வுறவாகிய வீட்டில் ஜெனித்தவனாகும். சூரியன் பார்க்கில் அரசர் வீடாகும், அல்லது தேவாலயமாகும். குரு பார்க் கில் பூஜை அறையாகும். புதன் பார்க்கில் சித்திரமெழுதிய வீடாகும் எ-று.

பேசவே சசிதன்னை மூன்றுபாபர்
பிரியாமல் கூடிநிற்கத் தாய்க்குப்பீடை
தோஷமா மெப்பாவ ராகிலுந்தான்
தோன்றியே லக்கினமொடு சசிதனக்கும்
நாசமாம் நாலேழில் நிற்பாராகில்
நலமில்லை தாய்தனக்கு மரணம்நேரும்
நேசமாம் சுபகிரகம் பார்வையுற்றால்
நிந்தையாந் தோஷமது நீங்குமென்றே.

(இ-ள்) சந்திரனை 3-பாபக்கிரகங்கள் கூடிநிற்க, தாய்க்குப்பீடை யுண்டாம். எந்த பாபக்கிரகமாயினும் இலக்கினத்திற்கும், சந்திரன் நின்ற ராசிக்கும், 4-7-ஆமிடங்களில் நிற்க, தாய்க்கு மரணம் நேரும். சுபக்கிரகங்கள் பார்வையுண்டாகில் இத்தோஷம் நீங்கும் எ-று. 10

என்னவே சென்மலக்கினந் தனக்கு
　　எழுமெட்டுப் பன்னிரெண்டி லியம்பக்கேளும்
துன்னவே குறைந்தமதி பாவரோடே
　　தான்கூடிச் சுபகேந்திரம் பெறாதிருக்க
மன்னிய வாறெட்டிற் பாபரோடு
　　மதிநின்று பெலமதுவும் குறைவானகில்
பின்னமாம் பிள்ளையது மரணமாகும்
　　வியாழபகவா னுரைத்த வாக்கிதாமே.

(இ-ள்) ஜென்மலக்கினத்திற்கு 7-8-12 ல் அமரபக்ஷத்துச் சந்திரன் பாபக்கிரகங்களுடன்கூடி சுபகேந்திரம் பெறாதிருக்க, 6-8-ல் பாபரோடு மதிகூடி பலங்குறைந்திருக்க பிறந்தகுழவி மரணமாகிவிடும் எ-று. 11

ஆமெனவே வுதயாதிப் பதியோன்றானும்
　　அற்பராம் பாபருக்கே தோல்வியாகில்
போமெனவே பிறந்தவுடன் மறிக்கும்பிள்ளை
　　புகலக்கேள் நிறைந்தசசி யுதையம்நிற்க
தாமெனவே யேழுமெட்டில் பாபர்நிற்க
　　தக்கசுபர் பார்வையது மில்லையாகில்
சாமெனவே பிள்ளையது மரணமாகும்
　　சாற்றிய குருமொழியைக் கண்டுவிள்ளே.

(இ-ள்) ஜென்மலக்கினாதிபதி பாபக்கிரகங்களுக்கு பலங்குறைந்து தோல்வியடைந்து நிற்க பிறந்தபிள்ளை உடனே மரணமாகும். நிறைமதி ஜென்மலக்கினத்திலிருக்க, 7-8-ல் பாபர்கள் நிற்க, சுபக்கிரகங்கள் பார்வையில்லாதிருக்க ஜெனித்தபிள்ளை மரணமாகும் எ-று. 12

விள்ளவே சிசுபிறந்த லக்கினத்திற்கு
　　வேண்டியே நாலேழு எட்டுபத்தில்
கொள்ளவே பாபருடன் மதிகலந்து
　　கூடியே நின்றாலும் பாபருக்கு
உள்ளதோர் மத்தியிலே மதிநின்றாலும்
　　உறும்பாபர் மதிக்கேழு லெட்டில்நிற்க
தள்ளவே தாயோடு பிள்ளைதானும்
　　தங்காது மரணமதுந் தானுண்டாமே.

(இ-ள்) சிசுவினுடைய ஜென்மலக்கினத்திற்கு 4-7-8-10-ல் பாபக்கிரகங்களோடு சந்திரன்கூடி நிற்கினும், இந்த ஸ்தானங்களில் பாபர்களுக்கு நடுவே சந்திரன் நிற்கினும், சந்திரனுக்கு 7-8-ல் பாபக்கிரகங்கள் நிற்க தாயாருடன் பிள்ளையும் மரணமாகும் எ-று. 13

உண்டாகும் பிள்ளையது பிறக்குங்காலம்
　　ஓதிய தகரரிதேள் மகரங்கும்பம்
கண்டயிந்த ராசிகளி லேதேனொன்றில்
　　காணவே குறைந்தமதி தானும்நிற்க
பண்பாகும் சசிக்கெட்டில் செவ்வாய்நிற்க
　　பாபர்களுஞ் சந்திரனைப் பரிந்துநோக்க
விண்டிடுவாய் பிள்ளையொடு தாய்க்குத்தானும்
　　வருங்கருவி யால்மரண மென்றுகூறே.

(இ-ள்) ஒருபிரஜை ஜெனனகாலத்தில் மேஷம் - சிங்கம் - விருச்சிகம்-மகரம்-கும்பம் இந்த ராசிகளிலொன்றில் அமரபக்ஷத்துச் சந்திரன் நிற்க, சந்திரனுக்கு 8-ல் செவ்வாய் நிற்க, சந்திரனைப் பாபக்கிரகங்கள் பார்க்க பிறந்தபிள்ளையுந் தாயும் ஆயுதங்களினால் மரணமாவர் எ-று. 14

கூறவே ஜென்மத்தில் சந்திரன்மேவ
　　குலவிய விருநான்கில் செவ்வாய்நிற்க
ஏறவே யொன்பானில் வெய்யோன்நிற்க
　　ஈராறில் காரியுமே யிருந்துவாழ
கோறவே சுபர்பார்வை யில்லாதாக
　　குழவியது தான்ஜெனிக்கில் மரணமாகும்
வீரியமாங் தேவகுரு வியாழஞ்சொன்ன
　　விளக்கமுறு மின்னூலின் விபரங்காணே.

(இ-ள்) ஜென்மலக்கினத்தில் சந்திரன் நிற்க, 8-ஆமிடத்தில் செவ்வாய் நிற்க, 9-ஆமிடத்தில் சூரியன் நிற்க, 12 ஆமிடத்தில் சனி நிற்க, சுபக்கிரகங்கள் பாராதிருக்க பிறந்தபிள்ளை மரணமாகும் எ-று. 15

காணவே சென்மலக்கி னந்தனக்கு
　　கருதிய வைந்தேழு வொன்பானீராறு
பூணவே குறைந்தமதி பரிந்துநிற்க
　　பொல்லாத பாபருமே அவரைச்சேர
நாணவே பிறந்தபிள்ளை மரணமாகும்
　　நற்சுபருஞ் சந்திரனைப் பார்ப்பாராகில்
தோணவே குழவிக்குந் தோஷமில்லை
　　தொந்திரவா மரணமது தோன்றிடாதே.

(இ-ள்) ஜென்மலக்கினத்திற்கு 5-7-9-12 இந்த இடங்களில் சந்திரன் நிற்க, அவரைப் பாபக்கிரகங்கள்கூட பிறந்தபிள்ளை மரணமாகும். சுபக்கிரகங்கள் பார்வையுண்டாகில் மரணம் தவிர்ந்துபோம் எ-று. 16

பிறகுதலக்ஷணம் முற்றிற்று.

கட்பு-ஆக்ஷி-உச்சம்-பகை-நீசம்-சமம்

மூலதிரிகோணங்கள் அறியும்வகை

சூரியன்

ஆதவனுக் குறவுதனு மீனகுருசேய் சந்திரனு மாக்ஷிசிங்கம்
கோதகனுங் கொறியுச்சம் பகைவிடையாழ் தேள்கடகங் குடமான்
தீதகலும் புகர்சனியே துலைநீசம் புதன்சமனுஞ் சிரந்தசியங் [கன்னி
காதல்மிகு மூலதிரிகோண மதாமதர்த்த மழைகருங்கண் மாதே.

(இ-ள்) சூரியனுக்கு கட்பு தனுசு - மீனம், குரு - செவ்வாய்-சந்திரன், சூரியனுக்கு ஆக்ஷி-சிங்கம், சூரியனுக்கு உச்சம்-மேஷம், சூரியனுக்கு பகை-ரிஷபம்-மிதனம்-விருச்சிகம்-கடகம்-கும்பம்-மகரம்-கன்னி, சூரியனுக்கு நீசம் துலாம்-சுக்கிரன்-சனி, சூரியனுக்கு சமம்-புதன், சிங்கம் இவை மூலதிரி கோண ஸ்தானமாகும் எ-று. 17

சந்திரன்

சந்திரனுக்குறவு மிதுனந்தனு மீனகன்னி புதன்றபனனுகும்
சந்திரகண்டாட்சி விடையுச்சமதாங் குடமேடந் துலைமான்சிங்கம்
இந்தவிராசிகள் பகையாங் கோட்பகையே யிலைநீச மியம்புந்தேளாம்
மந்தனொடு பொன்புகர்சேய் சமன்மூல திரிகோணம் வயங்குமேறே.

(இ-ள்) சந்திரனுக்கு கட்பு - மிதனம் - தனுசு-மீனம் - கன்னி, புதன்-சூரியன். சந்திரனுக்கு ஆக்ஷி-கடகம், சந்திரனுக்கு உச்சம்-ரிஷபம், சந்திரனுக்கு பகை-கும்பம்-மேஷம்-துலாம்-மகரம்-சிங்கம். கிரகங்கள் பகையில்லையாம். சந்திரனுக்கு நீசம்-விருச்சிகம், சனி-குரு-சுக்கிரன்-செவ்வாய். சந்திரனுக்கு சமம்-கடகம், மூலதிரிகோண ஸ்தானமாகும் எ-று. 18

செவ்வாய்

மங்கலனுக் குறவுகுறந் துலைவிடையாழ் கன்னிகுரு வெய்யோனும்
துங்கவிருட்சிக மேடமாட்சியதாம் வளருச்சஞ் சுறவேயாகுந்
தங்குபகை யரிதனுமீன் புதனுகுங் கர்க்கடகஞ் சாற்றிநீசம்
பொங்குபுகர் சனிசமனுங் கொருமூலதிரிகோணம் பொலிமுகத்தாய்.

(இ-ள்) செவ்வாய்க்கு கட்பு-கும்பம் - துலாம்-ரிஷபம் - மிதனம்-கன்னி, குரு-சந்திரன்-சூரியன். செவ்வாய்க்கு ஆக்ஷி - விருச்சிகம் - மேஷம், செவ்வாய்க்கு உச்சம்-மகரம், செவ்வாய்க்கு பகை-சிங்கம்-தனு-மீனம்-புதன், செவ்வாய்க்கு நீசம்-கர்க்கடகம், சுக்கிரன்-சனி, செவ்வாய்க்கு சமம், மேஷம், மூலதிரிகோண ஸ்தானமாகும் எ-று. 19

புதன்

புதன்உறவு தனுமேடம்விடைமகரந் துலைகடகம் பொருதேள்கும்பம்
விதுப்புறுசெங்கதிர்புகராம்பொலியாட்கு கன்னியொடுமிதுனமாகும்
பதித்தகரி குழலுச்சம் பகையறியு மதியுமாம் வருமினீசம் [ய்.
கதித்தசமன்சேய்சனியாம்பெண்மூலதிரிகோணங்கழைமென்மூளா

(இ-ள்) புதனுக்கு கட்பு - தனுசு-மேஷம்-ரிஷபம்-மகரம்-துலாம்-கடகம்-விருட்சிகம்-கும்பம், சூரியன் - சுக்கிரன். புதனுக்கு ஆக்ஷி - கன்னி-மிதனமாகும். புதனுக்கு உச்சம்-கன்னி, புதனுக்கு பகை-சிங்கம்-சந்திரன், புதனுக்கு நீசம்-மீனம், புதனுக்கு சமம் கன்னி-செவ்வாய்-சனி, மூலதிரிகோண ஸ்தானமாகும் எ-று. 20

குரு

பொன்னவனுக் குறவுதுலைகன்னி குடந்தண்டு விடைபொருந்து சிங்க
துன்னிரவி மதிகுஜனு மாக்ஷிதனு மீனுகுஞ் சொலுகண்டுச்சம் [ம்
மன்னுபகை தேள்வருடை புதன்புகரே யாழ்நீசமகரமாகும்
பன்னுசமன் சனிமூல திரிகோணம் வில்லாகும் பவளவாயாய்.

(இ-ள்) குருவினுக்கு கட்பு-துலாம்-கன்னி - கும்பம்-மிதனம் - ரிஷபம்-சிங்கம்-சூரியன்-சந்திரன்-செவ்வாய். குருவினுக்கு ஆக்ஷி-தனுசு-மீனம், குருவினுக்கு உச்சம் - கடகம், குருவினுக்கு பகை - விருட்சிகம் - மேஷம்-புதன்-சுக்கிரன், குருவினுக்கு நீசம் - மகரம், குருவினுக்கு சமம்-சனி, மூலதிரி கோண ஸ்தானம் தனுசு ராசியாகும் எ-று. 21

சுக்கிரன்

சுக்கிரனுக் குறவுவிருட்சிக மேடஞ்சிலை குடம்யாழ் சுறவுகண்டு
மிக்கபுதன் சனியாகு மாக்ஷிவிடை கோல்மீனே யுச்சமாகும்
தக்கபகை தேளரியம் புலியிரவியா நீசங்கைய லாகுஞ் [ய்.
சொக்குலவு சமன்குருசேய் துலைமூல திரிகோணஞ் சுடர்ப்பைப்பூணு

(இ-ள்) சுக்கிரனுக்கு கட்பு-விருட்சிகம்-மேஷம்-தனுசு-கும்பம்-மிதனம்-மகரம்-கடகம்-புதன்-சனி, சுக்கிரனுக்கு ஆக்ஷி-ரிஷபம்-துலாம், சுக்கிரனுக்கு உச்சம்-மீனம், சுக்கிரனுக்கு பகை - விருட்சிகம்-சிங்கம் - சந்திரன்-சூரியன், சுக்கிரனுக்கு நீசம்-கன்னி, சுக்கிரனுக்கு சமம்-துலாம்-செவ்வாய்-குரு, மூலதிரிகோண ஸ்தானமாகும் எ-று, 22

சனி

சனிக்குறவு யாழ்விடைமீன் கன்னிசிலை புதன்புகராஞ் சாற்றுமாக்ஷி
கனக்குமெழிற் குடஞ்சுறவாங் கோலுச்சமாம் பகைகர்க்கடகஞ்சிங்கம்
நினைக்கும் விருச்சிகங் கதிர்சேய் மதியாகும் புகல்வருடை நீசமாகும்
தனிக்குருவே சமன்மூல திரிகோணங் கும்பமிளந் தனத்தினளே.

(இ-ள்) சனிக்கு கட்பு-மிதனம்-ரிஷபம் - மீனம்-கன்னி-தனுசு - புதன்-சுக்கிரன், சனிக்கு ஆக்ஷி-கும்பகம்-மகரம், சனிக்கு உச்சம்-துலாம், சனிக்கு பகை கர்க்கடகம்-சிங்கம் - விருட்சிகம்-சூரியன்-செவ்வாய்-சந்திரன், சனிக்கு நீசம்-மேஷம், சனிக்கு சமம்-குரு, மூலதிரிகோணம் கும்ப ராசியாகும் எ-று.

இராகு

கரும்பாம்புக் குறவுதுலை மீன்மகரங் குருவெள்ளி காரியாகும்
விரும்பாட்சி தனுமிதுனங் கன்னியாம் பகைகடக மேஷஞ்சிங்கம்
இரும்பானு சேய்மதியாங் குடமூல திரிகோண மெறிதேளுச்சம்
பொரும்பாண்டி னீசமதாய் கேதுபுதன் சமனுகும் பிரமுங்கண்ணுய்,

(இ-ள்) இராகுவினுக்கு நட்பு-துலாம்-மீனம்-மகரம்-குரு-சுக்கிரன்-சனி, இராகுவினுக்கு ஆக்ஷி-தனுசு-மிதுனம்-கன்னி, இராகுவினுக்கு பகை-கடகம்-மேஷம்-சிங்கம் - செவ்வாய்-சந்திரன், இராகுவினுக்கு உச்சம் - விருச்சிகம், இராகுவினுக்கு நீசம்-ரிஷபம், இராகுவினுக்கு சமம்-கேது-புதன், கும்பம் மூலதிரிகோண ஸ்தானமாகும் எ-று.

கே து

செம்பாம்புக் குறவுகுடங் கோல்விடைமான் கன்னிசனி செவ்வாய்
நம்பாட்சி மீனுகும் பகைகடகஞ் சிங்கமதி ஞாயிருகும் [வெள்ளி
வெம்பாராத் தேள்மூல திரிகோணந் தண்டுஉச்சம் வில்லேநீசம்
அம்பாருங் கூர்விழியாய் சமன்கொறிபொன் புதன்ருகுவாகுந்தானே.

(இ-ள்) கேதுவினுக்கு நட்பு - கும்பம்-துலாம் - ரிஷபம்-மகரம் - கன்னி-சனி-செவ்வாய்-சுக்கிரன், கேதுவினுக்கு ஆக்ஷி-மீனம், கேதுவினுக்கு பகை-கடகம்-சிங்கம் - சந்திரன்-சூரியன், கேதுவினுக்கு உச்சம்-மிதுனம், கேதுவினுக்கு நீசம்-தனுசு, கேதுவினுக்கு சமம்-மேஷம்-குரு-புதன்-இராகு, விருட்சிகம் மூலதிரிகோண ஸ்தானமாகும் எ-று. 25

மூலதிரிகோணங்கள் அறியும் வகை முற்றிற்று.

பாவகவிபரம்—மற்றுமொருவிதம்

இலக்கின பலன்

திருந்திய ஜென்மமதை நோக்கித்தானும்
சொல்லுவது குணமொடு நற்சீர்காந்தி
பொருந்திய மெய்போதம் புகழினேடு
புகலுவா யழகுடனே புத்திகீர்த்தி
வருந்திய துர்ப்பலன் வர்னமாயுள்
வாழுகின்ற தேசமொடு சுகபலன்கள்
அருந்திய சுசிசுத்தி யொளிகள்யாவும்
ஆருய்ந்து லக்கினத்தா லறியச்சொல்லே.

(இ-ள்) ஜென்மலக்கினத்தைக்கொண்டு பலன் சொல்வது: குணம், சீர், காந்தி, சரீரபேதம், புகழ், அழகு, புத்தி, கீர்த்தி, துற்பலன், வர்ணம், ஆயுள், குடியிருக்குந்தேசம், சுகபலன், சுசி, சுத்தி, ஒளி இவை முதலானதும் இலக்கினத்தைக்கொண்டு சொல்லவேண்டும் எ-று. 26

2-ஆமிடத்து பலன்

சொல்லவே யிரண்டதனை நோக்கித்தானும்
சூழுகின்ற குடும்பமொடு வாக்குவித்தை
நல்லதோர் நேத்திரங்களாம்படுக்கை
நாடிவருந் தனமோடு முகவஜிகரம்

வெல்லவே யிதையமந்திரம் விலாவின்பக்கம்
விளங்குகின்ற குருவோடு போஜனங்கள்
இல்லவே யிருத்தலொடு யிவைகளெல்லாம்
எடுத்துரைப்பா யிரண்டதா மிடத்தைக்கொண்டே.

(இ-ள்) இரண்டாமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: குடும்பம், வாக்கு, வித்தை, நேத்திரம், படுக்கை, தனம், முக வஜீகரம், இதைய மந்திரம், விலாப்பக்கம், குரு, போஜனம், இருத்தல் இவை முதலானதும் இரண்டாமிடத்தால் கண்டு சொல்லவேண்டும் எ-று. 27

3-ஆமிடத்து பலன்

கொண்டதோர் மூன்றதா மிடத்தைநோக்கி
கூறுவாய் சகோதரம் பராக்கிரமங்கள்
பண்டாகுந் தயிரியமும் சவகாசங்கள்
பட்சிப்பு யோகமொடு வீரியங்கள்
கண்டத்தின் சுருதியொடு களவுரோகம்
கழுத்தோடு ஆபரணங் காண்பாய்வித்தை
விண்டிடுங் கேள்வியொடு அடிமைவெற்றி
விபரமா மிவைமூன்று மிடத்தால்விள்ளே.

(இ-ள்) மூன்றுமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: சகோதரம், பராக்கிரமம், தயிரியம், சவகாசம், பட்சிப்பு, யோகம், வீரியம், கண்டச்சுருதி, களவு, ரோகம், கழுத்து, ஆபரணம், வித்தை, கேள்வி, அடிமை, வெள்ளி இவை முதலானதும் மூன்றுமிடத்தால் கண்டு சொல்லவும் எ-று. 28

4-ஆமிடத்து பலன்

விள்ளவே நாலதா மிடத்தைநோக்கி
வீரமொடு பாசவர்க்கம் வாகனுதி
கொள்ளவே குணம்மனம் பூமிவீடு
கோதையெனும் களத்திரம் தாயார்பந்து
உள்ளவே மாடாடு சயனநஷ்டம்
உற்றதோர் பரிமளங்க ளடிமைகன்று
தெள்ளவே மூத்திரக் கிரிச்சனங்கள்
தெளிவாய் நாலாமிடத்தைக் கொண்டுபேசே.

(இ-ள்) நாலாமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: வீரம், பாசவர்க்கம், வாகனம், குணம், மனம், பூமி, வீடு, களத்திரம், தாயார், பந்துக்கள், மாடு, ஆடு, சயன நஷ்டம், பரிமளாதிகள், அடிமை, கன்று, மூத்திரக்கிரிச்சனம் இவை முதலானதும் நாலாமிடத்தைக்கொண்டு சொல்லவேண்டும் எ-று. 29

5-ஆமிடத்து பலன்

பேசவே ஐந்தாகு மிடத்தைக்கொண்டு
புத்திரர் தெய்வபக்தி புண்ணியங்கள்
வாசமாம் புத்திமுத்தி வுரம்விஸ்தாரம்
வரும்ராஜ யோகமொடு மந்திரங்கள்

பாசமாம் பிதாவோடு மாதுலர்கள்
பண்பாகு மார்ப்பனம் பிரபுத்துவங்கள்
நேசமா மிவையெல்லாம் ஐந்தைக்கொண்டு
நிகழ்த்துவாய் பலாபலனை நேராய்த்தானே.

(இ-ள்) ஐந்தாமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: புத்திரர், தெய்வம், புண்ணியம், புத்தி, முத்தி, உரம், விஸ்தாரம், இராஜயோகம், மந்திரம், பிதா, மாதுலர், ஆர்ப்பனம், பிரபுத்துவம் இவை முதலானதும் ஐந்தாமிடத்தைக்கொண்டு சொல்லவேண்டும் எ-று. 30

6-ஆமிடத்து பலன்

தானெனு மாறதா மிடத்தைக்கொண்டு
தான்புகல்வாய் சத்துரு விரணம்ரோகம்
ஊனமா மாக்கினைப் புண்நோக்காடு
உரும்பிர தாபமொடு சிறையுஞ்சோரம்
கானெனும் ரொணங்களொடு மெய்யிற்கஷ்டம்
கலக்கமா மவதி யிவைகளெல்லாம்
தேனுகு மாறதா மிடத்தைக்கொண்டே
தெளிவாக யிப்பலனைத் திடமாய்வோதே.

(இ-ள்) ஆறுமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: சத்துரு, இரணம், ரோகம், ஆக்கினை, புண், நோக்காடு, பிரதாபம், சிறை, சோரம், ரொணம், கஷ்டம், அவதி இவை முதலானதும் ஆறுமிடத்தைக்கொண்டு சொல்லவேண்டும் எ-று. 31

7-ஆமிடத்து பலன்

ஓதவே யேழதா மிடத்தைக்கொண்டு
யாத்திரை யோடுமே களத்திரங்காமம்
போதவே சுகமோடு மாரகங்கள்
பிறந்திடும் பிள்ளைகளின் தன்பலன்கள்
தீதாகும் சிரம்நிவர்த்தி பொசிப்பினோடு
தீண்டிடும் மூத்திரக் கிரிச்சினங்கள்
தோதாக யிவையெல்லா மேழைக்கொண்டு
துலக்கமாய்ப் பலனதனை விளக்கஞ்செய்யே.

(இ-ள்) ஏழாமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: யாத்திரை, களத்திரம், காமம், சுகம், மாரகம், பிறக்கும்பிள்ளைகளின் பலன், சிரம், நிவர்த்தி, பொசிப்பு, மூத்திரக்கிரிச்சினம் இவை முதலானதும் ஏழாமிடத்தைக்கொண்டு சொல்லவேண்டும் எ-று. 32

8-ஆமிடத்து பலன்

செய்யவே யெட்டென்னு மிடத்தைக்கொண்டு
செப்புவது வாயுசு அரிட்டம்நோய்கள்
துய்யவே நிர்ணயம் மரணங்குய்யம்
தொந்திரவாம் ரிணமோடு மனதுதுக்கம்

எய்யவே சீவனம் சுகங்களன்னம்
ஏகுகின்ற தேசமொடு அபமிருத்து
பையவே நன்மையொடு தீர்க்கவியாதி
பலனெலா மெட்டதினால் பகருவாயே.

(இ-ள்) எட்டாமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: ஆயுசு, அரிட்டம், நோய், நிர்ணயம், மரணம், குய்யம், ரிணம், மனது, துக்கம், சீவனம், சுகம், அன்னம், தேசம், அபமிருத்தியு, நன்மை, தீர்க்கவியாதி இவை முதலானதும் எட்டாமிடத்தைக்கொண்டு சொல்லவேண்டும் எ-று. 33

9-ஆமிடத்து பலன்

புகருமொன் பானிடமதைக் கொண்டுமே
சுகமும் பாக்கியந் திரவியங் குருவுபொன்
தகப்பனோ டுத்தவமா பரணங்கள்
வகுப்பதாக வழுத்தும் நவத்திற்கே.

(இ-ள்) ஒன்பதாமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: சுகம், பாக்கியம், திரவியம், குரு, பொன், தகப்பன், தவம், ஆபரணம் இவை முதலானதும் ஒன்பதாமிடத்தைக்கொண்டு சொல்வது எ-று. 34

10-ஆமிடத்து பலன்

வழுத்தவே பத்தாமிடத்தைக் கொண்டு
வித்தையொடு ஞானங்கள் வியாபாரங்கள்
செழித்திடவே வேளாண்மை பூஷணங்கள்
செப்புமொரு நித்திரை கர்மமார்க்கம்
தழைத்திடவே கீர்த்தியாம் யோக்கியங்கள்
தான்வரும் பிரவர்த்தி யாக்கினைகள்
குழைத்திடவே தாசரொடு தாசியாவும்
கூறுவாய் பத்ததனைக் கொண்டுநன்றாய்.

(இ-ள்) பத்தாமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: வித்தை, ஞானம், வியாபாரம், வேளாண்மை, பூஷணம், நித்திரை, கர்மம், மார்க்கம், கீர்த்தி, யோக்கியம், பிரவர்த்தி, ஆக்கினை, தாசர், தாசி இவை முதலானதும் பத்தாமிடத்தைக்கொண்டு சொல்லவேண்டும் எ-று. 35

11-ஆமிடத்து பலன்

நன்றதாக நவிலும்பதி னொன்றில்
குன்றதாக வேகூடும் பலன்யாவும்
நின்றுபார்க்கும் நிலைபெறுங் கோளினால்
கண்டுபதி னொன்றில்காண் பலன்கூறிடே.

(இ-ள்) பதினோராமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: சகல லாபமும், இருந்தவனாலும், பார்த்தவனாலும் சொல்லவேண்டும் எ-று. 36

12-ஆமிடத்து பலன்

கூறிடப் பனிரெண்டிடங் கொண்டுமே
ஏறியிருப்பவன் பார்ப்பவ னுகூலியான்

ஆறியதார சஞ்சாரந் துக்கதிதாதா
பாறியசுகம் சயனம் விரையமாம்.

(இ-ள்) பன்னிரண்டாமிடத்தைக்கொண்டு பலன் சொல்வது: இருப்பவன், பார்ப்பவன், ஆக்ஷியானவன், தாரசஞ்சாரம், துக்கமதிகம், தாதாவும், சயனசுகம், சிலவு இவை முதலானதும் சொல்லவேண்டும் எ-று. 37

இராசி உருவங்கள்

கூறுமறியே வெள்ளாடு குறித்தவிடையே யெருதாகும்
கோருமிதுனம் ஸ்திரீபுருஷர் குறித்தகடகம் நண்டாகும்
ஏறும்சிங்கம் சிங்கமதா மியம்புங்கன்னி பெண்ணுருவம்
பாறுந்துலா மேதராசாகும் பகரும் விருச்சிகந்தேளாம்.

(இ-ள்) மேஷம்-வெள்ளாடு, ரிஷபம்-எருது, மிதுனம்-ஸ்திரீ புருஷர், கடகம்-நண்டுருவம், சிங்கம்-சிங்கவுருவம், கன்னி - பெண்ணுருவம், துலாம்-தராசு, விருச்சிகம்-தேளுருவம் எ-று. 38

தேளேவுருவந் தானறிவாய் தனுசோவுருவம் வில்லாகும்
வாளேமகரம் முதலையதாம் வழுத்துங்கும்பங் குடமாகும்
மீளேமீனம் மீனுரு மகிழ்வா மிராசியுருவமிதாம்
கேளேதேவ குருமொழியாங் கண்டுவுலகில் விண்டிடுமே.

(இ-ள்) தனுசு-வில், மகாம்-முதலை, கும்பம்-குடம், மீனம்-மீன், இவ்விதமாக ராசி பனிரெண்டினுக்கும் உருவந் தெரிந்துகொள்ள வேண்டும். 39

இராசி அங்கங்கள்

குரித்தமேஷந் தலையாகுங் கூறும்விடையே முகமாகும்
செரித்தமிதுனங் கழுத்தாகுஞ் செப்புங்கடகந் தோளாகும்
விரித்தசிங்கம் மார்பாகும் விளம்புங்கன்னி பக்கமதாம்
தரித்தகோலே யங்கமதாந் தானேமூக் காகும்பாரே.

(இ-ள்) மேஷம்-தலை, ரிஷபம்-முகம், மிதுனம்-கழுத்து, கடகம்-தோள், சிங்கம்-மார்பு, கன்னி-பக்கம், துலாம்-மூக்காகும் எ-று. 40

பாரேதேளும் பீஜமதாம் பகருந்தனுசே துடையாகும்
கூரேமகரம் முழங்காலாங் கும்பங்கணுக்கா லெனவறிவாய்
சீரேமீனம் பாதமதாஞ் செப்புமிராசி யங்கமிதாம்
நேரேவியாழன் தானுரைத்த நிலையைக்கண்டு வுரைசெய்யே.

(இ-ள்) விருச்சிகம்-பீஜம், தனுசு - துடை, மகாம் முழங்கால், கும்பம் கணுக்கால், மீனம்-பாதம், இவ்விதமாக இராசிகளின் அங்கமறியவும் எ-று.

இராசி திக்குகள்

அறிவாய் மொல்லைவிடை விணையாகுந் திக்குகிழக்காகும்
தெரிவாய்நண்டு புலிமாதுந் தெற்காமெனவே தானறிவாய்
நிரையுந்தேளுஞ் சிலையதுவும் நேரேமேற்கு திக்காகும்
குரையுங்கலையுங் குடமீனங் குறிப்பாந்திக்கே வடக்காகும்.

(இ-ள்) மேஷம்-ரிஷபம்-மிதுனம் - கிழக்குதிக்கு, கடகம்-சிங்கம்-கன்னி-தெற்குதிக்கு, துலாம்-விருச்சிகம் தனுசு-மேற்குதிக்கு, மகாம்-கும்பம்-மீனம்-வடக்கு திக்காகும் எ-று. 42

இராசி நாழிகைகள்

கொச்சைநாலே காலாகுங் குறித்தவிடை நாலேமுக்கால்
கச்சத்தண்டு வைந்தேகால் காணுங்கடக மைஞ்சரையாம்
மெச்சுஞ்சிங்க மைந்தேகால் மகிழும்பெண்ணே யைந்தாகும்
பச்சங்கோலு மைந்தாகும் பகர்வாய்தேளு மைந்தேகால்.

(இ-ள்) மேஷம் நாழிகை-$4\frac{1}{4}$, ரிஷபம் நாழிகை-$4\frac{3}{4}$, மிதுனம் நாழிகை-$5\frac{1}{4}$, கடகம் நாழிகை-$5\frac{1}{2}$, சிங்கம் நாழிகை-$5\frac{1}{4}$, கன்னி நாழிகை-5, துலாம் நாழிகை-5, விருச்சிகம் நாழிகை-$5\frac{1}{4}$ எ-று. 43

காலேகேளும் வில்லஞ்சரை கருதுமகர மைஞ்சேகால்
மேலாம்ஜாடித் தனைகேளு மருவும்நாலே முக்காலாம்
வேலேமீனம் நாலேகால் விளங்கும்ராசி நாழிகையாம்
சாலதேவக் குருசொன்ன சாஸ்திரப்படியே கண்டுரையே.

(இ-ள்) தனுசு நாழிகை-$5\frac{1}{2}$, மகாம் நாழிகை-$5\frac{1}{4}$, கும்பம் நாழிகை-$4\frac{3}{4}$, மீனம் நாழிகை-$4\frac{1}{4}$, இவ்விதங்காணல் வேண்டும் எ-று. 44

இராசி மாதங்கள்

காண்பாய்மேஷஞ் சித்திரையாம் கருதும்ரிஷபம் வைகாசி
பூண்பாய்மிதுன மானியதாம் புகலுங்கடக மாம்ஆடிப்
பாண்பாஞ்சிங்க மாவணியாம் பகருங்கன்னிப் புரட்டாசித்
தாண்பார்துலாத்தின் றன்னுதையந் தரிக்குமைப்பசி யேழாகும்.

(இ-ள்) மேஷம்-சித்திரை, ரிஷபம் - வைகாசி, மிதுனம்-ஆனி, கடகம்-ஆடி, சிங்கம்-ஆவணி, கன்னி-புரட்டாசி, துலாம்-ஐப்பசியாகும் எ-று. 45

ஆகும்விருச் சிகங்கார்த்தி யறிவாய்தனு மார்கழியாம்
ஏகும்மகரந் தையாகு மியம்புங்கும்ப மாசியதாம்
போகும்மீனம் பங்குனியாம் புகலும்மாத ராசியிதே
பாகமாகும் தேவகுரு பகர்ந்தமொழியு மிதுவாமே.

(இ-ள்) விருச்சிகம் - கார்த்திகை, தனுசு-மார்கழி, மகாம்-தை, கும்பம்-மாசி, மீனம்-பங்குனியாகும் எ-று. 46

இராசி ஜாதிகள்

நண்டுந்தேளு மீனதுவும் நவில்வாய் பிராமணஜாதி
கண்டபுலியுஞ் சிலைதகருங் காண்பாய் க்ஷத்திரியஜாதி
விண்டகோளுங் குடம்வீணை விளங்கும் வைசியஜாதி
பண்டாஞ்சேடி விடைமானும் பகருஞ் சூத்திரஜாதி.

(இ-ள்) கடகம்-விருச்சிகம்-மீனம்-பிராமணஜாதி, சிங்கம்-தனுசு-மேஷம்-க்ஷத்திரியஜாதி, துலாம் - கும்பம் - மிதுனம் - வைசியஜாதி, கன்னி-ரிஷபம்-மகாம்-சூத்திரஜாதியாகும் எ-று. 47

மேஷம் வெள்ளாழஜாதி மருவும்ரிஷப மிடையனுமாம்
பேசும்மிதுனஞ் சக்கிலியன் புகலுங்கடகங் கன்னனும்
வீசுஞ்சிங்கம் பிராமணனும் விளங்குங்கன்னி நாவிதனும்
நேசநிரையின் தன்ஜாதி நிகழ்ந்துஞ் செட்டித்தானென்றே.

(இ-ள்) மேஷம்-வெள்ளாழஜாதி, ரிஷபம்-இடையஜாதி, மிதுனம்-சக்கிலியஜாதி, கடகம் - கன்னன், சிங்கம் - பிராமணஜாதி, கன்னி - நாவிதன், துலாம்-செட்டியாகும் எ-று. 48

செப்புந்தேளே யாம்வேடன் சிரந்தசிலையே தட்டானும்
ஒப்பும்மகரம் வண்ணனும் வோதுங்கும்பம் குயவனுமாம்
தப்பார்மீனம் பறையனென தரிக்குமிராசி ஜாதியதாம்
இப்பார்புகழும் தேவகுரு யெடுத்துச்சொன்ன மொழியாமே.

(இ-ள்) விருச்சிகம் - வேடன், தனுசு - தட்டான், மகரம் - வண்ணன், கும்பம்-குயவன், மீனம்-பறையன், இவ்வாறாக இராசிகளின் ஜாதியறிய வேண்டும் எ-று. 49

இராசி நிறங்கள்

மானுஞ்சேடி யாழதுவு மாகும்நிறங்கள் கருமையதாம்
மீனுந்தேளுங் குடமதுவு மொழிவாய் பச்சைநிறமாகும்
தேனுந்தகர் சிலையறியுஞ் சொல்லுஞ்செம்மை நிறமாகும்
வானுவிடையுங் கோல்நண்டு வரையும்வெண்மை நிறமாகும்.

(இ-ள்) மகரம்-கன்னி-மிதுனம்-கருமைநிறம், மீனம்-விருச்சிகம்-கும்பம்-பச்சைநிறம், மேஷம்-தனுசு-சிங்கம்-செம்மைநிறம், ரிஷபம்-துலாம்-கடகம்-வெண்மை நிறமாகும் எ-று. 50

இராசி விழிப்புகள்

தகரும்விடையுந் தண்டுடனுந் தரிக்கும்நண்டு சிலைமானும்
பகருமிரவில் மதிக்குறவாய் பண்பாய் விழித்து மேயிருக்கும்
புகலுமறியும் பெண்கோலும் பொருந்துந்தேளுங் குடமீனும்
இகலாய்ப்பகலில் கதிற்குறவா யிருந்துவிழிக்கு மெனக்கொள்ளும்.

(இ-ள்) மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கடகம்-தனுசு-மகரம் இந்த ஆறுராசியும் இரவில் சந்திரனுக்கு உறவாய் விழித்திருக்கும், சிங்கம்-கன்னி-துலாம்-விருச்சிகம்-கும்பம்-மீனம் இந்த ஆறுராசியும் பகலில் சூரியனுக்கு உறவாக விழித்திருக்கும் எ-று. 51

ஆண்ராசி பெண்ராசி அல்லது ஒற்றைராசி இரட்டைராசி

நிரையும்புலியுந் தண்டுதகர் நெரியுஞ்சிலையுங் குட்டுவமும்
அரைவா யாண்ராசி யலதுயாகும் ஒற்றையிராசியதாம்
பெருகும்நண்டு விடைபெண்ணும் பேசுந்தேளு மான்மீனும்
மருவும்பெண் ராசியலது மாறுமிரட்டை ராசியதாம்.

(இ-ள்) துலாம்-சிங்கம்-மிதுனம்-மேஷம்-தனுசு-கும்பம் இவை ஆண்ராசி அல்லது ஒற்றை ராசியாகும். கடகம் - ரிஷபம்-கன்னி - விருட்சிகம்-மகரம்-மீனம் இந்த ஆறுராசியும் பெண்ராசி அல்லது இரட்டைராசியாகும் எ-று.

சரம் திரம் உபயம்

கோலும்நண்டு தகர்மானும் குறித்தசர ராசியாகும்
மேலுந்தேளும் புலிகலச மாடுமருவு திரராசியாகும்
சேலுஞ்சிலையும் பெண்வீணை செப்புமுபய ராசியதாம்
மாலாந்தேவ குருசொன்ன மறைநூல்கண்டு மகிழ்ந்துரையே.

(இ-ள்) துலாம் கடகம்-மேஷம்-மகரம் இந்த நாலுராசியும் சரமாகும். விருட்சிகம்-சிங்கம்-கும்பம்-ரிஷபம் இந்த நாலுராசியும் திரமாகும். மீனம்-தனுசு-கன்னி-மிதுனம் இந்த நாலுராசியும் உபயமாகும் எ-று. 53

இருகால் நாற்கால் பலகால் பறக்கும் ராசிகள்

வீணைகன்னிகோல் கும்பம்விளங்கு மிருகால் ராசியதாம்
கானுஞ்சிலையொடு விடைதகருங் கருதும்நாற்கால் ராசியதாம்
தோனுந்தேளும் நண்டதுவுந் துலங்குமிராசிப் பலகாலாம்
பூனுமீனு மானதுவும் புகலுமிராசிப் பறந்திடுமாம்.

(இ-ள்) மிதுனம்-கன்னி-துலாம்-கும்பம் இந்த நான்குராசியும் இருகாலுள்ளது. தனுசு-ரிஷபம்-மேஷம் நாற்கால் ராசியாகும். விருட்சிகம்-கடகம் பலகால் இராசியாகும். மீனம்-மகரம் பறக்கும் ராசியாகும் எ-று. 54

கால் தலை உடல் உதைய ராசி

சிங்கங்கன்னி தேள்கும்பம் செறியுமிதுனந் தலையுதையம்
பொங்குமேஷம் விடைகடகம் பொருந்துஞ்சிலைமான் காலுதையம்
தங்குமீன முடலுதையந் தானுமென்றே சாற்றிடுவாய்
எங்கும்புகழுந் தேவகுரு இயம்புநூலைக் கண்டுரையே.

(இ-ள்) சிங்கம்-கன்னி-விருட்சிகம்-கும்பம்-மிதுனம் தலையுதைய ராசியாகும். மேஷம்-ரிஷபம்-கடகம்-தனுசு-மகரம் காலுதைய ராசியாகும். மீனம்-உடலுதைய ராசியாகும். குருநூல்கண்டு பலன் சொல்லவும் எ-று. 55

பகல்குருடு, இராக்குருடு, ராசிகள்

மேஷம்ரிஷபம் சிங்கமெனு மூன்றுராசி தனைப்பார்க்க
தோஷமாகப் பகலெல்லாம் தோணவிழித்துப் பார்த்திடுமாம்
பேசுங்கன்னி கடகமுடன் புகலுமிதுன மிம்மூன்றும்
வாசமாகு மிராக்குருடு வழங்குந்தேவக் குருமொழியே.

(இ-ள்) மேஷம் - ரிஷபம் - சிங்கம் இந்த மூன்றுராசியும் பகலிற் குருடாகும். கன்னி-கடகம்-மிதுனம் இந்த மூன்றுராசியும் இராக்குருடாகும் எ-று.

பகற்செவிடு, இராச்செவிடு ராசிமூடம்

பார்க்கக்கோலும் விருச்சிகமும் பகலிற்செவிடு தானாகும்
நோக்கதனுசு மகரமுமே இரவிற்செவிடு தானாகும்

தீர்க்கமாகுங் கும்பமது தெரிவாய்பகலில் மூடமென
சேர்க்கமீன மிராமூடம் செப்புங்குருவின் மொழியிதுவே.

(இ-ள்) துலாம்-விருட்சிகம் பகலிற் செவிடாகும். தனுசு-மகரம் இரவிற் செவிடாகும். கும்பம் பகலில் மூடம். மீனம் இரவில் மூடமாகும் எ-று. 57

ராசியில் கிரகம் நிற்குங்காலம்

குறித்தக்கதிரோன் புகர்புந்தி குலாவிநிற்கு மொருமாதம்
செறித்தமதி நாளிரண்டேகால் செவ்வாய்மாத மொண்ணரையாம்
கறுத்தசனியாண் டிரண்டரையாங் கனகனோராண்ட ரவுரெண்டும்
நிறுத்ததாண் டொன்றரையா இராசியொன்றில் நின்றிடுமே.

(இ-ள்) சூரியன்-சுக்கிரன்-புதன் இராசியொன்றுக்கு மாதம்-1, சந்திரன் $2\frac{1}{4}$-நாள், செவ்வாய் மாதம்-$1\frac{1}{2}$, சனி வருடம்-$2\frac{1}{2}$, குரு வருடம்-1, இராகு கேது $1\frac{1}{2}$-வருடமாகும் எ-று.

கிரகங்களின் ஜாதி

கூருங்கதிரே யரசாகுங் குலமாஞ்சசியும் பெண்ணாகும் [ம்
பெருகுஞ்சேயான்மா லவைசீசன் பொன்னும்புருடன் புகர்பெண்ணு
சீருமுடவன் சூத்திரனும் செப்புமிராகு கேதுவுமே
பாரும்பாரு மீனகுலம் பகருந்தேவ குருமொழியே.

(இ-ள்) சூரியன் - அரசன், சந்திரன் - பெண், செவ்வாய்-ஆண், புதன்-வைசியன், குரு-ஆண், சுக்கிரன்-பெண், சனி-சூத்திரன், இராகு-கேது-ஈன குலம் எ-று. 59

கிரகங்களின் நிறம்

கதிரோன்பவளஞ் சசிதவளங் கருதுமாறல் சிவப்பாகும்
சதிராம்புந்தி பச்சைநிறம் சாற்றுபொன் குங்குமநிறம்
பதியாம்புகரும் வெண்மைநிறம் பகருமுடவன் மைநிறமாம்
எதிராமிராகு கருமைநிற மியம்புங்கேது செம்மைநிறம்.

(இ-ள்) சூரியன்-பவளநிறம், சந்திரன்-வெண்மைநிறம், செவ்வாய்-சிவந்த நிறம், புதன் - பச்சைநிறம், குரு - குங்குமநிறம், சுக்கிரன் - வெண்மைநிறம், சனி-மைநிறம், இராகு-கருமைநிறம், கேது-செம்மைநிறம் எ-று. 60

கிரக அங்கங்கள்

இரவிமார்பா மிந்துத்தோள் இயம்புங்குருதித் தலையாகும்
அறிவாய் புந்திகழுத்தெனவு மாகும்பார்ப்பான் வயிறாகும்
பிருகுமுகமாம் புங்குதுடைபேசு மிராகுமுழங் காலாம்
தெறிவாய் கேதுவுள்ளங்கால் தக்கபடியே கிரகாங்கம்.

(இ-ள்) சூரியன் - மார்பு, சந்திரன் - தோள், செவ்வாய் - தலை, புதன்-கழுத்து, குரு-வயிறு, சுக்கிரன் - முகம், சனி - துடை, இராகு - முழங்கால், கேது-உள்ளங்கால் இவ்விதமாகக் கண்டு சொல்லவும் எ-று. 61

கிரக குணங்கள்

கதிர்சேய் சனிராகுகேது காணுங்குரூரக் கிரகமதாம்
மதிபொன் புந்திபுகர்தானும் மகிழுஞ்சவுமி யாளாகும்
பதியாம் நிறைந்தப்பிறை தானும்பார்க்க சவுமியனாகும்
சதியாங்குறைந்த மதிதானுஞ் சாற்றுங்குரூ ரக்கிரகமதாம்.

(இ-ள்) சூரியன் - செவ்வாய் - இராகு - கேது இவர்கள் குரூராளாகும். சந்திரன்-புதன்-சுக்கிரன் இவர்கள் சவுமியாளாகும். பூர்வபக்ஷத்துச் சந்திரன் சவுமியன். அமரபக்ஷத்து சந்திரன் குரூரமாகும் எ-று. 62

கிரக பாஷைகள்

பகலோன்பொன்னும் புகரவனும் பகருஞ்சமஸ் கிருதபாஷை
புகலுஞ்சசியுந் தமிழென்றே புகலுஞ்சேயுந் தெலுங்காகும்
இகலும்புந்தி சோதிடமா மிராகுகேது முடவனிவர்
அகலுமன்னிய பாஷையென்றே வருளாங்குருவின் வாக்காமே.

(இ-ள்) சூரியன் - குரு - சுக்கிரன் இவர்கள் சமஸ்கிருத பாஷையாகும், சந்திரன்-தமிழ் பாஷையாகும், செவ்வாய்-தெலுங்கு பாஷையாகும், புதன்-சோதிடம், இராகு-கேது-சனி இவர்கள் அன்னியபாஷை எ-று. 63

கிரகவாகனங்கள்

புண்டரீகருக் குத்தேராம் பிறைக்குமுத்து விமானமதாம்
பண்டார்ச்செவ்வாய்க் கன்னமதாம் பகரும்புந்திக் கேகுதிரை
விண்டார்ப் பொன்னுக்கேயானை வெள்ளிகருடன் சனிகாகம்
கொண்டா றிராகுக்கேஆடு குறித்தார்க் கேதுக்கேசிங்கம்.

(இ-ள்) சூரியனுக்கு-தேர், சந்திரனுக்கு-முத்துவிமானம், செவ்வாய்க்கு-அன்னம், புதனுக்கு - குதிரை, குருவுக்கு - யானை, சுக்கிரனுக்கு - கருடன், சனிக்கு-காகம், இராகுவுக்கு - ஆடு, கேதுவுக்கு - சிங்கம் இவ்விதமாக வாகனங்கள் அறியவேண்டும் எ-று. 64

கிரகரத்தினங்கள்

சொல்லுங்கதிரே மாணிக்கம் சோமன்தானு முத்தாகும்
புல்லுஞ்செவ்வா யேபவளம் புந்திதானும் பச்சையதாம்
நல்லபொன் புட்பராகம் சுங்கன்வைரம் சனிநீலம்
வல்லராகு கோமேதகம் வகுக்குங்கேது வைடூரியம்.

(இ-ள்) சூரியன்-மாணிக்கம், சந்திரன்-முத்து, செவ்வாய்-பவளம், புதன்-பச்சை, குரு-புஷ்பராகம், சுக்கிரன்-வைரம், சனி-நீலம், இராகு - கோமேதகம், கேது-வைடூரியம் இவ்விதம் அறியவும் எ-று. . 65

கிரக லோகங்கள்

மன்னும் பரிதிதம்பாக்கு மதியோன்தானு மீயமதாம்
துன்னுமாறல் செம்பாகும் துலங்கும்புந்தி பித்தளையாம்
பொன்னும் பொன்னாம் புகர்வெள்ளி புங்குயிரும்பு தானாகும்
பன்னுமிராகு கருங்கல்லாம் பாருங்கேது துருக்கல்லே.

(இ-ள்) சூரியன்-தம்பாக்கு, சந்திரன்-ஈயம், செவ்வாய்-செம்பு, புதன் பித்தளை, குரு-பொன், சுக்கிரன்-வெள்ளி, சனி-இரும்பு, இராகு-கருக்கல் கேது-தருக்கல்லாகும் எ-று. 66

கிரக தானியங்கள்

பாருங்கதிரோன் கோதுமையாம் பகரும்பிறையும் நெல்லாகும்
காருமாறல் துவரையதாங் கணக்கன்பச்சைப் பயறாகும்
பேரும்பொன்னுங் கடலையதாம் பகருமொச்சை சனியெள்ளு
கூருமிராகு வுளுந்தாகுங் குலவுங்கேது கொள்ளாமே.

(இ-ள்) சூரியனுக்கு பிரிதி கோதுமை, சந்திரனுக்குப் பிரிதி நெல்லு, செவ்வாய்க்குப் பிரிதி துவரை, புதனுக்குப் பிரிதி பச்சைப்பயறு, குருவுக்குப் பிரிதி கடலை, சுக்கிரனுக்குப் பிரிதி மொச்சை, சனிக்குப் பிரிதி எள்ளு, இராகுவிற்குப் பிரிதி உளுந்து, கேதுவுக்குப் பிரிதி கொள்ளு எ-று. 67

கிரக திக்குகள்

சூரியன்தான் நடுதிக்காம் சோமன்தென் கிழக்காகும்
கூறியசேய்க்கு தெற்கு குறித்தபுந்தி வடகிழக்காம்
சேரும்பொன்னே வடக்காகுஞ் சுங்கன்கிழக்கு சனிமேற்கு
நேராமிராகு தென்மேற்கு நவிலுங்கேது வடமேற்கே.

(இ-ள்) சூரியன் நடுதிக்காகும், சந்திரன் தென்கிழக்காகும், செவ்வாய் தெற்காகும், புதன் வடகிழக்கு, குரு வடக்கு, சுக்கிரன் கிழக்கு, சனி மேற்கு, இராகு தென்மேற்கு, கேது வடமேற்காகும் எ-று.

கிரக ஊண்கள்

அருக்கன்ஊணே சுடுகையதா மாகும்பிறைக்கே தான்குளிர்ச்சி
பெருக்குஞ்சேய்க்கே சுடுகையதாம் பேசும்புந்தி சீதோஷ்ணமாம்
சிருக்கும்பொன் சுங்கர்க்குளிர்ச்சி சனியுமிராகு கேதுவிற்கு
உரைக்குஞ்சீ தோஷ்ணந்தானென்றே வளவைக்கண்டு புகல்வாயே.

(இ-ள்) சூரியனுக்கு ஊண் சுடுகை, சந்தினுக்கு ஊண் குளிர்ச்சி, செவ்வாய்க்கு ஊண் சுடுகை, புதனுக்கு ஊண் சீதோஷ்ணம், குருவுக்கு ஊண் குளிர்ச்சி, சுக்கிரனுக்கு ஊண் குளிர்ச்சி, சனி-இராகு-கேது இவர்களுக்கு ஊண் சீதோஷ்ணமாகும் எ-று. 69

கிரக சுவைகள்

கொள்ளுங்கதிரே கார்ப்பாகும் குலவுந்திங்கள் தித்திப்பு
விள்ளுஞ்செவ்வாய் துவர்ப்புண்ணும் வேண்டும்புந்தி வுவர்ப்பாகும்
தெள்ளும்புகர்பொன் தித்திப்பு தேடுஞ்சனியுங் கைப்பாகும்
புள்ளுராகு கேதுவுமெப் பொசிக்கும்புளிப்புத் தானகும்.

(இ-ள்) சூரியனுக்கு - கார்ப்பு, சந்திரனுக்கு - தித்திப்பு, செவ்வாய்க்கு-துவர்ப்பு, புதன்-உவர்ப்பு, சுக்கிரன்-குரு-தித்திப்பு, சனிக்கு-கைப்பு, இராகு கேதுகள் புளிப்பாகப் பொசிக்குமெனக் கொள்ளவும் எ-று. 70

கிரக புஷ்பங்கள்

அறிவாய்கதிர் செந்தாமரையா மாகுஞ்சோமன் வெள்ளலறி
பெருவாய்செவ்வாய் சண்பகமாம் பகரும்புந்தி வெண்காந்தல்
குருவாமுல்லை புகர்வெண் தாமரையாஞ்சனிக் கருங்குவளை
தருவாமிராகு மந்தாரை தானுங்கேது செவ்வல்லி.

(இ-ள்) சூரியன் - செந்தாமரை, சந்திரன் - வெள்ளல்லி, செவ்வாய்-செண்பகம், புதன் - வெண்காந்தல், குரு-முல்லை, சுக்கிரன்-வெண்தாமரை, சனி-கருங்குவளை, இராகு-மந்தாரை, கேது-செவ்வல்லியாகும் எ-று. 71

கிரக பஞ்சபூதங்கள்

ஆறல்பிரிதியு வேயாகும் அறிவாய்புகரும் மதியப்பு
கூறுங்கதிர்பொன் தேய்வாகுங் குறித்தபுதனே வாய்வாகும்
சீறும்சனிராகு கேதுசெப்பு மாகாயமென்றே
பாரார்ப்புகழுந் தேவகுருப் பண்பாயுரைத்தார் பல்லோர்க்கே.

(இ-ள்) செவ்வாய்-பிரிதிவு, சுக்கிரனுஞ் சந்திரனும் - அப்பு, சூரியன் குரு-தேயுவாகும், புதன்-வாய்வு, சனி இராகு கேது ஆகாயமாகும் எ-று. 72

கிரகதேவதைகள்

பானும்பரம சிவனகும் பரிவாம்பிறையே யீஸ்வரியாம்
தேனுந்தீ சுப்பிரமணியன் தெரிவாய்புந்தி விஷ்ணுவுமே
கோனுங்குருவும் பிரமாவாம் கூற்றன்சனியாம் புகரிந்திரன்
தானுமிராகு காளியருந் தரிக்குங்கேது சித்திராபுத்திரன்.

(இ-ள்) சூரியன்-பரமசிவன், சந்திரன் - ஈஸ்வரி, செவ்வாய்-சுப்பிரமணியர், புதன்-விஷ்ணு, குரு-பிர்மா, யெமன் சனி, சுக்கிரன்-இந்திரன், ராகு-காளி, கேது-சித்திராபுத்திரன் எ-று. 73

கிரககுணங்கள்

தோனுஞ்சசியுங் குருதானுந் துலங்குஞ் சாத்மீகராகும்
பூணும்புகர்சே யிருவர்களும் பொல்லா ராஜஸதர்களாகும்
காணுங்கதிர்புந்தி சனிகருது மிராகுகே திவர்கள்
நாணுந்தா மதர்களென நவின்றகுருவின் நன்மொழியே.

(இ-ள்) சந்திரன் - குரு சாத்மீகராகும், சுக்கிரன்-செவ்வாய் ராஜதர்களாகும், சூரியன்-புதன்-சனி-இராகு-கேது இவர்கள் தாமதர்களாகும் எ-று.

முப்பிணிக்கிரகங்கள்

கூரும்பொன் புந்திசனியுங் கொடுக்கும் வாதப்பிணிகிரகம்
நேருங்கதிர்சேய் பாம்புரெண்டும் நாட்டும்பித்தம் பிணிகிரகம்
சேரும்புகர் சந்திரன்தானுஞ் சிலேத்துமப் பிணியாகுங்கிரகம்
பேருந்தேவ குருதானும் புகன்றார்பல்லோர் தான்மகிழ.

(இ-ள்) குரு - புதன் - சனி வாதக்கிரகங்களாகும், சூரியன்-செவ்வாய்-இராகு-கேது பித்தக்கிரகமாகும், சுக்கிரன்-சந்திரன் சிலேத்துமக்கிரகங்கள்,

சரம் திரம் உபையகிரகங்கள்

மதிசேய் யிராகுகேது யிவர்மகிழுஞ் கிரகஞ்சரமாகும்
ஆதியாங்கதிர் சுக்கிரனிருவர் தானுங்கிரகம் திரமாகும்
ததியாம்புந்தி குருசனியுந் தழைக்குங்கிரக முபையமதாம்
பதியாந்தேவ குருசொன்ன பாகப்படியே பகுத்துரையே.

(இ-ள்) சந்திரன்-செவ்வாய்-இராகு-கேது சரக்கிரகமாகும். சூரியன்-சுக்கிரன் திரகிரகமாகும். புதன்-குரு-சனி உபயகிரகமாகும் எ-று. 76

கிரகங்களின் வலிவுகள்

உதையத்தில் வலியராவர் வோங்கிய புந்திபொன்னும்
இதையமா மஸ்தமத்தில் இராகுவுங் கேதுமாவர்
பதியதா முச்சந்தன்னில் பரிதியுஞ் சேயுமாகும்
ததியதாஞ் சலராசிக்கே சந்திரன் புகராவாரே.

(இ-ள்) உதையத்தில் வலியர் புதன்-குரு, அஸ்தமயத்தில் வலியர் ராகு-கேது, உச்சத்தில் வலியர் சூரியன்-செவ்வாய், சலராசிக்கு வலியர் சந்திரன்-சுக்கிரன் எ-று. 77

புந்திக்கு வலிதுசெவ்வாய்ப் புகலுவாய் சேய்க்குமந்தன்
மந்தர்க்கு வலிதுபொன்னு மந்திரிதனக்கு சுங்கன்
தொந்தமாம் புகர்க்குயிந்து சந்திரன்தனக்கு வெய்யோன்
விந்தையாம் ரவிதனக்கு ராகுவுங் கேதுவாகும்.

(இ-ள்) புதனுக்கு வலிது செவ்வாய், செவ்வாய்க்கு வலிது சனி, சனிக்கு வலிது குரு, குருவுக்கு வலிது சுக்கிரன், சுக்கிரனுக்கு வலிது சந்திரன், சந்திரனுக்கு வலிது செவ்வாய், சூரியனுக்கு வலிது இராகு-கேதுக்கள். 78

கிரகங்களின் தொழில்

வருங்கதிர் மதியரசர் ஆரல்சேனதி யாகும்
தரும்புந்தி யரசருக்கு மான்சேனதி யாகும்
குருபுகர மச்சராகுங் காரிசேவகனு மாவன்
பெருகிய விராகுகேது பிசாசொடு ஏவர்க்காரர்.

(இ-ள்) சூரியன் - சந்திரன் - அரசர்தொழில், செவ்வாய் - சேனதிபதி, புதன் - அரசகுமாரன்-பிரதானி, குரு-சுக்கிரன்-மந்திரி, சனி - சேவகன், இராகு-கேது-பிசாசு, ஏவர்க்காரராகும் எ-று 79

கிரகங்களுடைய நோக்கினளவு

இறைவனே டிந்துதானு மியம்பிடு மெதிர்நோக்காகும்
மருவியகதிர் சேயுக்குமாகிடுங் கடைகண் ணேக்காம்
தருவிய புகர்புந்திக்குந் தலையதுகவிழ்ந்த நோக்காம்
கரியவன் யிராகுகேது காண்பது வொருகண்நோக்காம்.

(இ-ள்) குரு-சந்திரன்-எதிர்நோக்காகும், சூரியன்-செவ்வாய்-இவர்கட்கு கடைக்கண் ணேக்காகும், சுக்கிரன்-புதன்-தலைக்கவிழ்ந்த நோக்காகும், சனி-இராகு-கேது இவர்களுக்கு ஒரு கண்ணேக்காகுமென அறியவும் எ-று. 80

கிரக உச்சநீச முதலிய வலிவு

உச்சக்கோ ளொண்ணேகாலா மோங்குகேந்திர கோளொன்றை
பச்சமாம் சுபகேந்திரக்கோள் பாங்கது முக்காலாகும்
மெச்சிடும் நட்புகோட்கு மொழிவது அரைபங்காகும்
கச்சையாம் பகைநீசக்கோள் காண்பது பங்குகாலாம்.

(இ-ள்) உச்சக்கோளின் வலிவு-$1\frac{1}{4}$, சுபகேந்திரக்கோள் வலிவு-$\frac{3}{4}$, நட்புக்கோள்-$\frac{1}{2}$, பகைக்கோள் வலிவு-$\frac{1}{4}$ எ-று. 81

கிரகங்களின் அதிகாரத்துவம்

பானுவுஞ் சரீரமாகும் பகர்சசி மனஞ்சேய்பூமி
தேனுமாம் புந்திவார்த்தை தக்கபொன் சுகவானுவான்
மானெனு முடவன்துக்கன் மதோன்மத்தன் சுங்கன்தானும்
ஆனெனுங் கேதுராகு அதிகாரம் மந்தபுத்தி.

(இ-ள்) சூரியன் - சரீரம், சந்திரன் - மனம், செவ்வாய் - பூமி, புதன்-வார்த்தை, குரு-சுகவான், சனி-துக்கன்-மதோன்மத்தன், சுக்கிரன்-கேது-இராகு-விகாரபுத்தி யுடையவராகும் எ-று: 82

காரக விபரங்கள்—மற்றுமொருவிதம்,

சூரியனுக்குறிய காரகங்கள்

பகலவன் பகல்காலப் பிதுருமாகும்
பண்பானச் சரீரமொடு வாத்மாவாகும்
புகலவே வலதுகண் சவுரியராகும்
புவியரசர் சேவையொடு தயிரியங்கள்
இகல வேசைவைத்துவ உத்தியோகம்
இஷ்டமுள தபமனுஷ்டான யாத்திரை
அகலவே பகர்ப்பொழுது பஞ்சலோகம்
அருக்கனுட காரகங்க ளாகும்பாரே.

(இ-ள்) சூரியன் பகற்காலத்தில் பிதுர்க்காரகன், சரீரகாரகன், ஆத்மாகாரகன், வலதுநேத்திரகாரகன், சவுரியகாரகன், அரசர் சேவைகாரகன், தயிரியகாரகன், சைவத்துவகாரகன், உத்தியோகக்காரகன், சுபசுபகாரகன், அனுஷ்டானகாரகன், யாத்திரைக்காரகன் பகற்பொது, பஞ்சலோகக்காரகன், இவை முதலானதும் சூரியனுக்காம் எ-று. 83

சந்திரனுக்குறிய காரகங்கள்

சந்திர னிராக்கால மாதுராகும்
சாற்றிடுங் கணபதி தெய்வமாகும்
விந்தைபெரு ஸ்தானதி கந்தபுஷ்பம்
விளங்கிடும் பராசக்தி தானுமாகும்

மந்தமா மதுர ஜீரணங்களோடு
மறையுஞ் சாமரம் பண்டுபலாதியாகும்
அந்தமுறும் பீதாம்பரங்க ளிவைகள்யாவும்
அம்புலியின் காரகமென் றறைகுவாயே.

(இ-ள்) சந்திரன் இராக்கால மாதருகாரகன், கணபதிதேவதைகாரகன், ஸ்தானுதி சுகந்தபுஷ்பகாரகன், பராசக்திக்காரகன், மதுரச்சீரணக்காரகன், சாமரகாரகன், பண்டுபலாதிகாரகன், பீதாம்பரகாரகன் இவை முத லானதும் சந்திரனுக்காகும் எ-று. 84

செவ்வாய்க்குறிய காரகங்கள்

செவ்வாயாஞ் சகோதரனுஞ் சுப்பிரமணியன்
சவுரியனும் ரொணம்பூமி துவேதகாரன்
மௌவியமாம் சோராக்கினி யுத்தரங்கம்
மகாவீரியன் சேனாதி பதியுமாகும்
ஔவியமே சுயம்பாகம் யிரத்தகாயம்
அரையவே உச்சாகஞ் சாகசங்கள்
சௌவியமாய்க் காரகங்க ளிவைகளெல்லாஞ்
சாற்றுவாய் குஜன்தனக்குச் சரியாய்தானே.

(இ-ள்) செவ்வாய் சகோதரகாரகன், சுப்பிரமணியன், சவுரியகாரகன், ரொணகாரகன், பூமிகாரகன், துவேசகாரகன், சோரகாரகன், யுத்தகார கன், வீரியகாரகன், சேனாதிபதிகாரகன், சுயம்பாகக்காரகன், இரத்தகாயக் காரகன், உச்சாகக்காரகன், சாகசக்காரகன் இவை முதலானதுஞ் செவ் வாய்க்காகும் எ-று. 85

புதனுக்குறிய காரகங்கள்

வித்தையொடு ஞானகார கனுமாகும்
விளங்கிடு மம்மானு மிவரேயாகும்
சுத்தமுள வியாபார முபவாசங்கள்
சொல்லிடும் லிகிதகார கனுமாகும்
பத்தியகணித மெக்கியஞ் சம்போகம்
பகருமோர் சித்திரமெழுதல் தானும்
இத்தரைமேல் புதனுடைய காரகங்கள்
இவையாகு மெனக்கண்டு யியம்புவீரே.

(இ-ள்) புதன் வித்தியாகாரகன், ஞானகாரகன், அம்மான்காரகன், வியாபாரகாரகன், உபவாசகாரகன், லிகிதகாரகன், கணிதகாரகன், எக்கிய காரகன், சம்போககாரகன், சித்திரகாரகன் இவை முதலானதும் புதனுக் காகும் எ-று. 86

குருவுக்குறிய காரகங்கள்

புத்திரனுங் கனகன் மதனேயாகும்
பேசரிய்ஞான மாசாரத் தத்துவம்
சித்தமாம் யோக அப்பியாசமோடு
செய்யுமோ ரஷ்டமா சித்திகாரன்

உத்தமனு முபதேசஞ் சுருதிஸ்மிருதி
ஓங்கு மாலோசனைகள் சித்திபுத்தி
நத்திய வியாழனுட காரகங்கள்
நவின்றபடி யிவையெல்லா முரைசெய்வாயே.

(இ-ள்) குரு புத்திரகாரகன், மதனகாரகன், ஞானகாரகன், ஆசார காரகன், யோககாரகன், அஷ்டமாசித்திகாரகன், உபதேசகாரகன், சுருதி ஸ்மிருதிகாரகன், ஆலோசனைக்காரகன், சித்திரகாரகன், புத்திரகாரகன் இவை முதலானதும் குருவினுக்குச் சொல்லவும் எ-று. 87

சுக்கிரனுக்குறிய காரகங்கள்

விள்ளுவாய்க் களத்திரமொடு வாகனங்கள்
வேணவஸ்தி ராபரணஞ் சம்பத்துக்கள்
கொள்ளுவாய் கந்தபுஷ் பாதிலீலை
கூறிடும் நிதியோடு ஸ்திரீசம்போகம்
தெள்ளுமோ ரழகோடு போகபாக்கியம்
தாசி தாசாள் பெறப்பட்டப்பேரும்
புள்ளுவாய்ப் பகர்க்கால மாதுமென்றே
புகழாகச் சுக்கிரர்க்குக் காரகங்கள்.

(இ-ள்) சுக்கிரன் களத்திரக்காரகன், வாகனக்காரகன், வஸ்திராபரண காரகன், சம்பத்துக்காரகன், கந்தபுஷ்பாதிகாரகன், லீலைகாரகன், நீதி காரகன், ஸ்திரீசம்போகக்காரகன், அழகுகாரகன், போககாரகன், பாக் கியக்காரகன், தாசிதாசாள்காரகன், பட்டக்காரகன், பகர்க்கால மாதரு காரகன் இவை முதலானதும் சுக்கிரனுக்காகும் எ-று. 88

சனிக்குறிய காரகங்கள்

தீர்க்காயுள் கடன்விருத்தி அடிமையாதல்
தெண்டனை யரசரால் களவுதுன்பம்
பேர்க்கவே பரதேசஞ் சாதிப்பிரட்டம்
பெருகிய வாதமொடு முழங்கால்நீங்கல்
நீர்க்கநிசிக் காலபிதுர் சித்தப்பிரம்மை
நீசஸ்திரி சம்போகம் மேகநீராம்
வேர்க்கவே சிறைபடுதல் நாணமின்மை
விளங்குமிக் காரகங்கள் சனிக்கென்றோதே.

(இ-ள்) சனி தீர்க்காயுள்காரகன், கடன்விருத்திகாரகன், அடிமைகார கன், தெண்டனைகாரகன், துன்பகாரகன், களவுகாரகன், பரதேசசஞ்சார காரகன், ஜாதிப்பிரஷ்டக்காரகன், வாதரோககாரகன், முழங்கால் பின்னகாரகன், இராக்கால பிதுருகாரகன், சித்தப்பிரம்மைகாரகன், நீச ஸ்திரீசம்போககாரகன், மேகநீர்காரகன், சிறைகாரகன், நாணமின்மை காரகன் இவை முதலானதும் சனிக்காகும் எ-று. 89

இராகுவுக்குறிய காரகங்கள்

மாதாமகன் பிதுர்பாட்டன் வம்சம்
மருகிவிடு மன்னியதேச வாசம்

தீதாருந் தெண்டனையுங் காவலாகும்
திகழாகும் ரோகஸ்திரீ சங்கமென்றும்
வாதாருந் துற்செய்கை விகடவித்தை
வாய்க்குஞ்சேவக துன்பமவயவ பின்னம்
தோதாருங் குத்துவெட்டு காயத்தோடு
தொகுத்தயிவை ராகுவிற்கே துலங்கச்சொல்லே.

(இ-ள்) இராகு மாதாமகக்காரகன், பிதுர்பாட்டன் வமிசகாரகன், அன்னியதேச வாசகாரகன், தெண்டனைகாரகன், காவல்காரகன், ரோகஸ்திரி சங்ககாரகன், வாதுகாரகன், துர்ச்செய்கைக்காரகன், விகடவித்தைக்காரகன், சேவகதுன்பகாரகன், அவயவபின்னகாரகன், குத்துகாரகன், வெட்டுகாரகன், காயகாரகன் இவை முதலானதும் இராகுவுக்காகும் எ-று. 90

கேதுவுக்குறிய காரகங்கள்

பேசுவாய் கபடதொழில் மோக்ஷகாரகன்
பீடிக்கும் விஷப்பாண்டு சித்தபிர்மை
தோஷமாங் குஷ்டமொடு வயிற்றுநோயாம்
தோன்றிய மாதுர்பாட்டியின் வம்சம்
கூசிடும் ரணகாயம் அக்கினிவாதை
கூறுகீழ் குலத்தொழி லுத்தரங்கம்
வீசிடும் சும்பனம் ஞானபோதம்
விளங்கிடுஞ் சமயல்பந்தனமாங் கேதே.

(இ-ள்) கேது கபடத்தொழில் காரகன், மோக்ஷகாரகன், விஷகாரகன், பாண்டுகாரகன், சித்தபிர்மைகாரகன், குஷ்டகாரகன், வயிறுநோய்க்காரகன், மாதுர்பாட்டி வம்சகாரகன், ரணகாயக்காரகன், அக்கினிவாதைகாரகன், கீழ்குலத்தொழில் காரகன், உத்தரங்ககாரகன், சும்பனக்காரகன், ஞானபோதகாரகன், சமயல்காரகன், பந்தனகாரகன் இவை முதலானதும் கேதுவுக்காம் எ-று. 91

கிரககாரகங்கள் முற்றிற்று.

செவ்வாய் தோஷம்

செவ்வாய் தோஷம் என்பது ஜென்மலக்கினத்திற்கு 2-4-7-8-12-ஆம் இடங்களில் செவ்வாய் நிற்கின் அவை தோஷம் எனவும், இவ்வாறு ஓர் புருஷப் பிரஜைக் கிருக்குமாயின் அந்த ஜாதகனது மனைவி இறந்துபோவள் எனவும், ஓர் ஸ்திரீ பிரஜைக் கிருக்குமாயின் அவளது கணவன் இறந்துபோவன் எனவுங் கூறப்பட்டுள்ளன. அவையாவன,

“வாக்கிரு நான்கேழெட்டு மருவுமீராறிற் செவ்வாய்
தேக்கிய வரன்தனக்குத் திருந்தவே வந்துநிற்கில்
ஆக்கிய மனையாள்சாவாள் ஆயிழை தனக்குநிற்கில்
பாக்கியப் புருஷன்செத்து பார்தனில் விதவையாமே”

எனக் கூறியுள்ளனர்.

இவ்வாறு செவ்வாய் தோஷமற்ற ஜாதகன் ஜாதகிகளுக்கு மேற்சொன்ன மனைவி தோஷமோ, அல்லது புருஷதோஷமோ இல்லை எனக் கூறுதற்கில்லை. நவகோட்களினது தோஷத்தாலேயே எந்த தோஷத்தையுங் கூறப்படல் வேண்டும். ஓர் ஜாதகனுக்கு செவ்வாய் 2-4-7-8-12-ஆம் இடங்களி லிருந்துவிட்டால் அவனது மனைவிக்கு மாரணம் சம்பவிக்கும் எனவும், ஓர் பெண் ஜாதகத்திற்கு மேற்சொன்னவாறு 2-4-7 8-12-ஆம் ராசியில் செவ்வாய் இருந்துவிட்டால் அவளது கணவனுக்கு தோஷம் உண்டாகும் என்பதும், பொருத்தமற்ற விஷயமாகும். எப்படியெனில், இரண்டாம் இடம் என்பது குடும்பம் எனவும், நான்காம் இடம் என்பது சுகம் எனவும், 7-ஆம் வீடு என்பது மனைவி (பெண்ஜாதகமாயின் பர்த்தா) எனவும், 8 ஆம் இடம் என்பது மாங்கல்யம் அல்லது ஆயுள் ஸ்தானம் எனவும், 12-ஆம் இடம் என்பது விரயம் எனவும் கூறப்பட்டிருத்தலால், மேற்படி தோஷமுள்ள பெண்ணை அமங்கலி எனவும், மேற்படி தோஷமுடைய புருஷனை மனைவிதோஷ முடையவன் எனவும் கூறமுடியுமோ? முடியாது. மேஷம்-விருச்சிகம்-துலாம்-ரிடபம் ஆகிய ராசியில் பிறந்தோர்க்குச் செவ்வாய் தோஷம் பாதிக்கப்படமாட்டாதெனச் சில நூற்களும், மீனம்-தனுசு மிதுனம்-கன்னி ஆகிய ராசியில் பிறந்தோனுக்கு செவ்வாய் தோஷம் பாதிக்காதெனச் சில நூற்களும் கூறப்பட்டுள்ளன.

மற்றும் சில நூற்களுள் ஜென்மலக்கினத்திற்கும், சந்திரலக்கினத்திற்கும், சுக்கிரன்-சனி இவர்கள் இருந்த ராசிக்கும் 2-4-7 8-12-ஆமிடங்களில் செவ்வாய் நிற்கச் செவ்வாய் தோஷமேயாயினும், குரு - வெள்ளி இவர்களுடன் சேர்ந்தோ, அல்லது மேற்படி இருவரால் பார்க்கப்பட்டே இருக்கின் அவர்களுக்கு தோஷம் இல்லையெனக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறான பல அபிப்பிராயங்களை காணுமிடத்து மனைவி தோஷமோ அல்லது பர்த்தா தோஷமோ செய்யும் கிரகம் செவ்வாய் மாத்திரமல்லவென்றும், நவகோட்களாலேயே மேற்படி தோஷம் பாதிக்கப்படக்கூடும் என்பதும் நன்குவிளங்குவதால், மனைவி தோஷம் அல்லது பர்த்தா தோஷம் என்பதை நவகோட்களினது ஆதார ஆதேயத்தால் நிச்சயிக்கவேண்டுவது முக்கியகடமையென்பதை வற்புறுத்துகிறேன். இவ்வாறான ஆராய்ச்சியால் இங்கு கூறும் செவ்வாய் தோஷம் என்பது பண்டைய நூற்களில் கூறப்படவில்லை எனவும், சில நூற்றாண்டுகளுக்குமுன் தென்தேயத்திலிருந்து இவ்விஷயம் வெளியாகி இருக்கக்கூடும் எனவுங் கருதவேண்டுவதாகிறது. அனேகமாய் ஏழில் செவ்வாய் நின்ற ஜாதகங்களை ஸ்திரீ புருஷர் இவருக்கும் ஏனைய கோட்களுள்ள தாரதம்மியங்களை ஆராய்ந்து விவாகம் செய்தல் நலம்,

---

கா ல ச க் க ர ம்

காராருங் குழலுமையாள் வணங்கிக் கேட்ப
கங்கைவார் சடையண்ணல் கருத்துகந்து சொன்ன
சீராருங் காலசக்கரந் தமிழாற் செப்ப
சிற்பரமாய்த் தற்பரமாய்ச் சிவஞானப் பொருளா
யாராலுந் தெரியவொணு மறைமுதற்கு முதலா
யழகியசிற் றம்பலத்து ளானந்த நடஞ்செய்
யோராரும் பேரொளியிற் றிருவுருவா யுதித்த
ஓரம்பக் கணபதிபொன் னிணையடியைத் துதிப்பாம்.

காலசக்கரங்கொள்ளும் வகை

காலசக்கரத்தை யன்பாய் கணித்துபார்த்த தன்பலத்தை
சாலவே சொல்வதானல் தனிவட்டத்தின் கீழ்ரெண்டு
மூலைகளொவ் வோர்ரேகை மூண்டதென் வடக்கில்ரெண்டு
சீலமா யெழுதிசார்பாய் சிறப்புடன் கவனிப்பீரே.

(இ-ள்) ஒருவட்டத்தையிட்டு இதனடுவே கீழ்மேல் இரண்டுரேகையும், தென்வட விரண்டுரேகையும், மூலைகளில் ஒவ்வோர் இரேகையுமாக கீறிற் பன்னிரண்டு கதிராய், 21-சக்கரமாம்: இதிலே நேர்கிழக்கு, நேர்தெற்கு, நேற்மேற்கு, நேர்வடக்கு, இவற்றிலே நிற்கும் ராசியாவன:—இடபம்-சிங்கம்-விருச்சிகம்-கும்பம். இதற்கு வலத்தின் ராசியாவன:—மேடம்-கடகம்-துலாம்-மகரம் என்கிற நான்கிராசியாம். இதற்கு நாற்கோணராசியாவன:—மிதுனம்-கன்னி-தனுசு-மீனம். இப்படி கீறி நிறுத்தினது காலசக்கரமாம் ஏ-று.

வலநாள்:—அசுபதி - புநர்பூசம் - அத்தம் - மூலம் - பூரட்டாதி முதலாக மும்மூன்றுநாள் வலநாள். இவை மேடாதி மீனந்தமாக எண்ணப்படும். முந்தினபாதம் உடல், முடிந்தபாதம் உயிர்.

இடநாள்:—உரோகணி-மகம்-விசாகம் திருவோணமுதலாக மும்மூன்று நாள் இடநாள், இவை விருச்சிகமுதல் தனுர்வந்தமாக எண்ணப்படும். முந்தினபாதம் உயிர், முடிந்தபாதம் உடல்.

காலசக்கரதிசை வருடங்களாவன

மேடசெவ்வாய் - 7, இடபசுக்கிரன் - 16, மிதுனபுதன் - 9, கடகசந்திரன்-21, சிங்காதித்தன்-5, கன்னிபுதன்-9, துலாசுக்கிரன்-16, விருச்சிக செவ்வாய்-7, தனுர்வியாழன்-10, மகரசனி-4, கும்பசனி 4, மீனவியாழன்-10.

கதிகள்:—கன்னியினின்று கடகத்திற் பாய்வது, கடகத்தினின்று கன்னியிற் பாய்வது, சிங்கத்தினின்று மிதுனத்திற் பாய்வது, மிதுனத்தினின்று சிங்கத்திற் பாய்வதும் மண்டூக கதி.

மேடத்தினின்று தனுசிற் பாய்வது, மீனத்தினின்று விருச்சிகத்திற் பாய்வதும், மிருகேந்திராவலோகனகதி.

தனுசினின்று மேடத்திற் பாய்வது, விருச்சிகத்தினின்று மீனத்திற் பாய்வதும் தாரக கதி.

சவ்விய சக்கரம்

அச்சுவினி கார்த்திகைப்புனர்பூசம் ஆயில்யம்
அத்தமும் சோதிமூலம்
உச்சிதமாம் உத்திராடம் பூரட்டாதியும்
ஒளிர்ரேவதியுமுடனே
மெச்சிடும் பரணிபூசம் சித்திரைபூராடம்
மேவுமுத்தி ரட்டாதியும்
இச்செகத்தில் சவ்யசக்கர மென்பர்காண்
இனியஜோதிட நேயரே.

அச்சுவினி-கார்த்திகை-புனர்பூசம்-ஆயிலியம்-அஸ்தம்-சோதி-மூலம்-உத்திராடம்-பூரட்டாதி-ரேவதிக்கு ராசி விவரம்

நக்ஷத்திரக்கால்	இராசிகள்								
1-ம் கால்	1	2	3	4	5	6	7	8	9
2-ம் கால்	10	11	12	8	7	6	5	4	3
3-ம் கால்	2	1	12	11	10	9	1	2	3
4-ம் கால்	4	5	6	7	8	9	10	11	12

பரணி-பூரம்-சித்திரை-பூராடம்-உத்திரட்டாதிக்கு சக்கரம்

1-ம் கால்	8	7	6	4	5	3	2	1	2
2-ம் கால்	11	10	9	1	2	3	4	5	6
3-ம் கால்	7	8	9	10	11	12	8	7	6
4-ம் கால்	4	5	3	2	1	12	11	10	9

அபசவ்ய சக்கரம்

அன்புசேர் நக்ஷத்திரத்தில் அழகுரோகணி நக்ஷத்திரம்
இன்புறும் மகம்விசாகம் இசைந்தநல் திருவோணந்தான்
தன்மைசே ரபசவ்யத்தின் சக்கர மாகுமென்று
நன்மைசேர் கணிதவல்லோர் நயமுட னுரைத்தவாரே.

உரோகணி-மகம்-விசாகம்-திருவோணத்திற்கு சக்கரம்

1-ம் கால்	12	11	10	9	8	7	6	5	4
2-ம் கால்	3	2	1	9	10	11	12	1	2
3-ம் கால்	3	4	5	6	7	8	12	11	10
4-ம் கால்	9	10	11	12	1	2	3	1	4

புகழ்மேவு மிருகசிரிடமு மின்னும்
பூரமுடன் அனுஷமும் அவிட்டத்தோடு
மகிழுமிந்த நக்ஷத்திர கணிதநேர்மை
மாக்ஷிமையா யிதனடியில் வரைந்திருக்கும்
திகழ்வரையின் லக்கத்தை யனுசரித்து
சிறப்புடனே நக்ஷத்ர காலிற்கேற்க
ஜெகமீது கவனித்து பலனைச்சொல்வீர்
தேசத்தின் ஜோதிடநூல் கலைவல்லோரே.

மிருகசீரிடம்-பூரம்-அனுடம்-அவிட்டத்திற்கு சக்கரம்.

1-ம் கால்	9	8	7	6	5	4	3	2	1
2-ம் கால்	6	7	8	12	11	10	9	8	7
3-ம் கால்	16	4	5	3	2	1	9	10	11
4-ம் கால்	2	1	2	3	4	5	6	7	8

திருவாதிரை-உத்திரம்-கேட்டை-சதயத்திற்கு சக்கரம்

1-ம் கால்	9	10	11	12	8	7	3	4	5
2-ம் கால்	6	7	8	12	11	10	9	8	7
3-ம் கால்	6	4	5	3	2	1	9	10	11
4-ம் கால்	12	1	2	3	4	5	6	7	1

சவ்வியம் அச்சுவினி முதல்பாதத்திற்கு

மேடச்செவ்வாய் ரிஷபசுக்கிரன் மிதுனபுதன் கடகசந்திரன்
காடதில்வாழ் சிங்கசூரியன் கன்னிபுதன் துலாசுக்ரன்
தேடரிய விருச்சிகத்தின் செவ்வாய் தனுசுவியாழமும்
நாட்டஸ்வனி முதல்பாதமாய் நவின்ற நிலையாகுமே.

(இ-ள்) மேடச்செவ்வாய் காலசக்கிர வருடத்திற்கு அபகாரம் ஷூ-100, நாள்-25, நாழிகை-12. மேடச்செவ்வாய், இடபச்சுக்கிரன், மிதுனபுதன், கடகசந்திரன், சிம்மசூரியன், கன்னிபுதன், துலாசுக்கிரன், விருச்சிக செய்வாய், தனுர்வியாழன் எ-று.

அச்சுவினி 2-ஆம் பாதத்திற்கு

மகரசனி கும்பசனி மீனகுரு தேள்குஜன்
ககனம்புகழ் கோல்புகர் கன்னிபுதன் கடகசந்திரன்
மகிழும் சிங்கசூரியன் மிதுனபுத னென்றுமே
பகருமஸ்வனி இரண்டாம் பாதமென் றுரைப்பீரே.

(இ-ள்) இடபவெள்ளி காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ஷூ-85, மாதம்-2, நாள்-7, நாழிகை-45, விநாடி-53. மகரசனி, கும்பசனி, மீன வியாழன், விருச்சிகச்செவ்வாய், துலாவெள்ளி, கன்னிபுதன், கடகசந்திரன், சிங்காதித்தன் மிதுனபுதன் எ-று.

அச்சுவினி 3-ஆம் பாதத்திற்கு

தன்மைசே ரிடபசுக்கிரன் தாரணி மேடச்செவ்வாய்
பன்னிய மகரகும்பம் பகர்சனி தனுர்வியாழன்
மன்னிய மிதுனராசி மாலெனும் புதனுமாக
நன்மைசே ரஸ்வனிநக்ஷத்திர நவில்மூன்றும் பாதமாமே.

(இ-ள்) மிதுனபுதன், காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ஷூ-83, மாதம்-1, நாள்-9, நாழிகை-2, விநாடி-பத்தே அரைக்கால்; இடபவெள்ளி மேட செவ்வாய், மீனகுரு, கும்பசனி, மகரசனி, தனுர்வியாழன், மேடசெவ்வாய், இடபசுக்கிரன், மிதுனபுதன் எ-று.

அச்சுவினி 4-ஆம் பாதத்திற்கு

மாதேகடக சந்திரனும் மகிழும் சிங்காதித்தனும்
சீதளக் கன்னிபுதன் சிங்காரி துலாம்வெள்ளி
கோதிலா தேள்குஜனுடன் கும்பமகர சனியாகும்
ஓதும்தனுசு மீனகுரு உற்றநான்காம் பாதமே.

(இ-ள்) கடகசந்திரன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ஷூ-86, மாதம்-2, நாள்-27, நாழிகை-54, விநாடி-25, கடகசந்திரன், சிங்காதித்தன் கன்னிபுதன், துலாசுக்கிரன், விருச்சிகசெவ்வாய், தனுர்குரு, மகரசனி, கும்பசனி, மீனகுரு எ-று.

பரணி 1-ஆம் பாதத்திற்கு

பன்னுந்தேள் குஜன் துலாம் சுக்கிரனுகும்
பகர்கன்னி புதன்கடக சந்திரனுகும்
மின்னும்சிங் காதித்தன் மிதுனம் மாலாம்
மேன்மைசேர் ரிஷபவெள்ளி மேடச்செவ்வாய்
தன்மைசேர் மீனகுரு என்றுதானே
தரணியில்வாழ் ஜோதிடர்க்கு தகமையாக
நன்னயமாம் பரணிமுதற் பாதமென்று
நவின்றிடுவீர் கணிதநூ லாராய்ந்துதானே.

(இ-ள்) சிங்காதித்தன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-100, நாள்-18, விருச்சிகசெவ்வாய், துலாசுக்கிரன், கன்னிபுதன், கடகசந்திரன், சிங்காதித்தன், மிதுனபுதன், இடபவெள்ளி, மேடசெவ்வாய், மீனவியாழன் எ-று.

பரணி 2-ஆம் பாதத்திற்கு

மகரகும்ப சனிதனுசு வியாழமூர்த்தி
மன்னுமேஷக் குஜனும் ரிஷபசுக்கிரன்
புகழுமிது னப்புதனும் கடகசந்திரன்
புகல்சிங்க ரவிகன்னி புதனேயென்று
மகிழ்பரணி நக்ஷத்திர ரெண்டாம்பாதம்
மாநிலத்தின் ஜோதிடர்க ளுரைத்தவாக்கியம்
ஜகமீது கிரகங்கள் குறிப்பறிந்து
சாற்றுவீர் விபரமாம் கலைவல்லோரே.

(இ-ள்) கன்னிபுதன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-85, மாதம்-1, நாள்-7, விநாடி-மூன்றரையே மூன்றுவீசம். கும்பசனி, மகரசனி, தனுர்வியாழன், மேடசெவ்வாய், இடபவெள்ளி, மிதுனபுதன், கடகசந்திரன், சிங்கசூரியன், கன்னிபுதன் எ-று.

பரணி 3-ஆம் பாதத்திற்கு

துலாவெள்ளி தேள்குஜன் தனுர்வியாழன்
தோற்றும்கும்ப மகரசனி மீனவியாழன்
கலைவல்ல ஜோதிடத்தின் கணிதநூலோர்
கவனிப்பீர் விருச்சிகத்தின் செவ்வாய்தானே
துலாசுக்கிரன் கன்னிபுதனென மதித்து
துலங்குஞ் சோதிடகணி தாராய்ச்சிசெய்து
நலமுடனே கிரகநிலை தனையறிந்து
நன்மையுடன் நவின்றிடுவீர் பலனைத்தானே.

(இ-ள்) விருச்சிகசெவ்வாய் காலசக்கரவருடத்திற்கு அபகாரம் ௵-83, மாதம்-2, நாள்-9, நாழிகை-23, விநாடி-ஐம்பத்தி ஒன்றேகால். துலாவெள்ளி, விருச்சிகசெவ்வாய், தனுர்வியாழன், மகரசனி, கும்பசனி, மீனவியாழன், விருச்சிகசெவ்வாய், துலாசுக்கிரன் கன்னிபுதன் எ-று.

பரணி 4-ஆம் பாதத்திற்கு

பாரப்பா கடகசந்திரன் சிங்காதித்தன்
பார்புகழும் மிதுனபுதன் ரிஷபசுக்கிரன்
கோரப்பா மேஷகுஜன் மீனவியாழன்
கும்பசனி மகரசனி தனுர்வியாழன்
நேரப்பா பரணி நான்காம்பாதத்தின்
நேர்மைதனை கவனித்தா ராய்ந்துணர்ந்து
சீரப்பா கிரகநிலை தனையறிந்து
சிறப்புடனே நவின்றிடுவீர் கலைவல்லோரே.

(இ-ள்) கடகசந்திரன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-86, ௴-0, நாள்-0-க்கு, கடகசந்திரன், சிங்கசூரியன், மிதுனபுதன், ரிடபசுக்கிரன், மேடகுஜன், மீனகுரு, கும்பசனி, மகரசனி, தனுசுகுரு எ-று.

கார்த்திகை 1-ஆம் பாதத்திற்கு

மின்னலொளி மேஷகுஜன் ரிஷபசுக்கிரன்
மிதுனபுதன் கடகசந்திரனே யென்று
பன்னுபுகழ் சிங்கரவி கன்னிபுதனென்றும்
பகாறிய துலாசுக்கிரத் தேள்செவ்வாயாம்
தன்மைசேர் தனுர்ராசி வியாழனை
சாற்றிடுங் கார்த்திகை முதல்பாதத்திற்கென்று
நன்மையா யாராய்ந்துணர்ந்து பலனைசொல்வீர்
நலமுடனே ஜோதிடநூற் கலைவல்லோரே.

(இ-ள்) தனுர்வியாழன் காலசக்கர வருடத்திற் கபகாரம் ௵-100 மாதம்-1, நாள்-6, மேடசெவ்வாய், இடபவெள்ளி, மிதுனபுதன், கடகசந்திரன், சிங்கசூரியன், கன்னிபுதன், துலாசுக்கிரன், விருச்சிகசெவ்வாய், தனுர்வியாழன் எ-று.

கார்த்திகை 2-ஆம் பாதத்திற்கு

மகரசனி கும்பசனி மீனவியாழன்
மன்னுதேள் குஜன்துலா சுக்கிரனும்
ஜெகமகிழும் கன்னிபுதன் கடகசந்திரன்
சிங்காதித்தன் மிதுன புதனேயென்று
மகிழுடனே கார்த்திகை ரெண்டாம்பாதத்தின்
மற்றமெல்லாம் கவனித்து கணித்தாராய்ந்து
பகருவீர் ஜோதிடர்க ளுலகோருக்கே
பலாபலன் விபரமதாய் விளங்கும்பாரே.

(இ-ள்) மகரசனி காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-89, நாள்-16, நாழிகை-56, விநாடி-28¼, மகரசனி, கும்பசனி, மீனவியாழன், விருச்சிகசெவ்வாய், துலாவெள்ளி, கன்னிபுதன், கடகசந்திரன், சிங்கசூரியன், மிதுனபுதன் எ-று.

கார்த்திகை 3-ஆம் பாதத்திற்கு

காணுமே ரிஷபவெள்ளி மேஷச்செவ்வாய்
கழறுவீ ரினிதாக மீனவிழாழன்
தோணுமே மகரகும்ப சனியென்றன்பாய்
தோற்றிடுமே தனுர்வியாழன் மேடச்செவ்வாய்
பூணுவீ ரிடபவெள்ளி மிதுனபுதனென்றே
புகல்வீரே கார்த்திகை மூன்றும்பாதம்
வேணுமென்றே ஜோதிடநூல் கணித்தாராய்ந்து
விபரமாய்ப் பலாபலன்கள் விளம்புவீரே.

(இ-ள்) கும்பசனி காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-83, நாள்-17, நாழிகை-20, விநாடி-57 முக்காலேவீசம், இடபவெள்ளி, மேடசெவ்வாய்,

மீனவியாழன், கும்பசனி, மகரசனி, தனுர்வியாழன், மேடசெவ்வாய், இடபவெள்ளி, மிதுனபுதன் எ-று.

கார்த்திகை 4-ஆம் பாதத்திற்கு

அப்பனே கடகமதி சிங்காதித்தன்
அழகான கன்னிபுதன் துலாவின்சுக்கிரன்
தப்பிலா தேள்குஜனே தனுர்வியாழன்
சாற்றுவீர் மகரகும்ப சனிதானென்று
ஒப்பியே மீனவியாழன் தானென்று
ஓதிடுங் கார்த்திகை நான்காம்பாதத்திற்கு
செப்பிடுஞ் ஜோதிட நாலே கவனித்தன்பாய்
சொல்லுவீர் பலாபலனை யன்பாய்த்தானே.

(இ-ள்) மீனவியாழன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-86, மாதம்-1, நாள்-11, நாழிகை-51, விநாடி-$37\frac{1}{2}$ அரிக்கால், கடகசந்திரன், சிங்கசூரியன், கன்னிபுதன், துலாவெள்ளி, விருச்சிகசெவ்வாய், தனுர்வியாழன், மகரசனி, கும்பசனி, மீனவியாழன் எ-று.

அபசவ்வியம் உரோகணி 1-ஆம் பாதத்திற்கு

தனுர்வியாழன் மகரகும்ப சனியென்றோது
சாற்றிடும்மீனகுரு மேடச்செவ்வாய்
சினமில்லா ரிஷபசுக் கிரனேயென்பீர்
சீரான மிதுனபுதன் சிங்காதித்தன்
கனமேவும் கடகசந் திரனும்பாரில்
கருதரிய அபசவ்ய சக்கரத்தின்
இனிதான ரோகணி முதற்பாதத்தில்
இசைந்ததென கவனித்து பலன்சொல்வீரே.

(இ-ள்) விருச்சிகசெவ்வாய் காலசக்கர வருடத்திற்கு அபகார ௵-86, நாள்-29, நாழிகை-18, விநாடி-எட்டேகாலே அரிக்கால், தனுர்வியாழன், மகரசனி, கும்பசனி, மீனவியாழன், மேடசெவ்வாய், இடபவெள்ளி, மிதுனபுதன், சிங்கசூரியன் கடகசந்திரன் எ-று.

உரோகணி 2-ஆம் பாதத்திற்கு

கன்னிபுதன் துலாசுக்கிரன் கருதும்தேள் சேய்மீனகுரு
மன்னும்மகரக் கும்பசனி மாதேதனுசு வியாழனென
பன்னும்தேள் சேய்துலாவெள்ளி பகரும்ரோகணி ரெண்டாம்பாதம்
நன்மையாக வமைந்ததென நவில்வீர்கணித வல்லோரே.

(இ-ள்) துலாவெள்ளி காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-83, மாதம்-2, நாள்-9, நாழிகை-23, விநாடி-$51\frac{1}{4}$-வீசம், கன்னிபுதன், துலாவெள்ளி, விருச்சிகசெவ்வாய், மீனவியாழன், கும்பசனி, மகரசனி, தனுர்வியாழன், விருச்சிகசெவ்வாய், துலாவெள்ளி எ-று.

உரோகணி 3-ஆம் பாதத்திற்கு

கன்னிபுதன் சிங்காதித்தன் கடகச்சந்திரன் மிதுனபுதன்
பன்னும்ரிஷப சுக்கிரனுடன் பகருந்தேள்சேய் தனுர்வியாழன்

மின்னும்மகர கும்பசனி மேல்ரோகணி மூன்றும்பாதம்
நன்மையாக வாராய்ந்து நவில்வீர்பலனை வல்லோரே.

(இ-ள்) கன்னிபுதன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-85, மாதம்-1, நாள்-8, நாழிகை-7, விநாடி-$3\frac{1}{2}$-மூணுவீசம், கன்னிபுதன், சிங்கசூரியன், கடகசந்திரன், மிதுனபுதன், இடபவெள்ளி, மேடசெவ்வாய், தனுர்வியாழன், மகரசனி, கும்பசனி எ-று.

உரோகணி 4-ஆம் பாதத்திற்கு

மீனவியாழன் மேஷகுஜன் விளங்கும்ரிஷப வெள்ளியுடன்
ஞானபுதன் சிங்கார்தித்தன் நவில்வீர்கடக சந்திரனும்
மானேகன்னி புதனுடனே மதிக்குந்துலா சுக்கிரனும்
ஞானதேள்சேய் ரோகணியின் நான்காம்பாத மென்றோதே.

(இ-ள்) சிங்காதித்தன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-100, நாள்-18, மீனவியாழன், மேடசெவ்வாய், இடபவெள்ளி, மிதுனபுதன், சிங்காதித்தன், கடகசந்திரன், கன்னிபுதன், துலாவெள்ளி, விருச்சிகசெவ்வாய் எ-று.

நடுநாள் மிருகசீரிடம் 1-ஆம் பாதத்திற்கு

காணும்மீன வியாழனுடன் கருதும்மகர கும்பசனி
தோணும்தனுசின் குருதேள்சேய் துலாசுக்கிரன் கன்னிபுதன்
பூணும்சிங்க சூரியனும் புகல்வீர் கடகசந்திரனும்
வேணுமிருக சீரிடமுதற்கால் விளம்புவீரே பலனினிதே.

(இ-ள்) கடகசந்திரன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-86, மாதம்-2, நாள்-27, நாழிகை-54, விநாடி-$25\frac{1}{4}$. மீனவியாழன், கும்பசனி, மகரசனி, தனுர்வியாழன், விருச்சிகசெவ்வாய், துலாவெள்ளி, கன்னிபுதன், சிங்காதித்தன், கடகசந்திரன் எ-று.

மிருகசீரிடம் 2-ஆம் பாதத்திற்கு

பாடும்மினப் புதனுடனே பகரும்ரிஷப சுக்கிரனும்
மேடச்செவ்வாய் தனுர்வியாழன் மேவும்மகர கும்பசனி
நாடும்மீன குருதேள்சேய் நவில்விரிடப வெள்ளியுடன்
கூடும்மிருக சீரிடத்தின் குலவுமிரண்டாம் பாதமென்றே.

(இ-ள்) மிதுனபுதன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ௵-83, மாதம்-1, நாள்-9, நாழிகை-2, விநாடி-பத்தே அரிக்கால், மிதுனபுதன், இடபவெள்ளி, மேடசெவ்வாய், தனுர்வியாழன், மகரசனி, கும்பசனி, மீனவியாழன், மேடசெவ்வாய், இடபவெள்ளி எ-று.

மிருகசீரிடம் 3-ஆம் பாதத்திற்கு

மிதுனபுதன் சிங்காதித்தன் மேவும் கடகச்சந்திரனும்
வதனசிங்காரி கன்னிபுதன் வழங்கும்துலா சுக்கிரனுடனே
மிதமாம்தேள்சேய் மீனகுரு விளங்கும் கும்பமகரசனி
முதலாம்மிருக சீரிடத்தின் மூன்றும்பாத மெனப்புகல்வீர்,

(இ-ள்) இடபவெள்ளி காலசக்கரத்திற்கு அபகாரம் ஷூ-85, மாசம்-2, நாள்-7, நாழிகை-45, விநாடி-52¾ மூனுவீசம், மிதுனபுதன், சிங்காதித்தன், கடகசந்திரன், கன்னிபுதன், துலாவெள்ளி, விருச்சிகசெவ்வாய், மீனவியாழன், கும்பசனி, மகரசனி எ-று.

மிருகசிரிடம் 4-ஆம் பாதத்திற்கு

தனுர்வியாழன் விருச்சிகசேய் சாற்றுந்துலா வெள்ளியாகும்
மனமகிழுங் கன்னிபுதன் மதித்திடும் சிங்காதித்தன்
இனமேவும் கடகசந்திரன் இடபதுலாம் வெள்ளியுடனே
கனஞ்சேரு மேடசேய்மிருக சிரிடநான்காம் பாதமென்றோதே.

(இ-ள்) மேடசெவ்வாய் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ஷூ-100, நாள்-25, நாழிகை-12. தனுர்வியாழன், விருச்சிகசெவ்வாய், துலாவெள்ளி, கன்னிபுதன், சிங்காதித்தன், கடகசந்திரன், மிதுனபுதன், இடபவெள்ளி, மேடசெவ்வாய் எ-று.

திருவாதிரை 1-ஆம் பாதத்திற்கு

மானேதனுசு வியாழமுடன் மகரகும்ப சனியாகும்
மீனவியாழம் மேடச்சேய் மிதுனபுதன் ரிஷபவெள்ளி
கானின்சிங்க சூரியனும் கடகசந்திரன் திருவாதிரையின்
ஆனமுதற் பாதம்தானே அறிவீர்சோதிட வல்லோரே.

(இ-ள்) மீனவியாழன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ஷூ-86, மாதம்-1, நாள்-11, நாழிகை-51, விநாடி-37, மூனுவீச அரைவீசம். தனுர்வியாழன், மகரசனி, கும்பசனி, மீனவியாழன், மேடசெவ்வாய், இடபவெள்ளி, மிதுனபுதன், சிங்காதித்தன், கடகசந்திரன் எ-று.

திருவாதிரை 2-ஆம் பாதத்திற்கு

கன்னிபுதன் துலாவெள்ளி கருதும்தேள் சேய்மீனகுரு
மின்னுமகர கும்பசனி மேவும்தனுசு வியாழனுடன்
பன்னுக்தேள் சேய்துலாவெள்ளி பகரும்திருவாதிரை ரெண்டாம்பா[தம்
நன்னயமாகவே யறிந்து நவில்வீர்கணித நூல்வல்லோரே.

(இ-ள்) கும்பசனி காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ஷூ-83, நாள்-17, நாழிகை-20, விநாடி-57 முக்காலே வீசம். கன்னிபுதன், துலாவெள்ளி, விருச்சிகசெவ்வாய், மீனவியாழன், கும்பசனி, தனுர்வியாழன், விருச்சிகசெவ்வாய், துலாவெள்ளி எ-று.

திருவாதிரை 3-ஆம் பாதத்திற்கு

கன்னிபுதன் சிங்காதித்தன் கடகச்சந்திரன் மிதுனபுதன்
பன்னும்வெள்ளி மேடச்சேய் பகரும்தனுசு வியாழனுடன்
மன்னும்மகர கும்பசனி மகிழ்திருவாதிரை மூன்றும்பாதம்
நன்னயமுடனே கவனித்து நவில்வீரையா சோதிடரே.

(இ-ள்) மகரசனி காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ஷூ-85, நாள்-16, நாழிகை-56, விநாடி-28¼. கன்னிபுதன், சிங்காதித்தன், கடகசந்திரன், மிதுனபுதன், இடபவெள்ளி, மேடசெவ்வாய், தனுர்வியாழன், மகரசனி, கும்பசனி எ-று.

திருவாதிரை 4-ஆம் பாதத்திற்கு

மீனகுரு மேடச்செவ்வாய் விளங்கும்ரிஷப வெள்ளியுடன்
மானேமிதுன புதனுடனே மதிக்கும் சிங்காதித்தனுடன்
ஆனகன்னிபுதன் துலாவெள்ளி ஆகும்தேள்சேய் திருவாதிரையின்
ஆனநான்காம் பாதமென்றே அறிவீருலகில் வாழ்வோரே.

(இ-ள்) தனுர்வியாழன் காலசக்கர வருடத்திற்கு அபகாரம் ஷூ-100, மாதம்-1, நாள்-6, மீனவியாழம், மேடசெவ்வாய், இடபவெள்ளி, மிதுனபுதன், சிங்காதித்தன், கடகசந்திரன், கன்னிபுதன், துலாவெள்ளி, விருச்சிகசெவ்வாய் எ-று.

ஐவகைப் பலன்

ஓதுந்திசையை யுடையவன் முன்னொன்பது மடைவூண்
பேதம்பெறுநட்பி னுச்சத்தி னாட்சியிற் பேறுமிகுந்
தீதொன்றிடும் பகைநீசத்து நல்லகோள் தீக்கிரக
மேதம்பகையெனி னிவ்வகையேயறி யேந்திழையே.

(இ-ள்) உண்கின்ற கோளினுடைய ராசிக்கால் ஒன்பதாய்வந்த கோள்களூட்டுமிடத்து, ஐந்துவிதமாக வூட்டப்படும். நட்பினும் உச்சத்தினும் ஆட்சியினும் பாபக்கோளேயாயினும் சுபக்கோளேயாயினும் நன்மையைச் செய்வர். பகை நீசத்தில் இவர்களில் தீங்கு, சத்துருபயம், தனச்சேதம் உண்டாகும் எ-று.

உச்சத்தினிற் பலநான் மடங்காமோது நட்பில்வந்தால்
மெச்சப்படுத்து மிரட்டியென் றேவேறு ஆட்சியினும்
அச்சப்படுமென்று நற்கோள் பகைநீச நண்ணிற்றீக்கோள்
எச்சத்திள வரிபீடை தனச்சேதஞ் சாவிடரே.

(இ-ள்) சுபக்கோளுச்சத்து நின்றபொழுது பலன் நான்குமடங்காம், நட்பு நின்றபோது இரட்டியாம்; ஆட்சியினின்றபொழுது சொல்லின் நன்மையேயாம், பகை நீசத்து நின்றபொழுது மனப்பீடை, புத்திரநாசம், சத்துருபயம், தனச்சேதம், மரணம், வியாதி இவற்றை செய்வார் எ-று.

பகையிலிரட்டி தமக்குரைக்கும்பல னீசத்தினில்
வகைபெறு நான்மடங் காநட்பின் மாதனம் வாகனங்கள்
மிகவுடைத்துச் சத்ருவேந்த ருண்மிக்க போகமுண்டாம்
தகைபெறு மாட்சியிற் றீக்கோ டமக்கெனச் சாற்றினரே.

(இ-ள்) பாபக்கிரகங்கள் பகையினின்றபோது தமக்குச் சொன்ன பலன்களை யிரட்டிக்கக் கொடுப்பார். நீசத்திலிருந்தபோது நான்குமடங்காகக் கொடுப்பார். நட்பினின்றால் தனலாபம், வாகனமிகவுமுண்டாம். உச்சத்தின்றால் இராசப் பிரசாதமுண்டாம். ஆட்சியினின்றால், தத்தமக்குச் சொன்ன வுத்தமபலன்களைக் கொடுப்பார் எ-று.

திசாபலன்

அருக்கன் திசையி லருவினை தாப மரசர்பயம்
வருத்தும்உதரநோ யிரத்தபித்தஞ் சந்திர திசையிற்
கருப்பநற்பெண்பேறு கன்னியர்கூட்டங் கலன்கலிங்க
திருப்பொலியின்பஞ் செயந்தனப்பேறு திருந்திழையே.

(இ-ள்) ஆதித்தன் திசையில் வியாதி, தாபம், ராசபயம், உதரநோய், இரத்தபித்தரோகம், பயித்தியம் இவையுண்டாம். சந்திரன் திசையில் கெற்போற்பத்தி, புத்திரிலாபம், விவாகம், வஸ்திராபரணம், அழகு, தேகசவுக்கியம், ஜெயம், தனதானியசம்பத்து இவையுண்டாம் எ-று.

கொடுங்குசனுணிற் குருவெழல் வெப்புக்கொடுமை பித்த
மிடும்பகிலேகே டறுத்தல் சுடும்பிணி யென்பமேதை
இடம்பெறு மில்லெழி யின்பம் புதல்வர்பே றெண்ணறிய
இடம்பெறுகல்வி திருவோடுறைதற் றிடங்குயிலே.

(இ-ள்) செவ்வாய் திசையில் வைசூரி, சுரம், பாபம், பித்தரோகம், சத்துருபயம், விரோதம், தானசலனம், அறுத்தல், சூடு, வியாதியுண்டாம். புதன் திசையில் கிலேப்பேறு, கிரகப்பிரவேசம், அழகு, தேகசவுக்கியம், புத்திரலாபம், கணிதமுதலிய வித்தியாப்பியாசம், மனைவி முதலியோருடன் வசித்தல் இவையுண்டாம் எ-று.

பீதகனுணிற் பெரும்புகழ்பிள்ளை யணிவியன்போர்
மாதரைச்சேர்தல் வசியம் வண்மை வனப்புவெள்ளி
காதலர்பேறு தனலாப நூல்கலை கற்றலணி
நீதியிற்பூண னிலம்பெற நிச்சய நேரிழையே.

(இ-ள்) வியாழன் திசையில் சத்கீர்த்தி, புத்திரலாபம், ஆபரணம்பூணல், தனலாபம், வித்தியாலாபம், யுத்தம், மாதர் சேவை, விசயம், பிரதாபம், தருமம், அழகு, ஒழுக்கம் இவையுண்டாம். சுக்கிரன் திசையில் விவாகம், புத்திரலாபம், அர்த்தலாபம், வித்தியாலாபம், ஆபரணம், நீதியாய் நடத்தல், பூமிப்பேறு, வார்கனம் இவையுண்டாம் எ-று.

கோம்பி வருந்திசை யிற்குற்ற மீட்டல் குடிபறித்தல்
சோம்பி யிருத்தல் துயரிற் கிடத்தல்தன் சுற்றத்த
லாம்பரி சாமிவை நட்பாட்சி யைவகை யாலறிக
தேம்பி யிடைநுடங் கத்திரண் டோங்கும் செழுமுலையே.

(இ-ள்) சனிதிசையில் பாபார்ச்சிதம், தேசம்விட்டுப்போதல், சோம்பலாயிருத்தல், சுற்றத்தார் பகையாதல், வியாதி, தரித்திரம், விந்நாசம் இவையுண்டாம். இப்படிச்சொல்லிய பலாபலன்கள் நட்பு-ஆட்சி-உச்சம்-பகை-நீசம் பார்த்துச் சொல்லப்படும் எ-று.

கிரக பலிதம்

ஆதியிற் செய்கதி ரம்புளிசுன் அந்தத் தாசான்வெள்ளி
ஓது நடுவினி லொண்புந்தி பாம்பெப் பொழுதுநன்மை
சேதம் தரும்பரி சிப்படி மாதிசை காலதிசை
கோதிலாக் கோசரக்-கோட்டிற முங்குறிக் கொண்மயிலே.

(இ-ள்) மகாதிசை, காலசக்கிரதிசை, கோசரம் இவற்றில் சூரியனுஞ் செவ்வாயும் ஆதியிலும், சந்திரனும் சனியும் அந்தத்திலும், பிரகஸ்பதியுஞ் சுக்கிரனும் மத்தியிலும், புதன்-ராகு-கேது எப்பொழுதும் பலாபலத்தைக் கொடுப்பார் எ-று.

காலசக்கரம் முற்றிற்று.

அஷ்டவர்க்கம்

சூரியன் பரல்-48

லக்கினம்	3-4-6-10-11-12	ஆக	6
சூரியன்	1-2-4-7-8-9-10-11	,,	8
சந்திரன்	3-6-10-11	,,	4
செவ்வாய்	1-2-4-7-8-9-10-11	,,	8
புதன்	3-5-6 9-10-11-12	,,	7
குரு	5-6-9-11	,,	4
சுக்கிரன்	6-7-12	,,	3
சனி	1-2-4-7-8-9-10-11	,,	8

சந்திரன் பரல்-49

லக்கினம்	3-6-10-11	ஆக	4
சூரியன்	3-6-7-8-10-11	,,	6
சந்திரன்	1-3-6-7-10-11	,,	6
செவ்வாய்	2-3-5-6-9-10-11	,,	7
புதன்	1-3-4-5-7-8-10-11	,,	8
குரு	1-4 7-8-10-11-12	,,	7
சுக்கிரன்	3-4-5-7-9-10-11	,,	7
சனி	3-5-6 11	,,	4

செவ்வாய் பரல்-39

லக்கினம்	1-3-6-10-11	ஆக	5
சூரியன்	3-5 6-10-11	,,	5
சந்திரன்	3 6-11	,,	3
செவ்வாய்	1-2-4-7-8-10-11	,,	7
புதன்	3-5-6 11	,,	4
குரு	6-10-11-12	,,	4
சுக்கிரன்	6-8-11-12	,,	4
சனி	1-4 7-8-9 10-11	,,	7

புதன் பரல்-54

லக்கினம்	1-2-4-6-8-10-11	ஆக	7
சூரியன்	5-6-9-11-12	,,	5
சந்திரன்	2-4 6-8-10-11	,,	6
செவ்வாய்	1-2-4-7-8-9-10-11	,,	8
புதன்	1-3-5-6-9-10-11-12	,,	8
குரு	6-3-11-12	,,	4
சுக்கிரன்	1-2-3-4-5-8 9-11	,,	8
சனி	1-2-4-7 8-9-10-11	,,	8

குரு பரல்-56

லக்கினம்	1-2-4 5-6-7-9-10 12	ஆக	9
சூரியன்	1-2-3-4-7-8 9-10-11	,,	9
சந்திரன்	2-5-7-9-11	,,	5
செவ்வாய்	1-2-4-7-8-10-11	,,	7
புதன்	1-2-4-5-6-9-10-11	,,	8
குரு	1-2-3-4-7-8-10-11	,,	8
சுக்கிரன்	2-5-6-9 10 11	,,	6
சனி	3-5-6-12	,,	4

சுக்கிரன் பரல்-52

லக்கினம்	1-2-3-4 5-8-9-11	ஆக	8
சூரியன்	8-11-12	,,	3
சந்திரன்	1-2-3-4-5-8-9-11-12	,,	9
செவ்வாய்	3 5-6-9-11-12	,,	6
புதன்	3-5-6-9-11	,,	5
குரு	5 8-9-10-11	,,	5
சுக்கிரன்	1-2-3-4-5-8-9-11-11	,,	9
சனி	3-4-5-8-9-10-11	,,	7

சனி பரல்-39

லக்கினம்	1-3-4-6-10-11	ஆக	6	புதன்	6 8-9-10-11-12	ஆக	6
சூரியன்	1-2-4-7-8-10-11	,,	7	குரு	5-6-11-12	,,	4
சந்திரன்	5-6-11	,,	3	சுக்கிரன்	6-11-12	,,	3
செவ்வாய்	3-5-6-10 11-12	,,	6	சனி	3-5-6-11	,,	4

அஷ்டவர்க்க பலன்

அட்டவர்க்க விந்திரவிக் காரெட்டாம் அம்புலிக்கொண்
டொட்டுசனி செய்முப்பத் தொன்பதாம்—இட்டபுதற்
கைம்பத்தி நான்குகுருக் காரெட்டோ டெட்டா
மைம்பத்தி ரண்டுபுகர் காம்.

(இ-ள்) இந்தப்படி அந்தந்த கிரகங்களுக்கு சொன்னபாலை அந்தந்த கிரகங்கள் இருக்கிற வீடுமுதலாகக்கொண்டு லக்கினத்தைத் தொட்டு யெண்ணிப்போடுவது எ-று.

திரிகோண சோதனை

திரிகோணராசி மூன்றிலும் பரல் சரியாகயிருந்தால் மூன்றையும் எடுத்துப்போடவும். ஒருராசியிற் குறைந்திருந்தால் அப்படியே மற்ற ராசிகளிலுள்ள பாலையும் குறைத்துப்போடவும். ஒருராசியில் பரலில்லாதிருந்தால் சோதனையில்லை.

ஏகாதிபத்திய சோதனை

திரிகோண சோதனை யானபின்பு மேஷம் விருச்சிகமும். ரிஷபதுலாமும், மிதுனகன்னியும், தனுசுமீனமும், மகாகும்பமுமாகிய ராசிகளில் கிரகமிருந்தப் பரல் குறைந்தும் கிரகமில்லாத ராசிப்பரல் அதிகமாகவும் இருந்தால் குறைந்தபடி சரிசெய்யவும். சரியாக இருந்தாலும் கிரகமில்லாத ராசிப்பரல் குறைந்திருந்தாலும் கிரகமில்லாத ராசிப்பாலை எடுத்துப் போடவும்.

இரண்டு ராசிகளிலும் கிரகமில்லாமலிருக்க பரல் ஏற்றக் குறைச்சலாகயிருந்தால் குறைந்தபடி சரிசெய்யவும். சரியாக இருந்தால் இரண்டு ராசிப்பாலையும் எடுத்துப்போடவும். இரண்டு ராசிகளிலும் கிரகமிருந்து பரல் ஏற்றக்குறைச்சலாக இருந்தாலும், சரியாக இருந்தாலும், ஒரு ராசியிற் பரலில்லாமலிருந்தாலும், இரண்டு ராசியிலும் கிரகமில்லாமலிருக்க ஒரு ராசியில் பரலில்லாதிருந்தாலும், சோதனையில்லை. கிரகமிருந்த ராசியில் பரல் இல்லாமலிருக்க மற்றொன்றில் பரல் இருந்தால் அதை யெடுத்துப்போடவும்.

இராசி குணகாரம்

ஏகாதிபத்திய சோதனையானபின் நின்ற பாலை ரிஷப சிங்கத்திற்குப் பத்திலும், மிதுன விருச்சிகத்திற்கு எட்டிலும், மேஷதுலாத்திற்கு ஏழிலும், கன்னி மகரத்திற்கு ஐந்திலும், கர்க்கடகத்திற்கு நாலிலும், தனுசுக்கு ஒன்பதிலும், மகரத்துக்கு பத்திலும், கும்பத்திற்குப் பதினொன்றிலும், மீனத்திற்குப் பன்னிரண்டிலும், பெருக்கிக்கண்ட மொத்தம் ராசிகுணகாரம்.

கிரக குணகாரம்

குருவிருந்த ராசிப்பாலைப் பத்திலும், செவ்வாயிருந்த ராசிப்பாலை எட்டிலும், சுக்கிரனிருந்த ராசிப்பாலை ஏழிலும், மற்ற கிரகங்கள் நின்ற ராசிப்பாலை ஐந்திலும், பெருக்கிக்கண்ட தொகை கிரககுணகாரமாம்.

இராசி குணகாரக் கிரக குணகாரத் தகைகளை ஒன்றாகக் கூட்டின தொகை குணசமுகமாம். இதை ஏழில் பெருக்கி 27-க் கீந்தபலன் நாழிகையாகவுங் கொள்க.

இவ்வாறே எல்லா கிரகங்களும் கொடுத்தவைகளை ஒன்றாகக் கூட்டிக் கண்டதொகையில் வருஷம் ஒண்ணுக்கு 36-நாளும், மாதம் ஒண்ணுக்கு 3-நாளும், நாள் ஒண்ணுக்கு 6-நாழிகையும், நாழிகை ஒண்ணுக்கு 6-விநாடியும் கழித்துக் கண்டதொகையில் நீசக்கிரகம் - அஸ்தமனக்கிரகம் கொடுத்ததிற்பாதியும்,பகைவீட்டிலிருந்த கிரகங்கொடுத்ததில் மூன்றிலொன்றுகழித்து மற்ற இரண்டுபங்கும், நட்பு, ஆட்சி, மூல திரிகோணங்களிலிருக்குங் கிரகங்கள் கொடுத்ததை முழுமையும், உச்சகிரகங்கள் கொடுத்ததை இரட்டித்துக் கொண்டு ஒன்றாகக்கூட்டிக் கண்டதொகை ஜாதகனுக்கு ஸ்தூலபரமாயுளாம். செவ்வாய்-சனி, சுக்கிரன் பகைவீட்டிலிருந்தால் அவர்களுக்கு மரணமில்லை மற்றவருக்குண்டு.

இக்கிரகங்கள் தசவர்க்கம் ஏறும்போது சுபவர்க்க மதிகமாக இருந்தால் நல்லபலன் கொடுக்கும் பாபவர்க்க மதிகமாக இருந்தால் பலன் கொடுக்காது. இன்னும் மகாதிசைமுதலான திசைகளில் சுகதிசை விடுதிசை ஒருகாலத்திலிருந்தாலும் ஆகாது. இவைகளையும் பிராண-தேக-மிருத்தியுஸ்புடங்களின் தொகையையும் ஆராய்ந்தறிந்து இஷ்டதேவதையின் வரத்தினாலும் நவக்கிரக சகாயத்தினாலும் குருகடாட்சத்தினாலும் நிரியாணகாலஞ் சொல்ல வேண்டும்.

அஷ்டவர்க்கபலன் முற்றிற்று.

இலக்கினபாவக பலாபலன்

சிரோங்கும் லக்கினாதிப் பதியோன்றானும்
செழிக்கவே நட்போரின் மனையிலேறி
சாரோங்கித் தானிருக்கச் சுபர்கள்பார்க்க
சாதகர்க்குச் சவுக்கியமுந் தானுண்டாகும்
நாரோங்க லக்கினேசன் பலத்துகேந்திரம்
நண்ணியே கோணமதி லுமையநல்லோர்
நேரோங்கப் பார்வையது நின்றுபார்க்கில்
நீடிக்குந் தேகசவுக் கியமுநன்றே.

(இ-ள்) இலக்கினாதிபதி, நட்பாகிய கிரகங்களுடைய ஸ்தானங்களில் நிற்க, அவரைச் சுபக்கிரகங்கள் பார்க்க ஜாதகனுக்கு சவுக்கிய முண்டாகும். இலக்கினாதிபதி பலவானாகிக் கேந்திரகோணமேறி நிற்க, அவரைச் சுபக்
கிரகங்கள் பார்க்க, தேகசவுக்கிய முண்டாம் எ-று. 1

நன்றாகும் லக்கினேசன் பலங்குறைந்து
நாடியே சுபருடைய வற்கமேறி
குன்றாத சுபக்ஷேத்திரந் தனிலிருக்க
கூறுங்கற் மாதிபார்க்க அலதுகேளும்
பொன்றாதப் பாக்கியாதி பொருந்திபார்க்க
புகலுவாய் ஜாதகர்க்கு ஆயுள் தீர்க்கம்
நின்றிடுந் தனலாபங் கீர்த்தியுண்டாம்
நோகுங் குருமொழியை நிகழ்த்துவாயே.

(இ-ள்) இலக்கினாதிபதி பலங்குறைந்து சுபவர்க்கமேற அல்லது சுப க்ஷேத்திரத்திலிருக்க, கர்மாதிபதியாலே பார்க்கப்பட, அல்லது பாக்கியாதிபதியாலே பார்க்கப்பட, ஜாதகனானவன் தீர்க்காயுசுடன் தனலாபம் பெற்று கீர்த்தியோடு வாழ்குவன் எ-று. 2

நிகழ்த்தவே லக்கினேசன் குரூராளோடே
நெருங்கியே கூடிடிலோ சவுக்கியமில்லை
வகுப்பாக சுபகோள்கள் பார்ப்பாராகில்
வளமாகுந் தேகசவுக்கியமு முண்டாம்
தொகுப்பாகும் பலன்குறையா லக்கினேசன்
தோன்றியே கேந்திரகோணம் பாபர்மேவ
பகுப்பாகும் பிறந்திட்ட ஜாதகர்க்கு
பழியான ரோகமது வாட்டும்பாரே.

(இ-ள்) இலக்கினாதிபதி குரூராளாகிய சூரியன்-செவ்வாய்-இராகு-கேது இவர்களைக்கூடிநிற்க, ஜாதகமானவனுக்குச் சவுக்கியமில்லையாம். சுபக்கிரகங்கள் பார்ப்பாராகில் சவுக்கியமுண்டாம். இலக்கினாதிபதி பலங்குறைந்து நிற்க, கேந்திரகோணங்களில் பாபக்கிரகங்கள் நிற்கப் பிறந்தஜாதகன் என்னேரமும் ரோகமுடையவனாய் இருப்பான் எ-று. 3

பார்க்கவே லக்கினத்திற் பாபர்மேவ
பரிவாகுந் திரிகோணங் குளிகன்நிற்க
வேர்க்கவே லக்கினனுடன் குளிகன்சேர
வேண்டியே அல்லதுகேள் பாபர்கூட
ஏர்க்கவே கரும்பாம்பு உதையமாக
இறந்திடுவான் ஜாதகனுஞ் சூனியத்தால்
மூர்க்கமுடன் முடவனுடன் இராகுகூடி
முனைந்துநிற்க வுதையம்வஞ் சனையில்சாவாம்.

(இ-ள்) இலக்கினத்தில் பாபக்கிரகமிருக்க, திரிகோண ஸ்தானங்களில் குளிகன் நிற்க, இலக்கினாதிபதியுடன் குளிகன்சேற, அல்லது பாபர்கள்கூட இராகு உதயத்திலிருக்க, ஜாதகனானவன் சூனியத்தினாலே மரணமடைகுவான், சனியுடன் இராகுகூடி உதயமாகிய லக்கினத்திலிருக்க வஞ்சனையால் மரணமாகுவன் எ-று. 4

வஞ்சமிலா லக்கினாதி செவ்வாயாகி
வளமான லக்கினத்தில் தானிருக்க
துஞ்சியே பாபருடன் கூடப்பார்க்க
தொந்திரவாம் வில்லாலுங் கல்லால்விரணம்.
அஞ்சிடவே அல்லதுகேள் அம்மையாலும்
ஆகுமே சனியவனு மிருக்கதேனும்
விஞ்சிடவே படையாலு மக்கினியாலும்
விரணமது வுண்டெனவே விளம்பிடாயே.

(இ-ள்) ஜென்மலக்கினாதிபதி செவ்வாயாக, அவரே லக்கினத்திலிருக்க, பாபக்கிரகங்களுடன் கூடியிருக்க, அல்லது பார்க்க, ஜாதகனானவன் வில்லினாலும், கல்லினாலும், அடியுண்டு அதனால் மாணம் உண்டாகும். அல்லது

வைசூரியினால் ரணம் நேறும். சனி இப்படிக்கு இருப்பானாகில் படையாலும், அக்கினியினாலும் ரணமுண்டாகும் எ-று. 5

விளங்கவே ஜென்மாதி ஜென்மம்நின்று
விரைவாக ஆட்சியுட் சங்களேறி
களங்கமிலா சுபர்திரி கோணம்நிற்க
களிப்பாகச் சுபருடைய திருஷ்டியாக
களங்கமுடன் ஜாதகனே யானோன்தானும்
தழைக்கவே ஜனனமுதல் மரணமட்டும்
புளங்கவே பாக்கியங்க ளுடையோனாகி
பூரிப்பாய் வாழ்வனெனப் புகழ்ந்துபேசே.

(இ-ள்) ஜென்மாதிபதி ஜென்மத்திலிருக்க, ஆட்சி உச்சமேற, சுப திரிகோணஸ்தானம் நிற்க, சுபர்களுடைய பார்வையுண்டாக அந்த ஜாதகனானவன் ஜனனமுதல் மரணமட்டும் பாக்கியமுடையவனாகி பூரிப்பாய் வாழ்குவான் எ று. 6

பேசவே லக்கினாதி லாபமேற
புகழான சுபக்கிரகங்கள் பார்க்க
வாசமாங் கேந்திரிக்கக் கேந்திரத்தில்
வசுரகுரு அதிலுச்ச மாயிருக்க
நேசமாஞ் சிங்கா சனங்களேற
நிலையாக தேவகுரு நின்றுபார்க்க
பாசமாஞ் சாதகமே யானோனுக்கு
பரிவாகு மத்தியிலே சவுக்கியமாமே.

(இ - ள்) ஜென்மலக்கினாதிபதி இலாபஸ்தானமாகிய 11 - ஆமிடத்திலிருக்க, சுபகிரகங்கள் பார்க்க, கேந்திரமேற, கேந்திரத்தில் களத்திரக்காரனாகிய சுக்கிரன் உச்சம்பெற்று நிற்க, சிங்காசனாங்கிசமேற, புத்திரக்காரகனாகிய குரு பார்க்க, ஜாதகனானவன், மத்தியவயதில் சவுக்கியமுண்டாகி வாழ்வான் எ-று. 7

ஆக்கிய சதையமதில் வெள்ளிநிற்க
ஐந்தொன்பான் றன்னிலே செவ்வாய்நிற்க
தேக்கிய சந்திரனும் பத்தில்நிற்க
தேவகுரு பதினொன்றில் தேடிநிற்க
தாக்கிய நீசமது அடைவாராகில்
தானுதித்த சேயதுவுந் தரித்திரனாகும்
பாக்கியமுட னொருகா லிருந்தபோதும்
பலபொருளும் நஷ்டமுடன் சேதமாமே.

(இ-ள்) ஜென்மலக்கினத்தில் போகபாக்கிய காரகனாகிய சுக்கிரன் நிற்க, 5-9-ஆமிடத்தில் துவேசகாரகனாகிய செவ்வாய் நிற்க, புத்திர ஸ்தானமாகிய 5-ஆமிடத்தில் மாதருகாரகனாகிய சந்திரன் நிற்க, 11-ஆமிடமாகிய லாப ஸ்தானத்தில் புத்திரகாரகனாகிய குரு நிற்க, இவர்கள் நீசமடைந்து இருக்க, ஜாதனானவன் தரித்திரியாகுவன். ஒருவாறுகப் பாக்கியங் கிடைத்தபோதிலும் பல பொருளுஞ் சேதமாகிவிடும் எ-று. 8

குறித்த லக்கினந்தன்னில் இராகுநிற்க
குளிகனு மவருடன் கூடிச்சேற
வெறித்த லக்கினத்தோனு மட்டமத்தோன்
விளங்கவே யிருவோரு மொன்றாய்கூடி
செறிப்புறு மிராசியெனுந் திரேகாணத்தில்
சித்திரமுடன் தானிற்க செனித்தோனுக்கு
புறப்படுங் கொடிசுற்றி யிருக்குமென்று
புகழாகுந் தேவகுரு புகன்றவாரே.

(இ-ள்) ஜென்மலக்கினத்தில் இராகு நிற்க, அவருடன் குளிகன் சேற இலக்கினாதிபதியும், ஆயுள் ஸ்தானமாகிய 8-ஆமிடத்தோனுங்கூடி திரிகோணஸ்தானத்தில் நிற்க, ஜாதகனனபிள்ளை கொடிசுற்றிப் பிறக்கும் எ-று.

வாறெனவே விடைமேடஞ் சிங்கந்தானும்
வளமாகு முதையலக் கினமதாகப்
பாறெனவே புந்தியுடன் சனியுங்கூடி
பரிவாக நின்றிடவே பிறந்தபிள்ளை
கோறெனவே உடலென்னு மெய்யிற்றானும்
கொடியதுவும் பின்னியே யிருக்குமென்றே
நேறெனவே தேவகுரு வியாழந்தானும்
நிகழ்த்திய மொழிவிளக்கம் நேராய்க்காணே.

(இ-ள்) ரிஷபம்-மேஷம்-சிங்கம் இவைகளிலொன்று உதையராசியாக, வித்தியாகாரகனாகிய புதனும், ஆயுள்காரகனாகிய சனியுங்கூடி நிற்க பிறந்த பிள்ளை உடலிற் கொடி பின்னிக்கொண்டு யிருக்குமென மேலோர் கூறுகின்றனர் எ-று. 10

கன்மநாயக னென்னு மவர்தன்னோடே
காட்சிப்பெற்றே யோங்கு மூன்றுகோளும்
தன்மையாய்க் கூடியே நிற்பாராகில்
தரிக்குமே சன்னியாசி யோகந்தானும்
பொன்மையா யொருகோளே கூடுமாகில்
பொருந்திய சன்னியாசி தானுமாவான்
இன்மையினிற் குருவுடைய கடாக்ஷத்தாலே
இனிமையுடன் கண்டுபல னியம்பல்வேண்டும்.

(இ-ள்) கருமஸ்தானமாகிய 10-ஆமிடத்ததிபனோடு உச்சம்பெற்ற கிரகங்கள் மூவர்கூடி நிற்க பிறந்தானுக்கு சன்னியாசியோகமுண்டாம். ஒரு கிரகம்கூடி நிற்க சன்னியாசியாகுவன். இவையெல்லாம் குருகடாக்ஷத்தினால் சொல்லவேண்டும் எ-று. 11

இரண்டாம் பாவகப் பலாபலன்

விரித்தெழு லக்கினாதி யவர்தன்னோடே
விளங்கிய நேத்திராதி பதியுங்கூடி
பரிந்திடமூன் றாறுஎட் டீராறிற்
பண்பாக வேயமர்ந்து தானிருக்க
தரித்தமா தனபதிலக் கினனைச்சேற
தான்பிறந்த பிள்ளைக்குப் பலனைக்கேளீர்
குறித்திடும் விழியிரண்டுங் குருடாமென்றே
குருவுரைத்த மொழிப்படியே கூறுவாயே.

(இ-ள்) ஜென்மலக்கினாதிபதியுடன் நேத்திரஸ்தானமென்னும் 2-ஆமிடத்ததிபன் கூடி, சகோதரஸ்தானமாகிய 3-ஆமிடத்திலும், சத்துருஸ்தானமாகிய 6 - ஆமிடத்திலும், அபமிருத்தியுஸ்தானமாகிய 8 - ஆமிடத்திலும், விரயஸ்தானமாகிய 12-ஆமிடத்திலும் நிற்க, தனஸ்தானமாகிய 2-ஆமிடத்ததிபன் இலக்கினத்தில் யேறிநிற்க, ஜாதகமான பிள்ளைக்கு இரண்டுகண் 1
ணும் குருடாகும் எ-று.

மன்னிய இரவியொடு யிந்துதானும்
மருவியே நேத்திர ஸ்தானம்நிற்க
உன்னிய ராகுவொடு மந்தன்பார்க்க
உதித்திட்ட பாலன்அந் தகனேயாகும்
பன்னியப் பாவியுடன் தனத்தோன்கூடி
பரிவாகுஞ் சுபர்திருஷ்டி யற்றுநிற்க
வன்னிய அரைபார்வை தூரந்தோற்ற
வகையாகும் ரோகநேத் திரனுமென்னே.

(இ-ள்) மாதருகாரகனாகிய சந்திரனும், பிதருகாரகனாகிய சூரியனுங்கூடி நேத்திரஸ்தானமாகிய 2-ஆமிடத்தில் நிற்க, இராகு சனி இவர்கள் பார்க்க பிறந்தபிள்ளை அந்தகனாகுவன். தனஸ்தானாதிபதியாகிய 2-ஆமிடமுடையவன் பாபியுடன்கூடி நிற்க, சுபகிரகங்கள் பார்வையில்லாதிருக்க, அரைபார்வையும், தூரபார்வை தெரியாமையும், ரோகநேத்திரமுடையவ 2
னாகவுமிருப்பான் எ-று.

தாமெனவே சூரியனுஞ் செவ்வாய்தானும்
தனமதனி லிருக்கசுபர் பார்வைநீங்க
பூமனெனப் பிறந்திட்டப் பாலனுக்கு
புகலுவாய் ரத்தக்கண் தானுமாகும்
கோமென நேத்திராதி சவுமியனைக்கூட
குலவியக் கதிரோனைச் சுபர்கள்பார்க்க
தேமென நயனமதுத் தெளிவாமென்று
தேவகுரு சொன்னமொழி தீர்க்கம்பாரே.

(இ-ள்) பிதுர்க்காரகனாகிய சூரியனும், சகோதரகாரகனாகிய செவ்வாயும் கூடி தனஸ்தானமாகிய 2-ஆமிடத்திலிருக்க, சுபக்கிரகங்கள் பாராதிருக்க

பிறந்தவனுக்கு ரத்தகண்ணாகும். நேத்திராதிபதியாகிய 2-ஆமிடத்தோன் சவுமியராகிய சந்திரன்-குரு-புதன்-சுக்கிரன் இவர்களை கூடிநிற்க, சூரியனை சுபக்கிரகங்கள் பார்க்க நல்ல கண்ணாகும் எ-று. 3

இலங்கிய குடும்பாதி பதியோன்தானும்
　　ஏறியே ஆட்சியுச் சங்கள்நிற்க
குலங்கிய சுபகிரகந் தாமேகூடிற்
　　குவலயத்திற் புகழுடைய குடும்பியாவன்
பெலங்கிய தனத்தினுக் குடையோன்தானும்
　　பெருகிட ஆட்சியுச்சம் பெரியோர்பார்க்க
நலந்திகழ் லக்கினாதி யவ்வாறோங்க
　　நன்றாகுங் குடும்ப ரக்ஷகனுமென்னே.

(இ-ள்) குடும்பஸ்தானமாகிய 2-ஆமிடத்தோன் ஆட்சி உச்சம் பெற்று நிற்க, அவரைச் சுபக்கிரகங்கள் பார்க்க, ஜாதகனானவன் குடும்பியாகுவன். தனஸ்தானாதிபதி ஆட்சி உச்சம் பெற்று நிற்க, சுபக்கிரகங்கள் பார்க்க, இலக்கினாதிபதியும் இவ்வாறாக இருக்க, அனேக குடும்பரட்சகனாகவிருப்பான் எ-று. 4

குடும்பாதி பதியோனு முச்சனாக
　　குலவிய அவ்விட்டோன் குருவுமாக
துடங்கிய லக்கினாதி பதியோன்றானும்
　　தோன்றியே ஆட்சியுச் சங்கள்நிற்க
தடம்புகழ் ஜாதக மானோன்தானும்
　　தக்கவாயிரம் லட்சம் பொன்னுந்தேடி
இடம்புகழ் குடும்பரட் சகனுமென்றே
　　இயலாருங் குருமொழியை யியம்புவாயே.

(இ-ள்) குடும்பஸ்தானமாகிய 2-ஆடத்தோன் உச்சமாக நிற்க, அந்த ஸ்தானாதிபதி புத்திரகாரகனாகிய குருவிருக்க, இலக்கினாதிபதி ஆட்சி உச்சம் பெற்று நிற்க, ஜாதகனானவன் ஆயிரம்லட்சம் பொன்தேடி குடும்பரட்சகனாக இருப்பான் எ-று. 5

வேறு

குறித்தவிரண்டிற் சுபர்நிற்கக் குவியவயதில் தனமும்வரும்
பறித்தரெண்டோன் தன்னோடே பதியாலக்கினன் புதன்கூடி
திருத்தப்பிரபல னாய்நிற்க திகழாம்லாபப் பதியோனை
விருத்தக்குருவுந் தான்பார்க்க வருகுந்தனமுங் கடைவயதில்.

(இ-ள்) 2-ஆமிடத்திற் சுபகிரகங்கள் நிற்க நல்லவயதில் தனம் உண்டாகி வாழ்குவான். 2-ஆமிடத்தோனுடன் இலக்கினாதிபதியும் புதனுங்கூடி பிரபலராயிருக்க, இலாபாதிபதியை குருபார்க்க விருதாப்பிய வயதில் தனங்கிடைத்து வாழ்குவன் எ-று. 6

வருகமூன்றா மிடத்தோனும் வாக்கோன்லக்கினன் பெலமுருக
பெருகும்வாக்கோன் தன்னாலும் புகழும்புருஷக் கோளாலுந்
தருகப்பார்க்க ஜெனித்தோர்க்கு தான்கேள் சகோதரத்தாலே
உருக திரவியங்களுமே ஓங்கிவந்து மெய்திடுமே.

(இ-ள்) 3-ஆமிடமுடையவனும், தனஸ்தானாதிபதியும் இலக்கினாதிபதியும் பலம்பெற்று நிற்க, வாக்குஸ்தானாதிபதியாலும், புருஷக்கோளாலும் பார்க்கப்பட, ஜாதகனானவனுக்கு சகோதரர்களாலே தனங்கிடைக்கும் எ-று.

எய்யமூன்றோன் தனத்திலுற ஆறல்கேந்திர மேறிடவே
மெய்யாம் லக்கினாதிபார்க்க மருவுஞ்சோதரால் தனமும்
செய்யதனத்தோன் லக்கினாதி சேர்ந்துகேந்திர மேறியுற
உய்யலாபன் நோக்கமுற ஓங்கும்பலவித தனமுமென்னே.

(இ-ள்) சகோதரஸ்தானகிய 3-ஆமிடத்தோன், தனஸ்தானமாகிய 2-ஆமிடத்திலிருக்க, சகோதரக்காரகனாகிய செவ்வாய் கேந்திரத்திலிருக்க, அவரை இலக்கினாதிபதி பார்க்க, ஜாதகனானவனுக்கு சகோதரர்களாலே திரவியம் வந்து சேரும். தனாதிபதியும், இலக்கினாதிபதியும், நட்புடையவராய் கேந்திரஸ்தானமேறி நிற்க பார்க்க, இலாபாதிபதியாலே தனாதிபதியை பார்க்க நானாவிதத்திலுந் தனம்வந்து சேரும் எ-று. 8

ஓங்கும்பொன்னும் புத்திரேசன் உகந்துகேந்திரக் கோணமுற
பாங்காய்ஜென்ம லக்கினாதிபதி பரிவா யுச்சனுமாகி
நீங்காரிஷப ராசிதனில் நிற்கப்புகழாய் பிறந்தோர்க்கு
வாங்காதனமும் புத்திரரால் வருகுமென்றே குருசொன்னார்.

(இ-ள்) புத்திரகாரகனாகிய குருவும், புத்திரஸ்தானாதிபதியும், கேந்திர திரிகோணத்திலிருக்க, இலக்கினாதிபதி உச்சனாகி ரிஷபராசியிலிருக்க, ஜாதகனானவனுக்குப் புத்திரர்களால் தனங்கிடைக்கும் எ-று. 9

சொன்னக்கதிரும் பெலமாக சுகமாயவரைக் குருபார்க்க
பன்னுங்கருமேசன் பெலனாக பகரும்பிதாவின் தனம்வருகும்
பொன்னும்லாபேசனுந்தானு பொருந்திப்பார்க்கக் குருபார்க்க
மன்னுந்தேவதைகளாலே மகிழ்வாய்தனமுந் தான்சேரும்.

(இ-ள்) பிதுர்க்காரகனாகிய சூரியன் பலம்பெற்று நிற்க, புத்திரகாரகனாகிய குருபார்க்க, கருமஸ்தானமென்னும் 10-ஆமிடத்ததிபனும் பலத்துநிற்க, ஜாதகனானவனுக்கு தகப்பனுடைய தனங்கிடைக்கும். குருவும் 11-ஆமிடத்ததிபனாகிய இலாபேசனும் அன்னியோன்னியராய் இருந்து பார்க்கினும், அல்லது குருபார்க்கினும் தேவதைகளாலே தனங்கிடைக்கும் எ-று. 10

சேரார்லக்கினன் பெலங்குறைந்து செறிந்துபாபிகள் பார்க்க
வீராராரெட்டிற் கதிர்தானும் விளங்கநீசந் தனயீனம்
பாரார்வியேசன் தனமேற பரிவாய்லாபன் யெட்டிலுற
கூரார்தனத்தில் நீசனுற குறையாந்தனம்போ மாசரினால்.

(இ-ள்) ஜென்மலக்கினாதிபதி ஈனபலவானாகயிருக்க, பாபிகளாற் பார்க்கப்பட 12-6-8 இந்த யிடங்களிற் தனாதிபதியும் சூரியனும் நிற்க, அவர்கள் நீசனாக தனம் ஈனமாகும். 12-ஆமிடத்தோன் தனஸ்தானத்திலிருக்க, இலாபாதிபதி 8-ஆமிடத்திலிருக்க, தனஸ்தானத்தில் நீசனிருக்க, இராஜதெண்டத்திலே தனமானது சேதமாகப்போகும் எ-று. 11

அரியதனத்தோன் யேழோனு மறியபாப ரெட்டிலுற
சூரியசனி இந்துக்காரில் குலவுகதிரோன் றாநிற்க

புரியப்புவியில் தான்வந்தோன் பூனைகண்ணன் தானாகும்
நெரியாய்ப்பலனைத் தான்பார்த்து நேராய்சொல்லி மகிழ்வாயே.

(இ-ள்) 2-ஆமிடத்தோனும், 7-ஆமிடத்தோனும் பாபியாய் 8-ஆமிடத்தி லிருக்க, சனி சந்திரனுக்கு 6ல் சூரியனிருக்க பிறந்தவன் பூனைக்கண்ணனாகும் எ-று. 12

வாயபுகரும் செவ்வாயும் வரியயேழில் தானிருக்க
ஏயபாபர் தான்பார்க்க இரவில்குருடன் தானாவான்
தோயலக்கினாதி தனத்தோன் துலங்கும்வெள்ளி மதிகூடி
நேயமுடனே தானிருக்க நிகழ்த்துமாலைக் கண்ணென்றே.

(இ-ள்) சுக்கிரனும் செவ்வாயும் 7-ஆமிடத்திலிருக்க, அவரை பாபர்கள் பார்க்க, இரவில் இரண்டுகண்ணுந் தெரியாது. இலக்கினாதிபதியும், 2-ஆமிடத்தோனும், சுக்கிரன்-சந்திரன் இவர்கள்கூடி ஒருமனையிலிருக்க மாலைக் கண்ணாகும் எ-று. 13

என்னவெள்ளி லக்கினாதி யிந்துங்கூடி யாரெட்டு
மன்னும்பனி ரண்டிலிருக்க பகர்வாய்மாலைக் கண்ணாகும்
மன்னுமிரண்டா மிடமதனில் மறியபுகரும் லக்கினாதி
வின்னமாகத் தானிருக்க விளம்பும்நேத்திர ரோகமென.

(இ-ள்) சுக்கிரனும் இலக்கினாதிபதியும் சந்திரனுங்கூடி 6-8-12-லிருக்க மாலைக்கண்ணாகும். 2-ஆமிடத்தில் சுக்கிரனும் இலக்கினாதிபதியுங்கூடி நிற்க, நேத்திரரோகவானாகும் எ-று. 14

எனவேரண்டா மிடமதனில் இந்துஞ்சனியுந் தானிருக்க
அனவேநேத்திர மிரண்டு மறியவொளியு மிராதுவறி
கனவேகதிரு மித்தோடு காணலக்கினாதியுங் கூடி
இனமேயிருக்கப் பிறந்தோனு மிரண்டுகண்ணுங் குருடாமே.

(இ-ள்) 2-ஆமிடத்தில் சந்திரனும் சனியுமிருக்க இரண்டு நேத்திரமும் ஒளியிராது. சூரியன் சந்திரன் இலக்கினாதிபதியும் கூடியிருக்க குருடனாகப் பிறப்பான் எ-று. 15

ஆமேலக்கினாதி ரண்டோன் அரியபுகருந் தான்கூடி
தாமேயிருக்கப் பிறந்தோனுந் தவிக்குங்குருட னாவானே
போமேகதிரோ னிந்துசேய் பொருந்திபனிரண் டினிலிருக்க
காமேயிரண்டு கண்ணுந்தான் நவில்வாய் தெரியாதென்றேதான்.

(இ-ள்) லச்கினாதிபதியும் 2-ஆமிடத்தோனும் சுக்கிரனுங் கூடியிருக்க பிறந்தவன் குருடனாவான். சூரியன் - சந்திரன் - செவ்வாய் இவர்கள்கூடி 12-ஆமிடத்திலிருக்க இரண்டுகண்ணுந்தெரியாத குருடனாகும் எ-று. 16

தானேலக்கினங் கடகமதாய் தக்கயிந்து புகர்நிற்க
மானேமண்ணில் பிறந்தோனு மறிவாய்பிறவிக் குருடனென
தேனேகதிரும் லக்கினாதி தெரியரண்டோன் புகர்கூடி
ஊனேயாறு மெட்டிலுற ஓதும்பிறவிக் குருடனென்றே.

(இ-ள்) இலக்கினம் கடகராசியாக, சந்திரனும் சுக்கிரனும் அதில்நிற்க பிறவிக்குருடன். சூரியனும், இலக்கினாதிபதியும், 2-ஆமிடத்தோனும், சுக்கிரனுங்கூடி 6-8-லிருக்க பிறவிக்குருடன் எ-று. 17

என்னமேடம் விடைதேளு மியம்பும் லக்கினமதாக
அன்னபுவியில் வந்தோனு மசங்கித மானபல்லன்
பன்னபனி ரண்டோனிந்தும் பண்பாய்கூடி தானிருக்க
ஒன்னேபுவியில் வந்தோனுக் கோர்விழியு மூனமதாம்.

(இ-ள்) மேஷம்-ரிஷபம்-விருட்சிகம் லக்கினமாகயிருக்க அசங்கிதமானப் பல்லன், 12-ஆமிடத்தோனும் சந்திரனுங் கூடியிருக்க, ஒருவிழி ஊனம் எ-று. 18

தக்கபனிரண்டா மிடத்தில் சசியுங்கதிருந் தான்கூடி
ஒக்கவிருக்க யிருவிழியும் ஊனமாக தானாகும்
மிக்கயிந்து ஐந்திலுற மேலாம்புகரும் நவமேற
பக்கப்பாபர் தான்பார்க்க பகருமிரண்டு விழியூனம்.

(இ-ள்) 12-ஆமிடத்தில் சந்திரனுஞ் சூரியனுங் கூடியிருக்க, இரண்டு விழியும் ஊனம். சந்திரன் 5-ஆமிடத்திலிருக்க, சுக்கிரன்9-ஆமிடத்திலிருக்க அவரைப் பாபர் பார்க்க, இரண்டு விழியும் ஊனமாம் எ-று. 19

ஊனேகதிரும் பாபருமாய் ஒத்துபனிரண் டேறிநிற்க
தேனேபுவியில் வந்தவர்க்கு தெளிவாம்வலக்கண் ணும்போகும்
மானேசந்திரன் செவ்வாயும் மனமாய்பனி ரண்டேயேற
நானேபிறந்த பாலனுக்கு நவில்வாயிடக்கண் ணூனமென்றே.

(இ-ள்) சூரியனும் பாபரும் 12-ஆமிடத்திலிருக்க பிறந்தவனுக்கு வலதுகண் ஊனமாகும். சந்திரனுஞ் செவ்வாயுங்கூடி 12-ஆமிடத்திலிருக்க, இடக்கண் ஊனமாகும் எ-று. 20

என்றேலக்கி னாதிரண்டில் யிருக்கப்புகரு மெட்டேற
நன்றேகதிரு மாறிலுற நவில்வாய்கண்ணோய் தானாகும்
குன்றேலக்கி னாதிதன்னை குலவும்சனியுந் தான்பார்க்க
வென்றேபுவியில் வந்தோர்க்கு விளம்புகண்ணில் நோயாமே.

(இ-ள்) இலக்கினாதிபதி 2-ஆமிடத்திலிருக்க, சுக்கிரன் 8-ஆமிடத்தி லிருக்க, சூரியன் 6-ஆமிடத்திலிருக்க கண்ணோய். இலக்கினாதிபதியை சனிபார்க்க, கண்ணோயாம் எ-று. 21

ஆமேயைந்து ஆறினிலே அடைவாய்லக்கி னாதியிருக்க
தாமேபுகரு மிரண்டோனுங் கூடக்கண்ணை பிடுங்கப்படும்
தேமேசிங்கம் மேஷமதை சனிசேய்பார்க்க வல்லதுகேள்
ஊமேயிருக்கக் கண்களினி லுதிரக்கொடியா மெனசாற்றே.

(இ - ள்) 5 6-ல் இலக்கினாதிபதியிருக்க, சுக்கிரனும் இரண்டாமிடத்தோனுங்கூட கண்ணைப்பிடுங்கப்படும். சிங்கராசியையும் மேஷராசியையும் சனி-செவ்வாய் பார்க்க, அல்லது அதிலிருக்க, கண்ணில் உதிரக்கொடி தோற்றும் எ-று. 22

சாற்றரண்டா மிடத்தோனும் புதனுங்கூடி ஆறிலுற
தேற்றபுவியில் பிறந்தோனுந் தானுமூமை தானாகும்
தோற்றயெந்த காரகாள் தானேகூடி யன்னவரே
நேற்றியாக் தானிருக்க நவில்வாய்ஊமை யாமெனவே.

(இ-ள்) இரண்டாமிடத்தோனும் புதனுங்கூடி 6-ஆமிடத்தில் ஏறிநிற்க, பிறந்தோன் ஊமையாகும். எந்தக்காரகாளாயினும் கூடியிருக்க அந்தகாரகர் ஊமையாம் எ-று. 23

எனவேயுச்சந் தானகில் யாவும்நிவர்த்தி தானகும்
அனமேரண் டோனும்புதனும் ஆறுயெட்டு பனிரண்டில்
இனமாயிருக்கத் தானூமை இலக்கினேனும் புகர்கூடி
கனமாயாறெட் டீராறில் கருதஊமைத் தானமே.

(இ-ள்) மேற்கூறிய கிரகங்கள் உச்சமாகயிருக்க யாவும் நிவர்த்தியாகும். இரண்டாமிடத்தோனும் புதனும் 6 8-12-லிருக்க ஊமையாவான். இலக்கினதிபதியும் சுக்கிரனுங்கூடி 6-8-12-லிருக்க பிறந்தவன் ஊமையாவான் எ-று.

ஆமேமூன்றோன் லக்கினதி அடைவாய்கூடி தானிருக்க
தாமேயூமை யாய்திரிவான் தக்கமேற்படி யாருடனே
ஊமேரண்டோன் தான்கூடி உகந்துகுல்வி தானிற்க
போமேபுவியில் வந்தோனும் புகலுமூமை யாய்திரிவான்.

(இ-ள்) மூன்றாமிடத்தோனும் லக்கினதிபதியுங் கூடியிருக்க ஊமையாகுவான், மேற்படியாருடன் இரண்டாமிடத்தோனுங் கூடில் ஊமையாகத் திரிகுவான் எ-று. 25

திரியசனிய னில்லாமல் தீண்டுமாறில் சுபர்கூடில்
புரியப்புவியில் வந்தோனும் புலவனகை விளங்குவனே
தெரியலக் கின்மலது திரிகோணகேந் திரமதனில்
அரியவாரல் தானிருக்க அன்பாய்தெலுங்கு ஓதுவனே.

(இ-ள்) சனியல்லாமல் 6-ஆமிடத்தில் சுபக்கிரகங்கள் கூடில் புலவனகுவன். லக்கினத்தில் அல்லது திரிகோணகேந்திரத்தில் செவ்வாய் இருக்க தெலுங்குவித்தையில் வல்லவனகுவான் எ-று. 26

அறியலக்கி னதியலது ஆனகேந்திர கோணமதில்
துரியராகு கேதுநிற்க தலுக்கும்தமிழு மறிவானே
சூரியபுதனு மேழோனுங் குருவுந்திரி கோணமலது
தெரியகேந் திரமேயேற திடக்கவித்வா னகுவனே.

(இ-ள்) இலக்கினதிபதி அல்லது திரிகோணகேந்திரத்தில் இராகு அல்லது கேது இருக்க தலுக்குவித்தையிலும், தமிழ்வித்தையிலும் வல்லவனகயிருப்பான். புதனும் 7-ஆமிடத்தோனும் குருவும் திரிகோணம் அல்லது கேந்திரத்திலிருக்க, திடத்த வித்துவானகுவன் எ-று. 27

ஆகலக் கினமலது அடைவாங்கோண கேந்திரம்தில்
போகபுகர் பொன்னேறிடவே புவியில்சாஸ்திர வல்லவனும்
பாகலக்கினம் புகர்பொன்னும் பரிவாய்கூட பொன்கதிரும்
ஏகசிங்கம் புகர்கடகம் யேறசாஸ்திர மறிகுவனே.

(இ-ள்) இலக்கினம் அல்லது திரிகோணகேந்திரத்தில் சுக்கிரனும்-குருவுமிருக்க சாஸ்திரத்தில் வல்லவனகுவான். இலக்கினத்தில் சுக்கிரனுங் குருவுங்கூட, குரு-சூரியன் சிங்கத்திலிருக்க, சுக்கிரன் கடகத்திலிருக்க ஆறு சாஸ்திரமு மறிகுவான் எ-று. 28

அரியபுதனு முச்சமுற யவனேடிரண்டே னுச்சமதாய்
புரியபுகரு முச்சனுமாய் பொருந்தஉபயஞ் சோதிடனும்
தெரியநவத்தோன் சனிரண்டோன் திகழாய்கதிருங் கூடிடிலோ
உரியவுலகோர் தான்புகழ ஓதும்தர்க்க சாஸ்திரியாம்.

(இ-ள்) புதன் உச்சத்திலிருக்க, இரண்டாமிடத்தோனும் உச்சத்தில் இருக்க, சுக்கிரன் உச்சம் அல்லது உபயராசியிலிருக்க சோதிடசாஸ்திரியாவான். 9-ஆமிடத்தோனும் சனியும் 2-ஆமிடத்தோனும் சூரியனுங்கூட உலகோர் புகழும் தர்க்க சாஸ்திரியாகுவான் எ-று. 29

ஆமேரண்டோன் புகர்பொன்னு முச்சமூலத் திரிகோணம்
தாமேயேறி யேயிருக்க தர்க்கசாஸ்திரம் படிப்போனும்
போமேரண்டோன் புதனுச்சம் பொருந்தலக்கினம் பொன்னிற்க
காமேசனி யெட்டினிலேற கணிதவித்தை வல்லவனும்.

(இ-ள்) 2-ஆமிடத்தோனும் சுக்கிரனும் குருவும் மூலதிரிகோணத்திலிருக்க, தர்க்கசாஸ்திரம்படிப்பவன். 2-ஆமிடத்தோனும் புதனும் உச்சத்திலிருக்க, குரு லக்கினத்திலிருக்க, சனி 8-ஆமிடத்திலிருக்க, கணிதவித்தை வல்லவனும் எ-று. 30

வல்லாரண்டோ னுடன்புகரை வறியகுருவே தான்பார்க்க
புல்லுமிலக் கணந்தன்னைப் புகழாய்ப்பேச வல்லவனும்
நல்லபத்தோன் நாலிலுற நிறைந்தகல்வி லக்கினதி
அல்லதிரி கோணகேந்திரம் யமரபுந்தி தமிழ்வித்தை.

(இ-ள்) 2-ஆமிடத்தோனையும் சுக்கிரனையும் குருபார்க்க இலக்கணம் பேச வல்லவனகுவான். 10-ஆமிடத்தோன் 4-ஆமிடத்திலிருக்க நிறைந்த கல்வியுடையவனகுவான். லக்கினதிபதி அல்லது திரிகோணகேந்திரத்தில் புதன் நிற்க, தமிழ் வித்தையில் வல்லவன் எ-று. 31

வேறு

விதமென கதிர்புகர் புந்தியிந்தும்
விளங்கிய சனிகுரு யிவர்கள்கூட
மிதமென வித்தையொடு தனவானவான்
மிக்கலக்கி னதிபதி புகரிருக்க
பதமென புகர்வீட்டில் குருவிருக்க
பரிவான மகரத்தில் சேயுமிந்தும்
நிதமென குருபுந்தி கூடிநிற்க
நிறைந்ததன மோடுகல்வி நிபுணனவான்.

(இ-ள்) சூரியன் - சுக்கிரன்-புதன்-சந்திரன்-சனி-குரு இவர்கள் கூடி இருக்க, வித்தை பிரபலமுள்ள தனவானகுவான். லக்கினதிபதியும் சுக்கிரனுமிருக்க, சுக்கிரன் வீட்டில் குரு யிருக்க, மகரராசியில் செவ்வாய்-சந்திரன்-குரு-புதன் கூடியிருக்க, நிறைந்த தனவான் கல்வியில் நிபுணனகுவான் எ-று. 32

ஆகவே லக்கினதி நவத்திலேற
அரியநவத் தோனுடன் ஜென்மாதிகூடி

பாகமாம் நலம்பதி னொன்றில்மேவ
பரிவாக யல்லது பதினொன்றோனும்
ஏகவே நவத்தோனு மிருவர்கூடி
இருந்திட ரண்டினிலே தனவானவான்
தாகமா யிவ்வாறு பலனைக்கண்டு
தரணிதனில் சாதகர்க்கு சாற்றுவாயே.

(இ-ள்) இலக்கினாதிபதி 9-ஆமிடத்திலிருக்க, 9-ஆமிடத்தோனும் லக்கினாதிபதியுங்கூடி 9-ஆமிடத்திலிருக்க, 11-ஆமிடத்தோனும் 9-ஆமிடத்தோனுங்கூடி 2-ஆமிடத்திலிருக்க தனவான் எ-று. 33

வேறு

சாற்றும் லக்கினாதியோடு சார்பாய்மூன்றாதி தனையும்
ஏற்றவாண் கோள்தான்பார்க்க யெழிலாய்மாமன் பொருள்வருகும்
போற்றநவத்தோன் மூன்றாதி புகழாய்கூட தமயன்பொருள்
தேற்றமூன்றோன் கதிர்கூடில் தாதையர்பொன் வருமின்னே.

(இ-ள்) லக்கினாதிபதியையும், 3-ஆமிடத்தோனையும் ஆண்கோள்பார்க்க மாமன்பொருள்வரும். 9 - ஆமிடத்தோனும், 3 - ஆமிடத்தோனுங்கூடிட தமயன் பொன்வரும். 3-ஆமிடத்ததிபனும் சூரியனுங்கூடிட தாதையர் பொன்வரும் எ-று. 34

மின்னேமூன்றோன் மதிகூடில் மொழிவாயன்னை பொருளாகும்
புன்னேசெய்க்கு தனதுபொருள் புந்திகூடில் பகைஞர்பொருள்
மன்னேகுருவிற் குறவினர்பொன் மருவும்புகற்கு மனைவிபொருள்
பன்னும்சனிக்கு சேவித்தோ னலதுவேலைக் காரன்பொன்.

(இ-ள்) 3-ஆமிடத்தோனும் சந்திரனுங்கூடிட ஆண்கோள்பார்க்க அன்னையின் பொருள்கிடைக்கும். செவ்வாய்கூடிட தனது பொன்னாகும், புதன்கூடிட பகைவருடைய பொன்வரும், குருகூடிட உறவினர் பொருள் வரும், சுக்கிரன்கூடிட மனையாளுடைய பொருள், சனிகூடிட சேவித்தவன் அல்லது வேலைக்காரருடைய பொருள்வரும் எ-று. 35

பொருந்தும்லக்கினம் பத்தினிலே புகழாய்சந் திரனிருக்க
புகுந்தக்குடிவீட்டிற் குடையவனாய் புகல்வாயிருப்பா னேனெனவே
அரிந்தபத்து நலத்ததிபர் அன்பாய்கூடில் பழையதனம்
தெரிந்தேகோளின் நிலைகண்டு தக்கபலனை தானியம்பே.

(இ-ள்) இலக்கினத்தினும் 10-ஆமிடத்தினும் சந்திரனிருக்க குடிவீட்டுக்குடையோனாகுவன். 10-ஆமிடத்ததிபனும், 9-ஆமிடத்ததிபனுங்கூடிட பழையதனங்கிடைக்கும் எ-று. 36

இயம்பரண்டை கேந்திரத்தை யிரண்டாமிடத்திற் கதிபனுமே
நயமாயாறெட் டீறாரை நோக்கதகப்பன் தனமில்லை
சயமேயிந்துக் கேயிரண்டில் சனியாயிந்தும் நாலோனும்
தயவேகூடில் கேந்திரமுற தந்தைபொருளை பிறர்கொள்வார்.

(இ-ள்) 2-ஆமிடத்தையும், கேந்திரத்தையும், 2-ஆமிடத்ததிபன் 6-8-12-யும்பார்க்க தகப்பன் தனமில்லை. சந்திரனுக்கு 2-ல் சனியிற்க, சந்திரனும் 4-ஆமிடத்ததிபனும்கூடிட கேந்திரத்திலிருக்க தந்தைபொருளை அயலார்கொள்வார் எ-று. 37

வாரேசுபரும் பத்திலுற வளருஞ்சுசிபொன் பாபர்மனை
ஏர்திரவிய மில்லை யிலக்கினமா முதலாயெண்ணி
நேரேபார்க்க லக்கினாதி நின்றவீடு பாபர்வீடாய்
பாரேயிருக்க தரித்திரம்போம் பலனைக்கண்டு தானுரையே.

(இ-ள்) சுபக்கோள் 10-ஆமிடத்திலிருக்க, சந்திரன்-குரு பாபர்வீட்டிலிருக்க திரவியமில்லை. லக்கினமுதல் எண்ணிவர லக்கினாதிபதி யிருந்தவீடு பாபர்வீடாகவிருக்க தரித்திரம்போம் எ-று.

உரைக்குமைந்தா மிடத்தோனு சுபருமொன்பான் தனிலிருக்க
சிறக்கபுத்திரி யாந்தனக்கு சீராய்மணமு முடிப்பானே
நிறைக்கவிரயம் பாபருற வலதுவிர யாதிபார்க்க
பெறுக்கவலது பாபர்கூட புகல்வாயுடம்பில் வியாதியென.

(இ-ள்) 5-ஆமிடத்தோனும் சுபரும் 9-ஆமிடத்தில் யேறிநிற்க புத்திரிக்கு மணம்சூட்டுவான். 12-ஆமிடத்தில் பாபர்களிருக்க, அல்லது 12-ஆமிடத்ததிபன் பார்க்க, அல்லது பாபருடன்கூடியிருக்க உடம்பில் வியாதியுண்டாம் எ-று.

எனவேபத்தா மிடத்தோனு யிருக்கபத்தில் நற்கருமம்
அனவேரண்டோன் பதினொன்றிலமா பதினொன்றோ நவத்தோன்
முனவேரண்டில் தானேற உலகில்வந்து உதித்தோனும்
தனவேநாலு லட்சம்பொன் தானும்தேடி வாழ்குவனே.

(இ-ள்) 10-ஆமிடத்தோன் 10-ஆமிடத்திலிருக்க நற்கருமம்செய்குவான். 2-ஆமிடத்ததிபன் 11-லிருக்க, 11-ஆமிடத்ததிபனும், 9-ஆமிடத்ததிபனும், 2-ஆமிடத்திலிருக்க நாலுலக்ஷம் பொன்தேடுவான் எ-று.

வாழசிலையிற் குருவிருக்க வாகாய்லக் கினத்திற்சனி
மீழஉச்சம் பெற்றிருக்க மிக்கப்பதி னோருமாதி
சூழநாலிலே யிருக்க சுகமாய்கோடி பொன்தேடி
ஆழபுவியில் வாழ்வனென அன்பாய்கண்டு பலன்கூறே.

(இ-ள்) தனுசுராசியில் குருவிருக்க, லக்கினத்தில் சனி உச்சனாகயிருக்க, 11-ஆமிடத்ததிபன் 4-ஆமிடத்திலிருக்க, கோடிபொன்தேடி புவியில் யாவரும் புகழும்படி வாழ்குவான் எ-று.

மூன்றும்பாவக பலாபலன்

கூறமூன்றுக் குடையவனும் குலவும்செவ்வாய் பாவியுடன்
சேறகூடி யேயிருக்க செறிந்துபாபர்கள் பார்க்க
நேறயாறெட் டீராறில் நெருங்க வேறிடக்கேளாய்
தேறஜாதக னுடைய சகோதரர்கள் நாசமெனவே.

(இ-ள்) 3-ஆமிடத்திற்குடையவனும் செவ்வாயும் பாவிகளுடனே கூடி யிருக்க, பாபர்களே பார்க்க, 6-8-12-லேறி நிற்க, சகோதர நாசமாம் எ-று.

என்னமூன்றில் பாபருற யலதுபாபிகள் பார்க்க
பன்னசகோ தரமில்லை பரிவாய்செவ்வாய் நீசனுமாய்
உன்னநீசாங் கிசமேற உறவாய்பாப ருடனிருக்க
மன்னும்ஜாத கன்முன்னே மருவுஞ்சகோ தரமில்லை.

(இ-ள்) 3-ஆமிடத்தில் பாபர்களிருக்க, அல்லது பார்க்க, சகோதர மில்லை. சகோதரக்காரகனாகிய செவ்வாய் நீசனாய் நீசாங்கிசமேறி பாபர்க ளுடன் கலந்திருக்க, சாதகனுக்குபின் சகோதரமில்லை எ-று. 2

இல்லைமூன்று மிடத்ததி யேறிநின்ற யங்கிசத்ததி
புல்லும்நீசாங் கிசமேற பிறக்கும் சகோதரநாசம்
வல்லமூன்றில் நின்றவனும் வளமாஞ்சகோதர காரகனும்
சொல்லபாபி களாயிருக்க சகோதரங்க ளில்லையெனே.

(இ-ள்) 3-ஆமிடத்ததிபன் யேறிநின்ற அங்கிசாதிபதி நீசாங்கிசமேற சகோதர நாசமாம். 3-ஆமிடமுடையவனும், சகோதரக்காரகனும் பாபியாக யிருக்க சகோதரமில்லையாம் எ-று. 3

என்னபிரா தருஸ்தானாதி யேறிநின்ற ஸ்தானாதி
பன்னயவர் நின்றமனைக்கு பரிவாயுடைய வன்றானும்
மன்னுமாறெட் டீராறில் மருவியிருக்கப் பிறந்தோர்க்கு
பின்னும் சகோதரநாசம் போகுமென்று தானுரையே.

(இ-ள்) பிராதருஸ்தானாதிபதி ஏறின அங்கிசாதிபதியிருந்த வீட்டிற் குடையவன் 6-8-12-லிருக்க, ஜாதகனுக்கு பின்சகோதர நாசமாம் எ-று. 4

வேறு

உரைக்கமூன் றாமிடத்திற் குடையோன் றானும்
உற்றதோர் குருநவங் கிசமே யேற
பெருக்க காரகனு மப்படியே யேற
பிறப்பது சாதகன் னொருவ னாகும்
நிறைக்கவே சகோதரத் தானத் ததி
நீடும்பல யீனமில்லா சுபரைக் கூடி
இருக்கவே சுபர்பார்க்க சகோத ரங்கள்
எழில்பெற லாபமுண்டா மென்று சாற்றே.

(இ-ள்) 3-ஆமிடமுடையவன் குருநவஷ்டி அங்கிசமேற, காரகனும் அப்படியேயேற, ஜாதகன் ஒருவனாகவே பிறப்பான். சகோதரத்தானாதிபதி பலஹனமில்லாமல் சுபருடனே கூடியிருக்க, சுபர்கள் பார்க்க சகோதரலாப முண்டாம் எ-று. 5

சாற்ற சகோதர காரகன் றன்னோடு
சகோதரத் தானாதி பதியோன் றன்னை
ஏற்றவே சுபர்பார்க்க பெலவா னாக
இருக்கவே சகோதர லாப முண்டாம்

போற்றவே மூன்றினுக் குடையோன் றானும்
புகழ்கேந்திர கோணமே யேறி நிற்க
தோற்றவே உச்சக்ஷேத் திரனு மாக
துலங்கிடும் சகோதர வர்த்தனைக ளுண்டாம்.

(இ-ள்) சகோதரகாரகனையும், சகோதரதானாதிபதியையும், சுபகிரகங் கள் பார்க்க, பலம்பெற்றிருக்க சகோதரலாபமுண்டாம். 3-ஆமிடமுடைய வன் கேந்திரதிரிகோணத்திலிருக்க, உச்சகேந்திரனாக சகோதரவர்த்தனை யுண்டாம் எ-று. 6

உண்டெனமூன் றாமிட முடையோன் றானும்
உற்ற சேய்க்கு வட்டசேத் திரனாகி
பண்டென யவ்விராசி பெலத் திருக்க
பராக்கிரம சாலியாய் தானிருப் பான்
கண்டெனமூன் றாமிட முடையோ னுச்சங்
காண கேந்திரதிரி கோணந் தன்னில்
தண்டென சுபக்கோள்க ளிருக்கத் தானும்
தயிரிய வானாக யிருப்பான் பாரே.

(இ-ள்) 3-ஆமிடமுடையவன் செவ்வாய்க்கு சமக்ஷேத்திரனாகயிருக்க, அந்த ராசி பலம்பெற்றிருக்க பராக்கிரமசாலியாகயிருப்பான். 3-ஆமிட முடையவன் உச்சனாகயிருக்க, கேந்திரதிரிகோணங்களிலே சுபகிரகங்க ளிருக்க தயிரியசாலியாக யிருப்பான் எ-று. 7

பார்க்கமூன் றாமிட முடையோன் றானும்
பண்பான சுபக்கிரகத் துடனே கூடி
தீர்க்கவை கேசியாங் கிசமே யேற
தீரமுடை யோனு மாய்தா னிருப்பான்
கோர்க்கமூன் றுடை யவனுச்ச னாகக்
குலவுமூன் றாமிடம் சரம தாக
ஏர்க்கவே யிருக்கபுவி வந்தோன் றானும்
எழில்பராக் கிரமசாலி யாவான் பாரே.

(இ-ள்) 3-ஆமிடமுடையவன் சுபகிரகத்துடனேகூடி வைகேசியாங்கிச மேற தீரவானாகயிருப்பான். 3-ஆமிடமுடையவன் உச்சனாக, 3-ஆமிடம் சரராசியாகயிருக்க பிறந்தவன் பராக்கிரமசாலியாக யிருப்பான் எ-று. 8

பாறென மூன்றாமிட முடையோன் றானும்
பனிரண்டி லிருக்க காரகன் பெலக்க
நேறென யவன்வட்ட சேத்திர வுச்ச
நாகவே யிருக்கமுதல் விசனம் வந்து
பேறென மறுபடியும் தைரிய வானாய்
பெட்புட னிருப்பன் காரகனே தானும்
தேறென பரவநாங் கிசமே யேறத்
தீரனாகி யுத்தம் பண்ணுவானே.

(இ-ள்) 3-ஆமிடமுடையவன் 12-ஆமிடத்திலிருக்க, காரகன் பலவானாகி அவன் சொக்ஷேத்திர உச்சனாகி முதலில் விசனம்வந்து, மறுபடியும் தயிரியம் வரும். காரகன் பருவதாங்கிசமேற தீரனாய் யுத்தம் பண்ணுவான் எ-று. 9

பண்ணவே மூன்றாமிட முடையோன் றானும்
பரிவாகச் சூரிய னோடு கூட
வண்ணமாம் சந்திர னுடன் செவ்வாய் கூட
வளமாக சனியவனு மவரைப் பார்க்க
நிண்ணமா யுத்தமது செயவல் லோனும்
நிகழ் மூன்றோன் குருவுடனே கூடிநிற்க
எண்ணமா மேழோனுஞ் சேயைக் கூட
என்னேரங் கலகமது மூட்டு வானே.

(இ-ள்) 3-ஆமிடமுடையவன் சூரியனுடனேகூட, சந்திரனுடன் செவ்வாய்கூட, அவர்களை சனியாலே பார்க்கப்பட, யுத்தங்களிலே சாமார்த்தியனாகருயிப்பான். 3-ஆமிடமுடையவன் குருவுடன்கூட 7-ஆமிடமுடையவன் செவ்வாயுடனேகூட என்னேரமுங் கலகம் மூட்டிக்கொண்டே யிருப்பான் எ-று. 10

மூட்ட மூன்றாமிட முடையோ னோடே
முனைவாக ராகுகூட வலது
மேட்டியாய் ராகு மூன்றினி லிருக்க
மேல்மூன்றுக் குடையோன் பிற சித்தமாக
தாட்டியாய் கேந்திர திரி கோணமேற
தானவரை சனியுமே நோக்க வேதான்
காட்டவே ஜாதகமாய் வந்தோன் றானும்
கனரோக முடையவனா யிருப்பான் பாரே.

(இ-ள்) மூன்றாமிடமுடையவனுடனே ராகுகூட அல்லது ராகு மூன்றாமிடத்திலிருக்க, மூன்றாமிடமுடையவன் பிரசித்தமாய் கேந்திரதிரிகோணத்தில் இருக்க, அவனை சனியாலே பார்க்கப்பட ஜாதகமாகவந்தவன் கனரோகமுடையவனாக யிருப்பான் எ-று. 11

பார்க்கவே மூன்றில் நீசர்மேவ
பரிவாய் நாலாமிடத்திற் குடையோன் தேளாய்
ஏர்க்கவே ஆறெட்டு விரைய மேற
யிரும் பாபர்பார்க்க கனரோக வானும்
மூர்க்க மூன்றாமிடத்தில் குளிகன் நிற்க
மூன்றுடையோன் ஆருடையோன் றன்னைக்கூட
கோர்க்கவே ராகுவொடு குளிகன்பார்க்க
கூறுவாய் ரோகவா னென்றுதானே.

(இ-ள்) மூன்றாமிடத்தில் நீசக்கிரகமிருக்க, 4-ஆமிடத்திற் குடையவன் 6-8-12 லிருக்க, அவனை பாபர்கள் பார்க்க கனரோகவானாகும். மூன்றாமிடத்திற் குளிகனிருக்க, மூன்றாமிடமுடையவன் 6-ஆமிடமுடையவனைக்கூட அவனை ராகு குளிகன் பார்க்க ரோகவான் எ-று. 12

தானாகப் புகரிருந்து பலவானாகி
தக்கதோர் சுபர்கூட அலது பார்க்க
தேனாகி பொன்பாத்திர மதனிற்றானும்
திகழாகப் போஜனமுந் தானேயுண்பான்
கோனாகி மூன்றாமிடத்தில் புதனிருக்க
குற்றமிலா சவுமியா ளவனைப்பார்க்க
மானாகி காரகனு மப்படியேயிருக்க
மகிழ்ச்சியுடன் கடுக்கனுமே அணிவான்பாரே.

(இ-ள்) சுக்கிரனும் சந்திரனும் பெலவானாகி அவர்களை சுபகிரகங்கள் கூட அல்லது பார்க்க, பொன்பாத்திரத்தில் போஜனம் புசிப்பான். மூன்றாமிடத்தில் புதனிருக்க, அவனை சவுமியான் பார்க்க, காரகனு மப்படியே யிருக்க, கடுக்கன் அணிவான் எ-று. 13

அணிய மூன்றாமிடத்தில் பாபர்நிற்க
அறியமற் றோர்களப ரோகமேவ
பிணியெனுங் களரோகம் விசேஷமுண்டு
பேசிய மூன்றாமிடத்தில் ராகுநிற்க
துணியவே அவனையுமே சுபர்கள்தானும்
துலங்கிடப் பாராமல் தானிருக்க
இணையவே களரோகம் வருகுமென்று
இயம்புவாய் ஜாதகர்க்கு பலனிதென்றே.

(இ-ள்) மூன்றாமிடத்தில் பாபர்களிருக்க மற்ற கிரகங்கள் அபரோக ஸ்தானத்திலிருக்க விசேஷமாய் களரோக முண்டாகும். மூன்றாமிடத்தில் ராகுவிருக்க அவனை சுபர்கள் பாராதிருக்க களரோகம் வரும் எ-று. 14

என்னவே செவ்வாயி னுடனே தானும்
யியம்புமா றாமிடத்திற் குடையோன்கூடி
பன்னவே ஆறெட்டுப் பன்னிரண்டில்
பரிவாக வீற்றுமே தானிருக்க
மன்னிய செவியது கெட்டுபோகும்
மருவுமூன் றாமிடத்திற் சுக்கிரன்நிற்க
கன்னிய குருபார்க்க அலதிருக்க
காணவே நீலக்கல் கடுக்கன்பூண்பன்.

(இ-ள்) செவ்வாயுடன் 6-ஆமிடத்திற்குடையவன்கூடி 6-8-12-லிருக்க செவியானது கெட்டுப்போகும். மூன்றாமிடத்திற் சுக்கிரனிருக்க அவனை வியாழன் பார்க்க அல்லது கூடியிருக்க நீலக்கல் கடுக்கன் போடுவான் எ-று.

பூணவே சசிசெவ்வா யிவர்களோடு
புகழான சவுமியர்கள் பொருந்திக்கூட
காணவே வைரக்கல் பதித்ததோரு
களிப்பான ஆபரண மதனைப்பூண்பான்
தோணவே யிங்கோடு வியாழன்புந்தி
துலங்கிய சுக்கிர னிவர்கள்நால்வர்

வேணவே மூன்றினி லிருக்கத்தானும்
வேதங்கள் புராணங்கள் கேட்பானன்றே.

(இ-ள்) சந்திரன்-செவ்வாய் இவர்களுடன் சவுமியாள் கூட வைரக்கல் பதித்த ஆபரணம் பூண்பான். சந்திரன்-வியாழன்-புதன்-சுக்கிரன்-இவர்கள் மூன்றாமிடத்திருக்க வேதபுராணங்கள் கேட்பான் எ-று. 16

நான்காம் பாவகப் பலாபலன்

நன்றென சுக்கிரனு மேழில்நிற்க
நவிலுவாய் ஜாதகனு மதிககாமி
அன்றென புதனிருக்க அன்னியஸ்திரீமேல்
ஆசிப்பன் குருவிருக்கில் சோரதாரன்
நின்றென சனியிருக்கி லங்கயீனம்
நீடிய குஜற்குவெகு சத்தியோகம்
பற்றிய பானுயிருக்கில் பரதாரத்தை
பக்ஷமுட னிச்சிப்பா னென்றுசொல்லே.

(இ-ள்) சுக்கிரன் களத்திரஸ்தானமாகிய 7-ஆமிடத்திலிருக்க ஜாதகமானவன் அதிக காமியாக யிருப்பான், புதனிருக்கில் அன்னியதாரத்தின் மேல் இச்சைபடுவான், வியாழனிருக்கில் சோரதாரமுடையவன், சனியிருக்கில் அங்கயீனதாரமுடையவன், செவ்வாயிருக்கில் வெகுசத்தி யோகம், சூரியனிருக்கில் பிறருடைய தாரத்தை விரும்புவான் எ-று. 1

சொல்லவே லக்கினாதி குடும்பத்தாதி
சோர்விலா களத்தி ராதிதனக்கு
புல்லவே சத்துருவா யிருக்கத்தானும்
பொருந்திடா பாபஸ்திரி தனைமணப்பன்
வல்ல லக்கினாதிபன் பாபரோடு
வாகாக கூடிடப் பாபர்பார்க்க
அல்லது யேழாமிடத்தி லமர்ந்துநிற்க
அறியவே பரஸ்திரியை யிச்சிப்பானே.

(இ-ள்) இலக்கினாதிபதியும் குடும்பாதிபதியும் களத்திரஸ்தானாதிபதிக்கு சத்துருவாயிருக்க பாவஸ்திரீயை மணப்பன், லக்கினாதிபன் பாவிகளுடனே கூட பாவிகள் பார்க்க அல்லது ஏழாமிடத்திலிருக்க பரஸ்திரீயை இச்சிப்பான் எ-று. 2

இச்சையாய் லக்கினாதி சத்துராதி
யிசைந்திடுங் குடும்பாதி யிவர்கள்கூடி
பட்சமா யிருந்திடப் பாபர்பார்க்க
பரஸ்திரிமேல் மனமதுவு முள்ளோனாகும்
கொச்சையா யிராகேனுங் கேதுவேனுங்
குலவியே ழாமிடத்தில் தாமிருக்க

அச்சமாம் பாபர்களு மவரைப்பார்க்க
அறியவே விபசாரம் பண்ணுவானே.

(இ-ள்) இலக்கினாதிபதியும் சத்துருஸ்தானாதிபதியும் குடும்பாதிபதியுங் கூடியிருக்க, அவரை பாபர்கள் பார்க்க ஈனபரஸ்திரீயை யிச்சிப்பான், இராகு கேது இவர்களில் எவரேனும் 7-ஆமிடத்திலிருக்க அவரை பாபர்கள் பார்க்க விபசாரம் பண்ணுவான் எ-று 3

வாமென கர்மேசன் புத்திரேசன்
வளமான களத்திரேச னிவர்கள்மூவர்
காமென ஆறில்நின் றோனைக்கூடி
கர்மமெனுந் தானமதி லேறிநிற்க
ஏமெனவே அவனும்பர புத்திரனாகும்
ஏழுடையோன் நாலி லுற செவ்வாய்பார்க்க
பாமெனவே ஜாதகமாய் வந்தோன்றானும்
பரஸ்திரியை கூடியே வாழ்வான்காணே.

(இ ள்) கர்மேசன்-புத்திரேசன் களத்திரேசன் இவர்கள் மூவரும் 6-ஆமிடமுடையவனோடு கூடி கர்மஸ்தானத்திலிருக்க ஜாதகமானவன் பரபுத்திரன், ஏழாமிடமுடையவன் நாலாமிடத்திலிருக்க அவனை செவ்வாய்பார்க்க பரஸ்திரீயைக் கூடிவாழ்குவான் எ-று. 4

காணவே புத்திரேசன களத்திரேசன்
கருதிய பலமுடையோ ராயிருக்க
வேணவே ஜாதகன்தன் களத்திரந்தானும்
வேற்று புருடனுக்கு பிள்ளையுண்டாவாள்
பூணவே யேழாமிடத்தோன் குடும்பத்தாதி
பாபருட னேகூட செவ்வாய்பார்க்க
நாணவே யவளும்சோர பர்த்தாவாலே
நாட்டினில் பிள்ளையுண் டாவளென்றே.

(இ-ள்) புத்திரேசனுங் களத்திராதிபதியும் பெலவானாக யிருக்க ஜாதகனுடைய களத்திரம் சோரநாயகனால் பிள்ளையுண்டாவாள். 7-ஆமிடமுடையவனும் குடும்பாதிபதியும் பாபர்களுடனே கூடிட அவரை செவ்வாயால் பார்க்கப்பட அவளும் சோரபர்த்தாவால் பிள்ளையுண்டாவாள் எ-று. 5

என்னவே பாக்கியாதி களத்திராதி
இவர்களுமே ஆறெட்டு யீராறேற
அன்னவே களத்திராதி பலமேகுன்ற
அவரை யைந்தாமிட முடையோன்பார்க்க
மன்னவே புவியினில் வந்துதித்தோன்
மருவிய யவனுடையக் களத்திரந்தானும்
பன்னவே சோர பர்த்தாவைக்கூடி
பாலகனைப் பெறுவளெனப் பகருவாயே.

(இ-ள்) பாக்கியாதிப்பதியும் களத்திராதிபதியும் கூடி 6-8-12-லிருக்க, களத்திராதிபன் பெலயீனனாக அவரை ஐந்தாமிடமுடையவன் பார்க்க,

ஜாதகமானவனுடைய மனையாள் சோரபத்தாவை சேர்ந்து பிள்ளையுண்டா யிருப்பாள் எ-று. 6

பகரவே சசியுஞ் ஜீரணனுமாகிப்
பலனில்லா பாவிக ளுடனேகூடி
அகரவேழாக அன்னிய களத்திரகாமி
ஐந்தாமிட முடையவ னேழிலேற
தகர வேழானும் பாவிகளைக்கூட
தானந்த சுக்கிரனும் பெலமேகுன்ற
மகரவே களத்திரமுங் கர்ப்பத்தோடு
மரணமாய் போகுமென மறியச்சொல்லே.

(இ-ள்) சந்திரன் ஜீரணனாய் பெலன் குறைந்து பாவிகளுடனேகூடி 7-ஆமிடத்திலிருக்க அன்னியகளத்திர காமியாகுவான். 5-ஆமிடமுடையவன் 7-ஆமிடத்திலிருக்க, 7-ஆமிடமுடையவன் பாவிகளுடனேகூட சுக்கிரன் பெலயீனனாக யிருக்க, களத்திரங் கெர்ப்பத்துடனே மரணமாகும் எ-று. 7

சொல்லவே சந்திரனும் நீசனாக
சோர்விலா கருமாதி யுச்சனாக
புல்ல களத்திராதி யாறெட்டீராறுமேவ
புகலவே குடும்பத்தில் செவ்வாய்நிற்க
வல்லதோர் ஜாதியு மீனமான
மனையாளை மணந்து மருவிவாழ்வான்
நல்லவளி கோட்களுட வலுவறிந்து
நானிலத்தில் தெளிவாகச் சாற்றுவாயே.

(இ-ள்) சந்திரன் நீசஸ்தான மேறியிருக்க, கருமாதிபதி உச்சஸ்தானத்தில் இருக்க, களத்திராதிபதி 6-8-12-ல் இருக்க, குடும்பஸ்தானத்தில் செவ்வாய் இருக்க, ஜாதியீன களத்திரத்தை சேர்ந்து வாழ்குவான் எ-று. 8

சாற்றவே யேழாமிட முடையோன்றானும்
சார்பிலா பாபிக ளுடனேகூட
தேற்றவே குரூர சஷ்டியங்கிசம்
தேடியே யவர்களு மேறிநிற்க
தோற்றவே முடவன் திரேகாணமேற
துலங்கவே வந்தவன் களத்திரந்தானும்
ஏற்றவே விஷபட் சணத்தினாலும்
இறப்பளென கண்டுபல னியம்புவாயே.

(இ-ள்) ஏழாமிடமுடையவன் பாவிகளுடனேகூட, அல்லது குரூரசஷ்டியங்கிசமேற, சனி திரேகாணமேற ஜாதகனுடைய களத்திரம் விஷபட்சணத்தினால் மரணமடைகுவாள் எ-று. 9

இயம்பு கருமாதி ராகோடுகூடி
யேழினுற செவ்வாயு மவரைப்பார்க்க
நயம்பெறவே யேழாமிடஞ் சலராசியாக
நங்கையருந் தண்ணீரில் விழுந்துசாவாள்

சயம்பெறவே யேழாமிட முடையோன்றானும்
சஷ்டியங்கிச மேறயதின் பாகையெண்ணி
வயம்பெறவே அவ்வளவு களத்திரமென்று
வாகாகக் கண்டுபலன் வரைகுவாயே.

(இ-ள்) கருமாதிபதி ராகுடனே கூடி 7-ஆமிடத்திலிருக்க, அவரை செவ்வாயால் பார்க்கப்பட, 7-ஆமிடம் சலராசியாகவிருக்க, ஸ்திரீ தண்ணீரில் விழுந்து சாகுவாள். 7-ஆமிடமுடையவன் சஷ்டியங்கிசமேற அதிலிருக்கும் பாகையை யெண்ணி அவ்வளவு களத்திர முண்டென அறியவும் எ-று. 10

பாயன களத்திராதி யுச்சனாகி
வக்கிரமு நீசமு மில்லாதிருக்க
ஏயன விற்பன களத்திரமாகும்
இலக்கினேசன் பெலவானாக விருக்க
நேயன களத்திரேசன் குடும்பேசன்தான்
நீடிய பெலனுமே பெற்றிருக்க
ஊயென யுபயகளத் திரமுமுண்டாம்
உறுதியா யிப்பலனை யுகந்துகூறே.

(இ-ள்) களத்திராதிபதி உச்சனாகி வக்கிரம் நீசமில்லாதிருக்க, விற்பன களத்திரமாகயிருக்கும், இலக்கினேசன் களத்திரேசன் குடும்பேசன் இவர்கள் மூவரும் பெலவானாகயிருக்க உபயகளத்திர முண்டாம் எ-று. 11

கூறவே யித்தோடு புதன்வியாழன்
குறையிலா பெலனது பெற்றிருக்க
மீறவே யல்லது புகர்பெலக்க
மேன்மையாய் மூன்றுதாரம் மணப்பன்
நேரவே களத்திராதி ஐந்தில்நிற்க
லக்கினேசன் ஆறெட்டு வியமாய்நிற்க
தேறவே குடும்போனு மவ்வாறுநிற்க
தன்வயது நாற்பதுமேல் களத்திரமுண்டாம்.

(இ-ள்) சந்திரன்-புதன்-வியாழன் பலவானாகயிருக்க அல்லது சுக்கிரன் பலம்பெற்றிருக்க ஜாதகனுக்கு மூன்றுதாரங்களுண்டாம். களத்திராதிபதி 5-ஆமிடத்திலிருக்க, இலக்கினேசன் 6-8-12-லிருக்க குடும்பாதிபதியும் அப்படியேயிருக்க நாற்பதுவயதுக்குமேல் களத்திரமுண்டாம் எ-று. 12

உண்டென சுகத்திலே சுபனிருக்க
உற்ற கேந்திரகோண முச்சமேற
கொண்டென லாபமொடு வருகுந்தாரம்
கூறும் நாலாமிடத்திற் சுபரோநிற்க
பண்டென நாலாமிடத்தோன் பலவானாக
பரிவான வியாழனுமே பெலத்திருக்க
தண்டென வாகன யோகமுண்டாம்
தரணிமிசை யிப்பலனை சாற்றுவாயே.

(இ-ள்) சுகஸ்தானத்திலே சுபனிருக்க கேந்திரகோணம் உச்சம் இவைகளிலேற லாபமோடு தாரமானது வாய்க்கும். நாலாமிடத்தில் சுபகிரகங்க

ளிருக்க, நாலாமிடத்தோன் பலவானாக வியாழபகவானும் பலம்பெற்றிருக்க
வாகனயோகங்களுண்டாம் எ-று. 13

வேறு

சேர்ந்திடுங் களத்திரத்தி நீசனு யாரோன்சேர
வாழ்ந்திடு மேழாம் வீடும்பாவர் வீடாக
சாந்தமாம் குடும்பந்தன்னிற் பாவர்கள் சேரச்சார
வாய்ந்தலாய் இரண்டுமாய்ந்து கொள்வது மூன்றாந்தாரம்.

(இ-ள்) இரண்டாமிடத்தில் பாவிகளிருக்க, களத்திரதானத்தில் ஆறு
மிடமுடையவன் நீசனாயிருக்க, ஏழாமிடம் பாபர்வீடாகயிருக்க ஜாதகனுக்கு
இரண்டுகளத்திரம் நாசமாய், மூன்றாவது களத்திரமுண்டாம் எ-று. 14

தாரமாங் காரகன்றான் சசியுடன் கூடப்புந்தி
தீரமாம் புகர்தான்பொன்றான் சசிகூட குறவாய்பின்போம்
வாரமாம் வியாழன்பாக்கியங் கேந்திரம்வாழசுங்கன்
நாரலே லாபஞ்சேரி லவர்கொக்கி லழகாய்பாரி.

(இ-ள்) களத்திரகாரகன் சந்திரனுடனேகூட, அல்லது புதனாவது
வியாழனாவதுகூட, அல்லது சுக்கிரன்கூட ஜாதகனுக்கு குறவாகிய விபசார
களத்திரம் வாய்க்கும். பாக்கியத்தினும் கேந்திரத்தினும் வியாழனிருக்க,
லாபத்திற்கு கேந்திரத்தில் சுக்கிரனிருக்க அன்னியர் புண்ணியர்வீடு மாறி
யிருக்க அநுகூலகளத்திரமுண்டாம் எ-று. 15

பாரியா யேழாம்விட்டான் பரமோச்ச பகர்ந்தயேழில்
சிரிய சுபரேவாழ அன்றியுந் தெளிந்தசுங்கன்
சூரிய வுச்சனாகிற் குலபதி யாகவேண்டும்
நாரிய மூன்றுகொண்டு நலமுடனிருக்கும் நங்காய்.

(இ-ள்) ஏழாமிடமுடையவன் பரம உச்சனாக, அந்த தானாதிபரில் சுப
கிரகமிருக்க அல்லது சுக்கிரன் பரமவுச்சனாகயிருக்க ஜாதகன் மூன்று
களத்திரமுடையவனாகும் எ-று. 16

நங்கையே லக்கினேசன் சேயென வியாழம்நாடத்
தங்கிய நல்லானன்றி சூரியால் சுரமாமாரி
னுங்கடி தொட்டுலேயம் பாவ்ரா லக்கினேசன்
நங்குளோர் பலனேயாகி மற்பமா மாயுடானே.

(இ-ள்) லக்கினேசன் செவ்வாயாக 'பாவிகளால் பார்க்கப்பட விரணம்,
6-8-12-ல் பாபிகளிருக்க லக்கினேசன் அற்பலனாகவிருக்க அற்பாயசு எ-று.

ஆயுவாம் லக்கினாதி பதிபலனாகனல்ல
தாயகஞ் சுபரேபார்க்க கேந்திரம் சுபரேநண்ண
தீயவர் நோக்கிடாதேற் றிக்காயு மாசனாதி
நேசமாய் வாழப்பூவி னெரியிருங் காயந்தானே.

(இ-ள்) இலக்கினாதி பலவானாக சுபகிரகம்பார்க்க கேந்திரங்களிலிருக்க
பாவிகள் பார்த்திருக்க மிருத்தியுயில்லாமல் தீர்க்காயுளாய் ராஜசல்லாபனா
யிருப்பான் எ-று. 18

நாவினுக் குடையவன்றான் நலமிகும் சுபரேயாகி
மூலத்திரி கோணமேற மூன்றினில் சனியிருக்க
சாலவே வித்தைபுத்தி சவுக்கிய மதிகரித்தேக்
காலமும் சுகமாய்வாழ்ந்து களித்துல கிருப்பர்தானே.

(இ-ள்) இலக்கினத்துக்கு நாலாமிடத்ததிபதியாக குரு-சுக்கிரன்-வளர்
பிறைச்சந்திரன்-புதனாகயிருந்து, அவர்கள் மூலத்திரிகோணமேறியிருக்கவும்,
சனி மூன்றாமிடத்திலிருக்கும்போது பிறந்த ஜாதகன் வித்தியாசமர்த்தனாக
வும், புத்திசாலியாகவும், திரவியசேகரஞ்செய்து தனது ஆயுள்வரையும்
சுகமாய் உலகில் மனமகிழ்வாய் வாழ்ந்திருப்பான் எ-று. 19

சனியனும் நாலில்நிற்க சந்திரன் வாக்கில்நின்றும்
கனிவுடன் குருஒன்பானில் கதிர்சேயும் ஆறில்நின்றால்
இனிதுடன் சுக்கிரனுச்சம் எய்திய ஜாதகத்தோன்
முனிவிலா ஞானியாகி முமூக்ஷத்வ மெய்துவானே.

(இ-ள்) இலக்கினத்திற்கு நாலாமிடத்தில் சனிபகவானிருக்க, சந்திரன்
வாக்குஸ்தானத்திலும், குருபகவான் ஒன்பதாமிடத்திலும், செவ்வாயும்,
சூரியனும் ஆறாமிடத்திலுமிருக்கவும், சுக்கிரன் உச்சம் பெற்றிருந்தால்
ஆத்மலாப விசாரணையில் சிறந்தவனாயிருந்து சகலரும் ஞானியென வணங்
கும்படியான தன்மையிலிருந்து முமூக்ஷத்வமடைந்து சாயுச்யபதவி யடை
வான் எ று. 20

வாகனா திபனும்சுக்கிரன் வளர்பிறைச் சந்திரனோடு
ஏகமாய் நாலில்நிற்க எந்நாளும் கீர்த்திவானாய்
வாகன மேறிநின்றாய் வையகத்தோர் மதிக்க
போகபாக் கியத்தின்மிக்க புனிதனாய் வாழ்குவானே.

(இ-ள்) நான்காமிடத்தானெனும் வாகனாதிபனும், சுக்கிரனும், வளர்
பிறைச்சந்திரனும் சுகஸ்தானமாகிய நாலாமிடத்தில்தானே யிருக்கும்போது
பிறந்தவன் புத்திசாதுர்யமாய்; வெகு திரவியஞ்சேகரிக்கும் வல்லமையுடைய
வனாய், சுகானந்தமாய் சகலரும் புகழ்ந்துரைக்கும்படியாக வாகன வண்டி
யுடன் வாழ்ந்திருப்பான் எ-று. 21

மாதுரு ஸ்தானந்தன்னில் மதிகுரு ராகுநின்று
கேதுவின் பார்வைபெற்றால் கெடுதியுற் றன்னையில்லா
ஜாதகவா னவானென்று தைரியமாகச் சொல்வீர்
பூதலந் தன்னில்பாக்கியம் பொருந்தியே வாழ்வர்தானே.

(இ-ள்) நான்காமிடமாகிய மாதுருஸ்தானத்தில் குருவும், சந்திரனும்,
இராகுவும் இருக்க, கேது பார்வைபெற்ற பாவத்தினால் தாயில்லாப்
பிள்ளையாயலைந்து தனது வாலிபகாலத்தில் திரவியஞ் சேகரித்துச் சுகமாய்
வாழ்ந்திருப்பான் எ-று. 22

சுகத்தானந் தன்னிலேதான் சுக்கிரனும் உச்சமாகி
பகலவன் ஆறில்நிற்க பாப்பானென் பதிலிருக்க
ஜகத்தினில் பிறந்தோனுக்கு தனதான்ய சம்பத்தெல்லாம்
மகிழ்ச்சியாய் கிடைக்குமென்று வழுத்துவா யுலகோருக்கே.

(இ-ள்) சுகத்தானமாகிய நாலாமிடத்தில் சுக்கிரன் உச்சமாகயிருக்க, ஆறுமிடத்தில் சூரியனும், ஒன்பதாமிடத்தில் குருவுமிருக்கப் பிறந்த ஜாதகன் குறையாத தனதான்ய திரவிய சம்பத்துடனே வாழ்ந்திருப்பானென்று சொல்லவேண்டும் எ-று. 23

கதிரவன் நாலில்நின்று கணக்கனும் ஐந்திலுற்று
மதிஆறில்சேய்எழ்நின்று மந்தனும் எட்டில்நிற்க
துதிமிகும் குருஒன்பானில் சுக்கிரனும் பத்தில்நின்றால்
அதிகமாய்ப் பொருளைத்தேடி அவனியில் வாழ்குவானே.

(இ-ள்) இலக்கினத்தின் நாலாமிடத்தில் சூரியபகவானிருக்க, ஐந்தில் புதனும், ஆறில் சந்திரனும், செவ்வாய் ஏழாமிடத்திலும், எட்டாமிடத்தில் சனியும், ஒன்பதாமிடத்தில் குருவும், பத்தாமிடத்தில் சுக்கிரனுமிருக்க பிறந்தவன் வெகு பொருள் சேகரஞ்செய்து, தனதான்ய சம்பத்துடன் சுகானந்தமாய் வாழ்ந்திருப்பானென்று சொல்லவேண்டும் எ-று. 24

அந்தணன் நாலில்நிற்க அவனியிற் பிறந்தோனுக்கு
சந்ததம் சுகமும்கீர்த்தி சவுக்கிய மிகவுண்டாகும்
மந்தனே நாலில்நின்றால் மகாதுய ரனுபவித்து
சிந்தையில் வெறுப்புண்டாகி சிவனருள் பெறுகுவாரே.

(இ-ள்) நாலாமிடமாகிய சுகஸ்தானத்தில் குருபகவானிருந்தால் சதாகாலமும் சுகஜீவியாய்ப் பெருமையோடு வாழ்ந்திருப்பான். ஆனால் சுகஸ்தானத்தில் சனியிருந்தால் தீராத அலைச்சலும், மனக்கவலையும் அதிகரித்து சஞ்சலத்தினால் உலக இன்பத்தை வெறுத்து சதாகாலமும் பகவத்பக்தியானந்தமாய் சாதுக்கள் கூட்டத்திற்சேர்ந்து சிவத்யானமாய் இருப்பார்கள். 25

சுக்கிரன் நாலில்நின்றால் சுகமுடன் பிழைத்திருந்து
தக்கதாய் கல்விகற்று தரணியில் கீர்த்தியோங்கி
மிக்கவே முன்னோர்பாக்கியம் மேன்மையாய் தானடைந்து
எக்காலும் சிறந்துவாழ்வார் என்றுரைத் திடுவீர்தானே.

(இ-ள்) இலக்கினத்திற்கு நாலாமிடத்தில் சுக்கிரன் உச்சம்பெற்றிருக்க பிறந்த ஜாதகன் குழந்தைப்பருவத்தில் சுகமாய் ஆதரிக்கப்பெற்று பிழைத்திருந்து வித்யா சாதுர்யமாய் சகலரும் உத்தமனென்னும் கீர்த்திப்பிரகாசனுயிருந்து, தனது வாழ்நாள் முழுதும் முன்னோர்கள் தேடிவைத்த திரவியத்தையே செலவுசெய்து வாழ்ந்திருப்பதற்காகும் எ-று. 26

கேதுவும் நாலில்நின்று கீர்த்திசேர் பத்தில்ராகு
பூதலத் தோர்க்குற்றாலே பொருந்திய சுகமில்லாமல்
ஜாதகன் பக்திவானாய் ஜகத்தினில் ஞானமார்க்கம்
நீதமா யடையவேண்டி நினைத்திருப்பா னென்றோதே.

(இ-ள்) இலக்கினத்திற்கு நாலாமிடத்தில் கேதுபகவானிருக்க, பத்தாமிடத்தில் ராகு நிற்கவும் பிறந்த ஜாதகன் உலக இன்பத்தை வெறுத்து பகவத்பக்தியானந்தமாய் ஆத்மலாபவிசாரணை செய்துக்கொண்டிருக்கும் சாதுக்கூட்டத்தை சேர்ந்து நித்யானந்த வாழ்வை பெறுவதற்கு இச்சையுடையவனு யிருப்பானென்று சொல்லுவீர்கள் எ-று. 27

கூறுநான் காமிடத்தில் குருஉச்ச மாகிநிற்க
சீருடன் லக்கினத்தில் சேய்ஆக்ஷி யாகிநிற்க
பாருளோ ரெவரும்போற்றும் பராக்கிரம வீரனாகி
காருண்ய முடனேவாழ்ந்து களிப்புட னிருப்பர்தானே.

(இ-ள்) இலக்கினத்திற்கு நான்காமிடத்தில் குரு உச்சமாகிநிற்க, செவ்வாயும் ஆக்ஷியாயிருந்தால் அந்த ஜாதகன் மிகவும் பராக்கிரம வீரனுயிருப்பதுடன், ஏழைகளைக் காப்பாற்றும் காருண்யமான மனதுடையவனுயிருப்பதற்காகும். அஃதெவ்விதமென்றால், மேஷராசியில் செவ்வாய் பகவான் ஆக்ஷியாகவும், கடகராசியில் குருபகவான் உச்சமாகவும் இருப்பதினால் இந்த ஜாதகன் வீரபராக்ரம உதாரத்வகுண முடையவனுயிருப்பான் எ-று. 28

மாரகபாவம்

சரம்-ஸ்திரம்-உபயராசிகள்

உபயம்	சரம்	ஸ்திரம்	உபயம்
ஸ்திரம்			சரம்
சரம்			ஸ்திரம்
உபயம்	ஸ்திரம்	சரம்	உபயம்

சராராசியில் பிறந்தவர்களுக்கு லக்கினத்திற்கு 2-7-க்குடையவர்கள் மாரகம் செய்வர்.

ஸ்திராராசியில் பிறந்தவர்களுக்கு 3 8-க்குடையவர்கள் மாரகம் செய்வர்.

உபயராசியில் பிறந்தவர்களுக்கு 7-11-க்குடையவர்கள் மாரகம் செய்வர்.

லக்கினத்துக்கு 2-7 ஜாதகனுக்கு மாரகம்.
ஷை 4-5-7 மாதாவுக்கு மாரகம்.
ஷை 5-11 சகோதர மாரகம்.
ஷை 6-சூரியன் பிதரு மாரகம்.

அட்டமத்தில் ராகுவிருந்தால் அவன் திசையில் பிதருமாரகம் செய்யும். ஜென்மலக்கினத்திற்கு 7-ஆம் ஆதிபத்தியம் சூரியனுக்காகில், அவன் திசையிலும், 12-ஆம் ஆதிபத்தியம் சனிக்காயின் அவன் திசையில் ஜாதகனை மாரகம் செய்யும். 6-ஆம் ஆதிபத்தியம் செவ்வாய்க்கும், 12-ஆம் ஆதிபத்தி

யம் சுக்கிரனுக்கிருந்தாலும் அவன் திசையில் அந்த ஜாதகனை மாரகம் செய்யும்.

அற்பாயுசுக்கு 1-3-வது திசை மாரகம்.

மத்திமஆயுசுக்கு 3-5-6-வது திசை மாரகம்.

தீர்காயுசுக்கு 7-வது திசை மாரகம்.

சந்திரனுக்கு 4-10-ல் பாபர்நிற்க அவர் திசையிலும், சனி நாலாந்திசையாயினும், செவ்வாய் ஐந்தாம்திசையாயினும், குரு 6-ஆம் திசையாயினும், இராகு ஏழாந்திசையாயினும் மாரகம் செய்யும்.

லக்கினத்திற்கு 3-8-க்கு அதிபர்கள் ஆயுளதிபர்-மாரகர் எனக் கூறுவதால் அவர்கள் திசையில் மாரகத்துக்குச் சமமான கெண்டத்தையும், மேற்படி 3-8-க்குடையவர்கள் 2-3-7-8-12-லிருந்தால் அவர்கள் திசையில் மாரகம் செய்வர். மேற்படி கிரகம் சுபகோளுடன் கூடியிருக்க மத்திமபலனுண்டாகும். ஏனைய விஷயங்களை அவ்வவர்களது ஆராய்ச்சியால் கண்டுணர்க.

12-ராசிக்கும் சுபர் பாபி மாரகன் எவர் என்பது

மேடம்

மேஷலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சனி-சுக்கிரன்-புதன் பாவிகள். இவர்கள் திசையில் பாபபலனைக் கொடுப்பர். சூரியன்-குரு சுபர்கள் ஆகலின் இவர்கள் திசையில் நற்பலன் தருவர். சுக்கிரன் மாரகன் இவர் திசையில் மரணத்தைதருவன்.

மேடராசியில் பிறந்தவர்களு சனி 10-11-க்குடையவனும், சுக்கிரன் 2-7-க்குடையவனும், புதன் 3-6-க்குடையவனும் ஆவன். சனியைப் பாவன் என்றது 11-ஆதிபத்தியம் வந்தமையாலும், சுக்கிரனைப் பாவி என்றது மாரகத்தானமான 2-7-ஆம் ஆதிபத்தியம் வந்தமையாலும், புதனைப் பாவி என்றது 3-6-ஆம் ஆதிபத்தியம் வந்தமையாலும் என்க. இவற்றுள் சனி 11-க்குமாத்திரம் அதிபனன்று. 10-க்கும் அதிபனுவன். ஆனதால், மேற்படி சனியை முழுப்பாவியெனக் குறிக்கமுடியாது. இவன் திசையிலும், புத்தியிலும் முழுபாபபலனைச் செய்யான். சுக்கிரனைப் பாவன் என்றது சராசிக்கு 2-7-ஆம் அதிபர் மாரகாள் என்பதாலே யாகும். அவையாவன: ஆயுள்ஸ்தானம் என்கிற 3-8-க்கு விரயம் என்கிற 2-7-ஆம் ஆதிபத்தியம் பெற்றதாலேயாகும். ஆயினும் மேற்படி சுக்கிரன் கொல்வான் என்றது, அவன் திசையில் அல்லது புத்தியிலென்க. இதனை ஏனைய கிரகங்களைக்கொண்டு விலகூறுக. ஏனெனில்? மேடத்தில் பிறந்த சிலருக்கு சுக்கிரன் திசையே வருவதில்லை. ஆனதால் மேற்படி சுக்கிரன் செய்யவேண்டிய மாரகத்தினை எவர் செய்வர் என்பதை ஏனையகிரக ஆராய்ச்சியைக்கொண்டு கூறுக.

புதனை மாத்திரம்பாவனெனத் திண்ணமாய்க் கூறமுடியும். ஏனெனில்? மேடத்திற்கு 3-6-ஆம் ஆதிபத்தியம் வந்தமையாலேயாகும். 3-ஆம் ஆதிபத்தியம் பெற்றமையால் அவன் திசையிலும், புத்தியிலும் மகாகொடியபலனும், 6-ஆம் ஆதிபத்தியம் வந்தமையால் வியாதி கடன் முதலியவற்றில் தொந்தரவு முதலிய பலனையே செய்வன்.

இதனிற்க சூரியன்-குரு என்னும் இருவரையும் சுபன் என்றது யாது காரணம் பற்றியெனில்? சூரியனுக்கு 5-ஆம் ஆதிபத்தியமும், குருவுக்கு 9-ஆம் ஆதிபத்தியமும் வந்தமையினுலேயாகும். பொதுவிதியாற் கூறுகையில்

5-9-க்கு அதிபர்கள் யோகம் தருவர் என்று கூறிய தாண்டவமாலையினை மேற்கொண்டு கூறுவதாகும்.

ரிடபம்

ரிடபராசியில் பிறந்தவர்களுக்கு குரு - சுக்கிரன் - சந்திரன் என்னும் மூவரும் பாவர்கள். சனி-சூரியன் இருவரும் சுபர்கள். சனி ஒருவனே ராஜயோகந் தருவன். குரு மாரகம் செய்யத் தகுந்தவன் என்க.

மிதுனம்

மிதுனராசியிற் பிறந்தவர்களுக்கு அங்காரகன் - குரு - சூரியன் ஆகிய மூவரும் பாவர்கள். இந்த ராசியில் பிறந்தோர்க்கு குரு-சனி ஒன்றுகூடில், அவயோகம். சந்திரனுக்கு இரண்டாமாதிபத்திய மிருந்தும் கொல்லான். குரு-செவ்வாய்-சூரியன் இம்மூவருள் எவர் மேற்படி மாரகஸ்தானத்தி லிருக்கின்றார்களோ அவரே கொல்வர்.

கடகம்

கடகராசியிற் பிறந்தவர்களுக்கு சுக்கிரன்-புதன் என்னும் இருவரும் பாவர்கள். குஜன்-குரு என்னும் இருவரும் சுபர். செவ்வாய் ஒருவனே விசேஷ யோகம் தரவல்லவன். சூரியன் துதியமாரகாதியாயினும் கொல்லார். சுக்கிரன்-புதன் என்னும் இருவரே கொல்வர்.

சிங்கம்

சிங்கராசியிற் பிறந்தவர்களுக்கு புதன்-சுக்கிரன் என்னு மிருவரும் பாவிகள். செவ்வாய் யோககாரகன். செவ்வாயும் சுக்கிரனும் ஒன்றுகூடியிருக்கின் மகா கொடிய பலனைச் செய்வர். புதன் ஒருவனே கொல்லத் தகுந்தவன்.

கன்னி

கன்னியாராசியிற் பிறந்தவர்களுக்கு செவ்வாய்-குரு-சந்திரன் என்னும் மூவரும் பாவிகள். சுக்கிரன்-புதன் என்னும் இருவரும் யோகத்தைத் தரவல்லவர். சுக்கிரன் கொல்லமாட்டான் எனவும், குஜன் முதலானபேர் கொல்வார் என்பதாம்.

துலாம்

துலாராசியிற் பிறந்தவர்களுக்கு குரு - சூரியன் - செவ்வாய் என்னும் மூவரும் பாவர்கள். சனி-புதன் என்னும் இருவரும் சுபர். சந்திரன்-புதன் என்னும் இருவரும் ஒன்று கூடில் யோகம் தருவர். செவ்வாய் கொல்லான் எனவும், குரு ஒருவனே கொல்லத்தகுந்தவன் என்பதாம்.

விருச்சிகம்

விருச்சிகராசியிற் பிறந்தவர்களுக்கு புதன்-செவ்வாய்-சுக்கிரன் ஆகிய மூவரும் பாவிகள். சந்திரன் ஒருவனே சுபன். சூரியன்-சந்திரன் இவர்கள் ஒன்றுகூடில் பிரபல ராஜயோகந் தருவர். குருவுக்கு துதியஆதிபத்தியமிருந்தும் கொல்லான் எனவும், புதன் ஒருவனே கொல்வான் எனவுங் கூறுக.

தனுசு

தனுசுராசியிற் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன் ஒருவனே பாபி. செவ்வாய் சூரியன் என்னும் இருவரும் சுபர். சூரியன்-புதன் ஒன்றுகூடில் யோகந்

தருவர். சனி கொல்லான் எனவும், சுக்கிரனே கொல்லத்தகுந்தவன் எனவுங் கூறுக.

மகரம்

மகரராசியிற் பிறந்தவர்களுக்கு செவ்வாய் - குரு - சந்திரன் என்னும் மூவரும் பாவர்கள். சுக்கிரன்-புதன் என்னும் இருவரும் சுபர். சுக்கிரன் ஒருவனே ராஜயோகந்தா வல்லவன். சனிக்குத் திதியாதிபத்தியமிருந்தும் கொல்லான் எனவும், செவ்வாய் முதலானபேர் கொல்வாரெனவுங் கூறுக.

கும்பம்

கும்பராசியிற் பிறந்தவர்களுக்கு குரு-சந்திரன் - செவ்வாய் என்னும் மூவரும் பாவர்கள். சுக்கிரன் ஒருவனே சுபன். குருவுக்குத் திதியஆதிபத்திய மிருந்துங் கொல்லான் எனவும், செவ்வாய் ஒருவனே கொல்லத்தகுந்தவன் என்பதாம்.

மீனம்

மீனராசியிற் பிறந்தவர்களுக்கு சனி-சுக்கிரன்-சூரியன்-புதன் ஆகிய நால்வரும் பாபர் எனவும், செவ்வாய்-சந்திரன் என்னு மிருவர் சுபர் எனவும் செவ்வாய்-குரு ஒன்றுகூடில் ராஜயோகம் தருவர் எனவும், செவ்வாய் கொல்லான், சனி கொல்வான் எனவுங் கூறுக.

இம்முறைப்படி அந்தந்த ஜாதகர்களுக்கு சுபன்-யோகன்-மாரகன் பாபி என்பதைப் பிரித்துப் பலன் கூறுக.

ஐந்தாம் பாவக பலாபலன்

புத்திரபாவம் கூறுவதற்குள்ள விதிகள்

சகல சாஸ்திரங்களாலும் ஜென்மலக்கினத்திற்கு ஐந்தாமிடத்தையே புத்திரஸ்தானம் எனக் கூறப்பட்டுள்ளனவாதலால், புத்திரபாவம் கூறுதற்குள்ள சில முக்கிய விதியினை இங்கு கூறுவாம்.

(1) ஐந்தாம் ராசியானது எவருக்கு ஆக்ஷிவீடு?

(2) ஐந்தாம் ராசியில் இருந்தவர் யார்?

(3) மேற்படி ஐந்தாம் ராசியை நோக்கினவர் யார்?

(4) ஐந்தாம் ராசிநாதன் தமது ஆக்ஷி வீட்டிற்கு எத்தனையாவது ராசியில் இருக்கிறான்?

(5) மேற்படி ஐந்தாம் வீட்டோன் இருந்த ராசியானது ஆக்ஷி-உச்சம்-நீசம்-பகை-சமம் என்பவற்றுள் எவ்வகை பலம்?

(6) ஐந்தாம் ராசிநாதனுடன் சேர்ந்தவர் யார் பார்த்தவர் யார்?

(7) ஐந்தாம் ராசிநாதன் ஜென்மலக்கினமுதலாய் எந்த ராசியில் இருக்கிறான்? என்னும் இவைகளை முதன்முதலாய்த் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம். இதன்பின்பு கீழ்க்கண்டவாறு பலன் சொல்லுக.

எவ்வாறெனின்? ஐந்தாம் ராசியானது சுத்தமாயிருப்பது நன்மை. அல்லது 5-ஆம் ராசிநாதன் எவனோ அவன் ஆக்ஷிபெற்றிருப்பது நன்மை. இல்லையேல், மேற்படி ஐந்தில் சந்திரன் - புதன் - சுக்கிரன் இவர்களிருக்க அந்த ஜாதகனுக்குப் புத்திரதோஷம் இல்லையெனவும், புத்திரர் உண்டாவர் எனவுங் கூறவேண்டுவதாகும்.

ஐந்தாம் ராசியில் சனி-செவ்வாய்-சூரியன்-இராகு-கேது முதலியவர்கள் நீசம்-பகை-வக்கிரம்-மூடம் முதலியன பெற்றிருக்கின் அந்த ஜாதகனுக்கு புத்திரதோஷம் உண்டாகும். மேற்படி கோட்கள் ஆக்ஷியாயிருக்கின் தோஷமில்லை.

புத்திரத்தானாதிபன் ஆக்ஷியாயிருக்கப் புத்திரர் உண்டெனவும், உச்சமாய் இருக்க புத்திர புத்திரிகள் அனேகமாய் உண்டாவார் எனவும், நீசம் பெற்றிருக்க கருவுண்டாகி நாசமாகும் எனவும், பகை பெற்றிருக்க பிறந்து இறந்துபோம் எனவும், சமமாயிருக்க அந்த ஜாதகனது விருதாப்பியத்தில் ஓர் புத்திரன் உண்டாவன் எனவுங் கூறவேண்டுவது விதியாகும்.

ஐந்தாம் வீட்டோன் குரு-மதி-வெள்ளி-புதன் இவர்களுள் ஒருவராகி மேற்படி 5-க்கு 5-9-ஆம் ராசியிலிருக்க, அந்த ஜாதகனுக்கு அனேக புத்திர புத்திரிகள் உண்டாவர். 4-7-10-ஆம் ராசியிலிருக்க ஆணும் பெண்ணும் சமமாய் இருக்கும். 3-6-8-12-ஆம் ராசியிலிருக்கின் பிறந்து இறந்துபோம். மேற்படி 3-6-8-12-ல் நீசம்பெற்றிருக்க கருப்பையிலேயே மாணம். பகைப் பெற்றிருக்க பிறந்து மரணமாகும் என்பதாம்.

ஐந்தாம் வீட்டோன் சூரியன்-சனி-செவ்வாய் இவர்களுள் ஒருவனாகி மேற்படி 5-ஆம் ராசிக்கு 5-9-ஆம் இடங்களிலிருக்க ஆணும் பெண்ணும் சமமாய்ப் பிறக்கும் எனவும், மேற்படி 5-க்கு 4-7-10-முதலிய கேந்திரங்களிலிருக்க புத்திர புத்திரிகள் அனேகம் எனவும், ஐந்தாம் ராசிக்கு 3-6-8-12-ஆம் ராசியிலிருக்க கருமத்திற்கு மாத்திரம் ஓர் புத்திரன் தன் விருத்தகாலத்தில் உண்டாகும் எனவும், 2-11-ஆம் ராசியிலிருக்கின் தன் வாலிபகாலத்திலேயே ஓர் புத்திரன் உண்டாவன் எனவுங் கூறுதல் வேண்டும்.

மேற்படி ஐந்தாம் ராசிக்குடையவர் சனி-செவ்வாய்-சூரியன் ஆகிய மூவருள் ஒருவராகி, நீசம் பகைப்பெற்று அவர்கள் இருந்த ராசியும் 6-8-12-ஆம் இடங்களாக இருக்கின் அந்த ஜாதகனுக்குக் கட்டாயம் சந்ததி என்பதே இல்லையென்க.

5-ஆம் வீட்டுக்குடையவர் குரு-மதி-வெள்ளி-புதன் ஆகிய நால்வருள் ஒருவராகயிருந்து, ஜென்மலக்கினத்திற்கேனும், ஐந்தாம் வீட்டிற்கேனும், 6-8-12-ஆமிடங்களிலிருந்து நீசம் பகை வக்கிரம் பெற்றிருக்கின், அந்த ஜாதகன் மலடன் எனவே கூறுதல் வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு எவ்வித சாந்திசெய்யினும் புத்திரர் உண்டாகமாட்டார்.

5-ஆம் இடத்திலுள்ள கோட்களால் தோஷம் கூறும் விவரமாவன

5-ல் சனி நிற்க அந்த ஜாதகனுக்கும், சூரியன் நிற்க பிதாவுக்கும் சந்திரன் நிற்க தாய்க்கும், புதன் நிற்க, தாய்வர்க்கத்தாருக்கும், குரு நிற்க, பிதுருவர்க்கத்தாருக்கும், இராகு அல்லது கேதுநிற்க புத்திராளுக்கும், செவ்வாய் நிற்க, அம்மானுக்கும் தோஷம் உண்டு. இவை எவ்வித தோஷம் எனின், அவர்களின் வாழ்வு, ஆயுள் முதலியவைகளுக்காகும்.

லக்கினாதிபதி ஐந்தாம் அதிபதியாகிய இருவரும் தத்தமது வீட்டில் ஆக்ஷிபெறாமலும், தமது வீட்டைப் பாராமலுமிருந்தால், அந்த ஜாதகனுக்குப் பிள்ளை இல்லை. அவ்வாறாயினும், மேற்படி 1-5-க் குடையோர் சுபரக்கிசம் பெற்றிருக்கின் புத்திரருண்டு. 1-5-க் குடையவர் தத்தமது ராசிகளுக்கு மூன்றிலிருக்க அர்ப்ப புத்திரராகும்.

5-ஆம் வீட்டுக்குடையோன் மிதுனம்-கன்னி என்னும் இவ்விரண்டினுள் ஏதேனு மொன்றிலிருந்து நீசம் பகைபெற்றிருக்கின், அந்த ஜாதகனுக்குப் புத்திரர் இல்லை. 5-ஆம் வீட்டோன் மேற்படி மிதுனம்-கன்னி என்னும் இரண்டினுள் ஒரு ராசியிலிருந்து, அவர்களுடன் குரு - புதன்-வெள்ளி-மதி முதலிய சுபகோட்கள் கூடி யிருப்பார்களேயாமாயின் அந்த ஜாதகனுக்கு குழவிகள் ஜெனித்து மரணமாகும்.

ஜென்மலக்கினத்திற்கு ஏழாம் வீட்டுக்குடையோன் உச்சம் அல்லது நீசம் பெறாது நட்பு சமம் ஆக்ஷிபெற்றிருக்க, அந்த ஜாதகனது இரண்டாம் மனைவிக்குப் புத்திரர்கள் உண்டாவர். ஏழாம் வீட்டோன் உச்சமாகவோ அல்லது நீசமாகவோ இருக்கின் அவனது மூத்தமனைவிக்கே புத்திரர் உண்டாவர்.

லக்கினத்தில் செவ்வாய் நின்று, ஏழில் சனியும், 12-ல் சூரியனுமிருக்க அந்த ஜாதகனுக்கு ஆண் பெண்ணும் ஏதுவுமில்லை.

ஏழாம்வீட்டோன் ஐந்திலும், 5-ஆம் வீட்டோன் ஏழிலுமிருந்தால், அந்தஜாதகன் எவ்வித சாந்தி ஓமங்கள் செய்யினும் புத்திரர் இல்லை.

எட்டாம் வீட்டோன் ஆக்ஷிபெற்று, அவனுடன் ஐந்தாம்வீட்டுக்குடையவனும் கூடிநிற்க, அந்த ஜாதகனுக்கு புத்திரர் உண்டாகமாட்டார். குரு அல்லது சுக்கிரன்நோக்கின் தனது விருத்தகாலத்தில் ஓர்புத்திரன் உண்டாவான்.

5-ஆம் வீடானது மிதுனம் - கன்னி - மகரம் - கும்பம் என்னு மிராசியிலொன்றாகியிருந்து, மேற்படி ராசிக்குடையவர் சனியுடனாவது குளிகனுடனாவது கூடியிருக்க அந்த ஜாதகனுக்கு தத்துபிள்ளை யுண்டாகும். மேற்படி 5-ஆம் வீட்டுக்குடையவர் ராகு-சனி அல்லது புதனை சுக்கிரன் காணின் பெண்பிள்ளைகளும், குரு நோக்கின் ஓர் ஆண்பிள்ளையும் உண்டாகும். பொதுவாய், சனி-புதன் இவர்கள் 5-ஆம் வீட்டுக் குடையவராகி பாவர்களுடன் சேருவதோ அல்லது கூடுவதோ கூடாதென்பதாம்.

ஐந்தாம் வீட்டோன் ஐந்திலேயே ஆக்ஷிபெற்று, சனி-ராகு-கேது முதலியோர் பலம்பெற்று நோக்கின் அந்த ஜாதகனுக்கு எத்தனை குழவிகள் பிறந்தாலும் மரணமாகும். ஆனதால் அப்படிப்பட்டவர் யாத்திரைசெய்தல், சாந்திசெய்தல், ஏழைகளுக்கு தானம்செய்தல் முதலிய காரியங்களைச் செய்யின் புத்திரர் நிலைப்பர்.

நான்காமிராசியில் சனி-சூரியன்-செவ்வாய்-ராகு-கேது முதலியோர் கூட்டமாகவோ அல்லது தனித்தோ நின்று, 5-ல் குருநிற்க அந்த ஜாதகனுக்குப் பிறக்கும் குழவிகள் எல்லாம் உடனுக்குடனே மரணமாகும்.

நான்காமிராசியில் சனி அல்லது சூரியன்-செவ்வாய்-ராகு-கேது இவர்கள் ஆக்ஷி உச்சங்களற்றிருந்து, 5-ல் குருவும், 5-ஆம் வீட்டோன் மிதுனம் கன்னி என்னுமிரண்டில் ஒருராசியில் நிற்க அந்த ஜாதகன் மலடன் ஆவன்.

ஜென்மலக்கினத்திற்கு 5-ஆம் ராசியையும் சந்திரனிருந்த ராசிக்கு 5-ஆம் ராசியையும், சனி மாத்திரம் பார்த்தால் அந்த ஜாதகனுக்குக் கட்டாயம் புத்திரர் உண்டு. சூரியன்-செவ்வாய்-ராகு-கேது முதலியவர்கள் பார்க்கின் கட்டாயம் புத்திரர் இல்லை என்க.

ஜென்மலக்கினத்திற்கு 5-ல் ராகு நின்று 9-ல் குருவும், 5-ஆம் வீட்டோன் 6-8-12-ஆம் இடங்களில் நீசம் பெற்றிருப்பாரேயாயின் அந்த ஜாதகன் எத்தனை விவாகம் செய்துக்கொண்டாலும் புத்திரர் இல்லை என்க. மற்றும் விவரம் கீழ்வருமாறு.

ஐந்தினுக் குடையானோடு அமர்ந்தநல் கிரகமெல்லாம்
மைந்தர்பாக் கியங்கொடுத்து மற்றுநல் சுகங்கொடுப்பார்
விந்தையாய் சனியும்ராகும் விளங்கியே கூடிநிற்க
முந்தியே பாம்பைக்கொன்ற மூடனு மென்பர்தானே.

(இ-ள்) ஐந்தாமிடத்திலாயினும், ஐந்தாமிடத்திற் குடையவனோடாயினும் குரு-சுக்கிரன்-புதன்-வளர்பிறைச்சந்திரனிருந்தால் புத்திரிபாக்கியமும், புத்திரபாக்கியமும் உடையவனாயிருப்பான். அவ்விதமில்லாமல், ஐந்தாமிடத்திலாயினும், ஐந்தாமிடத்திற்குடையவனோடாயினும் சனி-ராகு-கேது சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் முன் ஜனனத்தில் நல்ல சர்ப்பத்தைக் கொன்றமூடனென்று சொல்லவேண்டும் எ-று. 1

ஐஞ்சொன்பா னொன்றில் அரவுசனி குளிகன்
மிஞ்சவே நோக்க மிகவிருக்க—வஞ்சியரே
சர்ப்பத்தைக் கொன்றதனால் சந்ததி கேடாகுமென்ற
விற்பத்திச் சொன்னோம் விரைந்து.

(இ-ள்) இலக்கினத்திலானாலும், ஐந்தாமிடத்திலானாலும், ஒன்பதாமிடத்திலானாலும், சனி-ராகு-கேது-குளிகன் இவர்களில் யாவரேனுமிருந்தால் அந்த ஜாதகனுக்கு புத்திரபாக்கியங் கிடையாது. ஆனால், அதற்காக சர்ப்பசாந்தி செய்தால் புத்திரபாக்கிய முண்டாகும் எ-று. 2

ஐந்தொன்பா னொன்றிலேதான் ஆதித்தன் குருசெய்நிற்க
வந்திடும் திரவியலாபம் வையகத்தோர் மதிக்க
மைந்தர்கள் பிறந்துநல்ல மாதா பிதாக்களுக்கு
சந்ததம் நன்மைசெய்து சவுக்கியமாய் வாழ்குவாரே.

(இ-ள்) ஐந்தாமிடத்தில் சுபக்கிரகமாகிய சூரியன் - குரு இருந்தாலும், குஜன் இருந்தாலும் அந்த ஜாதகனுக்கு பிறக்கும் பிள்ளைகள் மூதாதை சொத்துகளுடனும், தகப்பன் சொத்துகளுடனும், தாங்கள் சேகரிக்கும் திரவியத்தையும் சேதமாகாமல்படி சேர்த்து குடும்பரக்ஷகராயிருந்து, தாய் தந்தை பந்துமித்திரர்களை வைத்து காப்பாற்ற ஆயுள்வரையினும் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள் எ-று. 3

ஐந்தில்மதி புதனிருக்க அழகுள்ள பெண்ணைப்பெற்று
பந்துக்கள் போற்றும்நல்ல பாக்கிய வானுக்கீந்து
சந்ததம் சுகமாய்வாழ்ந்து சகலபாக் கியமும்பெற்று
எந்ததேசத்தும் கீர்த்தி எய்தியே வாழ்குவானே.

(இ-ள்) ஐந்தாமிடத்தில் சந்திரனாகிலும், புதனாகிலும் ஆக்ஷி உச்சமாயிருந்தால் அந்த ஜாதகனுக்கு அழகும், பொறுமையும், தயாளமும், சாந்தமும், லட்சுமி கடாக்ஷமும் பொருந்திய பெண்குழந்தைகள் பிறந்து, மஹா தனவந்தர்களை மணம்புரிந்து சுகஜீவியாய் வாழ்ந்திருக்கும்படியாகச் செய்து,

தமது இன ஜன பந்துஜனங்களனைவரும் புகழும்படியாய் வாழ்ந்திருப்ப துடன், சகலதேசத்திலும் பெருமை யடைவான் எ-று. 4

லக்கினம் சிங்கமாக லலாடத்தி லையனிட்ட
பக்குவ நல்லெழுத்து பக்ஷமா யிருந்திட்டாலும்
மிக்கவே ஐந்தோனந்த மேன்மைசேர் குருவாயுற்றால்
தக்கதாய் பக்தியோங்கி தபஞ்செய்து வாழ்குவானே.

(இ-ள்) சிங்கலக்கினத்திற் பிறந்தோனுக்கு ஐந்தாமிடத்ததிபதியாகிய குருவானவர் ஒன்பதாமிடமாகிய மேஷராசியிலிருந்தால் கோபம்-குரோதம்-லோபம்-வஞ்சகம்-பொறாமை யென்னும் துர்க்குணங்களை விலக்கிவிட்டு, அடக்கம்-பொறுமை-சாந்தம்-தயாளம் - ஜீவகாருண்யமென்னும் நற்குணங்க ளுடனே பகவத்பக்தியானந்தமாயிருந்து, சதா சுகியாகவசித்து யோகம் புரிந்து, தபஞ்செய்து ஞானவானு யிருப்பதற்காகுமான சாந்தகுண முடை யவனுயிருப்பான் எ-று. 5

புதனுடன் குருவும்சுக்கிரன் பொருந்தி ஐந்திரண்டில்நிற்க
சுதன்மிக வித்தைகற்று சூழ்புவி யோர்கள்மெச்ச
மிதமில்லாக் கீர்த்திவானுய் மிக்கநற் பொருளும்சேர்த்து
விதவித சுகபாக்கியங்கள் விரும்பியே அடைகுவானே.

(இ-ள்) புதன் - குரு - சுக்கிரன் ஐந்தாமிடத்திலிருந்தாலும், இரண்டா மிடத்திலிருந்தால் அந்த ஜாதகனும், அந்த ஜாதகனுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் தமிழ் - தெலுங்கு - சமஸ்கிருதங்கள் வாசித்து பிரசண்ட வித்வான்களாக யிருப்பதுடன், சதாகாலமும் தமது பந்துஜனமித்திரர்கள் புகழ்ந்துரைக்கும்படியான நற்குண நற்செய்கை பொருந்தி திரவிய சம்பன் னர்களாய், தனந்தான்யம், பசுபுத்ரலாபத்துடனே மிகவும் கீர்த்திப்பிரகாச மாய் இருப்பார்கள் எ-று. 6

ஆறும்பாவக பலாபலன்

ஆறுளோன் சனியேயாகில் அவனுக்குப் பகைவனில்லை
சீறும்நல் துவேஷியில்லை சிந்தையிற் கவலையில்லை
நேரிடும் வியாதியில்லை நேமியில் பயமுமில்லை
கூறுவாய் தைரியமாகக் குவலய ஜாதகர்க்கே.

(இ-ள்) இலக்கினத்திற்கு ஆறுமிடத்தில் ஆயுள்காரனுகிய சனிபகவா னிருந்தால் அந்த ஜாதகனுக்கு எவரும் பகைவராயிருப்பதற்கு அஞ்சு வார்கள். விரோதியெனும் பேச்சில்லாமல் பயந்து நடக்கும்படியான நன்மையுடையவர்களாய் இருப்பார்கள். அவ்விதமாகிய ஜாதகர்களுக்குத் தான் உலகத்தில் சகலரும் அடங்கி யிருப்பார்கள். அவன் எத்தகைய குரூர பயங்கர கொடுமை புரிந்தாலும், அப்பப்பா இவர் மஹாவீரனென்று புகழ்ந்து பேசுவார்கள் எ-று. 1

லக்கினத் தாறும்வீட்டில் ரவிராகு கேதுநின்றால்
எக்காலும் விஷநோயின்றி எல்லோரும் புகழவாழ்வார்
மிக்கவே நோய்வந்தாலும் விரைவினி லகன்றுபோகும்
சிக்கிலா சுகவானுகி சீருடன் வாழ்குவானே.

(இ-ள்) இலக்கினத்திற்கு ஆறும்வீட்டில் இராகு-கேது-சூரியன் இவர் களில் எவர்களாயினும் ஒருவரிருந்தால் விஷந்தீண்டினுலும் சிகிச்சையினுல் விஷநோய் விலகி ஜீவித்திருப்பான். வியாதிகள் அணுகினுலும் அவுஷதாதி களால் உடனே சவுக்கியமடைந்து கண்டாதி கண்டமில்லாமல் ஆயுள்வரை யினும் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பான் எ-று. 2

குருபுதன் ஆறில்நிற்க குற்றமாய் வித்தையில்லை
தருமதானஞ் செய்யானே தாய்தந்தை வெறுத்துப்பேசும்
கருமிதா னிவனேயென்று காசினியோர்கள் சொல்லார்
அருமைசேர் கிரகநோக்கை ஆராய்ந்து சொல்லுவாயே.

(இ-ள்) குரு-புதன் இவர்கள் ஆறுவது வீட்டிலிருந்தால் அந்த ஜாதக னுக்கு வித்தையில்லாமல் மூடனுயிருந்தாலும், யாதொரு கைத்தொழிலும் கற்றுணராமலும், தாய்தந்தையரைக் காப்பாற்ற சக்தியில்லாமலும், சகலரும் துன்மார்க்கனென்று சொல்லும்படியான துர்க்குணம் அமைந்தவனுய் இருப்பான் எ-று. 3

தன்வீட்டிற் கைந்தாம்வீட்டில் சார்ந்திடும் புதனிருக்க
நன்மைசேர் வித்வானுகி நகரெங்கும் புகழ்ந்துபேசும்
தன்மையும் புகழும்பெற்று தனதான்ய சம்பத்தோடு
இன்பமாய் வாழ்வானென்று இனிதுடன் சொல்லுவாயே.

(இ-ள்) இலக்கினத்திற்கு ஆறும் வீடானது புதனுக்கு ஐந்தாம் வீடா யிருந்தால், அதாவது சிம்மலக்கினம் ஜன்மலக்கினமாயிருந்து, புதன் மகரத்தி லிருந்தாலும், ஜன்மலக்கினம் ரிஷபமாயிருந்து, புதன் துலாராசியிலிருந் தாலும், கன்னிக்கு மகரம் ஐந்தாம் வீடும், ரிஷபத்திற்கு கன்னி ஐந்தாம் வீடாயிருப்பதினுலும், தன் வீட்டிற்கு கோணமேறிய பலத்தினுல், புதபக வான் வித்தியாகாரகனுய் இருப்பதினுல் அந்த ஜாதகன் கல்வியில் தேர்ச்சி யடைந்த வித்துவானுகி, சங்கீத சாஹித்ய சமர்த்தனுக விளங்கி தர்க்க ப்ரசங்கத்தில் கீர்த்தியுடையவனுயிருந்து சகல தேசத்திலுந் திரிந்து வெகு பொருள் சேகரித்துக் கீர்த்திவானுய் இருப்பான் எ-று. 4

மூன்றெட்டு பன்னிரண்டில் முன்சனி பாம்புநிற்க
சான்றோர்கள் புகழுல்லாச சமர்த்தனு யிருப்பதோடு
ஈன்றோர்க்குப் பேரும்கீர்த்தி இனிதுடன் கொடுப்பானென்று
ஆன்றோர்க ளுரைக்கும்வாக்கியம் அணுவேனும் பிசகிடாதே.

(இ-ள்) இலக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டில் புதனிருப்பதோடு இலக் கினத்திற்கு 3-6-8-12-ல் இராகு பகவானுகிலும், கேது பகவானுகிலும், சனி பகவானுகிலும் இருந்தால் வித்தியாசமர்த்துடன் கைத்தொழிலிற் தேர்ச்சி யடைந்து, உத்தியோக சமர்த்தினுலும், வாய்ப்பேச்சின் வீரத்தன்மை யினுலும், சகலருக்கும் மேன்மையானவனுயிருந்து மிகவும் கீர்த்தியோடு திரவியஞ் சேகரிக்குந் திறமைவாய்ந்த சமர்த்தனுய், தனது தாய் தந்தை பந்து ஜனங்களைக் காப்பாற்றுந் தன்மையிற் சிறந்த பெருமை யுடையவனுய் இருப்பதற்காகும். ஆனுல் சனிபகவான் ஆக்ஷி உச்சம் பெற்றிருந்தால் இன்னும் விசேஷ பலனுண்டாகி மகா சாமார்த்திய கீர்த்திவானுய் இருப் பான் எ-று. 5

ஏழாம்பாவக பலாபலன்

ஏழாம் ராசியைக்கொண்டு அந்தந்த ஜாதகனது மனைவி விஷயத்தைச் சோதித்தல் வேண்டுமெனக் கூறியிருப்பதால், அவ்விதிகொண்டு சிற்சில விஷயங்களை இங்கு கூறுவாம்.

அந்தந்த ஜாதகனது மனைவி விஷயமாய் சோதிக்க வேண்டிய சில முக்கியவிதிகள்

முதன்முதலாய் அந்தந்த ஜாதகனது கிரக அமைப்பின்படி, அவனுக்கு விவாகம் உண்டா இல்லையா என்பதையும், விவாகம் உண்டு எனின் ஒன்று அல்லது இரண்டு மூன்று நான்கா என்பதையும். மேற்படி மனைவியானவள் எவ்வகை பந்துவினின்று கிடைப்பள். எந்ததிக்கு, எவ்வித நிறமுடையவள், எப்படிப்பட்ட குணமுடையவள், ரூபலாவண்யம் எவ்வளவு என்பதை ஆராய்ந்தறிதல் வேண்டும். இவ்வகை விஷயங்களை ஆராய்ந்தறிதற்கு கீழ்க் கண்ட விதியினை கவனிக்கவும்.

(1) ஏழாம் வீட்டுக் குடையவன் சுபனு? அல்லது பாவனு?

(2) ஏழாம் வீட்டோன் மேற்படி 7-ஆம் இடத்திற்கு எத்தனையாவது ராசியி லிருக்கிறான்?

(3) ஏழாம் வீட்டில் இருந்தவன் யார்? அல்லது ஏழாம் வீட்டை நோக்கியவர் யார்?

(4) 7-ஆம் வீட்டோன் எந்த ராசியிலிருந்தாலும் அவனிருந்த ராசியானது பஞ்சபலங்களுள் எவை?

(5) ஏழாம் வீட்டவனை நோக்கியது யார்? அவ்வாறு நோக்கிய கிரகம் தனக்கு சத்துருவா? அல்லது மித்துருவா?

(6) ஏழாம் வீட்டவனுடன் சேர்ந்தது யார்? அப்படி சேர்ந்த கிரகமானது தனக்குச் சத்துருவா? அல்லது மித்துருவா?

(7) சுக்கிரன் ஜென்மலக்கினத்திற்கும், 7-ஆம் வீட்டிற்கும் எத்தனையாவது ராசியிலிருக்கிறான், அவன் எவ்வகை பலத்திலிருக்கிறான் என்பதை ஆராய்ந்தே களத்திரபலன் சொல்லவேண்டும்

குரு - சுக்கிரர் என்னும் இருவரும் ஆக்ஷி உச்சங்களாலும், கேந்திர கோணத்தாலும் பலம்பெர்றிருக்க, அந்த ஜாதகன் தன்னினும் மேற்குலப் பெண்ணை விவாகம் செய்துக் கொள்ளுவன்.

சூரியன் - செவ்வாய் என்னும் இருவரும்கூடி பலம்பெற்றிருக்கின் க்ஷத்திரிய வம்சத்துப்பெண்ணை விவாகம் செய்துக் கொள்ளுவன்.

சந்திரன்-புதன் இவ்விருவரும்கூடி பலம்பெற்றிருப்பார்களே யாமாயின் வைசியகுலப்பெண்ணை கலியாணம் செய்துக் கொள்ளுவன்.

சனி - ராகு என்னும் இருவருங்கூடி பலம்பெற்றிருக்க தன்னிலும் கீழ் குலத்துதித்தவளும், கல்வி சங்கீதம் முதலியன தெரிந்தவளுமாயுள்ள பெண்ணை விவாகம் செய்துக் கொள்வன் என்பதாம்.

ஏழாம்வீட்டவனுடன் எத்தனை கிரகங்கள் கூடியிருர்தனவோ அத்தனை விவாகம் செய்துக் கொள்வன் என்பது பொதுவிதி. ஏழாம்வீட்டோன்

ஆக்ஷி உச்சம் பெற்று, அவனுடன் எத்தனை கிரகங்கள் கூடியிருந்தாலும் அவனுக்கு மனைவி ஒன்றேயாகும். ஆனதால் ஏழாம்வீட்டவனுடன் பல கிரகங்கள் கூடியிருக்கின் எத்தனை கிரகங்கள் பலம்பெற்றிருந்தன என்பதையறிந்து இத்தனை விவாகம் எனக்கூறுதல் வேண்டும்.

ஏழாம்வீட்டோன் ஏழாம்ராசிக்கேனும், ஜென்மலக்கினத்திற்கேனும் கேந்திரகோணங்களிலிருந்து, ஆக்ஷி உச்சங்களால் பலம்பெற்றிருக்க அந்த ஜாதகனுக்கு எவ்வகையிலும் களத்திரதோஷம் சொல்லமுடியாது.

ஏழாம்வீட்டோன் சுக்கிரனிருந்த ராசிக்கு 5-9-ல் ஆக்ஷி உச்சம் பெற்றிருக்க அந்த ஜாதகனுக்கு அழகும், ஆயுளும், செல்வமும் உடைய மனைவி கிடைப்பள்.

ஜென்மலக்கினதியும் ஏழாம்வீட்டவனும்கூடி 6-8-12-ஆம் ராசியிலிருக்க அவனுக்கு விவாகமேயில்லை எனவும், சேர்க்கை ஸ்திரீயிடம் சகவாசம் செய்பவன் எனவுங்கூறுக.

சுக்கிரனுடன் செவ்வாய்கூடி ஜென்மலக்கினத்திற்கு ஏழாமிராசியிலிருக்க அந்த ஜாதகன் அமங்கிலியை விவாகம் செய்துக் கொள்வன்.

நான்காமிராசியில் சந்திரன் செவ்வாய் நின்று, ஆறும்வீட்டவனும்கூடி ஜென்மலக்கினதிபனும் 6-8-ஆம் ராசியிலிருப்பானே யாமாகில் அந்த ஜாதகன் தன் மனைவியுடன் மற்றுமொரு சேர்க்கைஸ்திரீயு மிருப்பாள்.

ஜென்மலக்கினத்திற்கு ஏழாம்ராசியில் சனி - ராகு - கேது - செவ்வாய் இவர்கள் கூட்டமாகவோ தனித்தோ நிற்பார்களே யாமாயின் அந்த ஜாதகனுக்கு ரோககளத்திரம் கிடைக்கும்.

ஜென்மலக்கினத்திற்கு இரண்டாமிராசியில் சூரியனிருந்து ராகு அல்லது கேது கூடியிருக்க அவனுக்குக் கிடைக்கும் மனைவியானவள் அடிக்கடி நோய்வாய்ப் படுபவளாயிருப்பள்.

ஏழாமிராசியில் சந்திரன் சுக்கிரன் இவர்கள் கூடியிருக்கினும், சனி செவ்வாய் இவர்கள் கூடியிருக்கினும் அந்த ஜாதகனுக்கு மனைவி நிலையாள், ஒரு சமயம் விவாகமே இல்லையாயினுமாகும். அப்படி மனைவியிருக்கினும் புத்திரர்கள் உண்டாவதில்லை.

2-7-ஆம் வீட்டுக்குடையவர்களும், சுக்கிரனும் பாவர்களுடன்கூடி 6-8-12-ல் நிற்க அவனுக்கு விவாகம் பல, ஆயினும் மனைவி நிலைத்திருப்பதில்லை.

ஜென்மலக்கினத்திற்கு 2-7-க் குடையவர்கள் கூடி கேந்திரகோணங்களில் பலம் பெற்றிருப்பார்களேயாமாயின், அவனுக்கு ஒரே மனைவி தீர்க்காயுளுடன் நிலைத்திருப்பாள்.

மேற்படி இரண்டு ஏழுக்குடையவர்கள் ஆக்ஷி அல்லது உச்சம்பெற்றிருக்க, அந்தஜாதகன் ஏகபத்தினி விரதனுயும், மேற்படி மனைவியானவள் அனைவரும் புகழத்தகுந்தவராகியு மிருப்பாள் என்பதாம்.

கன்னியாராசியில் ஜெனனமாகியும், மேற்படி கன்னியில் சனி-சூரியன் கூடியிருந்து, குரு மீனத்தில் ஆஷிபெற்றிருக்கின், அந்தஜாதகனுக்கு மிக்க அழகுடைய மனைவி கிடைப்பாளாயினும், படமுடியாத நோய்வாய்ப்பட்டவளாகி உயிரிழப்பாள்.

ஜென்மலக்கினத்திற்கு ஏழாம் ராசியையும், சந்திரலக்கினத்திற்கு ஏழாமிராசியையும் சுபகோட்கள் நோக்குமாயின் அந்த ஜாதகனுக்கு தீர்க்காயுளும், அழகும் வாய்ந்த மனைவி கிடைப்பள்.

மேற்படி ஜென்மலக்கினத்தையும் ஏழாமிராசியையும் பாவர்கள் நோக்குவார்களேயாமாயின், அந்தஜாதகனுக்குக் கிடைக்கும் மனைவியானவள் துன்பமுடையவளாயும் வறுமையுடையவளாயு மிருப்பாள்.

களத்திரகாரகனும் ஏழாம்வீட்டோனும் ஒன்றகூடி 6-8-12-ஆம் ராசியில் நீசம் பகைப்பெற்றுநிற்கின், அவனது மனைவியானவள் பலரும் இகழ்ச்சி செய்யத் தகுந்தவளாவள்.

2-7-ஆம் வீட்டோர் நீசம் பகைப்பெற்றிருக்க, அந்த ஜாதகனுக்குக் கிடைக்கும் மனைவியானவள் தன் புருஷனுக்குக் கீழ்ப்படியாதவளும், துன்மார்க்கச் செயலுடையவளும் ஆவள்.

சுக்கிரனும் சுக்கிரனிருந்த வீட்டுக்குடையோனும், 6-8-12-ஆம் இடங்களில் நீசம் பகைபெற்றிருக்கின், அந்தஜாதகனுக்கு எத்தனை விவாகம் செய்தாலும் மாணமடைவர்.

ஏழாம் வீட்டுக்குடையோன் பாவர்களுடன் கூடியும், பாவர்களால் பார்க்கப்பட்டு மிருக்கில், அந்தஜாதகனுக்குக் கிடைக்கும் மனைவியானவள் தனக்குப் பகை விளைவிப்பவளாகவே யிருப்பள்.

களத்திரம் கிடைக்கும் திசை

ஏழாம் வீட்டோன் சூரியனாகில் கிழக்கிலும், சந்திரனாகில் வாயுதிக்கிலும், செவ்வாயாகில் தெறகுதிக்கிலும், புதனாகில் வடக்குதிக்கிலும், குருவாகில் ஈசான்னியதிக்கிலும், சுக்கிரனாகில் அக்கினிதிக்கிலும், சனியாகில் மேற்குதிக்கிலு மிருந்து மனைவி கிடைப்பள்.

ஏழாம் வீட்டோன் ஜென்மலக்கினத்திற்கு 6-8-12-ஆம் இடங்களிலிருந்து மேற்படி ஏழாம் வீட்டோனை எத்தனை கிரகங்கள் பார்த்தார்களோ அத்தனை விவாகமாகும்.

ஏழாம்வீட்டோன் சூரியன்-செவ்வாயாகில் சிவக்கநிறமும், சந்திரனாகில் வெண்மை நிறமும், புதனாகில் நீலநிறமும், குருவாகில் பொன்னிறமும், சுக்கிரனாகில் மாசிவப்பு நிறமும், சனியாயின் கருத்த நிறமுடைய மனைவி கிடைப்பாள் என்பதாம். ஏனைய விஷயங்களைக் கீழ்வரும் செய்யுளால் அறிந்துகொள்க.

> ஏழுளோன் குருவேயாகில் எட்டினில் சனியிருக்க
> சூழும்நல் சுபயோகங்கள் சூழ்ந்திடும் ஆயுளோடு
> வாழும்நாள் வரையிலுந்தான் வறுமையும் துன்பமில்லா
> ஆழ்சூ மூலகமீது அன்புடன் வாழ்வர்தாமே.

(இ-ள்) இலக்கினற்றிற்கு ஏழாம் வீட்டில் குரு பகவானிருந்து இலக்கினத்தைப்பார்க்க, யாதொரு கஷ்ட நஷ்டமுமில்லாமல் சுகஜீவியாயிருப்பதுடன் சகலருக்கும் நல்லவனாய் இருப்பான். ஆனால் ஆயுள்காரகனாகிய சனிபகவானும் ஆயுள் ஸ்தானமாகிய அஷ்டமஸ்தானத்தி லிருந்தால், ஆயுள்வரையிலும் வறுமை, பிணி சரீர கஷ்டமில்லாமல் பூர்ணயுசுடன் வாழ்ந்திருப்பதற்காகும், சந்திரனிருந்த ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தின் ஜாதகவிதிப்படியே கோட்சாரத்தை அனுசரித்துப் பார்க்கும்போது, சனிபகவான் முறைப்படியே ஒவ்வொரு வருஷத்திலும் இரண்டரை வருஷம் சுற்றிவரும்போது மாத்திரம் அஷ்டமஸ்தானத்தில் சனி வந்தால் பலவித கஷ்ட நஷ்டமும் நேரிட்டு கவலைப்படுவான். ஆனால்,

குரு சப்தம ஸ்தானத்திலிருந்தால் மலைபோல் வந்த கஷ்டமெல்லாம் பனிபோல் விலகி சுகவானாய் இருப்பதற்காகும் எ-று. 1

> சப்தம ஸ்தானந்தன்னில் சனிராகு கேதுநின்றால்
> கப்பிடும் பித்தநோயால் கபம்உஷ்ண மனமெரிச்சல்
> ஒப்பியே தூர்க்குணங்கள் ஒன்றின்பின் னொன்றாய்ச்சூழ்ந்து
> தப்பித முடையோனென்றும் தரணியோர் பழிப்பர்தானே.

(இ-ள்) சப்தமஸ்தானமாகிய இலக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சனி பகவானாகிலும், இராகு பகவானாகிலும், கேது பகவானாகிலும் இருந்தால் பித்தவியாதியாலும், உஷ்ணவியாதியாலும் மெலிந்திருப்பதுடன் மனிதர்கள்மீது சீறி விழுந்து பேசும்படியான அருவருப்பான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு சகலருக்கும் பகைவனாகி வியாதியஸ்தனாகவே இருப்பான் எ-று. 2

> சந்திர னேழில்நின்று சனிபாம்பு மறைந்துநின்றால்
> சிந்தையிற் கோபக்குரோதம் சிறிதேனு மில்லாமற்றான்
> சுந்தர முகாரவிந்தம் துலங்கியே மனிதரெல்லாம்
> சந்ததம் புகழும்நல்ல சாந்தவா னென்பர்தானே.

(இ-ள்) இலக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சந்திரன் ஆக்ஷி உச்சமாய் இருந்து, சனிபகவான் மறைவு ஸ்தானமாகிய 3-6-8-12-ஆம் இடத்திலிருந்தால் அந்த ஜாதகன் கோபம் - குரோதம் - லோபம் - வஞ்சகம் - பொறாமை என்னும் துர்க்குணமில்லாமல் அடக்கம் - பொறுமை - சாந்தம் - தயாளம் ஜீவகாருண்ணியம் என்னும் நற்குண நற்செய்கையுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருந்து, சகலருக்கும் நல்லவனாயிருந்து உத்தமனாய் ஜீவித்திருப்பான் எ-று. 3

> சூரியன் ஏழிலுற்றால் சூடான மனத்திேனாடு
> காரிய முயற்சியாலே காசுசேர்த் திடுவனின்னும்
> கூறியைத் தொன்பானொன்றில் குருவிருந் தாலேநன்று
> பாரிய புத்தியோடு பார்தனில் வாழ்குவானே.

(இ-ள்) ஜன்மலக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சூரியபகவானிருந்தால் குரூரமான புத்தியுடனே எவர்களையும் கடுகடுத்துப் பேசும் சொற்களுடனே முன்கோபியாயிருந்து, தன்வரைக்கும் காசு சேர்க்கும்படியான கைத்தொழில் புரிந்துக்கொண்டாயினும் எவர்களையும் வணங்காமல் இருப்பான். ஆனால் குருபகவான் ஜன்மலக்கினத்திலாயினும், ஐந்தாம் வீட்டிலாயினும், ஒன்பதாம் வீட்டிலாயினும் இருந்தால் கூர்மையான புத்தியுடனே கல்வியில் தேர்ச்சியடைந்து சகலரும் மெச்சும்படியான உத்தியோகத்தில் அமர்ந்து, சகலருக்கும் நல்லவனாய்ப் பரோபகாரியாய் இருப்பான் எ-று. 4

> புதன்புக ரேழில்நின்று பூரண மதியேழ்நிற்க
> மதமிகும் மனத்தனாகி மங்கையர் விருப்பத்தாலே
> சதமென மாயவாழ்க்கை சந்ததம் சொந்தமென்று
> இதமுடன் திரவியந்தோற்று இனிதுடன் மகிழுவானே.

(இ-ள்) புதன் - சுக்கிரன் - பூரணச்சந்திரன் இவர்கள் மூவரும் இலக்கினத்திற்கு ஏழாம் வீட்டிலிருக்கும்போது பிறந்த ஜாதகன் சதாகாலமும்

மதோன்மத்தனாய் அலர்ந்த பெண்கள் சுகமே பெரிய சுகமென மதித்து வேசி நேசனாய்க் கைப்பொருள் விரயஞ் செய்துக்கொண்டு, கண்ணுற்ற கன்னியர்மீதெல்லாம் காதலுற்றுத் தனது மனைவி அருகிலிருந்தாலும் வேசிநேசனாய் திரவியத்தை விரயஞ்செய்து பெண்சுகமே பெரிய சுகமென மதித்து இன்பசுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான். ஆனால் குஜபகவான் ஏழாமிடத்தில் இருந்தால் சிற்சில சமயம் ஸ்திரீகளால் கஷ்டப்படுவதுடன், தாரதோஷம் பொருந்தியவனாய் இருப்பான். ஆகையால் அந்த ஜாதகனுக்குக் கலியாணமாகும்போது முன்னால் வாழைமரத்திற்கு மங்கிலியம் அணிந்து, கிரகசாந்தி முதலானவை நடத்தியபிறகு வாழை மரத்திற்கும் செய்யவேண்டிய கிரமப்படி சாந்திசெய்தானபிறகு தான் கோரிய கன்னிகையாகிய மனையாளுக்கு மாங்கலியந் தரித்தால் சுபமாகும் எ-று. 5

அன்புறும் ஏழாம்வீட்டில் ஆதித்தன் குருவும்நின்றால்
வன்மைசே ரழகுவாய்ந்த வஞ்சியே மனையாளாவாள்
தன்மையாய்க் சனியும்பாம்பும் தனித்தேழில் நிற்பாராகில்
இன்பமும் அழகில்லாத இல்லாள்வந் திடுவாள் தானே.

(இ-ள்) இலக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் சூரியபகவானும் குருபகவானுமிருந்தால், அழகானந்த முகவசீகரியாகவும், பெருந்தன்மையுமான குணமுடைய மனைவியை மணம்புரிந்து பந்துக்கள் புகழ்ந்து பேசும்படியான் பெருமையாய் வாழ்ந்திருப்பான். ஆனால், சப்தபஸ்தானத்தில் சனிபகவானாகிலும், இராகுபகவானாகிலும், கேதுபகவானாகிலும் இருந்தால் அழகில்லாதவளும், குரூர குணமுடையவளாயும் இருப்பள். துர்க்குணமுடையவளை மணம்புரிந்து சதாகாலமும் கண்டை சச்சரவு செய்துக்கொண்டு சகலரும் பரிகாசஞ் செய்யும்படியான விதமாய் கலகஞ் செய்யும் குரூரகுணமாய் இருப்பான் எ-று. 6

இலக்கினத் துடையோ னிரண்டுநான் கைந்தே
ழீரைந்தோன் பானுடை யோர்கள்
கலக்கமில் லாத திசைபொசிப் பதனிற்
கண்டிடும் பலனெலாஞ் சுபமாம்
சொலற்கரும் விழியா யேழிரண் டுடையோர்
சுபபலன் விசேடமாச் சொல்வர்
விலக்கருஞ் செல்வம் புத்திர லாலம்
விவாகங்க ளுண்டென விளம்பே.

(இ-ள்) கருத்த விழியினையுடைய பெண்பாவாய்! ஜென்மலக்கினாதிபதி திசையில் இரண்டாம் பாவாதி 4-5-7-9-10 ஆகிய க்ஷேத்திராதிபர்களின் புத்திகாலங்களில் எல்லாம் சுபபலனாகவே நடக்கும் என்க. மற்றும் 2-7-க்குடையவர்களது புத்திகாலத்தில் இன்னும் விசேஷ நற்பலனையே செய்வர் என்க. அவையாவன: நீங்குதற்கரிய செல்வமும், புத்திரலாபமும், விவாகம் முதலியனவற்றையும் செய்வர் எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் ஜென்மலக்கினாதிபன் திசையில் எக்தெந்த பாவாதிபன் புத்தியில் நற்பலன் செய்யும் என்பதைக் கூறினார். அவையாவன: 2-4-5-7-9-10-க்குடையவர்களது புத்தியில் சுபபலன் செய்யும் எனவும், அவற்றுள் 2-7-க்குடையவர்களது புத்தியே விசேஷசுபபலனும், செல்வம், புத்திரர், கலியாணம் முதலியனவற்றைச்செய்யும் என்பதாகும்,

இதில் ஜென்மலக்கினாதிபன் திசையில் 2-7-ஆம் பாவாதிபனது புக்தி விசேஷ பலனைச் செய்யும் என்றனர். இதற்குக்காரணம் என்னவெனில்? ஜென்மலக்கினாதிபதிக்கு 2-7-ஆம் பாவாதிபன் மித்துரு என்பதாலேயாகும். மற்றைய 4-5-7-9-10-க்குடையவர்கள் சமன் ஆகலின், அவர்கள் திசைபுக்தியில் சமபலனே செய்யும் என்பது கருத்து.

இங்கு கூறும் பலன் முதலிய விசேஷவிதிகள் யாவும் எந்த ஸ்தானாதிபனுக்கு எந்த ஸ்தானாதிபன் சிநேகன், எவன் சமன், எவன் சத்துரு என்பதைக் குறித்துக் கூறப்பட்டனவேயன்றி, கிரகங்களைப் பொருத்ததன்று. கிரக சத்துரு மித்துரு சமன் என்பது எல்லா நூற்களிலும் வெளிவந்துள்ளன. இந்நூலாசிரியர் மாத்திரம் அந்தந்த ஸ்தானங்களையே ஆதாரமாகக்கொண்டு, அந்த ஸ்தானத்திற்கு எந்த ஸ்தானாதிபன் உறவு, எவன் சமன், எவன் சத்துரு என்பதைக்கொண்டு திசைப்பலன் கூறுகின்றனர். இதன் முழு விருத்தாந்தங்களையும் பின்வருஞ் செய்யுட்களின் இடையிடையே கண்டுணர்க. 7

கண்டலக் கினத்தோன் பாபியு மாகிற்
கலந்தவர் பொசிப்பெலாங் கடினங்
கொண்டலக் கினத்தோன் றிசையினிற் றானே
கூறிய வாறெட்டு மூன்றும்
விண்டப்பன் னொன்றீ ராறினுக் குடையோர்
விரும்புமூண் பலன்விப ரீதம்
வண்டமர் குழலா யிலக்கின பாவம்
வரும்வழி யாய்ப்பல னுரையே.

(இ-ள்) வண்டுகளின் நிறத்தினையொத்த கருத்த கூந்தலினையுடைய பெண்பாய்! ஜென்மலக்கினாதிபதி பாபியாகியிருந்து, மேற்படி பாபியுடன் எவ்வெவர்கள் சேர்ந்திருந்தனரோ அவர்களது புத்தியில் மகாகொடியபலனே உண்டாகும். மற்றும், ஜென்மலக்கினாதிபன் திசையில் 6-8-12-ஆம் வீட்டவன் புக்தியும் 11-12-ஆம் வீட்டவனது புக்தியும் நடக்குங்காலம் மகாவிபரீதமாகிய பலன்களே நடக்கும். இலக்கினாதிபன் திசையில் இவ்வாறு பலாபலன்கண்டு கூறுவாயாக எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் ஜென்மலக்கினாதிபன் பாபியாகி அவனுடன் எவரெவர்கள் சேர்ந்திருந்தார்களோ அவர்கள் புத்தியாவும் மகாகொடிய பலனே உண்டாக்கும் எனவும், மேற்படி லக்கினாதிபன் திசையில் 3-6-8-11-12-க்குடையவர்களது புத்தியானது மகாவிபரீதபலன்களே செய்யும் என்றனர். இதனால், லக்கினாதிபதி பாபியாகிய சூரின் - செவ்வாய் - சனி என்னும் மூவருள் ஒருவனாகி, அவனுடன் வேறு எப்படிப்பட்ட கிரகங்கள் கூடியிருக்கினும், அவர்களது புக்தியில் கடினபலனே உண்டாகும் எனவும், 3-6-8-11-12-க்குடையவர்கள் புக்தி நடக்குங்காலம் மகாகொடிய பலனும் உண்டாகும் என்பதே இச்செய்யுளின் முக்கியகருத்தாகிறது.

ஜென்மலக்கினாதிபன் சூரியன் - சனி - செவ்வாய் என்னும் மூவருள் ஒருவனாகி, அவனுடன் பலகோட்கள் கூடியிருந்தால், மேற்படி லக்கினாதிபன் திசையில், மேற்படி லக்கினாதியுடன் கூடியவன் புக்தியில் கடினபலன் செய்யும் என்பது அறியத்தகுந்தது. இது மற்றைய நூலாசிரியர்கள் எவர்களாலும் கூறப்படாத விஷயமாகும். இதுவன்றி மேற்படி லக்கினாதிபன்

சுபனாயினும், பாபனாயினும் அவன் திசை நடக்குங்காலம் 3-6-8-11-12-க் குடையவர்களது புக்தி நடக்குங்காலம் மகாவிபரீதபலன்களையே செய்யும் என்றனர். இவையும் ஸ்தானாதிபத்திய சத்துருத்துவமே என்க. இவை லக்கினாதிபன் திசையொன்றிற்கு மாத்திரம் பொருந்துமேயன்றி ஏனைய பாவாதிபன் திசைகளுக்குப் பொருந்தா. ஆனதுபற்றியே, இச்செய்யுளின் இறுதியில், 'வண்டமர் குழலாயிலக் கினபாவம் வரும்வழியாய்ப் பலனுரையே' எனக் கூறியுள்ளதை யறிக. 8

வாக்கெனு மிரண்டுக் குடையவன் பவனாய்
வக்கிரன் சனியர வுண்ணிற்
போக்கிடுந் தனங்க ளிரண்டினிற் பாபர்
பொருந்திடி லவன்றிசை ராச
நோக்கெலாம் போமே தனமது நீங்கி
நண்ணிய காவலும் வருமே
நாக்கெலாம் பிசகு மானவீ னமுமாய்
நடந்திடும் பாபருண் ணிடினே.

(இ-ள்) வாக்கு என்கிற இரண்டாம் வீட்டுக்குடையவன் பாபனாகி யிருந்து, அவன் திசையில், செவ்வாய் - சனி - இராகு-கேது இவர்களது புக்தியில், அந்த ஜாதகனது கையிலுள்ள தனம் அனைத்தையும் இழந்து போவன். மேலே சொன்ன இரண்டில் பாபர்களிருந்து மேற்படி இரண்டா மதிபன் திசை நடக்குமேயாமாயின் அக்காலம், அந்த ஜாதகனுக்கு அரசர் களால் நிஷ்டூரம். அல்லது ராஜபகையும் தன்கையிலுள்ள தனம் யாவும் ஒழிந்து, மேற்படி அரசர்களால் காவலும் உண்டாவதுடன், வாக்கு பிசகி மான ஈனங்களும் உண்டாகும். மேற்சொன்னபடி இரண்டில் பாவர்க ளிருந்து இரண்டா மதிபனது திசை நடக்குங்காலம், மேற்படி பாவர்களது புக்திபலனைக் கூறுவேன் கேட்பாயாக எ-று.

(வி-ரை) இரண்டாம் வீட்டவன் பாபனாகி அவன் திசை நடக்குங்காலம் செவ்வாய்-சனி-இராகு-கேது இவர்களது புக்தியில் அவனது கைப்பொருள் யாவும் ஒழிந்துபோமெனவும், மேற்படி இரண்டாம் ராசியில் பாவனிருந்து மேற்படி இரண்டாமாதிபன் திசைநடக்கும் காலம் அரசர்களால் நிஷ்டூரம். அரசர்களால் பொருள் விரயம், நாணயப் பழுது. மானமும் ஈனமும் உண்டாகும் என்றனர். மற்றும் மேற்சொன்னபடி இரண்டில் பாபர் இருந்து, மேற்படி இரண்டாம் வீட்டவன் திசை நடக்குங்காலம் கொடிய கோட்களினது புக்தி நடக்குங்காலம் என்னபலன் செய்யும் என்பதைப் பின்வருஞ் செய்யுளால் விளக்குகின்றனர். விவரம் வருமாறு. 9

அன்னவன் றிசைமேற் சோதர பீடை
யன்றியுங் களத்திர நாசஞ்
சொன்னவை கொடுப்பர் சுபரதிற் கூடிற்
றுர்ப்பலன் சமனெனச் சொல்வர்
முன்னமே யிரண்டி லிருந்தவன் சுபனாய்
மொழிந்திடு முடையவன் சுபனால்
இன்னவர் திசையிற் சுபர்களு முண்ணி
லெய்திய பலனெலாஞ் சுபமே.

(இ-ள்) மேலே சொன்னபடி இரண்டில் பாவனிருந்து இரண்டாம் வீட்டவன்திசையில் கொடிய கோட்களினது புக்தி நடக்குங்காலம் எவ்விதப் பலன் செய்யும் எனின், அந்த ஜாதகனது சகோதரர்களுக்குப் பீடையும், அவனது மனைவிக்கு மரணமும், மேலேசொன்ன பாவர்களுடன் சுபர்களுங் கூடி யிருப்பார்களேயாமாயின், மேலே சொன்ன கொடிய பலன்களைச் சமமாகச் செய்வர். இதுவுமன்றி இரண்டாம் ராசியிலும் சுபகோட்க ளிருந்து, மேற்படி இரண்டாமதிபன் புக்தியில் சுபர்களது புக்தி நடக்குங் காலம் அவர்கள் மகா சுபபலனையே செய்வர் எ-று.

(வி-ரை) இச்செய்யுளால் இரண்டில் பாபரிருந்து இரண்டாமதிபன் திசையில், கொடிய கோட்களினது புக்தியில், சகோதர களத்திர மாரகம் செய்யும் எனவும், மேற்படி பாவர்களுடன் சுபகோட்கள் கூடியிருக்கின், மேற்படி கொடிய பலனைக் கொஞ்சமாகச் செய்வர் எனவும், இரண்டில் சுபனிருந்து மேற்படி இரண்டாம் பாவாதிபன் திசையில் சுபகோட்களினது புக்தி நடக்குங்காலம் மகா விசேஷபலனையும் செய்யும் என மூன்றுவித மாய்ப் பிரித்துக் கூறினார். இவ்விரண்டு செய்யுளினது கருத்தையும் உற்று நோக்குமிடத்து, இரண்டாம் பாவாதிபன் திசையில், கொடிய கோட் களினது புக்தி நடக்குங்காலம் திண்ணமாய்க் கொடிய பலனையே செய்யும் என்பது நன்கு விளங்குகிறது. 10

மூன்றினுக் குடையோன் பாபனா யிருக்க
முகிழ்த்துமே பாபருங் கூடிற்
தேன்றிய திசையு ளக்கினி பயமுஞ்
சோரர்கோ யாயுத விரணம்
ஊன்றிய பாவி யொருவனா யிருக்கி
லொன்றிய திசைபுத்தி சோரம்
மான்றிகழ் கண்ணா யிராசகோ பமுமே
வந்திடும் விசனமும் வளரும்.

(இ-ள்) கூர்மைபொருந்திய கண்களையுடைய பெண்பாவாய்! ஜென்ம லக்கினத்திற்கு மூன்றாம் பாவாதிபன் பாபனாகியிருந்து, அவனுடன் பாவர் களே கூடியிருக்கின், அவனது திசையில் திருடராலும் அக்கினியாலும் பயமுண்டாதலும், ஆயுதங்களால் இரண முண்டாதலுமாகும். மேற்படி பாவனாகிய மூன்றாம்ராசி யதிபனோடு ஏதேனும் ஒருபாவன் சேர்ந்திருக்கில் அவனது புக்தியில் களவுபோதல், அரசர்கள் கோபம் நாளுக்குநாள் விசன மதிக முண்டாதலாகிய பலன்செய்யும் எ-று.

(வி-ரை) மூன்றாம் ராசி யதிபன் கால்பாபன் எனக் கூறுவதாலும், மேற்படி பாவியுடன் பாவர்களே கூடியிருக்கின், அவன் திசையில் கொடிய பலன் செய்யும் என்றனர். மற்றும், மேற்படி மூன்றாம் ராசி யதிபனுடன் பல பாவர்கள் கூடாது, ஓர் பாபிமாத்திரம் கூடியிருப்பானேயாமாயின், மேற்ப்டி பாவனது புக்தியில் மாத்திரம் கொடியபலன் செய்யும் என்றனர். இதனால் மூன்றாம் ராசி யதிபனுடன் பல பாவர்கள் சேர்ந்திருக்க, அவன் திசை முழுமையிலும் கொடிய பலன் செய்யும் எனவும், ஒரு பாபன் மாத்திரம் சேர்ந்திருக்க, அவன் புக்தியில் மாத்திரம் கொடியபலன் செய்யும் என்பதும் விளங்குகிறது. 11

எட்டாம்பாவக பலாபலன்

சொல்லுமந்த அட்டமத்தால் ஆயுளுடன்
அவிருக்கும் வண்மை யாலும்
வெல்லுமந்த ஆயுளுடன் பலாபலனும்
சுகம்தெரிந்து சொல்லவேண்டும்
நல்லஅந்த அட்டமமே ஆயுளினை
தேர்ந்துசொல்ல வேணுமென்று
வல்லவராம் சோதிடர்கள் வகுத்துரைத்த
மொழிப்படியே வரைகுவாயே.

(இ-ள்) இலக்கினத்திற்கு அஷ்டமஸ்தானத்தையே ஆயுள்ஸ்தானமென்று சொல்வது. இந்த அஷ்டமஸ்தானத்திலிருக்கும் கிரகங்களின் செய்கையையும், அஷ்டமாதிபதியின் செய்கையையும் கண்டுதெளிந்து பலாபலன் சொல்லவேண்டும், இந்த அஷ்டமஸ்தானாதிபதியின் பலாபலத்தினால் தான் ஆயுள், இலாபமும் சுகாசுகபலனும் தெரிந்து சொல்வதற்காகும். ஆனால், அஷ்டம ஸ்தானத்தையும் அஷ்டம ஸ்தானாதிபதியிருக்கும் ஸ்தானபலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும் எ-று. 1

வேறு

அஷ்டம ஸ்தானந்தன்னில் ஆதித்தன் குருசேய்நிற்கில்
துஷ்டராற் சண்டைசெய்து துடித்துடல் காயமாகும்
கஷ்டங்களெதுவந்தாலும் கலகமே துணையாய்கொண்டு
நஷ்டமா யற்பவாயுள் நாடிடு மென்பர்தானே.

(இ-ள்) ஆயுள்ஸ்தானமாகிய அஷ்டமஸ்தானத்தில் சூரியனும், குருவும் செவ்வாயுமிருந்தால், மனதைரியத்தால் யாதொருவரும் நிகரில்லாமல் சண்டைசெய்து துஷ்டர்கள் சகவாசமே துணைவகித்து, வெட்டுகாயத்தினால் சதாகாலமும் வீரவார்த்தையே பேசிக்கொண்டிருப்பதுடன் அற்ப ஆயுளாய் மடிவன் எ-று. 2

சனிசுக்கிரன் எட்டில்நின்றால் சந்ததம் பலவானாகி
பனிமொழி மனையாளோடு பக்ஷமாய் வாழ்ந்திருந்து
கனிமொழி மைந்தர்பாக்கியம் களிப்புட னடைந்துநாளும்
தனிகனாய் ஆயுளோடு தரணியில் வாழ்வர்தானே.

(இ-ள்) ஆயுள்ஸ்தானத்தில் சனிபகவானும், சுக்ரபகவானுமிருந்தால் சதாகாலமும் மனதைரியத்துடனே சுகஜீவியாய், மனைவி மைந்தர்களுடனே தனது பந்துமித்திரர் புகழ்ந்துபேசும் திடகாத்திர தேஜஸுடனே பூமியில் பூர்ணாயுளுடன் வாழ்ந்திருப்பான் எ-று. 3

சந்திரன் புதனுமெட்டில் சார்ந்துமே யிருப்பாராகில்
மந்திரந் தந்திரத்தால் மாற்றார்கள் துன்பஞ்செய்து
வந்திடும் பொல்லாங்காலே வாழ்நாட்கள் குறுகும்கண்டாய்
அந்தந்த கிரகநோக்கை ஆராய்ந்து புகலுவாயே.

(இ-ள்) சந்திரன் - புதன் அஷ்டமஸ்தானத்திலிருக்கில் அடிக்கடி மனபயங்கரத்துடனும், பகைவர்களின் மந்திர தந்திரங்களினால் கலத்திற்சிக்கி மனவியாதியால் அற்பாயுளா யிருப்பார்கள். ஆனால் ஆக்ஷி உச்சமா யிருந்தாலும், நட்பாயிருந்தாலும் மனதைரியமா யிருப்பார்கள் எ-று. 4

ஒன்பதாம்பாவக பலாபலன்

ஒன்பதாம் பாவகமென்பது பிதாவைக் குறித்தும், பாக்கியத்தைக் குறித்தும், புத்திர விருத்தியைக் குறித்தும், தானதரும பரோபகார விஷயங்களைக் குறித்தும் அறியவேண்டிய ஸ்தானமென முன்கூறிய பொது பாவகத்தில் 9-ம் செய்யுளில் கூறியபடி, முதன் முதலாக பிதாவின் அந்தஸ்து ஆயுள் முதலியவைகளைக் குறித்து சொல்லுவார்.

பாக்கிய ஸ்தானந்தன்னில் பார்க்கவன் சனிசேய்நின்றால்
தாக்கியே தந்தைசொத்து தனக்குமே வந்துசேரும்
யோக்கிய மில்லாமற்றான் யோசியா பணத்தையெல்லாம்
நோக்கிடா செலவுசெய்து நொந்துழல் வானென்றோதே.

(இ-ள்) பாக்கியஸ்தானத்தில் சூரியன்-சனி-செவ்வாய் இருந்தால், தனது தந்தைக்கு கருமஞ்செய்துவிட்டு, அவன் தேடிவைத்திருக்கும் திரவியத்தைப் பலவிதமாய் செலவு செய்துவிட்டு, கையில் காசில்லாமல் கவலைக்குள்ளாகி, கஷ்டஜீவனஞ் செய்துக்கொண்டிருப்பான். ஆனால், தனது ஆயுள்வரையினும் பலவிதமாய்ச் செலவுசெய்துக்கொண் டிருப்பான் எ-று. 1

குருசுக்கிரன் புதனும்சந்திரன் கூடியொன் பதிலிருக்க
பெருமைசேர் தனவானாகி பேசிடும் புகழடைந்து
தருமதா னங்கள்செய்து தரணியில் யாத்திரைசெய்து
அருமையாய் விரதயாகம் அன்புடன் செய்குவானே.

(இ-ள்) பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம் வீட்டில் குரு-சுக்கிரன்-புதன் இருந்தால் பலவிதத்திலும் திரவிய சேகாஞ்செய்து, தானதரும பரோபகாரம் புரிந்து, மனைவி மைந்தர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருந்து, விரதானுஷ்டானங்களை யனுசரித்து, சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும். ஆனால் குருபகவான்-ஒன்பதிலும், சுக்கிரன்-அஷ்டமத்திலுமிருந்தால் ஞானானந்தமாய் தபஞ் செய்துக்கொண்டிருப்பான் எ-று. 2

ஒன்பதா மிடத்தில்கேது ஒளிமிகும் ராகுமூன்றில்
நன்மையா யமர்ந்துநின்றால் நாட்டில்வாழ் மனிதர்க்குள்ளே
தன்மையாய் ஞானியாகி சந்நியாசம் பெற்றோங்கி
சின்மயா னந்தஜோதி தெரிசிக்க நாடுவானே.

(இ-ள்) ஒன்பதாமிடத்தில் கேதுவிருக்க, மூன்றாமிடத்தில் ராகுவிருந்தால் உலக இன்பத்தைவெறுத்து, ஞானிகளைத்தேடி கானகவாசியாயலைந்து உபதேசம்பெற்று சந்நியாசியாயிருப்பான். ஆனால், சுக்கிரன் - ஏழாமிடத்திலும், குரு-ஐந்தாமிடத்திலுமிருந்தால் விரதானுஷ்டானங்களை யனுசரித்து சர்ப்பசாந்தி முதலான யாகாதிகள் செய்து, மனைவி மைந்தர்களுடன் வாழ்ந்து இல்லற தருமத்தை யனுசரித்து ஞானானந்த யோகீஸ்வரனா யிருப்பான் எ-று. 3

கர்மஸ்தா னத்தைக்காரி காணிலோ பிதாவரிட்டம்
மர்மமாய் கிரகநோக்கை மதியினு லுணர்ந்துசொல்வாய்
சர்வாதி காரத்தோடும் சாமியோன் பதியிருக்க
தர்மதா னங்கள்செய்து தபஞ்செய்ய நாடுவானே.

(இ-ள்) கருமஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தை சனி பார்க்கில் அவனுடைய திசாபுத்தியில் தகப்பனுக்கு கருமஞ்செய்வான். ஆனால் குரு உச்சம் பெற்று ஒன்பதாமிடத்திலிருந்தால் தானதரும பரோபகாரஞ் செய்து மகான்களினால் உபதேசம்பெறறு தபஞ்செய்ய நாடுவான் எ-று. 4

பிதுர்பலன்

ஒதுமைந் தொன்பானுதி பதிகதி ருடனேகூட
ஒதிடுங் காரிபார்க்க வுறும்பிதா விற்கரிட்டம்
ஒதுமைந் தொன்பானுதி பதிகதி ருடனேகாரி
ஒதுசே யிவர்தாமூன்றி லுறிற்றந்தை யுடனேபோமே.

(இ-ள்) பிதுரு காரகனாகிய சூரியனோடு 5-ஆம் வீட்டதிபதியும், பிதுரு ஸ்தானாதிபதியான ஒன்பதாம் ராசியதிபதியும் கூடி இருக்க, அவர்களைச் சனிபார்க்க, அந்த ஜாதகன் பிதாவுக்கு அரிட்டமுண்டாகுமென்று சொல்வாயாக. முன் சொன்ன 5-9-ஆம் ராசியதிபதி சனி-சூரியன்-குஜன் இம்மூவர்களுடன் கூடி 3-ஆம் இடமென்னும் மறவிட ஸ்தானத்தில் இருக்க, அவன் பிதா உடனே இறந்துபோவான் என்று கூறுக எ-று.

(வி-ரை) "ஒன்பதுக் கொன்பதைந்தில் வெள்ளியு மரசனிற்க
இன்பதிக் கினியரோடே இந்துவுங் கூடப்பார்க்க
தன்பதிக் கிரணனாக்ஷி தானுமே லாபமாகில்
அன்பதுக் கன்பதாகி யவன்பிதா இருப்பநூறாய்"

என ஒன்பதுக் கொன்பதாம் ராசியிலும், 5-லும், சுக்கிரன் குரு நிற்க, சந்திரன் சுபகிரகங்களுடன் கூடினாலும், பார்த்தாலும், சூரியன் தன் வீட்டிற்கு 11-ல் நின்றால், அவன் பிதா நூறுவயதுள்ளவன் என்று கோளத்தில் கூறியபடியால், 5-9-ஆம் ராசியதிபர்கள் சூரியனுடன் கூடி 3-ஆம் ராசியில் இருந்தாலும், 5-9-வது ராசிகளில் சேர்ந்திருக்கும் கிரகத்தையும் ஆராய்வதோடு,

"அஷ்டமஞ் சரமேயாக வதற்குளோன் சராங்சமேற
விட்டபாக் கியனேபார்க்கி லினியபிதா தேசாந்திரம்"

என அஷ்டமராசி சரராசியாகவும், அவ்வீட்டோன் சரராசி அம்சம் பெற்றும், அவனை 9-ஆம் வீட்டோன் பார்க்க, அவன் பிதா தேசாந்திரம் செல்வான் என்றும்,

"இரவிமுன் னீலன்பின்சேய் இருநான்கில் வெள்ளிபொன்னும்
அரவுமோர் நவத்தோன்கூடி யந்தநீலர்க்கே ழில்
பரவிய சோமன்புந்தி பாம்புக்கு நான்கேயாகில்
மருவுருக் குழவிமுன்னே மாண்டிடு பிதாவுமாமே.

என சூரியன் இருந்த ராசிக்கு முன்னால் சனியும் பின்னால் குஜனும், 8-ல் சுக்கிரன்-குருவும், 9-ஆம் வீட்டதிபதி ராகு-கேதுவுடன் கூடி சனி நின்ற ராசிக்கு 7-லும், சந்திரனும்-புதனும் ராகு கேதுக்களுக்கு நான்கிலும் இருக்க, அந்த ஜாதகன் பிறக்கு முன்னே பிதா இறந்துபோவான் என்றும் இன்னும் பற்பல விதமாகவும் ஆராய்ந்து பலன் சொல்லுக. 5

உடன்சன்ம லக்கினத்துக் கொன்பதி லேந்திற்பத்தில்
முடவன்சே யிரவியிந்த மூவரி லொருவர்நிற்கத்
திடமுறு பிதாவுக்கீனஞ் சன்மத்திற் செவ்வாயேழில்
அடல்கதிர்க் கையம்பொன்னேர்க் காண்டுமூன் றிருப்பன்றந்தை.

(இ-ள்) ஜெனன ராசிக்கு 5-9-10-என்னும் இராசிகளில் சூரியன்-குஜன்-சனி இம்மூவரில் ஒருவர் நிற்க, அவன் பிதாவுக்கு ஈனம் உண்டாகும். ஜெனன ராசியில் நிலமகனாகிய குஜனும், 7-ஆம் ராசியில் சூரியனும் இருக்க, துன்பம் உண்டாகும். குரு இருக்க பிதா 3-ஆண்டுகள் வரையில் இருப்பான் என்றும் கூறுவர் எ-று.

(வி-ரை) ஈனம் என்பதை கெண்டம் என்றும் கொள்ளலாம். கெண்டம் செய்யாவிடில் ஈனம் உண்டு. இதனை அப்போதய திசாபுத்தி அறிந்து கூறுதல் வேண்டும்.

"இரவியு முச்சமாகி கோணரு மாக்ஷியாக
பரவிய கோணந்தன்னிற் பருமதி யரசனிற்க
அரவுசேய் முடவன்புந்தி யாரெட்டு பனிரெண்டாகில்
திரவிய முடையோனாகி தீர்க்கமாய் இருப்பன்றந்தை"

என்றபடி, சூரியன் கோணராசிகளில் உச்சமாகவும், கோணராசிக்குடையோர் ஆக்ஷியாகவும், அந்த கோணராசிகளிலேயே வளர்பிறைச் சந்திரனும் குருவும் இருக்க, 6-8-12-ஆம் ராசிகளில் இராகு-சனி-புதன்-குஜன் இவர்கள் இருப்பாரேயானால், அந்த ஜாதகன் பிதா திரண்ட செல்வத்துடன் தீர்க்க வயதோடு இருப்பான் என்றும் கோளத்தில் சொல்லப்பட்டன. ஆதலால், 5-9-10-ஆம் இடம் சூரியனுக்கு ஆக்ஷியா, உச்சமா, பங்க நீசமா என்றும், இன்னும் பற்பலவிதமாகவும் ஆராய்ந்து சொல்லவேண்டும்.

"கொண்டகதி ரொன்பதிலிருக்க குளிகன்பவ நன்மூன்றினிற்கிற்
கண்டபிதா வின்வழி சுபர் கர்மியாவன்'

என்ற சாதக சிந்தாமணியின் செய்யுளின்படி, 9-ல் சூரியன் நிற்க, குளிகன் மூன்றில் இருக்க, அந்த ஜாதகன் தன் பிதுர்வழியில் சுபகர்மியாவன் என்றும் சொல்லுக. இவ்வாறே ஒவ்வோர் கிரகங்களைக் கொண்டும் பிதுர் பலன் சொல்வது அவசியமாகும். 6

வேறு

தந்தைபதி யிற்சவுரி நிற்கச்செவ்வாய்
தானுங்கேந் திரத்துறி லரிட்டந்தந்தைக்
கந்தவனுக் கட்டமத்துஞ் சன்மாதியுடனும்
ஆதவன் செவ்வாய்கூடி யனுகிலையர்க்கரிட்டம்
பந்துசன் மத்துக்கைந் தொன்பானிற்பாவர்
பாம்புகேந் திரத்திலுறத் தந்தைக்கீனம்
விந்தைமலர் நண்பனுக்கேழ் சனிசேய்நிற்கில்
மேலோர்நோக் கறநிற்கில் வியமொன்பானே.

(இ-ள்) பிதுரு ஸ்தானமென்னும் 9-ஆம் ராசியில் சனி நிற்க, கேந்திரங்களிலொன்றில் குஜனிருக்க, அவன் பிதாவுக் கரிட்டமுண்டாகும். ஜெனன ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தில் சூரியனும், சூரியனோடு ஜெனன ராசியதிபதியும் குஜனும் கூடி இருக்கினும், அவன் தந்தைக் கரிட்டமுண்டாகும்,

ஜெனன ராசிக்கு 5-9-ஆம் ராசியில் பாவர்களும், 1-4-7-10-ஆம் இடங்களில் ராகுவும் கூடி இருந்தாலும் அவன் பிதாவுக்கு ஈனமுண்டு. சூரியனுக்கு 7-ஆம் ராசியில் சனி-குஜன் நின்றும், சுபர்கள் பார்வையற்று மிருந்தால், அந்த ஜாதகன் ஜெனித்த 9-ஆம் வருடம் பிதா மறிப்பான் எ-று.

(வி-ரை) "கேந்திரத்திற் பத்தாம் கிளர்திரிகோணத் தொன்பதாம்
ஆய்ந்த பெலமாம் பெயர்களைந்ததிபர்-சேர்ந்திருக்க
பார்க்க ஒருவர்க்கொருவர் பார்யோக காரகராம்
யார்க்கு மரிதா மறி"

என்றபடி, கேந்திரமென்று பேசும் 1-4-7-10-இந்நான்கு க்ஷேத்திரங்களிலும், 10-ஆம் இடம் கேந்திரமே முக்கியமெனவும், 1-5-9-என்னும் திரிகோணங்களில் 9-ஆம் இடமே மேலானதென்றும், இவ்விரண்டு க்ஷேத்திராதிபர்களும் ஒன்று சேர்ந்தாலும், பார்த்தாலும், யோகத்தை தருவாரென்றும், மேற்சொன்ன இருவரும் அவ்வாறிருப்பது அரிதென்றும், சந்திரகாவியத்தில் கூறியபடி, 9-10 ஆம் இடங்களில் உள்ளவர்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும், நல்ல யோகமே உண்டாகும். 1-4-7-10-ஆம் இடங்களில் ராகு இருக்க, அவன் பிதாவுக்கு ஈனமுண்டு என்றனர். மேற்சொன்ன கேந்திரங்களில் இருந்து ஒன்பதாம் வீடு தனுசு மீனமாகவும், அவ்வீட்டோனை குரு பலம் பெற்றும், பிதருகாரகன் புதன் - சுக்கிரனோடும் இருக்க, மேற்சொன்ன தோஷம் நீங்கும் என்றும் சோதிடம் சொல்வோர் பற்பலவிதமாகவும் பிரித்துச் சொல்லவேண்டும். 7

வேறு

ஒன்பானிடத்திற் சனியைந்தி விரவியுடனே யுறுபாம்பும்
அன்பாயிருக்கத் தந்தைதனக் கரிட்டமைந்தா மாதிபதி
இன்பமுச்ச மாயிருக்க யில்லையரிட்டம் பிணிகட்டும்
பொன்பார்தருளச் சனியிரவி நின்றூர்பிணிபோங் கண்டீரே.

(இ-ள்) தந்தை ஸ்தானமாகிய ஒன்பதாம் ராசியில் சனியும், 5-ஆம் இடத்தில் பிதுர்க்காரகனாகிய சூரியனும், அவனோடு ராகு கேதுக்களில் ஒருவரும் இருந்தால் அவன் பிதாவுக்கு கெண்டம் உண்டாகும். மேற்சொன்ன கிரகங்கள் மேற்சொன்ன ராசிகளிலேயே உச்சம் பெற்றால் கெண்டம் நீங்கும் என்றும், பிணி முதலியவைகளைக் கொடுக்கும் சூரியனோடு சனி சேர்ந்து எந்த ராசியில் இருந்தாலும் அவனை குரு பார்க்க மேற்சொன்ன பிணியும் நீங்கும் எ-று.

(வி-ரை) "அருந்த பாக்கியத்தனோனும் அருக்கனும் சராராசிக்குள்
இருந்ததான் சாரங்கிசத்தி லேரிடிற் பிதுர்தேசாந்திரம்."

என்பதல், சூரியனும், பாக்கியாதியான ஒன்பதாம் வீட்டோனும் சரராசியிலிருந்து, சரராசி நாதர்களின் அங்கிசம் பெற, அவன் பிதா தேசாந்திரங்களிலேயே வாசம் செய்வானென்று சாதக சிந்தாமணியில் சொல்லியபடியும்,

"ஒன்பானுக் குடையவன்போய் பாவருட னூத்திய
ரொன்மூன் றறவல்லா விடினென் றிலாத
ஒன்பான்பத் தினிற்பாப ருறத்தாதை மறிப்பானு
மொன்பானுஞ் செழுவணியி லொளிபழுத்த குழையாளே."

என ஒன்பதாம் வீட்டோன் பாபருடன் சேர்ந்தாலும், மற்றுமுள்ள பாவர்கள் 3-9-ஆம் ராசியில் இல்லாதிருக்க, 9-அல்லது 10-ஆம் வருடம் அவன் தந்தை

இறந்துபோவான் என்று சாதக சிந்தாமணியில் சொல்லியபடியால், மேலெழுதிய 3-9-ஆம் ராசியில் பாவர்களிருந்தும் மேற்சொன்னபடியே கிரகம் இருக்கினும் தந்தைக்கு தோஷமில்லை என்பது கருத்தாகையால், கிரக பலத்தைத் தெரிந்து இன்னும் பலவிதமாக ஆராய்ந்தறிந்தே மறிப்பான் அல்லது மறிக்கான் என்பதை யுணர்க. 8

கண்டசனியுங் கதிரோனுங் கதித்தழிவான்பா னதிபனும்
அண்டியொருவீட் டினிலிருக்க வையர்க்கரிட்ட மவரைப்பொன்
மண்டிநோக்க வைந்ததி மனையோனுச்ச மாயிருக்க
மிண்டாய்ச்சிலநா ளிருந்தரிட்டம் மேவுவிடம்போல் விழிமானே.

(இ-ள்) மகரம் கும்பத்திற்கு ஆக்ஷிநாதனாகிய சனியோடு சூரியனும், பிதரு ஸ்தானாதிபதியாகிய 9-ஆம் வீட்டோனும் ஆக மூவரும்கூடி ஓர் ராசியில் இருக்க, அவன் பிதா மாணமடைவான். மேற்சொல்லிய மூவரையும் குரு பார்க்க, ஐந்தாம் வீட்டோன் உச்சம்பெற அவன் பிதா சிலநாள் இருந்து (அதாவது) கிரகத்திற்கு எற்றவாறு ஆயுளுடன் இருந்து மறிப்பான் எ-று.

(வி-ரை) "தருமொன்பதி லரவெய்திட தானதிபன் பவரால்
வருமாதவன் பிதுர்த்தானத்தை மருவப் பவருடனே
இருமூன்றினின் மும்மூன்றினி லீராறினிற் தந்தை
அருளாயிசு நசியும்சொல வமைத்தா ரறிவுள்ளார்."

என்ற சந்திரகாவியச் செய்யுளின்படி, 9-ஆம் ராசியில் ராகுவும், 9-ஆம் வீட்டோன் பாவகிரகங்களால் சூழப்பட்டு அல்லது புதன் பாவகிரகங்களுடன் கூடி, பிதரு ஸ்தானத்திலிருந்தாலும், அவன் ஜெனித்த 6-9-12-ஆம் ஆண்டுகளில் அவன் தந்தை இறந்துபோவான் என்றபடி, சனி-சூரியன் 9-ஆம் வீட்டோன் இம்மூவரும் கூடிய ஜாதகங்களை பின்வரும் செய்யுளின்படி ஸ்புடம் செய்து சூரியன் அஷ்டகவர்க்கையும் சோதித்துப் பலன் சொல்ல வேண்டுவது அவசியம். 9

மானேபிதுர்கா ரகனென்பான் மனையாதிபனுஞ் சனியாகித்
தானேபாவ ருடன்கூடித் தருமுங்நான்கெட் டாறிலுறத்
தேனேபிதுர் ஸ்தானந்தன்னிற் செம்பாம்பிருக்க வம்மனையில்
ஊனேசெறியுஞ் சனிவருநா ளுடனே தந்தைக் குறுமரிட்டம்.

(இ-ள்) பிதுர்ஸ்தானாதிபதி என்னும் 9-ஆம் வீட்டதிபதி சனியாக இருந்து, பிதரு காரகனாகிய சூரியனுடன் சனி சேர்ந்து 3-6-8-12-ஆம் ஸ்தானங்களில் இருக்க, பிதருஸ்தானத்தில் கேது இருக்க, அந்த ஜாதகன் ஜெனித்த வீட்டில் பலவித கஷ்டம் உண்டாகி சனிதிசை வரும்போது அவன் பிதாவுக்கு கெண்டம் உண்டாகும் எ-று. 10

உறுஞ்சன்மத்திற் செவ்வாயு மொன்பானிடத்திற் சனியிருக்கப்
பெருந்தந்தைக்கு வருமரிட்டம் பிதாத்தானதி பதியுடனே
குறுஞ்செவ்வாயுஞ் சனிமூவர் கூடியிருக்க நல்லோர்கள்
அறிந்தெங்கே தானிருந்தா லு மையர்க்கரிட்ட மென்பாரே.

(இ-ள்) ஜெனன ராசியில் நிலமகனென்னும் செவ்வாயும், பிதருஸ்தானமென்கிற 9-ஆம் ராசியில் சனியும் நின்றால் அவன் பிதாவுக்கு கெண்டம்

உண்டு. பிதுருஸ்தானாதிபதியோடு சனி குஜனும் கூடி இருக்க, சுபகிரகங்கள் எந்த ராசியில் இருந்தாலும் அவன் பிதாவுக் கரிட்டமுண்டு எ-று.

(வி-ரை) "திகழ்பாக் கியத்திற் சேயிருக்கிற் செல்வ நாசம் பிதுர்தோஷம்
தகமை யிலாதான் றற்கர்மி சகல நிந்தை களையுடையான்
சுகமாக் துணைவர் தங்களுக்கு தோஷம் பிதுர்க்குங் குருவுக்கும்."

என்றபடி 9-ல் குஜனிருக்க பிதுர்ச்செல்வ நாசமும், குரு தோஷமும், அறிவில்லாதவனும், துற்கருமியும், சகல விதமான நிந்தைகளை யுடையவனும், சகோதரங்களுக்கு துன்பமும் உண்டாகுமென்று சாதக சிந்தாமணியில் சொல்லியபடியும், இதனை வீமேஸ்வர உள்ளமுடையானில் தருமயீனனும் சுகம் குறைந்தவனுமாவான் என்றார். இத்தோஷமானது பிதுருஸ்தானாதிபதி பலம்பெற்று பிதுர்ஸ்தானத்தை உச்சம் பெற்ற சுபர்களால் பார்க்கப்பட்டு சூரியனஷ்டவர்க்கப்படி பிதாவுக்கு பிந்து குறையாதிருந்தால் நீங்குமேயொழிய மற்றபடி நீங்காதென்றும் கூறுக. 11

என்பார்சன்மங் தனிற்காரி யிரவிசசி மூவருமிருக்கத்,
தன்பாரைந்திற் குசனிருக்கத் தந்தைக்கரிட்டங் தான்பின்னும்
அன்பார்குசன் செம்பாம்பிரவி யாகமூவ ருடன்கூடிப்
பின்பாராமல் மூன்றாண்டிற் பிதாவுக்கரிட்டம் பேசுவரே.

(இ-ள்) ஜெனனராசி எந்த ராசியானாலும் அந்த ராசியில் சனியும் அவனோடு சூரியன்-சந்திரன் இம்மூவரும் சகிதம் பெற்றிருக்க, ஐந்தாம் ராசியில் குஜன் இருக்க, அவன் பிதாவுக்கு அரிட்டம் செய்யும், குஜனோடு ராகு சூரியன் இம்மூவரும் கூடி இருக்க, ஜாதகன் ஜெனித்த 3-ஆம் வருஷத்தில் அவன் பிதாவுக்கு அரிட்டமென்றும் கூறுவார் எ-று.

(வி-ரை) ஜெனன லக்கினம் துலாமாகவும், அவ்வீட்டில் சனி உச்சம் பெற்று சூரியன் துலாராசியிலன்றி சிங்கராசியில் ஆக்ஷிபெற, புதன் தன் சுயவீட்டில் ஆக்ஷிபெற, குரு பார்த்தால் ஆயுள் தீர்க்கமென்று சோதிட வல்லோர் கூறுவார். 12

பேசுமெட்டோன் பதுபத்திற் பெரியபாவ ருறவொன்பான்
நேசமெட்டா றாடுவியத்தி னிற்கப்பலன்க ணீங்கியுற
வோசையென்ப திற்குசனே யுலவுங்கதிரோ னுற்றிடினும்
வீசுமொன்பதினிற் பாவர்மேவ பிதாமெய் யுயிர்பிரியும்.

(இ-ள்) அஷ்டமம் - பாக்கியம் - கருமம் என்று சொல்லும் ஜெனன ராசிக்கு 8-9-10-இவ்விடங்களில் கொடிய பாவிகள் இருக்க, 9-ஆம் வீட்டோன் 6-8-12-ஆம் ராசியிலிருந்து பலமற்றிருக்க, 9-ஆம் ராசியில் குஜன் சூரியன் இருந்தாலும், அல்லது மற்றுமுள்ள சனி-ராகு-கேது முதலிய கொடியவர்கள் இருந்தாலும், அவன் பிதாவினுடைய உயிர் பிரிந்து போம் எ-று.

(வி-ரை) "பாரப்பா பாக்கியனும் ஆரோன்வீட்டில்
பகருகின்ற சனியோடு வெய்யோன்மேவ
கூறப்பா குழவிக்கு பாக்யமுண்டு
குவலயத்தில் பிரசங்கி செய்யுளுள்ளோன்
வீரப்பா மற்றவிடந் தனிலேநிற்க
வினோதனும் கூத்தாடி வேஷக்காரன்

சீரப்பா போகருட கடாக்ஷத்தாலே
செயலறிந்து புவியோர்க்குச் செப்புவாயே"

என சூரியன் சனி இவ்விருவரும் 9-ஆம் ராசியிலிருந்தால் மேற்செய்யுளில் சொல்லியபடி பிதுர் தோஷமே ஆயினும், அந்த ஜாதகனுக்கு அநேக பாக்கியமுண்டு. இப்பூமியில் பிரசங்கம் செய்யும் வித்துவானும், வினோத நாடகம் நடிப்பவனும், இவனுக்கு கடவுள் கிருபையால் எல்லா நன்மையும் உண்டென போகமுனிவர் கூறியபடி நன்மை தீமை அறிந்து கூறுக. 13

வேறு

பிரியமுட னொன்பதாமிடத் ததிபன்புடத்தில்
பெருங்குளிகன் றனைவாங்கிப் பெற்றிடுராசியிலே
நெறியயிலுந் தமனியனுர் தாமருவுங்காலம்
நிரியாண மந்தவரு டத்தில்வருமவர்தம்
குறிகாணும் படிவெய்யோன் புடத்தைவைத்துக்கொண்டு
குலவுமொன்ப தாமிடத்தோன் புடமதனைவாங்கி
செறியுமந்த ராசியே மாதங்களாகத்
தெளிந்துபிதா நிரியாணந் தனையருளுவீரே.

(இ-ள்) ஒன்பதாம் ராசியதிபன் ஸ்புடத்தில் குளிகனை வாங்கிக் கண்ட ராசியில், சனி தினசரி கோசாரப்படி இரண்டரை வருஷகாலம் பிரவேசிக்கும்போது பிதாவுக்கு நிரியாண குறிகாணும் வருடமாம். சூரியன் ஸ்புடத்தை வைத்துக்கொண்டு, 9-ஆம் ராசிநாதன் ஸ்புடத்தை வாங்கிக் கண்ட தொகையை மாதமாகக் கணக்கிட அம்மாதத்தில் பிதா மரணம் அடைவாரென்று சொல்லுவாயாக எ-று. 14

வேறு

அருளுந்தந்தை காரகனை யறிந்தேபலன்க ளுரைசெய்ய
பரிதிக்கிருபுற மாரேனும் பாவரிருக்கப் பாவர்களும்
துரிதாய்நோக்க மிருந்ததனுற் சொல்லுங்குழவி கருப்பத்தில்
தெரியவிருக்கப் பிதாவரிட்டஞ் செப்புங்கணித வல்லோரே.

(இ-ள்) பிதுரு காரகனாகிய சூரியனைக்கொண்டு பலன் சொல்லவேண்டுவது எப்படியெனில், சூரியனுக்கு இருபுறத்திலும் பாவகிரகங்கள் சேர்ந்து பலம் பெற்றுப் பார்க்க, அந்த ஜாதகன் கெர்ப்பத்தில் இருக்கும்போதே, அவன் பிதா இறந்துபோவான் என்று கணித சாஸ்திரவல்லோர் கூறுவர் எ-று. 15

பாக்கிய பலன்

வேறு

உறுமொன்ப தாமிடத்தோன் வெகுபலவானாகி
உற்றவிடத் ததிபதி கேந்திரத்திற்பாக்கியவான்
பெறுந்தந்தை தனிலதிகன் கீர்த்திமானரசன்
பிரியமுறச் சஞ்சரிப்பன் பிரதாபசாலி
அறிவுறு பாக்கியாதி பிதுர்காரகனைக்கூடி
ஆறினுறப் பிதாவுரைகேட் டருள்வனொன்பானதிபன்

பிறியாமலிருந்த நவாங்கிசத் தாதிபதியைப்
பிதுர்காரகன் பார்க்க குருபக்திப்பிரியன்.

(இ-ள்) ஜெனன ராசிக்கு 9-ஆம் வீட்டோன் மேன்மையான பலம் பெற்றும், ஷெ ராசிக்குடையோன் கேந்திரத்திலும் இருக்க, அந்த ஜாதகன் மிகுந்த பாக்கியவானுவான். அன்றியும் அவன் தந்தையைவிட மேலான அந்தஸ்தும் கீர்த்தியும் உடையவனாய், அரசர்களெல்லாம் இவனைப் பார்த்துச் சந்தோஷிக்கத்தக்க விதமாய் நடந்து கொள்ளுபவனும், பிரதாபசாலியாகவும் இருப்பான். பாக்கியாதி என்னும் 9-ஆம் ராசியதிபதி பிதுர்காரகனென்னும் சூரியனைக்கூடி, ரோகமென்னும் 6-ம் ராசியிலிருக்க, பிதாவின் சொல்லைத்தவரான். 9-ஆம் வீட்டோன் இருந்த அங்கிசாதிபதியை சூரியன் பார்ப்பானுகில் அந்த ஜாதகன் தன் குரு முதலிய மேலானவர்களின்மீது பக்தி விசுவாசத்தோடு இருப்பான் எ-று.

(வி-ரை) 9-ஆம் வீட்டோனைப்பற்றிய பலனையே மேலே சொல்லினராயினும், இன்ன கிரகமென்று குறிப்பிடவில்லை. 9-ஆம் வீட்டோன் பலம் பெற்றும், அவன் நின்ற ராசிநாதன் கேந்திரத்திலும் இருக்க, அந்த ஜாதகன் தன் தந்தையைவிட மேலானவனென்று சொல்லினர்.

"பாரென்று சொன்னபோது பாக்கிய ஸ்தானந்தன்னில்
சாரென்று குருவினேடே சந்திரன் பகைத்துநின்றால்
வாரென்று கேட்டபேர்க்கு மாமனார் வீட்டிற்சேர்வன்
கூறென்று முனிவர்சொன்ன குறிதப்பா தென்றுகூறே"

என 9-ஆம் இடமென்னும் பாக்கிய ஸ்தானத்தில் குருவும், சந்திரனும் பகைத்து நின்றால், அந்த ஜாதகன் தன் மாமனார் வீடுபோய்ச் சேர்வான் என்றும், இவை தப்பாதென்றும், கூறியதால், 9-ஆம் ராசியில் நின்றகிரகம் முன் சொன்னபடி பலம் பெற்றிருந்தால் பிதாவினால் அதிக செல்வாக்கு உடையவன் என்றும், பகை முதலியவைகளால் பலமிழந்திருந்தால் அதற்குத் தக்க பலனும் சொல்லுக. 16

பிரியமுடன் பிறைக்கைந்தாம் வீடுசரமாகப்
பெருகிய லக்கினத்துக் கைந்தாம்வீடுசரமாய்
நிறையுபூ ரணமான அயிஸ்வரியனென்பர்
நீள்சரமுந் திரமாகி னிகழ்ந்துபலன்பாதி
அருமைபெருஞ் சரத்துபய மாகிற்காற்பங்காம்
ஐஸ்வரிய மெனப்பகர்வ ரம்புலிக்கஞ்சானக்
குருமனைகண் முதற்கொண்டு லக்கினத்துக்கைந்தைக்
குணமுடனே கண்டுபலன் கூறிடவேவேண்டும்.

(இ-ள்) சந்தோஷத்தைத் தரானின்ற சந்திரன் நின்ற ராசிக்கு 5-ஆம் வீடும், ஜெனன ராசிக்கு 5-ம் ராசியும் சராராசியாக இருந்தால், அந்த ஜாதகன் பூரண ஐஸ்வரியனுவான். மேற்சொன்ன இரண்டு க்ஷேத்திரமும் சரம் ஸ்திரமுமாக இருக்கில், மேற்சொன்ன பலனில் அரைபலன் உண்டு, சரமும் உபயமுமாக இருக்கில், கால் ஐஸ்வரியவான் என்றும், சந்திரன் நின்ற ராசிக்கு 5-ஆம் ராசியையும், ஜெனன ராசிக்கு 5-ஆம் ராசியைக் கொண்டே அவன் ஐஸ்வரியத்தையும் யோகத்தையும் கூறவேண்டும் எ-று.

(வி-ரை) மேற்சொன்னபடியே லக்கினத்திற்கு 5-ஆம் ராசியும், சந்திரனின்ற ராசிக்கு 5-ஆம் ராசியும் கொண்டு சொல்வதோடு, அவ்வீட்டிற்கு

உடையோர் இருந்த நக்ஷத்திரத்தைக் கொண்டும் சொல்லவேண்டுவது அவசியம்.

"உத்திர மிரேவதிக்கு ளுயர்வெள்ளி இருக்குமேனும்
சித்தியாம் விசாகநல்லுத் திராடத்திற் குருநின்றாலும்
புத்திசேர் பூராடத்தில் புதன்செவ்வா யிருக்குமேனும்
மத்திபம் பூரட்டாதி மால்கேட்டை ரவிக்குசெல்வம்"

என உத்திரம்-ரேவதி இந்த நக்ஷத்திரத்தில் சுக்கிரன் இருக்க நன்மையும் சித்தியும் உண்டு. விசாகம் உத்திராடத்தில் குரு நின்றாலும், பூராடத்திற் புதன் செவ்வாய் நிற்க மத்திய பலனாகும். பூரட்டாதியில் புதனும், கேட்டையில் சூரியனும் இருக்க, செல்வவான் ஆகுவனென்று சாதக சிந்தாமணியில் சொல்லியபடியும் ஆராய்ந்து கூறுக. 17

வேண்டியதோ ரொன்பதா மதிபதியுங்குருவும்
விரும்பிய கேந்திரத் திரிகோணங்களிலேமேவில்
ஆண்டகையே பாக்கியவா னிவரிருவருடனும்
அன்புட னென்பானிடத்தி லனுகினுமிவர்மூவர்
பூண்டுவரு மகாதிசையி லாபாதிபுசிப்பிலேதான்
பூரணபாக் கியஞ்சேரு மேழாமதிபனைத்
தீண்டிற லாபாதியுறவாய்க் கூடினல்லோர்
செறியுமனை யுறிலவர்க டிசையிற்பாக்கியமே.

(இ-ள்) யாவரும் கோரப்பட்ட செல்வத்தை தரவேண்டிய ஒன்பதாம் வீட்டதிபதியும் குருவும் கூடி, கேந்திரம் திரிகோணம் இவ்விராசிகளில் இருக்க, தன் வாழ்நாள் வரையில் பூரண செல்வவந்தனுகவே இருப்பான். மேற்சொல்லிய மூவரும் சேர்ந்து 9-ஆம் வீட்டிலேயே இருக்கில், இம்மூவர்களின் திசைபொசிப்பில், அதாவது கேந்திரம் அல்லது திரிகோணாதிபதி, பாக்கியாதிபதி இம்மூவர்களின் திசையில் 11-ஆம் வீட்டோன் புத்தியில் அந்த ஜாதகனுக்கு பூரண ஐஸ்வரியம் சேரும். 7-ம் ராசிநாதனை 11-ஆம் ராசிநாதன் உரவாகக்கூடி சுபர்களின் க்ஷேத்திரங்களில் இருக்க, அவர்கள் திசையில் பலனையும் பாக்கியத்தையும் கொடுப்பார் எ-று.

(வி-ரை) பாக்கியமடையுங் காலங்கள் மேற்சொன்னபடியே திசையைக் குறித்துச் சொல்லவேண்டுவதோடு வயதையும் குறித்துச் சொல்லவேண்டுவது அவசியம் எப்படியெனில்,

"சாமிதான் சுபனேயாகி சதிருடன் சுபரைக்கூடித்
தோமிவர் கோத்தமத்திற் சொலுமுச்ச மாக்ஷிநிற்கிற்
பூமியும் கேந்திரமேற பொன்னவ னுதயநிற்கிற்
சேமிய ஜனனத்தொட்டே சிறந்தபாக் கியவானுவான்"

என ஜெனனராசியதிபதி சுபனுகவும் அவன் சுபர்களோடும், சுபவர்க்கோத்தமத்திலும் உச்சம் ஆக்ஷியாய் நிற்க, குரு ஜெனன ராசியிலும், புதன் கேந்திரத்திலுமிருந்தால் அவன் தனது ஜெனனுதி வயது முதல்கொண்டே பாக்கியவானுகுவான் என்று சாதகசிந்தாமணியில் கூறியபடி ஆராய்ந்து இன்னின்ன காலங்களில் உண்டாகுமென்று சொல்லுக. 18

மேயலாபாதியு மேழாதியு மித்துருவாய்
மேலோர்கள் வீட்டிலுறச் சன்மாதிபதியும்

ஆயுமிவர் மூவருமொன்றாய்க் கூடியிருக்கில்
ஐஸ்வரியஞ் சீவபரியந்த மட்டுண்டென்னும்
நேயமுட னென்பதா மிடத்ததிபன்சாதி
நிசமறிந்தே யவர்மரபின் னிருவர்களினாலே
தூயசவு பாக்கியங்கள் சேருமென்றேநல்ல
சோதிடநா லுரையுணர்ந்தோர் சொல்லுவர்கண்டீரே.

(இ-ள்) லாபஸ்தானாதிபதி என்னும் 11-ஆம் வீட்டோனும் 7-ஆம் வீட்டிற்குடையவனும் மித்துருவாகி, மேன்மைபெற்ற சுபகோட்களின் ராசிகளில் அமர்ந்திருக்க, ஜெனனராசியதிபதியும் மேற்சொன்ன இருவருடனும் சேர்ந்து இருக்கில் அந்த ஜாதகனுக்கு தன் ஜீவபரியந்தம் ஐஸ்வரியம் உண்டென்று கூறுவர். 9-ஆம் வீட்டிற்குடையவன் யாரெனவறிந்து அந்தந்த கிரகங்களின் * ஜாதி அறிந்து, அந்தந்த மரபினாராலும் செல்வமுள்ளவர்களாலும் அந்த ஜாதகனுக்குச் சகல சௌக்கிய பாக்யமுண்டாகுமென்று சோதிடநூலறிந்தோர் கூறுவர் எ-று.

* கிரக ஜாதிகளாவன

குரு-சுக்கிரன்	பிராமணன்
சூரியன்-செவ்வாய்	க்ஷத்திரியன்
புதன்-சந்திரன்	வைசியன்
இராகு-கேது-சனி	சூத்திரன்

சிலர் சனி-இராகு-கேதுக்களை நீசஜாதி என்றும் கூறுவர். இவ்வாறே கிரகங்கள் இருக்கும் அளவறிந்து இன்ன ஜாதியரால் பாக்கியம் சேருமென்று கூறுக. 19

கண்டுலாபாதிபதி பாக்கியாதிபனும்
களத்திரத்தானத்திருக்கப் பாக்கியலாபந்தான்
மிண்டியதோர்கேந்திரமா யுச்சவீடாக
மேவியவேழாமதிபன் சுபக்கிரகமாகி
மண்டியபாக்கியலாபத் தானத்திலிருக்க
வரும்பலபாக்கியமவன்றன் மனைவிக்குச்சுகமாம்
திண்டிறலாந்தோளியதா மிவர்களொடுஞ்சான்றோர்
செறியும்பாவாதியற்குச் செல்வமிகச்சேரும்.

(இ-ள்) லாபாதிபதி என்னும் 11-ஆம் வீட்டோனும், பாக்கியாதி என்னும் 9-ஆம் வீட்டோனும், களத்திர ஸ்தானமென்னும் 7-ஆம் ராசியிலிருக்க, அவனுக்கு லாபமுண்டு. மேற்சொன்ன 7-ஆம் இடமானது கேந்திரம் உச்ச வீடாகவும், 7-ஆம் வீட்டிற்குடையோன சுபகோட்களில் ஒருவனாகவும் இருந்து பாக்கிய ஸ்தானம்பெற, அந்த ஜாதகனுக்கு பற்பலவிதமான பாக்கியம் உண்டாவதோடு அவன் மனைவிக்கும் சுகம் உண்டு. பல்லக்கு முதலியவைகளும், ஒடம் தோணி முதலியவைகளும் உண்டு. இவர்களோடு பாவகிரகங்கள் கூடியிருக்கினும் அளவிறந்த செல்வம் சேரும் எ-று.

(வி-ரை) "ஒன்பது பத்துக்குடையா றெட்டுபதி னொன்றதிபர்
இன்ப யோகங்களில்லை யென்றிடினும்-பின்னர்திரி
கோணேசர் சம்மந்தங் கூடிலும் யோகங்களுண்டா
மாணேறு யோகமுடை யோர்க்கு"

என்றபடி 9-10-ஆம் ராசிக்குடையோர் 6-8-11-ஆம் ராசிநாதர்களாகில் அவர்களுக்கு யோகமில்லை என்றாலும், அவர்களோடு திரிகோணராசிக்கு உடையோர் கூடினால் அவனுக்கு யோகமுண்டென்றும் சொல்வாயாகவென்று சந்திர காவியத்தில் சொல்லியபடி, 7-8-11-க்குடையோர் தன் பலங் குறைந்திருந்தாலும், அவர்களோடு சேர்ந்த கிரகம் 5-9-க்குடையவர்களாக இருந்தால் திரண்ட செல்வமும், யோகமுமே அளிப்பார் என்று ஆராய்ந்து கூறுக. 20

சேருமொன்பா னிடத்திருந்த பாக்கியவாதிபனும்
திறல்குரு மூவருநீச மத்தமனஞ்செறியக்
கூரிய பாவியுமாய் சத்துருவீட்டிலிருக்கக்
குலவுவிய மாறெட்டிற் கூடியேநின்றாலும்
நேரும்பாக் கியநட்டம் பாக்கியவாதிபனும்
நிருபனுநின் றிடுவீட்டோ னீசமத்தமனமாய்
பாரிலிரப் பான்பாக்கி யாதிகுருவுடனே
பாவிகள் கூடினும்புசிப்பன் பலிகரத்திலெடுத்தே.

(இ-ள்) ஒன்பதாம் வீட்டோனை பாக்கியாதிபதியும், 9-ஆம் ராசியில் நின்ற கிரகமும், குருவும் நீசம்பெற்று அஸ்தமயமாகியும், கொடிய பாவிகளுடன் கூடியும், தனக்குச் சத்துரு வீட்டிலும் நிற்க, அந்த ராசி ஜெனன ராசிக்கு 6-8-12-ஆம் ராசியாக அந்த ஜாதகனுக்கு தனபாக்கிய முதலிய செல்வங்களுக்கு நஷ்டமும், பாக்கியாதிபதியும் லக்கினாதிபதியும் நின்ற வீட்டிற் குடையோன் நீசம் அஸ்தமனம் பெற்று இருக்க, அந்த ஜாதகன் இப்பூமியில் இறந்துண்பவனாவான். பாக்கியாதிபதி, குரு, இவர்களோடு பாவிகள் இருக்கில் கரபாத்திரத்தால் சம்பாதித்து உண்ணுவான் என்றும் சொல்லுக எ-று.

(வி-ரை) "பேசும்ராசி யிடத்ததிபன் பேணிக்கோணத் திருந்திடவே
காசும்பணமும் பூஷணமும் களத்திரபுத்திர சுகமுண்டாம்.

என்ற வாக்கியப்படி, லக்கினாதிபதி 5 - 9 - இவ்விடங்களில் இருக்க, அவனுக்கு பொன் பூஷணம், களத்திர புத்திர சுகம் இவைகளுண்டென்றும்,

"நல்லஎழிற் குஜன்சனியும் நாடியிருக்க சுங்கன்றனைப்
பொல்லாரிருந்து நோக்கினுமே போவான்குடும்பந் தனைவிட்டே
இல்லாள்மகவும் நில்லாது எரும்பக்கம் மனைகளிலே
எல்லாம்போகும் களத்திரமும் ஏமனூருக் கேகுவனே."

என 7-ஆம் ராசியில் குஜன் சனியும், சுக்கிரனைப் பாவகிரகங்கள் பார்க்க, அந்த ஜாதகன் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து போவான். புத்திர களத்திரம் சொல்லாமல் இறந்து போவார்கள். தன் மனையிலுள்ள பொருளும் மற்றுமுள்ள எல்லா வஸ்துவும் நாசமாய்ப் போகும் என்றும், 6-10-12-இவ்விடங்களில் இராகு-சனி-சூரியன் இவர்கள் சேர்ந்தால், அவன் பிதாவின் பெருமை இழந்து, பாக்கியமில்லாது எல்லாம் நசித்துப்போமென்றும் மற்றும் வேறு விதமாயும் பகுத்துச் சொல்வாயாக. 21

வேறு

எடுத்தபத்தா மதிபதியேழிறை
கடுத்தமித்திராகிப் பலனுடன்
கொடுத்தவுத்தமர் வீட்டினிற்சூழ்ந்திடப்
படைத்தபாரியினல் வரும்பாக்கியம்.

(இ-ள்) 10-ஆம் ராசியதிபனுக்கும் 7-ஆம் ராசியதிபனுக்கும் மித்துருவாகி பலம்பெற்று, பலனைத் தரத்தக்க உத்தமர் வீடுகளில் இருக்க, அந்த ஜாதகனுக்கு தன் மனைவியால் மேலான செல்வம், புகழ், கீர்த்தி உண்டாகுமென்று சாஸ்திரவல்லோர் கூறுவர் எ-று.

(வி-ரை) இவ்வாறே பத்தாம் வீட்டோனுடன் எந்த கிரகம் சேர்ந்தாலும், அவர்கள் மித்துருவாகவும் பலம்பெற்றும் இருப்பார்களேயானல் அவர்கள் எந்த ஸ்தானத்திற்கு உடையவர்களென அறிந்து அவர்களால் செல்வம் உண்டென்று கொள்க. 22

வேறு

பாக்கியஞ்சேர்வகை பிருகுமதியரசன்கூடிப்
பத்தாகுமிடத்திருக்கும் பலன்றனவானவன்
தேக்கியசத்தியவசனன் கல்விசெறிநிபுணன்
திராஜர்வெகுமானஞ் செய்யமகிழ்ந்திருப்பன்
தாக்கியபொன்சனிபுந்தி மதிசெவ்வாயைவர்
தாமொருவீட்டினிலிருக்கத் தனவானுமாகி
ஊக்கமுறுமுடியரசர் சன்மானஞ்செய்ய
உலகில்வெகுபாக்கியமுமுண் டாகுங்கண்டீர்.

(இ-ள்) ஒவ்வொருவருக்கும் பாக்கியம் சேரும் வகை விபரங்களை ஆராய்வது எப்படியெனில்? சுக்கிரன்-குரு-சந்திரன் இம்மூவரும் கூடி ஜென்ன ராசிக்கு 10-ஆம் ராசியில் இருக்க, அதன்பலன் தனவந்தனாக இருப்பான். மேலும் சத்திய வசனமுடையவனும், கல்வி நிறைந்த நிபுணனும், மேன்மையைப் படைத்த ராஜாக்களால் சன்மானம் செய்யவும், அதனால் சந்தோஷத்தோடு இருப்பான். குருவோடு சனி-புதன்-சந்திரன்-குஜன் இவர்கள் ஐவரும் ஓர் வீட்டில் இருக்க, அந்த ஜாதகன் தனவந்தனாவதோடு ஊக்கத்துடனும், முடிகளை அணிந்திரானின்ற ராஜாக்களால் சன்மானமும், இவ்வுலகில் அநேக பாக்கியத்தோடும் வாழ்ந்திருப்பான் எ-று. 23

வேறு

கண்டபத்தாமாதிபதி கருதுமுச்சர்வீட்டிலிருந்
தண்டிப்பத்தாமிடம்பார்க்கி லவனுக்குண்டாம்பூமிசெல்வம்
மிண்டிநீசர்சத்துருக்கள் வீட்டிலிருந்தேமிகநோக்க
அண்டுந்தூரதேசத்து அன்னியராலுமயிஸ்வரியம்.

(இ-ள்) கருமஸ்தானதி என்னும் 10-ஆம் வீட்டதிபதி உச்சவீட்டிலேயே இருந்து, தன் சுயவீடான 10-ஆம் ராசியைப் பார்க்கில், அந்த ஜாதகனுக்குத் தன் பூமியிலேயே நிறைந்த செல்வம் உண்டு. நீசம் சத்துரு முதலிய க்ஷேத்திரங்களில் இருந்து, மேற்சொல்லிய 10-ஆம் ராசியைப் பார்க்க, தூர

தேசத்தில் இருக்கும் அந்நிய ஜெனங்களால் ஐஸ்வரியம் உண்டென்றும் சொல்வாய் எ-று.

(வி-ரை) 10-ஆம் வீட்டில் உச்ச கிரகம் நிற்கும் பலன் விபரங்களை அடுத்த 10-ஆம் பாவகத்தில் காணலாம். 24

பத்தாம்பாவகப் பலாபலன்

பத்தாம் பாவகத்தைக் குறித்து, விசேஷமாய் அவரவர்கள் செய்யும் தொழிலைக் குறித்தும், யோகத்தைக் குறித்தும், அந்த ஜாதகனுடைய யோக பாகங்களைக் குறித்தும், செய்கை முதலியவைகளைக் குறித்தும் யோசிக்கவேண்டிய இடமென முன் கூறிய பொதுப்பாவகம் 10-ஆம் செய்யுளில் கூறியுள்ளார். இதையே கருமம் என்றும் கூறுவர். ஆகையால் கன்ம பலனைக் குறித்துப் பேசுவார்.

பத்தினில் சனிசேய்நிற்க பராக்கிரம உத்தியோகத்தை
சுத்தமாய் செய்துக்கொண்டு சுகஜீவி யாகச்செய்து
சித்தமு மிகமகிழ்ந்து ஜீவனஞ் செய்துகொண்டு
பத்தினி புத்ரரோடு பாரினில் வாழ்வர்தாமே.

(இ-ள்) ஜீவனஸ்தானமாகிய பத்தாம் வீட்டில் சனிபகவானும் செவ்வாய் பகவானும் இருந்தால் கைத்தொழிலிற் கைதேர்ந்தவனாய் உத்தியோகஞ் செய்துக்கொண்டிருப்பான். ஆனால், சனிபகவான்-துலாராசியிலும், செவ்வாய்பகவான்-மகரராசியிலும் உச்சம் பெற்றிருந்தால் உத்தியோக சாலையில் அதிகாரியாயிருந்து சகலராலும் புகழ்ந்து பேசும்படியான கீர்த்திவானாயிருப்பதற்காகும் எ-று. 1

குருசுக்கிரன் புதனும்சந்திரன் கூடியே பத்தில்நிற்க
பெருமையாய் கல்விகற்று பேசிடும் ராஜாங்கத்தின
அருமைசே ருத்தியோகத்தில் அமர்ந்துல கோர்கள்மெச்ச
பொருள்பல சேகரித்து பூமியில் வாழ்குவானே.

(இ-ள்) குரு-சுக்கிரன்-புதன் ஜீவனஸ்தானத்திலிருந்தால் வித்தியாவிஷயத்திற் கீர்த்தியடைந்தவனாய் கல்விகற்று, ராஜாங்க உத்தியோகம்செய்தும், திரவியசேகரஞ்செய்து குடும்பரக்ஷகனாய் மனைவிமைந்தர்களுடனே வாழ்ந்திருப்பான். ஆனால், குரு - ஒன்பதாமிடத்திலும், சுக்கிரன்-பத்தாமிடத்திலிருந்தால் விமரிசையாய் தானதருமஞ் செய்தாலும், செலவுக்கு தகுந்த திரவிய சேகரஞ்செய்து பெருமையாய் வாழ்ந்திருப்பான் எ-று. 2

பத்தினில் ராகுகேது பக்ஷமா யிருந்திட்டாலும்
கைத்தொழில் செய்துநாளும் கஷ்டஜீவன மாய்வாழ்ந்து
பத்தினி மைந்தரோடும் பாரினில் வாழ்ந்திருந்து
நித்தியா னந்தமாக நிலந்தனி லிருப்பான்பாரே.

(இ-ன்) இராகுபகவானாகிலும் கேதுபகவானாகிலும் பத்தாம் வீட்டிலிருந்தால், கைத்தொழில் வேலை செய்துக்கொண்டிருந்த விதமாகவே மாந்திரீகம் வைத்தியஞ் செய்து அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமில்லாமல் திரவிய சேகரஞ் செய்துக்கொண் டிருப்பதற்காகும், மனைவிமைந்தர்களும் மிகவும்

ஆசாபாசமாயிருப்பார்கள், யோக்யதா பக்ஷத்துடன் குடும்பரக்ஷகனுயிருப்பதற்காகும் எ-று. 3

கருமபலன்

பத்தாமிடத்திலட்டமத்தோன் பாவருடனேகூடிநிற்கப்
பத்தாமாதிபலம்பெறவே பாவர்பார்க்கத்துற்கன்மம்
பத்தாமதிபன்பலவானுய்ச் சுபக்கோளுடனும்பரிந்தேழில்
ஒத்தகான்கிற்சன்மத்தி லுறினற்கருமமுள னுவன்.

(இ-ள்) அஷ்டமாதி என்னும் 8-ஆம் வீட்டோன் பாவகிரகங்களுடன் கூடி 10-ஆம் இடமென்னும் கருமஸ்தானத்தில் இருக்க, 10-ஆம் ராசியதிபதி பலம்பெற்று பாவகிரகங்களால் பார்க்கப்பட்டால் துற்கருமங்களையே செய்வான். 10-ஆம் வீட்டோன் பலம்பெற்றும் சுபகோட்களுடன் சகிதம் பெற்றும், 7-ஆம் இடமென்னும் சப்தம கேந்திரம் பெற, நற்செயல்களையே செய்வான் எ-று.

(வி-ரை) அஷ்டமாதிபதி 10-ஆம் ராசியில் இருக்க, துற்கருமம் செய்வான் என்றனர். துற்கருமம் என்றால் என்ன என்பதை ஆராயுமிடத்து சாதக சிந்தாமணியின் 1507-ஆம் செய்யுளில்,

"அஷ்ட மாதிபனே பத்திலன்புட னிருப்பானுகில்
இஷ்டமாம் பிதுர்செல்வத்தை யெய்தவா னென்னலாகும்".

என்றனர். அதாவது பிதுர் செல்வங்களைநாசம் செய்வான் என்பதாகும். அவ்விதம் பிதுர் செல்வத்தை நாசம் செய்வான் என்பதை, எவ்விதத்தில் நாசம் செய்வானென்பதை அறியவேண்டின், அஷ்டமாதியின் குணமறிந்து ராஜவழக்காலென்றும், ஸ்திரீகளால் என்றும், மற்றும் வேறு விதங்களால் என்றும் ஆராய்ந்து சொல்லுக. 4

ஆவன்ஞானிசனிநாலி லமர்ந்தாலந்தச்சனிபத்தில்
மேவிற்றீர்த்தயாத்திரையை விரும்பித்தவமேசெய்திடுவன்
தாவுஞ்சன்மாதிபன்பத்திற் றரிக்கிற்கன்மமுளன்பத்தில்
கோவுங்கன்மகாரகனும் பல்மேற்கன்மங்குறைவில்லான்.

(இ-ள்) மகர கும்பத்திற்கு ஆக்ஷிநாதனுகிய சனி சுகஸ்தானமாகிய நான்காம் ராசியில் இருக்கில் ஞானியாவான் என்றும், மேற்படி சனி 10-ஆம் ராசியில் இருந்தால், யாத்திரை செய்ய விரும்புவதோடு தவம் செய்யவும் ஆசைப்படுவான். மேற்படி 10 ஆம் ராசியில் ஜெனன ராசியதிபதி இருக்க செய்தொழிலை புடையவனும், மேற்சொன்ன பத்தாம் ராசியில் குருவும், அவ்வீட்டிற் குடையோனும் சேர்ந்திருக்கில் எதொரு தொழிலையும் குறைவின்றி செய்வான் எ-று.

(வி-ரை) நான்காம் ராசியில் சனி நிற்கில் ஞானியும், 10-ஆம் ராசியில் நிற்கில் யாத்திரை தவம் உண்டென்றனர்.

"பரிவாம்வியத்தில் ராகுநினும் பத்தநாலுஞ் சரமாக
விரிவாம்சனிய னிருந்திடினும் வெள்ளிமதியி னுடன்கூடி
அரியகருமம் வியத்துறினும் மானராகு சனிநாலிற்
செரியவரினுங் குருவியத்திற் செறிந்தேசாஸ் திரமென்பார்"

என 12-ல் ராகு நின்று 10-4-இவ்விராசிகள் சரராசியாகி அவ்விடங்களில் சனி நின்று சுக்கிரனேடு சந்திரனுங் கூடி 10-12-ஆம் ராசிகளில் இருக்க,

சனியும் ராகுவும் நான்காம் இராசியில் நின்றாலும், 12-ல் குரு நின்றாலும், அவன் அந்நிய தேசங்களிலேயே இருப்பனென சாதக சிந்தாமணியில் சொல்லியபடி யாத்திரை என்பதை நன்கு ஆராய்ந்து கூறுக. 5

குறைவிலொன்பதாமிடத்திற் கோவும்பலமாய்ச்சுபர்வீட்டில்
உறையைச்சுபக்கோள்பார்க்கமதி யுகந்துசலராசியிலிருக்க
நிறைந்தகங்காநதிதோய்வன் பின்னும்நிலவுச்சம்பெறவே
அறையும்பத்திற்சுங்கனுற தீர்த்தம்பலவுமாடுவனே.

(இ-ள்) தீமையை விளைவிக்கப்படமாட்டாத 9-ஆம் வீட்டதிபதி பலம் பெற்று நற்கோட்களின் க்ஷேத்திரங்களில் நின்று, நற்கோட்களின் திருஷ்டி பெற்றும் சந்திரன் ஜலராசியில் இருக்க, அந்த ஜாதகன் கங்காநதி சென்று தீர்த்தமாடுவன். ஜலராசியில் நின்ற சந்திரன் உச்சம்பெற்று இருந்தும், 10-ஆம் ராசியில் சுக்கிரன் இருக்க, மேற்சொன்னதைப் போன்ற பற்பல தீர்த்தங்களாடுவன் எ-று.

(வி-ரை) "போந்தகர் மாதி யொன்பதிற் கூடியே
புக்கநல்ல பாக்யாதியை கூடினும்
மேர்ந்து பொன்குரு தர்மங்க ளால்வரு
மிசையும் கர்மாதி பாக்கிய கேந்திரமுற
வாய்ந்த செல்வம் பிரதாபநற் கீர்த்தியும்
வருத்தமின்றி வருந்தன போகமும்
சார்ந்த சூரியர் சம்மந்தரோ றருக்கு
மன்னரா றனுவுக் கன்பரே.

என 10-ஆம் வீட்டோன் 9-ஆம் ராசியில் பலம்பெற, அதாவது நட்பு-ஆக்ஷி-உச்சம் பெற, அல்லது 9-ஆம் ராசிநாதனுடன் கூடி நற்க்ஷேத்திரங்களில் இருந்தால் அவனுக்குப் பிரயாசை இல்லாமல் தருமதலத்திலும், குருதலத்திலும், அர்ச்சனைகள் சித்திக்கும். 10-ஆம் வீட்டோன் ஆக்ஷியாய் சுபனுயும் பிரபலனுகவும் இருக்க, எக்கிய கருமங்களும் தனமும் உண்டு. 10-ஆம் வீட்டோன் தனலாப கேந்திரத்தில் பலம்பெற பிரயாசையின்றி எல்லா லாபமும், ஐஸ்வரியப் பிரதாபமும் உண்டாகும். 10 ஆம் வீட்டோன் விரயஸ்தானத்தில் இருந்தால், அல்லது, 6-10-ஆம் வீட்டோன் பிரபலம் பெற்று நிற்க, அவன் சற்கருமங்களிலேயே தன் பொருளை சிலவழிப்பான். 10-ஆம் வீட்டோன் ரவி மதியோடு சிங்கம்-கடகம் இவ்விராசியில் இருந்தாலும் பார்த்தாலும் பட்டாபிஷேக மன்னர்களால் ஜீவிப்பான் என்றும், வீமேஸ்வர உள்ளமுடையானில் கூறியபடி 10-ஆம் ராசிநாதன் பலம் பெற்றாலும், அவை யாருடைய ராசியென ஆராய்ந்து அவனவன் கருமங்களைக் கூறுவது நலம். 10-ஆம் ராசியில் ராகு நின்றாலும் 10 ஆம் ராசி மீனமாக அதில் குரு நின்றாலும், அல்லது சந்திரன் இருந்தாலும், அவனுக்கும் கங்கா தீர்த்த முதலிய புண்ணிய ஸ்தானங்கள் கிடைக்கும் என்றும் கூறுவர். இதனை சாதகசிந்தாமணியில் 1440-ஆம் செய்யுளில் காணலாம். 6

வேறு

ஆடும்பத்தா மதிபன்சுபருடன்
கூடிமற்றிரு பாலுற்றகொற்றவர்
நீடிநிற்க நிரந்தரமன்பொடும்
தேடியேசிவ பூசைகள்செய்வனே.

(இ-ள்) பத்தாம் ராசியாதிபதி சுபகிரகங்களுடன் சேர்ந்தும், அவனுக்கு இருபக்கமும் சேர்ந்திருக்கும் கிரகங்கள் பலம் பெற்றும் இருப்பாரேயாகில், அந்த ஜாதகன் எந்த காலத்தும் நீங்காத அன்போடு பூஜைகளைப் புரிவான் எ-று.

(வி-ரை) 10-ஆம் ராசிநாதன் சுபகிரகங்களுடன் கூடி என்பதை அவனோடு சேர்ந்த கிரகம் யாரென அறிந்து,

"இந்து மந்த னிரவி குருபுதன்
வந்து பத்திர மற்றிடங் கூடினும்
உந்து பத்தெட்டுக் குள்ளவர் கூடினும்
மந்தரி லவமானம் செய் கர்மியே"

என சந்திரன்-சனி-சூரியன்-குரு-புதன் இவர்கள் கூடி 10-ஆம் ராசியில் இருந்தாலும், அல்லது 10-ஆம் ராசிக்குள் எந்த ராசியில் ஒன்றுகூடி, இருந்தாலும், அவன் பிள்ளைகளை அவமானம் செய்யும் துற்கருமியாவான் என்றும் சாதக சிந்தாமணியில் சொல்லியபடியாம். 7

செய்யசந்திரன் சன்மந்தனக்குமே
துய்யபத்தா மதிபதிசூழ்ந்திடும்
மெய்யிலங்கிசை யோன்பலமேபெறில்
பொய்யுறச்சுப கன்மம்புரிவனே.

(இ-ள்) கடகத்திற்கு ஆக்ஷிநாதனாகிய சந்திரன் நின்ற ராசிக்கு 10-ஆம் ராசிக்குடையவன், எவர் அங்கிசையில் இருந்தானோ, அந்த அங்கிசாதிபதி பலம்பெற்று நிற்பானேயாகில், அந்த ஜாதகன் பொய்யின்றி நற்கருமங்களையே செய்பவனாவான் எ-று.

(வி-ரை) சந்திரனைக்கொண்டு இன்னும் பலவிதமாகவும் ஆராய்ந்து சொல்லவேண்டும். எப்படியெனில், ஜெனனகாலங்களில் மேடராசியில் சந்திரன் இருந்து அவனை குஜன் பார்த்தாலும், கன்னியில் நின்ற சந்திரனை சூரியன் பார்த்தாலும், மிதுனத்தில் நின்ற சந்திரனை சூரியன் பார்த்தாலும், ரிடபம்-கடகம்-மகரம் இவற்றில் நின்ற சந்திரனை குரு பார்த்தாலும், கும்பம்-கன்னி இவற்றில் நின்ற சந்திரனை புதன் பார்த்தாலும், அந்த ஜாதகன் நரபதிக்குச் சமானமாய் இருப்பான் என்றும் கூறுக. இவை சாதக சிந்தாமணியில் சொல்லியபடியாம். 8

புரிகுசன்சனி பொன்மால்பளிங்குமே
பரிவுடனொரு வீட்டினைப்பற்றிட
அரியசற்குண சன்மார்க்கனாகியே
தெரியுஞானசிந்தைச் சிவயோகியாம்.

(இ-ள்) மேஷ விருச்சிகத்திற்கு ஆக்ஷிநாதனாகிய குஜனும், அவனுடன் சனி-குரு-புதன்-சூரியன் இவர்கள் ஐவரும் கூடி ஓர் வீட்டில் இருக்க, அந்த ஜாதகன் தேடுதற்கரிய சன்மார்க்க குணமுள்ளவனாகி, ஞான மார்க்கங்களை அறிந்த நற்சிந்தையையுடைய சிவயோகியாவான் என்றும் கூறுவர் எ-று. 9

ஆமெனும்பத்தாமதிபனற்கோளே யாய்த்தனலாபபாக்கியத்தில்
நீமமாயுச்சகேந்திரங்களிலு நிற்கனற்கன்மமேபுரிவன்
ஏமுறும்பவனும்நீசமத்தனுகச் சொல்லுமாறெட்டினில்வியத்தில்
தாமுறில்நல்லோர்தம்மையும்பழித்துத் தக்கதுர்க்கன்மமேபுரிவன்.

(இ-ள்) கருமாதிபதி என்னும் 10-ஆம் ராசிநாதன் நற்கோட்களில் ஒருவனாய் தனம் என்னும் இரண்டாம் ராசியிலாவது, பாக்கியமாகிய 9-ஆம் ராசியிலாவது, லாபமென்னும் 11-ஆம் ராசியிலாவது உச்சகேந்திரம் பெற்று இருந்தால், அந்த ஜாதகன் நற்செய்கைகளையே செய்வான். 10-ஆம் ராசி நாதன் கொடிய கோட்களில் ஒருவனாய் நீசம் அல்லது அஸ்தமயம் பெற்று, ஜெனன ராசிக்கு 6-8-12-ஆம் ராசிகளில் இருக்க, அந்த ஜாதகன் நல்லவர்களை பழிக்கவும், அவர்களுக்கு கொடிய சேஷ்டைகளையும், துன்பம் முதலியவைகளையுமே விளைவிப்பான் எ-று. 10

புரியுமீரைந்தாமதிபனற்கோளாய் புகழ்பலவானுமாய்ப்பத்தில்
தெரியவுற்றிடில்யாகாதிகன்மங்கள் செய்வனீரைந்திடத்ததிபன்
பரிவுடன்வியத்தானதிபைகூடிப் பண்புறுஞ்சுபபலமுடனே
அறியதோர்வியத்திலுறித்தனபதியா னநற்கன்மமேசெய்வன்.

(இ-ள்) ஜெனன ராசிக்கு தசம கேந்திராதிபதி நற்கோட்களுடன் ஒருவனாகி பலம்பெற்று, தன் சுயவீடாகிய 10-ஆம் ராசியிலேயே இருக்க, அந்த ஜாதகன் 'பற்பல யாகாதி கிருத்தியங்களைச் செய்வான் 10-ஆம் ராசிநாதன் விரயஸ்தானாதிபதியைக்கூடி சுபனாயும் பலம்பெற்றும், 12-ஆம் ராசியிலேயே இருக்க, நல்ல தனத்தையுடையவனும், நற்செயல்களைச் செய்பவனுமாவான் எ-று. 11

செய்ய்கன்மாதிகுருவுமாயுச்சஞ் செறிந்தசுக்கிரனுடன்கூடில்
துய்யயாகாதிகன்மமேபுரிவன் சூழ்ந்தகன்மாதியைத்தானும்
பய்யவேகுருசுக்கிரனுமேபார்க்கில் பண்ணுவன்யாகமேபலவும்
மெய்யகன்மாதிகுருவுமாய்நல்லோர் வீடுறவிரும்புவன்மகமே.

(இ-ள்) கன்மாதிபதி என்னும் 10-ஆம் ராசிக்கதிபன் குருவாக இருந்து உச்சம்பெற்ற சந்திரனுடன் கூடில், அந்த ஜாதகன் யாக முதலிய நற்செயல்களைச் செய்குவன். 10-ஆம் ராசியதிபதியை குரு-சந்திரன் பார்க்கில், அந்த ஜாதகன் அநேக யாகங்களைச் செய்வான். 10-ஆம் ராசிநாதன் குருவாக இருந்து நற்கோட்களின் வீடுகளில் இருக்க, அவன் நற்கருமங்களையே செய்ய ஆசைப்படுவான் எ-று.

(வி-ரை) "பன்னு மொன்பது பத்தி லிரவிசேய்
பொன்னுங் கூடிடில் புவியில மைச்சனும்"

என மேற்சொன்னபடியே குரு 10-ஆம் ஆதிபத்தியம் பெறின், யாகங்களைச் செய்வான் என்றாலும் குருவோடு சூரியன் செவ்வாய் கூடி 9-10-இவ்விடங்களில் இருந்தால் அவன் மந்திரியாவான்.

"மன்னுங் காரி மதிபுகர் கூடிடில்
தன்னில் வேந்தர் சமானமு மாவனே"

என்றபடி. குருவோடு சனி-சந்திரன்-சுக்கிரன் கூடியிருக்க, அரசர்களுக்குச் சமமாக இருப்பான் என்ற சாதக சிந்தாமணி வாக்கியப்படி குருவோடு நின்ற கிரக பலத்தையும் ஆராய்ந்து சொல்வது அவசியம். 12

விரும்புசுக்கிரனுங்குருவுமேபலமாய் மேவும்வீட்டதிபனற்கோளாய்
இரும்பலவானாயிருக்க மற்றவரோடெத்தனை சுபக்கிரகங்கள்
பெரும்பலமுடனேகூடினவிலக்கம் பெருமகம்புரிவனென்றுரைக்கும்
அரும்புகன்மாதிகுருவுமாய்ப்பலமே யாகில்வேதங்கள்மூன்றறிவன்.

(இ-ள்) அசாகுருவென்னும் சுக்கிரனும், தேவகுருவென்னும் குருவும் பலம் பெற்றிருக்க, அவர்கள் நின்ற ராசிக்குடையவர்கள் சுபகிரகமாகவும் அவர்கள் பலம் பெற்றும் இருந்து, அவர்களோடு எத்தனை கிரகங்கள் இருக்தனவோ அத்தனை யாகங்களைச் செய்வானென்று சாஸ்திரங்கள் கூறும். 10-ஆம் ராசியதிபதி பலம் பெற்று நிற்க, மூன்று வேதங்களைத் தெரிந்துகொள்ளுபவனுருவன் எ-று.

(வி-ரை) 10-ஆம் ராசிநாதன் உச்சம் முதலியவைகளால் பலம்பெறுவது விசேஷம். பத்தாம் ராசியதிபதி சனியுடன் சேரில் அந்த ஜாதகன் சூத்திரர் அண்டையிலும், வனவிருக்ஷங்களை வெட்டியும், பாபகர்மங்களைச் செய்வான். 10-ஆம் வீட்டோன் சுபருடன் கூடுகொளுகில் தெய்வங்களாலும் பிராமணர்களாலும், பிரம்ம வித்தையாலும் நல்ல மேலான பலனை அனுபவிப்பான். 13

அறிபுங்கன்மாதிபாவனுப்பாவ ரகத்தினிலிருந்துகன்மத்தைக்
குறியுடன்பார்க்கிற்சூத்திரகன்மம் கூசிடாப்பாவதுர்க்கன்மம்
செறியுடன்புரிந்தங்கிசைபெறவிருப்ப னிறைக்திடுங்குருசாகசமும்
செறியுமவ்வினையாற்சுபபலஞ்சிறிதாம் தீங்குறுபலன்திரளாமே.

(இ-ள்) ஜெனன ராசிக்கு பத்தாம் வீட்டிற்குடையோன் சனி-சூரியன்-குஜன் முதலிய பாவகிரகங்களில் ஒருவனுகவும், கொடிய கோட்களின் ராசியில் இருந்து 10-ஆம் ராசியைப் பார்க்கில், அவன் சூத்திர ஜெனங்களுடன்கூடி பாவச்செயல்களைக் கூசாமல் செய்குவன். இன்னம் நீய கிரகங்களினுடைய அக்கிசையிலும் சாரத்திலும் இருக்க, அவன் செய்யும் வினையால் பலன் அற்பமாவதோடு துன்பத்தைத் தரத்தக்க பலனே அதிகமாக விளையும் எ-று.

(வி-ரை) 10-ஆம ராசியில் கேது நிற்கத் தன் சுயஜென விரோதனும், பலமில்லாதவனும், ஞானி, லோபி, அக்கிய தேசசஞ்சாரன், ஸ்தூல சரீரம், ஆசாரம், சிலேத்ம ரோகம், சேவகத்தொழில் செய்பவன், யாசகம் செய்து ஜீவிப்பவனென்று சோதிடவல்லோர் கூறுவர். 14

திரமுறமொன்பானதிபதிகுருவாய்ச் செய்யவொன்பதிற்குருவுறினு
வரமுறம்பலர்களிடத்துபதேச வசனமும்வித்தையும்பெறுவன் [ம்
உரமுடனென்பானதிபதிமரபி லுரையுபதேசமும்பெறுவன்
பரமுறுமிவர்களுச்சகேந்திரத்திற் பற்றிடில்ஞானமேபலிக்கும்.

(இ-ள்) ஜெனன ராசிக்கு பாக்கியஸ்தானமென்னும் 9-ஆம் ராசியதிபதி குருவாகி, பாக்கியமாகிய 9-ஆம் ராசியிலேயே அமர்ந்திருக்க, அந்த ஜாதகனுக்கு வரப்பிரசாதமும் பலர்கள் இடத்தில் உபதேசமும் வித்தையும் அடைவான். உபதேசம் தருவது யாரெனில், 9-ஆம் ராசிக்கு உடையவர் எவரோ அவர்களாலேயே உபதேசம் பெறுவான். 9-ஆம் ராசியதிபதி உச்சனுகவும், கேந்திரம் பெற்றும் இருக்க, அவனுக்கு ஞானமார்க்கம் பலிக்கும் எ-று. 15

பலிக்குமேடமிடபமுடன் பகர்ந்தசிங்கம்பத்தாக
வலிக்குஞ்சுபகோணின்றிடினு மன்னுமவர்கோக்குற்றிடினும்
ஒலிக்குவேதமதிற்சொன்ன வுத்தமத்தன்மங்கள்தனைச்
சலிக்கச்செய்வனெனச்சொல்வர் தக்ககணிதவல்லோரே.

(இ-ள்) ஜெனன லக்கினத்திற்கு கரும ஸ்தானமென்னும் 10-ஆம் ராசியானது மேடம் - ரிடபம் - சிங்கம் இவைகளில் ஒன்ருக, இவ்விராசிகளில் நற்கோட்கள் நின்ருலும், அல்லது அவர்கள் தன் சுயவீடான 10-ஆம் ராசியைப் பார்த்தாலும், பிரகாசமாகிய வேதாந்தங்களிற் சொல்லிய உத்தம தரும மார்க்கங்களை தான் சலிக்கும்படி செய்வானென்று சோதிடவல்லோர்கள் கூறுவார்கள் எ-று. 16

ஆகுஞ்சன்மலக்கினத்தி லனுகும்ராகுமோரேழில்
வேகமுடனேதானிருக்க வேண்டுங்கேந்திரங்காரிபுகர்
தாகமுடனேபுதன்மூவர் தானுங்கூடச்சண்டாள
யோகமெனவேதானுரைப்ப ருண்மைகன்மமநாசாரம்.

(இ-ள்) ஜெனனராசி எந்த ராசியானுலும் அந்த ராசியில் கேதுவும், 7-ஆம் ராசியில் ராகுவும் அமர்ந்திருக்க, கேந்திர க்ஷேத்திரமென்னும் 1-4-7-10-ஆம் ராசிகளில் சனி சுக்கிரன்-புதன் இம்மூவரும் கூடி இருக்க, அவன் சண்டாள யோகமென்றும் அனுசார கருமங்களைச் செய்பவனென்றும் சொல்லுவார் எ-று.

(வி-ரை) ஜெனன ராசியில் கேது நின்றதைக் குறித்து முன் சொல்லிய 14-ஆம் செய்யுளின் விருத்தியுரையில் சொல்லப்பட்டன. அப்படிப்பட்ட ஜாதகன் சண்டாளத் தொழிலையே செய்வான் என்பதாம். 17

உண்மைபாக்கியாதிபனு முற்றேசென்மத்துறுகதிரும்
வண்மைபெறவேயோரைந்தில் வந்துசுபக்கோணேக்கமிலாத்
திண்மையாறிலொருமூன்றிற் றீயோர்வந்துதானுறைய
எண்மையுடனேயநாசார மெய்துநீசக்கன்மீயவனே.

(இ-ள்) ஒன்பதாம் ராசிநாதன் ஜெனன ராசியிலும், 5-ஆம் ராசி என்னும் திரிகோணத்தில் சூரியனும் நின்று அவனை சுபகிரகங்கள் பார்க்கப்படாமலும், 3-6-என்னும் ராசிகளில் தீயகிரகங்களும் இருக்க, அந்த ஜாதகன் நீசகருமங்களைச் செய்யும் அனுசாரம் உள்ளவனுவன் எ-று.

(வி-ரை) "ஈராறிற் சனியிருக்க எட்டினிற் பத்திற்கேது
வோராம லிருக்குமேனு முதயத்தின் மதியைமற்ருேர்
நேராகப் பார்க்கப்பத்தில் நிகர்செவ்வா யிருக்குமேனும்
வாரார்பூண் முலேயாய்பாரின் மாபாவ கன்மியாமே"

என 12-ல் சனியும், 8-10-ல் கேதுவும், ஜெனன ராசியில் சந்திரனும் இருந்து மற்ற கிரகங்கள் பார்க்க, 10-ல் குஜனிருக்க, அந்த ஜாதகன் பல பாவகருமங்களைச் செய்குவானென்று சிந்தாமணியிற் சொல்லியபடியால் கிரகங்களின் அளவறிந்து கூறுக. 18

சன்னியாசி யோகம்

வேறு

தேசுறுபத்தாமாதி நான்கிடத்திலிருக்கச்
செப்பியநாலாதிபதி திரிகோணத்தெய்தப்
பூசலுறும்பாம்பல்லா தொருநான்குகிரகம்
பொருந்திப்பத்தினிலிருக்கும் போதுசன்னியாசியுமாம்
ஓசைகொளுன்காம்வீடு முதற்பத்தாமனைமட்
டோரேழுவிட்டினுங்கோ ளொழியாமலிருக்கில்

காசினியில்வாழ்பவர்க்குத் தேசிகனேயாகிக்
கதித்திடுசந்யாசியெனவே கருதல்வேண்டும்.

(இ-ள்) பிரக்யாதி பெற்ற 10-ஆம் ராசியதிபதி நான்காம் இடம் என்னும் சுகஸ்தானத்தில் இருக்க, நான்காம் ராசியதிபதி திரிகோண ஸ்தானங்களில் இருக்க; ராகு தவிர மற்றமுள்ள நான்கு கிரகங்கள்கூடி 10-ஆம் ராசியில் இருக்க, அந்த ஜாதகன் சந்நியாசியாவான். மேலே சொன்ன நான்காம் ராசிமுதல் 10-ஆம் ராசிவரையிலுமுள்ள 7-ராசிகளிலும் கிரகங்கள் இடைவிடாதிருக்க, அந்த ஜாதகன் இப்பூமியில் உள்ளவர்களுக்கு குருவாதி நல்ல மேன்மையைப்பெற்ற சந்நியாசியாவான் என்று சொல்வாய் எ-று. 19

வேண்டிடுசெவ்வாயிரவி மதிமூவர்கூடி
விரும்புபத்தாமிடத்திருக்க மின்னார்பொன்றனக்கும்
ஈண்டியதோர்விரிவில்லாச் சந்நியாசியவன்
இனியபுதன்கதிரோனு முச்சமாயிருக்கத்
தாண்டுவியத்தானத்திற் சுக்கிரனெய்திடவும்
சனியொருவனுகிச் சுக்கிரன் றன்னைப்பார்க்கப்
பூண்டுவருஞ்சன்மமுத லாகியந்தமாகப்
புகழ்ந்திடுசந்யாசியெனப் போற்றிடவேயிருப்பன்.

(இ-ள்) சிங்கத்திற்கு ஆகுபி நாதனுகிய சூரியன்-சந்திரன்-குஜன் இம் மூவரும் கூடி 10-ஆம் ராசியில் இருந்தாலும், அல்லது குரு இருந்தாலும், அந்த ஜாதகன் எக்காலும் அழிவில்லாத சந்நியாசியாவான். புதனும் சூரியனும் உச்சம் பெற்றிருக்க, 12-ஆம் ராசியில் சுக்கிரன் இருக்க, அவனைத் தனித்து நின்ற சனிபார்க்க, அந்த ஜாதகன் தான் ஜெனித்தது முதல் ஆயுள் உள்ளளவும் சந்நியாசி என்று யாவரும் போற்றும்படி வாழ்ந்திருப்பான் எ-று. 20

பதினோராம்பாவக பலாபலன்

பதினோராமிடத்தில்சுக்கிரன் பார்க்கவன்குருசேய்நிற்கில்
அதிகமாய்ப்பொருளுஞ்சேர்த்து அவனியில்றனவானுகி
பதியினில்காணிபூமி பசுவுமாய்சேகரித்து
துதிமிகும்தனவானுக தோற்றுவா னுலகுள்ளோர்க்கே.

(இ-ள்) இலாபஸ்தானமாகிய பதினோராம்வீட்டில் சூரியன்-சுக்கிரன்-செவ்வாய்-குரு நின்றால் வெகுவிதமாய் பொருள்சேகரஞ்செய்தும், வியாபாரஞ்செய்தும், காணி, பூமி, மனை, வீடுமுதலான அசையாப்பொருள் அதிகமாய்ச்சேகரித்து சான்றோர் மெச்சுந்தன்மையான பிரபுவாயிருப்பான் எ-று. 1

சந்திரன்புதனும்சேர்ந்து சாற்றிடும்லாபஸ்தானம்
வந்தமர்ந்திருப்பாராகில் வாய்க்கும்நற்பொருளும்சேரும்
சுந்தரானந்தமாக சுகமுடன்வாழ்ந்திருக்க
தந்திடும்லாபமென்று சாற்றுவாய்தரணிமீதே.

(இ-ள்) சந்திரன்-புதன் இலாபஸ்தானத்திலிருந்தால் வியாபாரஞ் செய்வதில் வெகுபொருள் சேகரஞ்செய்து மிகவும் கீர்த்தியோடு உலகத்தில் வாழ்ந்திருப்பான். ஆனால், சந்திரன்-ரிஷபத்திலும், புதன்-கன்னியாராசியிலுமிருந்தால், கப்பலேறிச்சென்று தீவாந்திரங்களில் வியாபாரஞ்செய்தும், திரவிய சேகரஞ்செய்து வாழ்ந்திருப்பதற்காகும் எ-று. 2

ஆதாய பலன்

வியமாறெட்டாதிபன்கூடி மேவினுலுந்தனியேனும்
நயமாய்ப்பாவத்துறிற்பாவர் நண்ணிற்பார்க்கில்லாபமில்லை
சுயலாபாதிவுச்சனுமாய்ச் சுபர்மத்தியிலேதானிருக்கில்
சுயலாபத்திற்சுபரிருக்கச் சாரும்லாபக்திரளாக.

(இ-ள்) 11-ஆம் இடமென்னும் லாபஸ்தானத்தில் 6-8-12-க்குடையோர் சேர்ந்து நின்றாலும், அல்லது தனித்து நின்றாலும், பாவராசிக்குடைய கோட்கள் சேர்ந்து நின்றாலும், பார்த்தாலும், அந்த ஜாதகனுக்கு லாபமென்பது சற்றேனும் இல்லையாம். 11-ஆம் ஸ்தானாதி உச்சம் பெற்று சுபகோட்களின் மத்தியில் இருக்க, 11-க்கு 11-ஆம் ராசியிலும் சுபகிரகங்கள் இருக்க, அந்த ஜாதகனுக்கு லாபங்கள் அனேகமாய் உண்டு எ-று.

(வி-ரை) 11-ல் 6-8-12-ஆம் ராசியதிபர்கள் இருக்கினும் என்பதை கிரக பலம் அறிந்து சொல்லவேண்டும். 11-ல் சூரியனிருக்க, பொன் - முத்து - பவளம் முதலியவைகளை கிரயம் செய்து தனம் தேடுவான். சந்திரன் இருக்கில் மாமிச வகையாலும், குஜனிருக்கில் பிறருக்கு கடன் கொடுத்து அவர்களை இம்சித்து, அவர்கள் பொருளை அபகரிப்பவனென்றும், கிரகங்களுக்குத் தக்கபடி பிரித்துச் சொல்லவேண்டும். 3

திரலாபாதியுச்சத்திற் செறிந்துலாபத்தினிலிருக்க
வரவாய்ச்சென்மாதிபன்பலமாய் மருவலாபம்வருஞ்சுகிப்பன்
விரவாய்லாபாதிபனிருந்த வீட்டுக்கிறைகேந்திரமேவ
உரவோரவனைக்கூடக்கண் ணுறலாபங்களுண்டாமே.

(இ-ள்) 11-ஆமிடமான லாபஸ்தானதிபதி தன் சுபக்ஷேத்திரத்திலேயே உச்சம்பெற, ஜெனன ராசியதிபதி பலம்பெற்று இருக்க, அந்த ஜாதகனுக்கு வரும் அளவிறந்த லாபத்தால் சுகித்திருப்பான். லாபாதிபதி சேர்ந்த வீட்டுக்குடையவன் கேந்திரம் பெற்றிருக்க, அவனை உறவு கிரகங்கள் பார்க்க, அநேக லாபங்கள் உண்டாகும் எ-று. 4

உண்டாம்லாபாதிபனிருந்த திக்கிற்பலன்களுரைசெய்வாய்
தண்டாமரைநண்பன்கிழக்குத் தருஞ்சுக்கிரற்கக்கினிமூலை
கண்டாய்குசன்தெற்காமூலை காரிமேற்குச்சசிவாயு
கொண்டேயிருக்கும்புதன்வடக்கு குருவீசானங்கொண்டுவரும்.

(இ-ள்) லாபம் உண்டாகும் திக்கு விபரங்களைச் சொல்லவேண்டுவதாயின், லாபாதிபன் யாரோ அவனுடைய திக்கைக் குறித்ததேயாகும். எப்படியெனில் சூரியனுக்கு கிழக்கும், சுக்கிரனுக்குத் தென்கிழக்கும், குஜனுக்குத் தெற்கும், தென்மேற்கு மூலையும், சனிக்கு மேற்கும், சந்திரனுக்கு வடமேற்கும், புதனுக்கு வடக்கும், குருவுக்கு வடகிழக்கு திக்குகளிலும் லாபம் உண்டாகும் எ-று.

(வி-ரை) மேலே சொல்லியபடி 11-ஆம் ராசியில் புதன் இருக்க,

"போற்றிய லாபத்திற் புத னிருந்திடிற்
பார்த்திடும் சிற்பத்தாற் பஞ்ச லோகத்தாற்
றேற்றும் வாத்தி மையினர் சோதிடத்தினாற்
சாற்றுமந் திரத்தினாற் தனத்தை தேடுவன்."

என 11-ல் புதனிருக்க, சிற்பத்தொழிலாலும், பஞ்சலோகத்தாலும், வாத்திமைத் தொழிலாலும், சோதிடம்-மாந்திரீகம் முதலியவைகளாலும், தனத்தை சம்பாதிப்பான் என்றும் சாதகசிந்தாமணியில் சொல்லியபடியாம். 5

வேறு

வரும்லாபாதிபன்லாபத் தானத்திலிருந்தோன்
மதியிரவியிவர்நால்வர் மகிழ்பலமேபெற்றுப்
பெருமையுள்ளோர்வீட்டில்நின்ற கிரகத்தோடிருக்கப்
பெரும்வீட்டுக்கதிபுதிய மேபலவானாயின்
கிருஷிகனன்றுய்ப்பலிக்கும் அயிஸ்வரியனாவான்
கிட்டியிவர்மகாதிசையிற் கிளர்தனங்கள்சேரும்
தரும்லாபாதிபனிரவி யாகிமதியுடனும்
தான்கூடப்பார்க்கவெகு தனலாபமுண்டாம்.

(இ-ள்) 11-ஆம் வீட்டோனை லாபஸ்தானாதிபதியும், 11-ஆம் வீட்டில் இருந்த கிரகமும், சூரியன்-சந்திரன் இந்த நால்வரும் பலம்பெற்று பெருமை பெற்ற வீடுகளில் இருக்கும் கிரகங்களுடன் சேர, அவ்வீட்டிற்கு உடையோனும் பலம்பெற்றிருக்க, அந்த ஜாதகனுக்குக் கிருஷி என்னும் பூமி பலிதம் அதிகமாய் ஐஸ்வரியவானாக இருப்பான். அவர்கள் திசைவரும் போது பொருள் சேர்க்கை உண்டுபண்ணும். லாபாதிபதி சூரியனாகி சந்திரனுடன் கூடி இருக்க, அல்லது பார்க்க, அவனுக்கு தனலாபம் உண்டு எ-று.

(வி-ரை) 11-ஆம் ராசியுடன், அதற்குப் பதினோராம் வீடான ஜெனன ராசிக்கு 9 ஆம் வீட்டையும் கவனிப்பது நலம். 9-ஆம் வீட்டோன் சனியாகில் நீசர்களால் லாபமும், அவ்வீட்டில் ராகு இருக்கில் திருடர்களால் தனம் சேரும். சந்திரன் அஸ்தமனம் அல்லது 10-ஆம் ராசியில் இருந்தால் தானியங்களால் லாபமுண்டு என்றும் கூறுவர். 6

உண்டானலாபாதி பதியாகுஞ்சசியை
உம்பர்கோனான குருவுமுகந்துநோக்க
மிண்டானசகலபாக்ய லாபஞ்சேரும்
மிக்கலாபாதியெவர் வீட்டிலிருந்தாலும்
கொண்டாடுமவரவர்க்கு வெகுலாபமுளதாம்
குறித்தசென்மாதிபன்லாபத் தானத்திற்குலவ
கண்டாய்மொழியாய் லாபாதினின்றதிசையில்
கருதியலாபங்கள்வருங் காணுமெனப்புகல்வார்.

(இ-ள்) 11-ஆம் ராசிக்குடையோன் சந்திரனாக இருந்து, அவனை தேவ புரோகிதனும் தேவகுருவுமான குரு பார்க்க, அந்த ஜாதகனுக்குச் சகல விதமான பாக்கியங்களும் உண்டாகும். லாபஸ்தானாதிபதி யார் வீட்டில் இருந்தாலோ, அந்த ராசி எந்த வர்க்கத்தாருடையதோ, அவருக்கு அநேக லாபங்கள் உண்டாகும். ஜெனன லக்கினாதிபதி லாபஸ்தானம் பெற்றிருக்க, அந்த ஜாதகனுக்கு லாபாதிபன் திசையில் வேணுமானலாபம் கிடைக்குமென்றும் கூறுவார் எ-று.

(வி-ரை) லாபங்களைப்பற்றி இன்னும் பற்பல விதமாகவும் சோதிக்க வேண்டும். ஜெனன காலங்களில் குஜன் ஆயில்ய நக்ஷத்திரத்தில் இருந்தால் அவனுக்கு மாந்திரீக லாபம் உண்டு. கேட்டையில் சுக்கிரன் இருந்தால் தானியலாபமுண்டு. இரண்டில் சூரியன் இருந்தால் பற்பல விதங்களாலும் லாபம் உண்டு என்றும் சோதிடவல்லோர் கூறுவர். 7

பன்னிரண்டாம்பாவக பலாபலன்

பனிரெண்டா மிடத்திற்சுக்கிரன் பருதியும் மதியும்நிற்கில்
முனிவிலா தெவரும்மெச்ச மூதறி வோர்களுக்கு
கனிவுடன் தானதர்மம் களிப்புடன் செய்துநாளும்
இனியொரு வருமேயில்லை என்றுமே சொல்லுவாயே.

(இ-ள்) பனிரெண்டாமிடத்தில் சூரியனும் சுக்கிரனும் சந்திரனும் இருந்தால் தான் தேடிவைத்திருக்கும் திரவியங்களை எல்லாந்தெரிந்த பெரியோர்களுக்கு தானதர்ம பரோபகார விஷயத்தில் பலவிதமாய் செலவு செய்து கீர்த்திபெற்றிருப்பான் எ-று. 1

குருபுதன் சனியும்பாம்பும் கூடியே பனிரெண்டேறில்
வரும்பொரு ளெல்லாம்தோற்று வையகத்தோர் பழிக்க
தருமமேற்றுப் புசித்து தயாபர னருளினாலே
அருமையாய்க் கடைசிகாலம் அன்புடன் ஜீவிப்பானே.

(இ-ள்) குரு-புதன்-சனி-இராகு-கேது இவர்கள் பனிரெண்டாமிடத்திலிருந்தால், தனது முன்னோர்கள் சேகரஞ்செய்து வைத்திருக்கும் திரவியங்களையெல்லாம் செலவுசெய்து சுகானந்தமாயிருந்து, சிலகாலம் வறுமை நோயினால் மனவிசாரமடைந்து கடைசியில் மஹான்கள் காருண்ய உபதேசத்தினால் பகவத்பக்தி உண்டாகி தனக்கு வித்யாஞானம் பிறந்து ஞானானந்தமாய் இருப்பான் எ-று. 2

சயனபலன்

கூறியவியத்திற்காரி சசிகதிர்குருசேய்வெள்ளி
எறிடிற்குழவியன்னை பிதாமகன்றுணைவரில்லாள்
ஆருபேருக்கரிட்ட மப்பதிசரமேற்றீதாம்
மாறிலாவவர்விடுச்சம் நன்றெனவழுத்துவாரே.

(இ-ள்) 12-ஆம் இடமென்னும் விரயஸ்தானத்தில் சனி-சந்திரன்-அங்காரகன் குரு-சுக்கிரன்-சூரியன் இவர்கள் ஒன்றுகூடி இருக்கில், அந்த ஜாதகனின் பிதா, மாதா, சகோதரம், களத்திரம், புத்திரன் இவ்வறுவகை வர்க்கத்தாருக்கும் அரிட்டம் உண்டு. மேலே சொல்லியுள்ள 12-ஆம் ராசியானது சராசிகளில் ஒன்றாக இருந்து, மேற்சொன்ன 6-கிரகங்களும் இருக்கில் வெகு கொடியது என்றே கூறுவர். அவர்கள் உச்சம்பெற நன்மை உண்டாகுமென்றும் சொல்வார்கள் எ-று.

(வி-ரை) 12 ஆம் ராசியில் மேற்சொன்ன கிரகங்கள் கூட்டம் கூடி இருந்தாலும், தனித்திருந்தாலும், அந்தந்த வர்க்கத்தாருக்கு தோஷமே யாயினும், அவ்விராசியில் அவர்கள் இருக்கும் நிறத்தாலேயே அதனை நிலை கூறவேண்டும். எப்படியெனில்,

'வீம நாதரைப் போற்றூர் விரயாதிபர்
வெய்ய பாவ பகைநீச மூடராய்
தாமி ருக்கநற் கோட்டன பாக்கியஞ்
சாரவீ ராறிற் சத்வ நீசத்தராய்
தீமை கோளுர செல்வம் பொருளெலாம்
சினத்த கோனேக்க கோரார் சேதமா
நேம நல்லார் பொல்லார் சர்வநாசமே
நீச உச்சஞ் சரிகொடுத் தீங்கதே"

என்றபடி, 12-ஆம் ராசி சம்மந்தக்கிரகம் பகை-நீசம் சமமாயும், க்ஷீணம் மூடமாகவும் இருக்க, நற்கோள்கள் தனபாக்கியங்களில் இருக்க, மேற்படி 12-ல் பகை நீசம்பெற்ற கோட்கள் இருக்க அவன் செல்வம் பொருளெல்லாம் சத்தருக்கள் கொண்டுபோவார்கள். சோரராலும் சேதமுண்டு. சுபக்கிரகம் நீசவுச்சராக நிற்கில் நன்மையும், தீமையும் சரியாய் வரும் என்று வீமேஸ்வர உள்ளமுடையானில் கூறியபடியும்,

"பொற்பாம்வியத்திற் சேயிருக்கிற் பூமியதனாற் றுணைவரினல்
மற்பாற்சோர ராக்கினையான் மன்னும் தனநாசமடைவான்"

என 12-ல் குஜன் இருக்க, அவன் பூமியாலும் சகோதராலும், திருடர் ஆக்கினையாலும், அவன் தனநாசமாமென்றும்,

"கற்பார்புதனே வியத்திருக்கிற் கணக்குவழக்கு விரோதத்தால்
நற்பாறதனில் வியாபார நடத்தலாலும் தனநாசம்"

என, 12-ல் புதனிருக்க கணக்கு வழக்காலும், அந்த விரோதத்தாலும், வியாபாரத்தாலும், தனம் நாசமாகும் என்றும், சாதக சிந்தாமணியால் உரைத்தபடி ஆராய்ந்து கூறுக. 3

வார்மைசேர்வியத்தானத்தின் மன்னவன்சுபக்கோளாகி
சீர்மைசேர்கேந்திரத்து முச்சத்துஞ்செறிந்துநிற்கில்
யார்மைசேர்வியத்தினல்லோர் பரிந்துநிற்பார்க்கில்மேலாம்
கூர்மைசேர்பரியங்கத்திற் குலவுபூச்சரங்கள்சூழ.

(இ-ள்) விரயஸ்தானாதிபதியான 12-ஆம் ராசியதிபன் நற்கோட்களில் ஒருவனாக இருந்து, சிறப்பு பொருந்திய உச்சமாவது கேந்திரங்களிலாவது இருக்க, 12-ஆம் ராசியில் சுபகிரகங்கள் இருந்தாலும், பார்த்தாலும், நல்ல மேன்மையையுடைய குதிரைமீது ஏறவதும், பூச்சக்கிரக் குடைகளுடனும் வாழ்ந்திருப்பான் எ-று.

(வி-ரை) 12-ஆம் ராசிநாதன் நற்கோட்களில் ஒருவனாக இராமலும் உச்சம் கேந்திரம் பெறாமலும், சுபகிரகங்களில் ஒன்றான குரு மாத்திரம் 12-ல் இருந்தால் சோம்பேரியும், அந்நியதேச சஞ்சாரனும், இருவித வித்தையும், பிராமணர்களின் பொருள்மீது ஆசையுள்ளவனும், அவை கைக்கூடாமையும், சேவகா விருத்தியும், சயனசுகம் உள்ளவனும், மகாசபையில் பேசவல்லவனும் ஆவானென்று சோதிடத்தோர் சொல்வார் என சாதக சிந்தமணியில் சொல்லியபடி, 12-ஆம் வீட்டோன் சுபகிரகமாக இருந்து உச்ச கேந்திரங்களில் இருக்கின், கீழ்க்கண்டவாறு பலன் கூறுக. 4

சூழுஞ்செம்பட்டுமெத்தை தூக்கமேற்கட்டிதூபம்
தாழுஞ்சங்கிலியிற்றொங்குஞ் சப்பிரமஞ்சமீது
ஏழுநல்லிசையாழ்கொண்டே யேந்திழைமாரிசைப்ப
வாழுமன்னவனுமென்று வழுத்துவர்மறைவல்லோரே.

(இ-ள்) மேற்சொன்னபடி கிரகமிருக்கப் பிறந்தவன், சிவப்புவர்ன பட்டாடைகளை அணிந்து, அடுக்கு நிறைந்த மெத்தை மேடைகளில் உறங்குபவனும், மெத்தைகளில் அமைத்துள்ள சங்கிலிகளால் கோர்க்கப்பட்ட சப்ரமஞ்சக் கட்டிலின்மீது 7-விதமான இனிய யாழ் முதலிய கருவிகளோடு பெண்கள் பாடவும், உபசரிக்கத்தக்க, அரசனாகி வாழ்வான் என்று சாஸ்திர 5
வல்லோர் கூறுவர் எ-று.

வல்லதோர்வியத்தானாதி மற்றுமெட்டாறில்நிற்க
சொல்லியசனியும்பாம்புஞ் சூழ்ந்துபன்னிரண்டில்நிற்க
நல்லவர்பார்வைசற்று நயந்திடாதிருக்கிற்பாரில்
புல்லதுமெத்தையாக விருவிழிதுயில்வன்போங்கே.

(இ-ள்) வல்லமை பொருந்திய விரய ஸ்தானாதிபதி ஜெனன லக்கினத்திற்கு 6-8-ஆம் ராசிகளில் நிற்க, சனி-இராகு இவர்கள் சேர்ந்து 12-ஆம் ராசியில் இருக்க, அவர்களைச் சுபகிரகங்கள் பாராதிருக்க, அந்த ஜாதகன் இப்பூமியில் புல் நிறைந்த இடத்தையே மெத்தை என்று தன் இரண்டு கண்களையும் மூடி உறங்குவான் எ-று.

(வி-ரை) இதனை கொடிய யோகமென்றும், அந்த ஜாதகன் நித்திரை செய்யவும் இடம் கிடைக்காதென்பதும் இச்செய்யுளின் கருத்தாகும். பொதுவாய் 12-ஆம் ராசியதிபதி கெடுவானாகில் எவ்விதமும் அவனுக்கு 6
நித்திரை குறைவென்றே சொல்லவேண்டும்.

போந்தசெறிபாக்கியத்தாதி பொருந்துபன்னொன்றின்மேவ
ஏந்தும்பிதுர்லாபாதிபதி யிருவர்தமக்குமுறவாக
ஆர்ந்தபிதுரின்றனம்போல வதிந்துவிகுணம்பொன்தேடி
வேந்தனுவன்மைந்தருக்கு மியைந்தேவிருக்கும்வெகுதனங்கள்.

(இ-ள்) புகழ்ச்சியையுடைய பாக்கியஸ்தானாதிபதி என்னும் 9-ஆம் ராசியதிபதி 11-ஆம் ராசியில் நிற்க, பிதுர்லக்கினத்திற்கு லாபாதிபதி இவ்விருவருக்கும் உறவாக இருக்க, இறந்துபோன தன் பிதா எவ்வளவு பொருள் தேடினானோ அவ்வளவு பொருளையும் தான் சம்பாதித்து அரசனாகுவானென்றும், அச்செல்வமானது இவன் புத்திரனுக்கும் பொருந்தி இருக்குமென்றும் 7
கூறுவார் எ-று.

வேறு

கோலலாபக் குரிசில்வியத்துற
மேல்வியத்தனும் மேவுதனத்துற
ஆலுமேதனத் தாதிபலமறச்
சாலமன்னர் தனங்கொள்வர்தண்டமாய்.

(இ-ள்) ஜெனன லக்கினத்திற்கு 11-ஆம் இடமான லாபஸ்தானாதிபதி விரயஸ்தானம்பெற, விரயஸ்தானாதிபதி தனஸ்தானம் என்னும் இரண்டாம் வீட்டில் இருக்க, தனாதிபதி பலமிழந்திருக்க, அந்த ஜாதகன் தனங்களையும் அநியாயமாய் அரசர்கள் கைக்கொள்வார்கள் எ-று.

(வி-ரை) இத்துடன் நட்பு - ஆக்ஷி - உச்சம் என்னும் வகையறிந்து அவ்வீடுஅசுபர் வீடாயின் வழக்கு முதலியவைகளால் இழப்பானென்றும் கூறுவர். 8

மாய்விய்த்தனும் வந்துதனத்துற
எய்தனுதி வியந்தனிலேயுற
நேய்சென்மாதி நிரிக்கணமன்றினெய்
தாய்தனங்களெல்லாந் துரைகொள்வரே.

(இ-ள்) மோக்ஷ ஸ்தானமென்னும் 12-ஆம் ராசியதிபதி இரண்டாம் இடமென்னும் தனஸ்தானத்தில் இருக்க, இரண்டாம் வீட்டோனும் தன் சுயக்ஷேத்திரத்திலேயே ஆக்ஷி பெற்றிருக்க, ஜெனன லக்கினாதிபதி பலம் இழந்துமிருந்தால் அவன் தனங்கள் யாவையும் மன்னர்கள் கைக்கொள்ளு வார்கள் எ-று. 9

வேறு

கொள்ளுமிரண்டாமதிபதியுங் குலவுநவாங்கிசாதிபனும்
மெள்ளக்கூடிப்பலமறவு மெய்யாதிபனுந்துர்ப்பலமாய்
உள்ளியிருக்கவவன்றேடு முடமைப்பொருள்களுள்ளவெல்லாம்
கள்ளராசரக்கினியுங் கலந்துகொள்வர்கண்டாயே.

(இ-ள்) ஜெனன ராசியதிபதி துற்பலம் பெற்றும், இரண்டாம் வீட்டதி பதியும் அவன் இருந்த அங்கிசாதிபதியும் கூடி பலமற்றிருக்கப் பிறந்த ஜாதகனுடைய திரவியம் முழுதும், திருடர்களாலும், அக்கினியாலும், அரசர்களாலும் நாசம் உண்டாகும் எ-று.

(வி-ரை) கலந்து கொள்வார்கள் என்பது கொஞ்சம் அக்கினியாலும், கொஞ்சம் அரசர்களாலும் நாசமாகும் என்பதாம். 10

வேறு

கண்டபன்னிரண் டாமிடக்காவலன்
கொண்டலக்கின மேழிற்குடிகொள
மண்டுபொன்னணி தானியமாறிடும்
கெண்டைபோல்விழிக் கிஞ்சுகவஞ்சியே.

(இ-ள்) 12-ஆம் ராசியதிபதி ஜெனன லக்கினமுதல் 7-ஆம் ராசியான களத்திர ஸ்தானத்தில் இருக்க, அந்த ஜாதகனுடைய பொன் ஆபரணங் களும், பொக்கிஷம், தானியம் முதலியவைகளை அந்நியர் கைக்கொள்வார் என்று மீன்கண்களை யொத்த அழகும், இனிமையான சுகத்தையுந் தரும் பெண்ணே! சொல்வாயாக எ-று. 11

வஞ்சியேபத் ததிபதிபாவனாய்
விஞ்சியேபல னன்றிவியத்துறில்
அஞ்சியேயைம்பதாம் வயதாயவன்
தஞ்சமான தனங்கள் நழுவுமே.

(இ-ள்) அழகு பொருந்திய பெண்ணே! 10-ஆம் ராசியதிபதி பாவகிரக மாகவும், பலமற்றும் 12-ஆம் ராசியில் இருக்க, அந்த ஜாதகன் வயது 50-ல் அவன் தனங்கள் யாவும் அவனிடம் இருந்து விரயமாகிப்போம் எ-று. 12

வேறு

வழுத்தியபன்னிரண்டா மனைக்குமன்பாவனாகி
அழுத்தியவவனைப்பாவ ரனுகியும்பார்த்துநிற்க
முழுப்பொலாப்பாவசிந்தை முயற்சியாலவன்பொன்னெல்லாம்
இழுக்குறுந்தொழி லுள்ளார்க்கே யீந்தவன்கீர்த்தியேற்பன்.

(இ-ள்) விரய ஸ்தானாதிபதி என்னும் 12-ஆம் ராசியதிபதி பாவகோட் களில் ஒருவனாக இருந்து அவனைப் பாவகிரகங்களால் பார்த்தும், அவனுடன் சேர்ந்து இருக்க, அந்த ஜாதகனுடைய நிறைந்த பொல்லாத பாவச்செயல் களின் முயற்சியால் அவன் தனங்கள் யாவும் இழிவான தொழிலுடையோர்க் குக் கொடுத்து கீர்த்தி பெறுவான் எ-று. 13

ஏற்கவேபன்னிரண்டி லிரணியன்வெள்ளிதூய
தீர்க்கசந்திரன்பொல்லாரைச் சேராதபுதன்இந்நால்வர்
மார்க்கமாய்க்கூடிற்றன்ம வகையினாற்செலவாமென்று
ஏற்கநாற்சுருதிவல்ல வேதியரோதினரே.

(இ-ள்) 12-ஆம் இடமான விரவிய ஸ்தானத்தில் இரணியனென்னும் குருவும், சுக்கிரனும் சம்மந்தப்பட்டு, பூரண கலைகளையுடைய சந்திரன் தீய கோட்களோடு சகிதம் பெறுமலும் புதன் ஆகிய இந்நால்வரும்கூடி இருக்கில், அந்த ஜாதகனுடைய திரவியமானது தருமார்த்த காரியங்களிலேயே சில வாகும் என்று சாஸ்திரவல்லோர்கள் கூறுவார் எ-று.

(வி-ரை) தருமார்த்த காரியங்களில் சிலவு செய்பவனுக்கு தியாகி என்றும் பெயராதலால், அந்த தியாகி என்னும் பட்டம் வாய்ந்தவர்கள், 10-ஆம் வீட்டோன் உச்சம் பெற்றும், தனாதிபதி பலம் பெற்றும், நான்காம் வீட்டோன் விரயாதியுடன் கூடியும், 9-ஆம் வீட்டோன் ஆக்ஷிபெற்றும் இருக்க, அந்த ஜாதகன் திரவியமானது தருமார்த்த காரியங்களிலேயே சிலவழிப்பான் என்றும், சோதிடவல்லவர்கள் கூறுவார்கள். இதனை இன்னும் பற்பல விதமாகவும் யோசித்துச் சொல்லுக. 14

ஓதியபன்னிரண்டா மதிபனோடுற்றபாவர்
நீதியநல்லோர்வீட்டி னிற்கினல்லோரைக்கூடில்
தீதறப்பலவானாகத் திகழ்வியத்ததிபன்ரெண்டில்
போதவேசெம்பொன்றேடிப் புதைப்பன்மற்றொருவர்க்கியான்.

(இ-ள்) மோக்ஷ ஸ்தானாதிபதியாகிய 12-ஆம் ராசிநாதனுடன் பாபிகள் சேர்ந்து சுபகிரகங்களுடைய வீட்டில் நின்றாலும், அல்லது சுபர்களுடன் கூடினாலும், 12-ஆம் ராசியதிபதி தனஸ்தானமான இரண்டாம் வீட்டில் பலம் பெற்றிருக்க அவன் போதுமான திரவியங்களையும், பொன் நாண யங்களையும் சம்பாதித்து ஒருவருக்கும் கொடாமல் பூமியில் புதைத்து வைப்பான் எ-று. 15

ஆனதோர்பாக்கியாதி தனாதியைந்தாமிடத்தும்
ஊனமில்லைந்தாமாதி யொன்பதிலிரண்டினிற்கத்
தானமும்மூன்றுபேரு மிலக்கினந்தன்னினிற்க
ஈனமிலவன்பொன்னெல்லாங் கடன்கொடுத்திழந்துபோவன்.

(இ-ள்) (நற்பலனையே தரும்) யாவரும் புகழத்தக்க பாக்கியாதி என்னும் 9-ஆம் ராசியதிபதியும், தனாதிபதி என்னும் இரண்டாம் வீட்டதிபதியும்,

5-ஆம் ராசியில் இருக்க, 5-ஆம் ராசியதிபதி 9-அல்லது இரண்டாம் ராசியில் சேர்ந்திருந்தாலும், அல்லது இம்மூவரும்கூடி ஜெனன லக்கினத்தில் இருந்தாலும், அந்த ஜாதகன் பொருள் யாவையும் பிறருக்குக் கடனாகக் கொடுத்து இழந்துபோவான் எ-று. 16

வன்புறுமிரண்டாமாதி மார்த்தாண்டனுடனேகூட
இன்புறுவியத்தானதி யினியரெண்டிடத்தினிற்க
துன்புறமட்டபத்தி லாபாதிசூழ்ந்துநிற்கப்
பொன்பலவெல்லாஞ்சேதம் போய்விடும்புகழுமில்லான்.

(இ-ள்) அன்பு நிறைந்த தனஸ்தானாதிபதி என்னும் இரண்டாம் வீட்டதிபதி சிங்கராசிக்கு ஆக்ஷிநாதனாகிய சூரியனுடன் சேர, 12-ஆம் வீட்டோன் இரண்டாம் இடம் என்னும் தனஸ்தானத்தில் இருக்க, துன்பத்தைத் தரும் அஷ்டம ஸ்தானம் என்னும் ஜெனன ராசிக்கு எட்டாம் ராசியை 11-ஆம் ராசியதிபன் சேர, அவன் தேடிய பொருள் யாவும் அழிந்து சேதமாவதோடு அந்த ஜாதகன் புகழ்ச்சியின்றி வாழ்குவான் எ-று.

(வி-ரை) இவையாவும் கிரக அடவியைக்கொண்டு பேசவேண்டியதோடு கிரகங்கள் இருக்கும் இடத்தையும் அறிந்து பேசவேண்டியது சிலாக்கியமாகும். 17

வேறு

புகழும்வெள்ளியும் பொன்னும்பிறைதனை
மகிழநோக்குற மைந்தன்றுலாத்துற
நிகழும்லோபத் தனமுடனேமியோர்
இகழவேயொரு காசொன்றுமீவிலான்.

(இ-ள்) யாவரும் போற்றப்பட்ட சுக்கிரனும், தேவ புரோகிதரான குருவும், கடகராசிக்கு ஆக்ஷிநாதன் என்னும் சந்திரனை பலம்பெற்று பார்க்க, சனி துலாராசியினில் உச்சம்பெற, அவன் தன் ஆயுள் வரையில் லோபத்தனத்தோடு உலகிலுள்ளோர் இகழ்ச்சி செய்யவும், ஒருவருக்கும் ஒரு காசாவது கொடுக்கான் எ-று. 18

ஈதலீவதெவர்க் கென்றுரைப்பது
ஓதுமொன்பதாம் வீட்டுக்குடையவன்
சாதிவர்க்கத்தவர் தமக்கேநிதி
வாதியாமன் மகிழ்ந்துவழங்குவன்.

(இ-ள்) ஒவ்வொருவரும் தன் தனத்தை யாருக்கு கொடுப்பார் என ஆராயவேண்டுவதாயின், 12-ஆம் வீட்டோன் 9-ஆம் வீட்டதிபனாகில் தன் தந்தை வர்க்கத்தாருக்கு தன் தனத்தைத் தருவான் என்றும் சோதிட வல்லவர்கள் கூறுவார்கள் எ-று.

(வி-ரை) இவ்வாறே தனாதிபதி சுகாதிபதி விரயம்பெற்று, விரயாதிபதி பாவனாகவும் இருந்து, 9-ஆம வீட்டோன் பலம்பெற, தந்தைவர்க்கத்தாருக்கும், 5-ஆம் வீட்டோன் பலன்பெற, மாமன் வகையராக்களுக்கும், 7-ஆம் வீட்டோன் பலன்பெற, களத்திர வர்க்கத்தாருக்கும், 3-ஆம் வீட்டோன் பலன்பெற, சகோதிர வர்க்கத்தாருக்கும் சந்தோஷத்துடன் கொடுப்பான் என்று சொல்லுக. 19

வேறு

ஓதுகதிருந்தேய்பிறையுங் கூடிவியத்திலுறதனத்தை
நீதியரசர்க்கைக்கொள்வர் நிலவுங்குருவும்வியத்திலுற
போதுதனங்கண்மிகத்தேடிப் பொருந்துந்தன்மம்புரிந்தருளி
மீதிசிறிதுதனமிருக்க வாழ்வன்புவியில்வெகுகாலம்.

(இ-ள்) சூரியனுடன் தேய்பிறைச் சந்திரன் சகிதம்பெற்று 12-ஆம் இடமாகிய மோக்ஷஸ்தானத்தில் இருக்க, அவன் தேடிய தனத்தை முடிகளை அணிந்த அரசர்கள் கைக்கொள்வார்கள். சந்திரனோடு குரு சேர்ந்து 12-ல் நிற்க, அவன் அநேக தனங்களைச் சம்பாதித்து சிறிதளவு தனத்தைத் தன் வாழ்நாளுக்காக வைத்துக்கொண்டு, மிகுதியுள்ள தனத்தை நல்ல தரும பரோபகாரங்களுக்குச் சிலவழித்து நெடுநாள் இப்பூமியில் வாழ்ந்திருப்பான் எ-று. 20

வேறு

காலமாம்வியக் தன்னிலங்காரகன்
சாலநிற்கத் தனித்துங்கண்ணோக்குறில்
ஞாலமீதிற் புதைத்திடுநற்பொருள்
வாலேகேடரியமென் மறக்குமே.

(இ-ள்) ஜெனன காலங்களில் மேஷ விருக்ஷிகங்களுக்கு ஆக்ஷிநாதனாகிய குஜன் 12-ஆம் இடமாகிய மோக்ஷ ஸ்தானத்தில் இருந்தாலும், அல்லது தனித்திருந்தாலும், 12-ஆம் ராசியை நோக்கினாலும், அவன் இப்பூமியில் புதைத்த பொருளை இடம் தெரியாது மறந்து அலைந்து திரிவான் எ-று. 21

ஏழரைநாட்டுச்சனி

ஏழரைநாட்டுச்சனி என்பது, சந்திரன் எந்த ராசியிலிருந்தானோ அந்த ராசிக்கு 12-ல் கோசாரப்படி சனி வந்தது முதல் முறையே. 1-2-ஆம் ராசியில் சஞ்சரிக்கும் காலமாகும். அவையாவன: ராசி யொன்றுக்கு இரண்டரை வருஷ வீதம் 1-2-12-ஆகிய மூன்று ராசிகளுக்கு வருஷங்கள் ஏழரையானதால், ஏழரைநாட்டுச்சனி என்று பெயராயிற்று. இவ்வாறு மேற்படி சனியானது. ஒவ்வொருவருக்கும் மூன்றுமுறை வருவதுண்டு. அவற்றுள முதல் சனி கஷ்டபலனும், இரண்டாம்பரியாய சனி கிஷ்டபலனும், மூன்றாம் பரியாயச்சனி மாரகத்தையும் செய்யும். இதுபோலவே 12-ல் சனி வாசகாலம். விரயமும், 1-ல் வாசகாலம் சமபலனும் 2-ல் மகா கொடிய பலனும் செய்வன். இவை சந்திரனைக்கொண்டுமாத்திரம் கூறவேண்டியதேயன்றி ஜென்மலக்கினத்தைக்கொண்டு கூறவேண்டியதில்லை மற்றெல்லா இடத்திலும் இவை கொடியதெனினும் மேற்படி ஏழரைநாட்டுச்சனியைக் காட்டிலும் அட்டமத்துச்சனி மகா கொடியவன்.

அட்டமத்துச்சனி

சந்திரன் இருந்த ராசிக்கு எட்டா மிராசியில் சனி கோசாரவசமாய் வாசம் செய்யுங்காலம் இரண்டரை வருஷங்களாகும். அக்காலம் அவர் செய்யும் பலனவன?

"தொழுகழு விலங்குதண்டில் அக்குமே வருவதோடு
இழுபரி யவமானபங்கம் இல்லாத தொடர்வழக்கு
அழுகையின் மென்மேல்துக்கம் ஆங்கார மிகவுமுண்டு
பழுதுடன் பவிசும்போகும் பலவித நாசமாமே"

என்றதால், மேலே கூறிய ஏழரைநாட்டுச்சனியைக் காட்டிலும் அட்டமத்துச்சனி மகா கொடியவன் என்பது விளக்குகிறது.

நக்ஷத்திர ராசிகள்

மேஷம்	அசுவனி-பரணி-கார்த்திகை முன்-$\frac{1}{4}$
ரிஷபம்	கார்த்திகை பின்-$\frac{3}{4}$ ரோகணி-மிருகசீரிடம் முன்-$\frac{1}{2}$
மிதுனம்	மிருகசீரிடம் பின்-$\frac{1}{2}$ திருவாதிரை-புனர்பூசம் முன்-$\frac{3}{4}$
கடகம்	புனர்பூசம் பின்-$\frac{1}{4}$ பூசம்-ஆயிலியம்
சிம்மம்	மகம்-பூரம்-உத்திரம் முன்-$\frac{1}{4}$
கன்னி	உத்திரம் பின்-$\frac{3}{4}$ அஸ்தம்-சித்ரை முன்-$\frac{1}{2}$
துலாம்	சித்ரை பின்-$\frac{1}{2}$ சுவாதி-விசாகம் முன்-$\frac{3}{4}$
விருச்சிகம்	விசாகம் பின்-$\frac{1}{4}$ அனுஷம்-கேட்டை
தனுசு	மூலம்-பூராடம்-உத்ராடம் முன்-$\frac{1}{4}$
மகரம்	உத்ராடம் பின்-$\frac{3}{4}$ திருவோணம்-அவிட்டம் முன்-$\frac{1}{2}$
கும்பம்	அவிட்டம் பின்-$\frac{1}{2}$ சதயம்-பூரட்டாதி முன்-$\frac{3}{4}$
மீனம்	பூரட்டாதி பின்-$\frac{1}{4}$ உத்ரட்டாதி-ரேவதி

இவை அந்தந்த நக்ஷத்திரங்களுக்கு எந்தெந்த ராசி என்பதை யறிய உதவாகும். இதனை நக்ஷத்திர கிரகபாதசாரங்கள் எனவும், தரிக்கால் எனவுங் கூறுவர். இவை சோதிடகிரகசிந்தாமணி (41) ஆம் பக்கத்திலும் உள்ளது. இங்கு நவாங்கிசலக்கினம் காணும் வகையினைக் கூறுவாம்.

நவாம்சலக்கினம் காணும்வகை

"அங்கிசையறியுந்தன்மை யசுபதிமும்மூன்றாகப்
பங்குவொன்பதுவேசெய்து பாதமுந்நான்குதன்னில்
தங்கியமேடராசி தான்முதன்மீனமட்டும்
பொங்கியபதியுன்னோரை பொருளெனக்கண்டுகூறே.

என்றபடி, அங்கிசை யறியவேண்டியவிதம் எப்படியென்றால், அசுவினி முதலிய 27-நக்ஷத்திரங்களையும் ஒன்பது கிரகங்களுக்குப் பங்கிட ஒவ்வொரு கிரகங்களுக்கும் மூன்று நக்ஷத்திரங்கள் வருமாதலால், மேற்படி நக்ஷத்திரங்கள் மூன்றிற்கு ராசிகள் 12-எனக்கொண்டால் மேடமுதல் மீனம்வரையிலாகும். ஆனதால் எந்த ராசி வந்தனவோ அந்த ராசியதிபனையே அங்கிசாதிபதி எனக் கொள்ளவேண்டு மென்பதால், நக்ஷத்திரம் ஒன்றுக்குப் பாதங்கள் நான்கு எனவும்; பாதம் ஒன்றிற்கு ஓர் ராசி எனவுங்கொண்டு அந்த ராசியதிபனையே அங்கிசாதிபன் எனக் கூறவேண்டுவதாகும் உதாரணம் கீழ்வருமாறு:

அமிசாசக்கரத்தில் கிரகம் போடும்வகை

அசுவினி	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்
பரணி	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
கார்த்திகை	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்
உரோகணி	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்

மிருகசிரம்	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
திருவாதிரை	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்
புனர்வசு	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்
பூசம்	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
ஆயில்யம்	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்
மகம்	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்
பூரம்	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
உத்திரம்	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்
அத்தம்	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்
சித்திரை	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
சுவாதி	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்
விசாகம்	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்
அனுஷம்	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
கேட்டை	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்
மூலம்	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்
பூராடம்	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
உத்திராடம்	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்
திருவோணம்	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்
அவிட்டம்	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
சதயம்	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்
பூரட்டாதி	1-மேஷம்	2-ரிடபம்	3-மிதுனம்	4-கடகம்
உத்ரட்டாதி	1-சிங்கம்	2-கன்னி	3-துலாம்	4-விருச்சிகம்
ரேவதி	1-தனுசு	2-மகரம்	3-கும்பம்	4-மீனம்

நவாங்கிசலக்கினம் காணும் வகை

ஜென்மலக்கினம் எந்த ராசியாக வந்தனவோ அந்த ராசிநாழிகையை விநாடியாக்கி, 9-ல்வகுத்து ஜென்மலக்கினத்தில் சென்ற நாழிகை விநாடிக்கு மேற்படி 9-ல் எத்தனையாவதுபாகம் வந்தனவோ அவையே நவாங்கிசலக்கினமாகும். அவையாவன: ஜென்மலக்கினம் மேஷம்-சிங்கம்-தனுசு ஆயின் மேஷமுதலாயும், ரிடபம்-கன்னி-மகரமாயின் மகாமுதலாயும், மிதுனம்-துலாம்-கும்பமாயின் கும்பமுதலாயும், கடகம்-விருச்சிகம்-மீனமாயின் கடகமுதலாயுங் கண்டுகொள்க.

கோசாரவேதை அறியும்வகை

சந்திரலக்கினத்திற்கு சூரியன் 5-ஆமிடத்திலும், சந்திரன் 8-ஆமிடத்திலும், செவ்வாய் 7-ஆமிடத்திலும், புதன் 4-ஆமிடத்திலும், குரு 3-ஆமிடத்திலும், சுக்கிரன் 6-ஆமிடத்திலும், சனி ஜென்மத்திலும், இராகு 6-ஆமிடத்திலும், கேது 2-ஆமிடத்திலும் இவ்விதமாக நின்றிருக்கில் கோசாரத்தில் சுபபலனைக் கொடுக்கமாட்டார்கள்.

சந்திரலக்கினத்திற்கு—3-6-10-11-ல் சூரியனிருக்க, முறையே 4-5-9-12-ல் கிரகமில்லாதிருந்தால் தான் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பான்,

17

1-3-6-7-10-11-ல் சந்திரனிருக்க, முறையே 2-4-5-8-9-12-ல் கிரகமில்லாதிருந்தால் தான் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பான்.

3-6-11-ல் செவ்வாய்-சனி-இராகு இவர்களிருக்க முறையே 2-5-9-ல் கிரகமில்லாதிருக்க தாங்கள் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பார்கள்.

2-4-6-8-10-11-ல் புதனிருக்க, முறையே 1-3-5-6-8-10-11-ல் கிரகமில்லாதிருக்க தான் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பான்.

2-5-7-9-11-ல் வியாழனிருக்க,முறையே 1-3-4-6 8-10-12-ல் கிரகமில்லாதிருக்க தான் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பான்.

1-2-3-4-5-8 9-11-12-ல் சுக்கிரனிருக்க முறையே 6-7-10-ல் கிரகங்களில்லாதிருக்க தானிருந்த இராசிப்பலனைக் கொடுப்பான்.

கோசார விபரீதவேதை அறியும்வகை

சந்திரலக்கினத்திற்கு 4-5-9-12-ல் சூரியனிருக்க,முறையே 3-9-10-11-ல் வேறு கிரகமிருந்தால் சூரியன் சுபபலனைக் கொடுப்பான். இவ்வாறே மற்ற கிரகங்களுக்கும் கோசார விபரீதவேதை பார்த்துக் கொள்கவும்

கிரகங்கள் பலன் தரும் காலம் அறியும்வகை

சூரியனும் செவ்வாயும் முதலில் பலன் தருவர். குருவும் சுக்கிரனும் மத்தியில் பலன் தருவர். சனியும் சந்திரனும் கடைபங்கில் பலன் தருவர். புதன்-இராகு-கேது இவர்கள் எப்போதும் பலன் தருவார்களெனக் காண்கவும்.

மகாதிசைக்கு போதகன் வேதகன் பாசகன் காரகன் முதலியோர் அறியும்வகை

கிரக திசை	போதகன்	வேதகன்	பாசகன்	காரகன்	இராகு கேதுக்களுக்கு இவை யில்லையாம்.
சூரியன் திசைக்கு	செவ்வாய்	சுக்கிரன்	சனி	குரு	
சந்திரன் திசைக்கு	செவ்வாய்	சூரியன்	சுக்கிரன்	சனி	
செவ்வாய் திசைக்கு	சந்திரன்	புதன்	சூரியன்	சனி	
புதன் திசைக்கு	குரு	செவ்வாய்	சந்திரன்	சுக்கிரன்	
குரு திசைக்கு	செவ்வாய்	சூரியன்	சனி	சந்திரன்	
சுக்கிரன் திசைக்கு	குரு	சனி	புதன்	சூரியன்	
சனி திசைக்கு	சந்திரன்	செவ்வாய்	சுக்கிரன்	குரு	

போதகர் முதலியோர் பலன்

வெண்பா

கூறுபலனைக் கொடுவென்பான் போதகனும்
வேறுபண்ணி தட்டுவிப்பான் வேதகனும்—தேருபலன்
கூட்டிவைப்பான் பாசகனுங் கோல்மகா திசைக்கே
ஈட்டுபொருள் காரக னீவான்.

கிரகங்களின் மகாதிசைப்பலன்

அவரவர்பிறந்த நக்ஷத்திரவழியாய்
அமர்ந்திடும் நவக்கிரகங்கள்
தவறுதலின்றி தமதருந்திசையில்
தருகுவர் சுபாசுபபலனை
கவனமாய் ஆராய்ந் ததன்படியுலகில்
கணிதநூற்படி இதிலுரைக்கும்
நவதிசையனைத்தும் கண்டுளமகிழ்வீர்
நானிலந்தன்னி லுள்ளோரே.

(இ-ள்) குழந்தை பிறந்ததினத்தில் பஞ்சாங்கத்தில் வரைந்திருக்கும் நக்ஷத்திரத்தை இன்னதென்று முதலில் கவனித்துக்கொள்ளவேண்டும். அந்நாளில் குழந்தை பிறந்தவேளையில் கார்த்திகை - உத்திரம் - உத்திராடமென்னும் நக்ஷத்திரங்களாயிருந்தால் சூரியதிசையெனவும், ரோகணி-அஸ்தம்-திருவோணமென்னும் நக்ஷத்திரங்களாயிருந்தால் சந்திரதிசையெனவும், மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம் என்னும் நக்ஷத்திரங்களாயிருந்தால் செவ்வாய் திசையெனவும், திருவாதிரை - சுவாதி - சதய நக்ஷத்திரங்களாயிருந்தால் இராகுதிசையெனவும், புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி என்னும் நக்ஷத்திரங்களாயிருந்தால் குருதிசையெனவும், பூசம் - அனுஷம் - உத்திரட்டாதி நக்ஷத்திரங்களாயிருந்தால் சனிதிசையெனவும், ஆயிலியம்-கேட்டை-ரேவதி நக்ஷத்திரங்களாயிருந்தால் புததிசையெனவும், அசுவனி - மகம்-மூல நக்ஷத்திரங்களாயிருந்தால் கேதுதிசை யெனவும், பரணி-பூரம்-பூராட நக்ஷத்திரக்களாயிருந்தால் சுக்கிரதிசையெனவும் கவனித்துக் கொள்ள வேண்டும் எ-று.

நவக்கிரக திசைகளின் விபரம்

சூரியனாறு சந்திரன்பத்து சொற்பெருங் குஜனேழுவருடம்
பாரியராகு பதினெட்டுவியாழன் பதினாறுவருட மாதிசையாம்
காரியம்பத்தொன்பது புதன்பதினேழ் கழறிடுங்கேது ஏழாண்டாம்
தாரினில்சுக்கிர னிருபதாண்டெனவே சாற்றினர் சோதிடநாலோர்.

(இ-ள்) உலகத்தில் பிறந்த மனிதர்களுக்கு அவரவர்கள் ஜாதகங்கட்கிசைந்தவிதமாய் பலாபலன் கொடுக்கும் நவக்கிரகங்களின் திசைவருடம் 120-ல், சூரியபகவானுக்கு 6-வருஷமும், சந்திரபகவானுக்கு 10-வருஷமும், குஜபகவானுக்கு 7-வருஷமும், ராகுபகவானுக்கு 18-வருஷமும், குருபகவானுக்கு 16-வருஷமும், சனிபகவானுக்கு 19-வருஷமும், புதபகவானுக்கு 17-வருஷமும், கேதுபகவானுக்கு 7-வருஷமும், சுக்ரபகவானுக்கு 20-வருஷமும் ஆகமொத்தம் ஒன்பது கிரகங்களுக்கும் 120-வருஷமாகும் எ-று.

சூரியன் திசையில் சூரியன் புத்தி

அருக்கனிலருக்கன்புத்தி யறியவேனூற்றெட்டுக்கும்
கருக்கொடுமுற்றூர்கேடு கலகமாந்தன்னூற்பீடை
வருத்தமாந்தலைநோயுண்டாம் வலக்காதில்வலியுண்டாகும்
பெருக்கநீரிழிவுமேட மாதத்தில்பீடைதானே.

(இ-ள்) சூரியன் மகாதிசையில் சூரியன்புத்தி மாதம்-3, நாள் 18-க்கும் உற்றூர்கேடு, கலகம், பீடை, தலைநோய், வலது காதில் வலி, நீரிழிவு இவைக ளெல்லாம் சித்திரை மாதத்தில் காட்டும் எ-று. 1

சூரியன்திசையில் சந்திரன்புத்தி

இரவியிலிந்துபுத்தி யினியநாற்றெண்பதுக்கும்
அரசரால்மகிழ்ச்சிலாப மதிகவாகனமுமுண்டாம்
பரவியமணமாம்பெண்ணாற் பகையிடக்கண்ணினோயாம்
திரமெனக்கடகத்திங்கள் தீவினைகாணுந்தானே.

(இ-ள்) சூரியன்திசையில் சந்திரன்புத்தி மாதம் 6-க்கும், அரசர்களால் மகிழ்ச்சி, இலாபங் கிடைத்தல், வாகனாதிக ளுண்டாதல், மணங்கூடும், பெண்களினால் கலகம், பகை, இடது கண்நோய் இவையெல்லாம் ஆடி மாதத்தில் கடகராசியில் சந்திரன் நிற்குங் காலங்களில் உண்டாகும் எ-று. 2

சூரியன்திசையில் செவ்வாய்புத்தி

ஆதித்தன்றன்னிற்செவ்வாய் புத்திநாற்றிருபத்தாறும்
வாதித்தவியாதிசண்டை மன்னரால்வழக்குண்டாகும்
சாதித்தவுற்றூர்கேடு தன்பொருள்சேதமாகும்
போதித்தபொருளுஞ்சாயும் பூமியின்பலனாகாதே.

(இ-ள்) சூரியன்திசையில் செவ்வாய்புத்தி மாதம்-4 நாள் 6-க்கும், வியாதி யுண்டாகும், சண்டை நேரும், வழக்குண்டாகும், பீடை நேரும், உற்றூர் களுக்கு கேடு சம்பவிக்கும், பொருள் சேதமாகும், பூமியிற்பலன் உண்டாகு தல் அபலமாகும் எ-று. 3

சூரியன்திசையில் ராகுபுத்தி

சூரியன்றனிலேராகு சுகத்தையேசொல்லவென்றால்
ஏருற்றநாள்முன்னூற்றே டிருபத்துநான்கதாகும்
பாரியஇடிவிஷத்தாற் படைபயம்பிறந்தார்பின்னம்
வீரியமைந்தன்தேசாந் திரத்தினில்மேவுவானே.

(இ-ள்) சூரியன்திசையில் இராகுபுத்தி மாதம்-10 நாள் 24-க்கும் இடியினாலும், விஷத்தினாலும், படைகளாலும் பயம்நேரும், பந்துக்களுக்குப் பின்னம் நேரும், மைந்தர்களுக்கு தேச சஞ்சார முண்டாம் எ-று. 4

சூரியன்திசையில் குருபுத்தி

எதிருறுங்கதிரிற்பொன்னி யிருநூறேடெண்பத்தெட்டாம்
கதிபெருமுற்றூர்நட்புங் கல்வியுஞ்செல்வமுண்டாம்
மதியுறுமிராஜசேவை மக்களுஞ்சுற்றமுண்டாம்
அதிகசத்துருவைவெல்லு மதிசயமிகுதியாமே.

(இ-ள்) சூரியன்திசையில் குருபுத்தி மாதம் 9 நாள் 18-க்கும், உற்றூர் நேசம், போகம், செல்வம், இராஜசேவை, மக்கள், சுற்றம் இவைகளுண் டாம், சத்துருக்களை வெல்லலாகும் எ-று. 5

சூரியன்திசையில் சனிபுத்தி

மன்கதிர்சனிமுன்னூற்று நாற்பதோடிரண்டினுக்கும்
நன்பயமக்கட்பீடை மனத்துயர்பகையுமுண்டாம்
தன்பொருள்சேதமுந்தி யடுப்பதுசரீரபீடை
இன்பமேயில்லைமண்ணி லெவர்களும்பகையாவாரே.

(இ-ள்) சூரியன்திசையில் சனிபுத்தி மாதம்-11-நாள் 12-க்கும் பயம் மக்களுக்குப் பீடை, மனத்துயரம், பகை, பொருள்சேதம், சரீரபீடை இன்பமில்லாத வாழ்க்கை, யாவர்களுக்கும் விரோதம் எ-று. 6

சூரியன்திசையில் புதன்புத்தி

நற்கதிர்தன்னிற்புந்தி நாளதுமுன்னூற்றாறும்
வற்கமும்பகையதாகும் மனத்தினில்சரீரபீடை
கற்கருநாசமுந்திக் கடுப்பதுவழக்குமுண்டாம்
சொற்புகழ்மன்னனாசான் துக்கமுமிகுதியாமே.

(இ-ள்) சூரியன் திசையில் புதன்புத்தி மாதம்-10-நாள் 6-க்கும், பந்து வர்க்கங்கள் பகை, மனவியாகூலம், சரீரபீடை, கருநாசம், வழக்கு, அரசர் ஆசான்களால் துக்கம் இவைகளுண்டாகும் எ-று. 7

சூரியன்திசையில் கேதுபுத்தி

ஆதித்தன்றனிலேகேது வனுகுநாற்றிருபத்தாறும்
சோதித்தநினைவுங்குன்றுந் தூரதேசத்திற்போவார்
வாதித்தவிஷமுமுண்டாம் வழக்குண்டுமனைவேறாகும்
பேதித்தஉற்றூர்கேடுபிணக்குண்டுபலன்செய்யாதே.

(இ-ள்) சூரியன் திசையில் கேதுபுத்தி மாதம்-4 நாள் 6-க்கும் நினைவானது குன்றும், தூரதேசம் போகச்செய்யும், விஷபயமுண்டாகும், வழக்குநேரும், குடும்பம் வெவ்வேறாகும், உற்றூர்களுக்கு கேடுவிளைக்கும் பிணக்குண்டாகும் எ-று. 8

சூரியன்திசையில் சுக்கிரபுத்தி

அருக்கனில்வெள்ளிமுன்னூற் றருபதுநாளிலாபம்
திருக்கலியாணஞ்செல்வஞ் செம்பொன்னுமிகவுமுண்டு
வருத்தமாஞ்சரீரநோயு மலர்க்கண்ணில்வியாதிதோன்றும்
உருக்கியபிணியுந்தீரு முண்மையாய்க்கருமநன்றே.

(இ-ள்) சூரியன் திசையில் சுக்கிரன் புத்தி வருஷம் 1-க்கும் இலாபம், கலியாணக்கூடல், செல்வ முண்டாதல், பொன் கிடைத்தல், சரீரத்தில் பிணிகாணுதல், கண்களில் நோயுண்டாதல் இவைமுதலானதும் பிணிதீர்தல் இவையுண்டு,உண்மையாக நம்பவும் எ-று. 9

சந்திரன்திசையில் சந்திரன்புத்தி

சந்திரன்தனிலேசோமன் தனக்குநாள்வருமுன்னூறும்
விந்தையாங்கன்னிசேர்வள் வீரமன்னேக்கமுண்டாம்

முந்தியகாரியங்கள் நினைத்ததுமுடியுமேனும்
இந்திரன்தனைப்போல்மைந்த ரினிதுட னுண்டாம்கண்டீர்.

(இ-ள்) சந்திரன்திசையில் சந்திரன்புத்தி மாதம் 10-க்கும் கன்னியர்கள் சேர்க்கை யுண்டாகும், அரசர்கள் சேவையுண்டு, நினைத்தகாரியங்கள் யாவு முன்னதாக முடியும், அழகுடைய மைந்தர்கள் உண்டாகி வாழ்குவான் எ-று. 10

சந்திரன் திசையில் செவ்வாய்புத்தி

நண்புருமதியிற்செவ்வாய் நாளிருநாற்றுப்பத்தும்
பண்பிதாவழக்குச்சண்டை பயித்தியங்களவுனோயாம்
தண்பொருள்சேதங்குஷ்டங் தழற்பயம்மேடமாதம்
திண்பெருந்தளையேபூணு மேந்திழைகலகஞ்சேரும்.

(இ-ள்) சந்திரன் திசையில் செவ்வாய்புத்தி மாதம் 7-க்கும் தகப்ப னுடைய வழக்கு, சண்டை, பயித்தியம், களவு, சரீரநோய், தன்னுடைய பொருள்சேதம், குஷ்டநோய், அக்கினி பயம், சித்திரைமாதத்தில் கால் கைகளில் விலங்குபூணல், ஸ்திரீயினால் கலகம் இவை முதலான இடறுகளை விளைவிக்கும் எ-று. 11

சந்திரன் திசையில் ராகுபுத்தி

அம்புலிதனிலேராகு வைன்னூற்றிநாற்பதுக்குள்
செம்பொன்னுஞ்சேதமாகுஞ் செற்றலர்பயம்வியாதி
நம்பியர்துன்பம்ராஜ நிஷ்டூரமிகவுமாகும்
வம்பாகுமதியினாலே மதலையால்பீடையாமே.

(இ-ள்) சந்திரன் திசையில் இராகுபுத்தி வருஷம்-1 மாதம் 6-க்கும் பொன்சேதம், அரசர்பயம், வியாதி, துயரம், நிஷ்டூரம், வம்புண்டாகும் மைந்தர்களால் பீடையுண்டாகும் எ-று. 12

சந்திரன் திசையில் குருபுத்தி

நன்றிசேர்மதியிற்பொன்னன் நாலுமூறெட்டெண்பதுக்கும்
வென்றிசேர்குதிரையானை மேன்பொருள்தானியங்கள்
குன்றெனுமுலையாய்சேருங் கொற்றவனாலேயின்பம்
கன்றுநற்காலியுண்டாங் காளையைப்பெறுவர்தாமே.

(இ-ள்) சந்திரன் திசையில் குருபுத்தி வருஷம்-1 மாதம் 4-க்கும் குதிரை, யானை, பொருள், தான்னியம், மாதர் சேர்க்கை, அரசர்களால் இன்பம், கன்று காலி இவை முதலானது உண்டாகும். மைந்தர்களைப் பெற்று வாழ்குவான் எ-று. 13

சந்திரன் திசையில் சனிபுத்தி

மதிதனில்காரிபுத்தி மாதம்பத்தொன்பதுக்கும்
பதிகெடுங்கன்றுகாலி பற்றறுமனதிற்றுக்கம்
விதியுறும்மனையாளாலே மெய்ப்பொருள்சேதமாகும்
சதிபெருங்கருத்தோனாலே கோள்வருஞ்சாற்றினேன்கேள்.

(இ-ள்) சந்திரன்திசையில் சனிபுத்தி வருஷம்-1 மாதம் 7-க்கும் தான் வாழும் பதியானது கெடும், கன்றுகாலிப்போகும், மனதில் துக்கமுண் டாகும், மனையாளினால் பொருள் சேதமாகும், கருத்தமனிதனால் கோள் முதலான கெடுதிநேரும் எ-று. 14

சந்திரன் திசையில் புதன்புத்தி

சந்திரன்தன்னிற்புந்தி தான்பதினேழுமாதம்
அந்தரக்கலகம்போக மழகியமக்கட்பேறும்
சிந்தைசேரிராஜயோகஞ் சேர்ந்திடும்நினைத்ததெல்லாம்
முந்தியவித்தைலாபம் புரட்டாசிமுடிவிற்றானே.

(இ-ள்) சந்திரன் திசையிற் புதன்புத்தி வருஷம்-1 மாதம் 5-க்கும் அந்தரங்கமான கலகம், போகம், மக்கள் பெயர், சிந்தை மகிழும்படியான இராஜயோகம், சித்தியாக சேருதல், நினைத்தவையாவும் முடியும் வித்தை லாபம் இவை முதலானதும் புரட்டாசி மாதத்தில் நடக்கும் எ-று. 15

சந்திரன் திசையில் கேதுபுத்தி

நிலவினிற்கேதுவேழு மாதமுநெருப்பால்பீடை
தெளிவிலாச்சரீரம்வீங்கும் சுற்றஞ்சாமிடக்கண்ணோயாம்
மூலவதுபயமுமுண்டா மதிகதண்டனையுமுண்டாம்
பலசனம்வெருப்புவந்து நாசமாம்பகையுண்டாமே.

(இ-ள்) சந்திரன் திசையில் கேதுபுத்தி மாதம் 7-க்கும் நெருப்பினால் பீடையுண்டாம். சரீரமானது வீங்கும். சுற்றத்தாரில் மரணம் உண்டாகும். இடதுகண்ணில் பிணிபாதையுண்டாம். அலைச்சல், பயம், தண்டனையுண் டாம். பலஜனவிரோதம், பகை இவை முதலானது முண்டாகும் எ-று. 16

சந்திரன் திசையில் சுக்கிரன்புத்தி

வட்டமாமதியில்வெள்ளி மாதங்களிருபதுக்கும்
திட்டமாம்வியாதியுண்டாஞ் சேர்ந்திடும்விசனங்காட்டும்
நட்டமாமர்த்தநாச நாளிலேவிரோதமுற்றார்
கஷ்டமாம்சத்துருவாலே காரியஞ்சேதமாமே.

(இ-ள்) சந்திரன் திசையில் சுக்கிரன்புத்தி வருஷம்-1 மாதம் 8-க்கும் வியாதியுண்டாகும் விசனம் செய்விக்கும். பொருள் நாசமாகும். பந்துக்கள் விரோதம். சத்துருக்களால் காரிய சேதமுண்டாகும் எ-று. 17

சந்திரன் திசையில் சூரியன்புத்தி

வெண்மதிதனிலேவெய்யோன் வேண்டியஆறுமாதம்
உண்மதிசுரமும்பித்த முருவமுங்குலைந்துவேறாய்
கண்மதிமயக்கந்தன்னிற் கடுவலிநோயுமுண்டாம்
பண்புருகுணத்தினாலே பலனுண்டுபலன்செய்யாதே.

(இ-ள்) சந்திரன் திசையில் சூரியன்புத்தி மாதம் 6-க்கும் சுரம் பித்தம் உண்டாகும். உருவமானது குலையும். கண் மறைவு காட்டும். மயக்கமுண் டாம். வலியுண்டாகும். பலன் உண்டாயினும் வலுவுசெய்யாதாகும் எ-று. 18

செவ்வாய்திசையில் செவ்வாய்புத்தி

நன்றிசேய்சேயின்மாதம் நாலுநாளிருபத்தேழும்
கன்றிடுங்காலிநாய்கள் கடித்திடும்மேடமாதம்
வென்றிசேர்மன்னரச்சம் வெப்புநோய்நீசராலே
கொன்றிடுந்தேளின்மாதத் துடன்வெட்டுகுத்துமாமே.

(இ-ள்) செவ்வாய் திசையில் செவ்வாய்புத்தி மாதம்-4 நாள் 27-க்கும் கன்றுகாலி, நாய்கள் இவைகள் கடிக்கும். சித்திரை மாதத்தில் அரசர்கள் பயமுண்டாகும். வெப்புநோய், நீசர்களாலே கார்த்திகைமாதத்தில் குத்து வெட்டுபடச்செய்யும் எ-று. 19

செவ்வாய்திசையில் ராகுபுத்தி

செவ்வாயில்ராகோராண்டுஞ் சேர்ந்தநாள்பதினெட்டுக்கும்
ஒவ்வாதவிஷத்தாற்றேளாற் றிங்களினூற்றூர்நாசம்
இவ்வாறுமேகக்கட்டிப் பிரிந்திடுந்தலம்வேறாகும்
கொவ்வைவாய்மானேகுட்டங் குரூரமாம்பீடையாமே.

(இ-ள்) செவ்வாய் திசையில் இராகுபுத்தி வருஷம்-1 நாள் 18-க்கும் தேளினாலும், விஷத்தினாலும், உற்றூர்கள் நாசமாகுவர். மேகக்கட்டியுண்டாகும். பிரித்து தலம் வேறாக்கும். குஷ்டவியாதியும், பீடையுமுண்டாகும் எ-று. 20

செவ்வாய்திசையில் குருபுத்தி

முழங்கியசேயிற்பொன்னன் மூன்றூற்றுமுப்பத்தாறும்
தழங்கிடுமர்த்தநாச மன்னரால்பகையுமுண்டு
வழங்கிடுந்திசைதொடங்கி சத்துருபலருமாவர்
அழுங்களிநாளிற்செல்வ மரசராலுறவுமாமே.

(இ-ள்) செவ்வாய் திசையிற் குருபுத்தி மாதம்-11 நாள் 6-க்கும் பொருள் நாசம். அரசர்பகை. இந்ததிசை தடங்கிய முதல் சத்துருக்கள் வெகுபேர்கள் உண்டாகும். * களிர்நாளில் செல்வமுண்டாகி வாழ்குவன் எ-று. 21

செவ்வாய்திசையில் சனிபுத்தி

மருவியசேயிற்காரி மாதமீராறுமொன்றும்
கருதியநாளொன்பானுங் கலகமாம்வழக்குசண்டை
பொருபடையர்த்தநாசம் பொருந்தியமெய்யிற்குஷ்டம்
மருவியநிலையுங்கேட்டு மனதினிற்கிலேசமாமே.

(இ-ள்) செவ்வாய் திசையில் சனிபுத்தி வருஷம்-1 மாதம்-1 நாள் 9-க்கும் கலகம், வழக்கு, சண்டை, பொருள் நாசம், மெய்யிற் குஷ்டம், நிலைகுலையும், மனக்கிலேசம் இவை முதலானதும் விளைவிக்கும் எ-று. 22

செவ்வாய்திசையில் புதன்புத்தி

முந்தியசேயிற்புந்தி முன்னூறேடன்பத்தேழும்
செந்திருவரிவைசேர்வள் செல்வமும்மிகுதியாகும்

* களிரென்பது அத்தநாள் பெண்.

வந்திடும்நோயுந்தீரு மருவியகன்னிமாதம்
நிந்தையாமரவுதீண்டும் நீடியபலன்செய்யாதே.

(இ-ள்) செவ்வாய் திசையில் புதன்புத்தி மாதம்-11 நாள் 27-க்கும் இலட்சுமிகடாக்ஷமுண்டாகும். செல்வம் மென்மேலும் பெருகும். மெய்யிற் கண்டபிணிகள் தீரும். புரட்டாசி மாதத்தில் பாம்புகடிக்கும், அதினால் துன்பம் விளைவிக்காது எ-று. 23

செவ்வாய்திசையில் கேதுபுத்தி

செய்யவன்றனிலேகேது சேர்ந்திடுமாதம்நான்கு
உய்யுநாளிருபத்தேழு முடன்பகைமாதராலே
மெய்யிலேவியாதிதோன்றும் விஷபயமிகுதியாகும்
தையலர்பொருட்டாநிந்தை சத்துருமிகுதியாமே.

(இ-ள்) செவ்வாய் திசையில் கேதுபுத்தி மாதம்-4 நாள் 27-க்கும் பகை ஸ்திரீகளாலுண்டாகும். திரேகத்தில் வியாதியானது தோன்றும். விஷபயம் மிகுதியாகக்காட்டும். மாதர்களின் நிந்தையால் சத்துருக்கள் மிகுதியாகத் தோன்றும் எ-று. 24

செவ்வாய்திசையில் சுக்கிரன்புத்தி

நாடியசேயிற்சுங்கன் நானூற்றுயிருபதுக்கும்
நீடியபொருளுஞ்சேரும் நேரிழைவந்துசேர்வள்
தேடியதெய்வபூசை செய்யும்மாதவர்கள்சேர்வர்
வாடியசிரங்குதேமல் வாகனம்பெருவர்தாமே.

(இ-ள்) செவ்வாய் திசையில் சுக்கிரபுத்தி வருஷம்-1 மாதம் 2-க்கும் பொருள்சேரும். ஸ்திரீசேர்க்கை யுண்டாகும். தேவபூஜை செய்யும் மாதவர்கள் சேர்க்கையுண்டாகும். சிரங்கு தேமலுண்டாகும். வாகனாதிகள் கிடைக்கும் எ-று. 25

செவ்வாய்திசையில் சூரியன்புத்தி

அங்கியிற்பருதிதிங்க ளைலுநாளாறுமாகும்
மங்கியகுட்டங்கண்ட வியாதியாம்னதிற்றுக்கம்
செங்கனற்பயமுண்டாகும் சீர்மறையவாற்துன்பம்
அங்கியமனையாளேவு மெவர்களும்பகைவராமே.

(இ-ள்) செவ்வாய் திசையில் சூரியபுத்தி மாதம்-4 நாள் 6-க்கும் குஷ்டரோகம், கண்டத்தில் பிணி, மனதில் துக்கம், அக்கினிபயம், வேதியராலும் அரசர்களாலுந் துன்பம், மனையாளுடன் யாவர்களும் பகையாகுவார்கள். 26

செவ்வாய்திசையில் சந்திரபுத்தி

நலமுறும்சேயிலிந்து நாடியதிங்களேழும்
பலமுறுபூமிலாபம் பலித்திடுங்கன்றுகாலி
இலகியபொன்னுமுத்து இன்பமாமாடையுண்டாம்
தலமதுபேதம்பின்பு தளர்ச்சிவந்தெய்துந்தானே.

(இ-ள்) செவ்வாய் திசையில் சந்திரன்புத்தி மாதம் 7-க்கும் பலனுண்டாகும். பூமிலாபங்கிடைக்கும். கன்று காலி விருத்தியாகும். பொன், முத்து,

ஆடை இவைகள் கிடைக்கும். தலபேதமாகும். பின்பு கொஞ்சம் தளர்வு உண்டாகும் எ-று. 27

இராகுதிசையில் இராகுபுத்தி

இராகுவில்ராகுமாத நாலெட்டுநாளீராறும்
வாகுறுவேந்தநாச மனத்துயர்விஷத்தால்பீடை
ஏகமாமனையாள் துன்ப மிருந்திடும்தலபேதங்கள்
காகநேர்நிறத்தனாலே கலகமுங்கோளுண்டாமே.

(இ-ள்) இராகு திசையில் இராகுபுத்தி வருஷம்-2 மாதம்-8 நாள் 12-க்கும் குருவும் வேந்தரும் நாசமாவர். விஷத்தினால் பீடையுண்டாகும். மனையாளுக்கு துன்பமுண்டாகும். தலபேதமாகும். கருத்த மனிதனால் கலகமுங் கோளுமுண்டாகும் எ-று. 28

இராகுதிசையில் குருபுத்தி

பாரியவிராகின்மன்னன் பரிவுடன்புசிக்குந்திங்கள்
நாரியேயிருபத்தெட்டு நாளுமூவெட்டிலின்பம்
ஆரியராலேசெல்வ மரசரால்மகிழ்ச்சியுண்டாம்
காரியமெல்லாங்கூடும் காரிகைமணமுண்டாமே.

(இ-ள்) இராகு திசையில் குருபுத்தி வருஷம்-2 மாதம்-4 நாள் 24-க்கும் இன்பமுண்டாகும். ஆரியரால் செல்வமுண்டாகும். அரசர்களால் மகிழ்ச்சி உண்டாகும். சகலமான காரியங்களுங் கைகூடும். மணம் செய்விக்கும். சுகமுண்டாகும் எ-று. 29

இராகுதிசையில் சனிபுத்தி

வடிவுளவிராகிற்காரி மாதமுப்பத்துநான்கும்
படிமிசைநாளாறுக்கும் பகைமனத்திடர்வியாதி
முடியாதவாக்குச்சண்டை மூண்டிடும்வாதபித்தம்
இடியுறுசெங்கைசோதி சதையமுமிகுதினோயே.

(இ-ள்) இராகு திசையில் சனிபுத்தி வருஷம்-2 மாதம்-10 நாள் 6-க்கும் பகை, மனக்கிலேசம், இடர், வியாதி, வாக்கு விரோதத்தால் சண்டை, வாத பித்தம் இவைகளை விளைவிக்கும். ஆனால் சோதி சதையம் இந்த நட்சத்திரங்களில் அதிக நோயுண்டாம் எ-று. 30

இராகுதிசையில் புதன்புத்தி

வந்திடுமிராகிற்புந்தி மாதமுப்பதுமேநாட்கள்
முந்தியமூவாறுக்கு முயற்சியாம்வாழ்வுண்டாகும்
சிந்தையில்தெய்வபத்தி சிலபொருள்வந்துசேரும்
விந்தையாமழலைசேரு மேலுறுபகையுண்டாமே.

(இ-ள்) இராகுதிசையில் புதன்புத்தி வருஷம்-2 மாதம்-6 நாள் 18-க்கும் நன்மையான வாழ்வுண்டாகும். மனதில் தேவபக்தியுண்டாகும். பொருள் வந்து சேரும். மெல்லியவார்த்தை யுண்டாகும். மேல் விழுந்த வலியபகை விளைவிக்கும் எ-று. 31

இராகுதிசையில் கேதுபுத்தி

மருவியஇராகிற்கேது மாதமீராறுமிக்க
கருதியநாள்மூவாறு கடிவிஷத்தாலேஜயம்
தருமகவுக்கும்பீடை சரீரமேவீங்கிநோயாம்
அரிவையர்தனக்குத்துன்ப மரசராலச்சமாமே.

(இ-ள்) இராகுதிசையில் கேதுபுத்தி வருஷம்-1 நாள் 18-க்கும் விஷம் கடிக்கும்படியான ஜெந்துக்களால் பயம், மைந்தர்களுக்குப் பீடை. சரீரம் வீக்கமுண்டாகி அதினால் துன்பம். மனையாளுக்குந் துன்பமுண்டாகும். 32
அரசர்களால் அலைச்சலுண்டாகும் எ-று.

இராகுதிசையில் சுக்கிரபுத்தி

மன்னியவிராகில்வெள்ளி மாதமோமுப்பத்தாறும்
பொன்னுடன்பொருளுஞ்சேரும் பூஷணமிகுதியுண்டாம்
மன்னியமங்கைசேர்வள் அரசரால்மகிழ்ச்சியுண்டாம்
பின்னும்வஞ்சனையாற்றுன்பம் பீடைவந்தகன்றுபோமே.

(இ-ள்) இராகுதிசை சுக்கிரபுத்தி வருஷம் 3-க்கும் பொன் பொருள் சேர்க்கை யுண்டாகும். பூஷணாதிகள் வரும். மங்கையர் சேர்க்கையுண்டு. இராஜாக்களால் மகிழ்ச்சியாகும். ஆனால் பின்பு வஞ்சனையினால் துன்ப 33
முண்டாகி அகன்றுவிடும் எ-று.

இராகுதிசையில் சூரியன்புத்தி

இராகுவில்இரவிமாதம்பத் துடன்நாள்மூவெட்டும்
வாகுறுகுலத்தார்சண்டை மன்னராற்றஞ்சமாகும்
சேகுறுமனையாளோடு பிராதுருசிலுகதாகும்
ஆகமூவிதத்திலைய மிருப்பிடமகலுந்தானே.

(இ-ள்) இராகுதிசையில் சூரியன்புத்தி மாதம்-10 நாள் 24-க்கும் பந்துக்களில் சண்டை. அரசர்களால் மனவருத்தம். குரு மனையாள் தகப்பன் இவர்களுக்கு சிலுகுண்டாகும். மூன்றுவிதத்தில் ஐயம் உண்டாகும். அதினால் 34
இருப்பிடம்விட்டு அகன்றுபோகும்படி நேரும் எ-று.

இராகுதிசையில் சந்திரன்புத்தி

உதித்திடுமிராகிலிந்து உயர்திங்களீரொன்பானும்
மதித்திடும்பந்துநாசம் மனைவியாற்பொருளுஞ்சேதம்
கதித்திடுமத்தமோரை திசையிலேகால்கணோவு
விதித்திடுந்தலம்விட்டேகும் விஷத்தினால்துன்பமாமே.

(இ-ள்) இராகுதிசையில் சந்திரன்புத்தி வருஷம்-1 மாதம் 8-க்கும் பந்துக்கள்நாசம். மனையாளினால் பொருள்சேதம். கால்நோயுண்டாகும். இருக்குந்தலம்விட்டு பேகச்செய்யும். விஷத்தினால் துன்பமுண்டாகும் எ-று.

இராகுதிசையில் செவ்வாய்புத்தி

இன்புறுவிராகிற்செவ்வாய் மாதமீராறுமிக்க
வன்புறுநாள்மூவாறு மக்கினிபயங்கிலேசம்

மன்பகைவிஷத்தால்பீடை மருவுசண்டாளரின்பம்
துன்பமாங்களவுசண்டை துயர்மனக்கிலேசந்தானே.

(இ-ள்) இராகுதிசையில் செவ்வாய்புத்தி வருடம்-1 நாள் 18-க்கும் அக்கினிபயம். மனக்கிலேசம். விஷத்தினால் பீடையுண்டாகுதல். சண்டாளர்களுடைய நேசம், துன்பம், களவு, சண்டை, துயரம் இவைகளை விளைவிக்கும் எ-று. 36

குருதிசையில் குருபுத்தி

மருவியபொன்னின்மன்னன் மாதமையைந்துநாளோ
ஒருபதினெட்டினுக்கு உபகாரதாபமிக்க
பொருளுடன்றானியங்கள் பூஷணம்பூமிலாபம்
அரிவையர்சேர்த்தியின்ப மரசரால்மகிழ்ச்சியாமே.

(இ-ள்) குருதிசையில் குருபுத்தி வருஷம்-2 மாதம்-1 நாள் 18-க்கும் தாபம் நீங்கும். பொருள், தானியம், பூஷணம், பூமிலாபம், ஸ்திரீகள் சேர்த்தி, அரசர்களால் மகிழ்ச்சி, இவைகள் முதலானது முண்டாகும் எ-று.

குருதிசை சனிபுத்தி

பொருந்தியகுருவிற்காரி புகழ்திங்களாகும்பத்து
வருந்தியநாளீராறு மாதனம்பொருளும்வாய்க்கும்
திருந்தியகால்கைவாதஞ் சேயிழைதனக்குதுன்பம்
இருந்திடம்வெற்றியில்லை யிடர்வந்துநீங்குந்தானே.

(இ-ள்) குருதிசையில் சனிபுத்தி வருஷம்-2 மாதம்-6 நாள் 12-க்கும் நன்மையுண்டாகும். பொருள் கிடைக்கும். கால் கைகளில் வாதநோய் சம்பவிக்கும். மனையாளுக்குத் துன்பமுண்டாகும். தானிருக்குமிடத்தில் பலனிராது. இடரானது சம்பவித்து உடனே விலகிப்போகும் எ-று. 38

குருதிசையில் புதன்புத்தி

மருவியகுருவிற்புந்தி மாதமேவிருபத்தேழும்
அறுகுருநாளோராறு மாடலும்பாடல்ஞானம்
வருவதுபூசையாலும் வளமுளமாதர்மைந்தர்
பெருகிடும்செல்வமன்னாற் பெருமையும்புகழுண்டாமே.

(இ-ள்) குருதிசையில் புதன்புத்தி வருஷம்-2 மாதம்-3 நாள் 6-க்கும் ஆடல், பாடல், ஞானம், தேவபூசை, மாதா, மைந்தர், உண்டாம். செல்வம் பெறுகும். அரசர்களால் பெருமையும், புகழுமுண்டாம் எ-று. 39

குருதிசையில் கேதுபுத்தி

பரவியகுருவிற்கேது பதினேருமதிநாளாறும்
திரமுளமாதர்கேடு திருடுவான்தேசமெங்கும்
உரமுளவுற்றார்மற்றை யுறவினர்பகையதாகும்
நிரவியமனையாடன்னை னிலைவிட்டுப்போவதாமே.

(இ-ள்) குருதிசையில் கேதுபுத்தி மாதம்-11 நாள் 6-க்கும் மாதருக்குக் கேடு உண்டாகும். களவுதொழில் தேசமெங்குஞ் செய்யும்படி நேரும், உற்றார், மற்றவர், உறவின்முறையார் யாவரும் பகையாவார்கள். மனையாள் நிலைவிட்டு நீங்குவாள் எ-று. 40

குருதிசையில் சுக்கிரன்புத்தி

மருவியகுருவில்வெள்ளி மாதமுப்பத்திரண்டு
நிறைபரிகட்டுவர்க்க நிலைமையாம்பொருளுஞ்சேரும்
பொறையுளகன்னிமாதம் பூமியும்போகமுண்டாம்
குறைகடற்சுற்றத்தோடு குணமுடன்வாழ்வர்தாமே.

(இ-ள்) குருதிசையில் சுக்கிரன்புத்தி வருஷம்-2 மாதம் 8-க்கும் கன்று காலி, குதிரை, பொருள் இவைகள் சேரும். கன்னியர், மாதர்கள் சேர்க்கை யுண்டாகும். பூமியும், போகமுமுண்டாம். சுற்றத்தார்களோடுங் கூடி சுகமுங் குணமு முள்ளவனாய் வாழ்குவான் எ-று. 41

குருதிசையில் சூரியன்புத்தி

உலகுறுகுருவிற்பானு வொன்பதுநாண்மூவாறும்
நலமுறுமர்த்தலாபம் நாடியசுகமுங்கூடும்
பலகுறைநெருப்புகாற்றில் பிணிபலர்பகையும்பீடை
கலகமாமகத்திற்பின்பு காரியம்நன்மையாகும்.

(இ-ள்) குருதிசையில் சூரியன்புத்தி மாதம்-9 நாள் 18-க்கும் பொருள் லாபமுண்டாம். போஜன சவுக்கியமுண்டாம். பலவித துன்பம் நெருப்பாலுங் காற்றாலு முண்டாம். பிணியுடன் பகையினால் பீடைகாட்டும். மனையிற் கலகமாகி பின்பு காரியம் நன்மையாகும் எ-று. 42

குருதிசையில் சந்திரன்புத்தி

நின்றதோர்குருவிலிந்து நேர்பதினாறுமாதம்
வென்றிநற்சிவிகைமுத்து வெண்குடைபணியுமுண்டாம்
அன்றிநன்மனையாண்மைந்தர் அறிவுளோர்பொருளுஞ்சேரும்
என்றுநற்கருமமெல்லாந் தெய்வத்தாலெய்துந்தானே.

(இ-ள்) குருதிசையில் சந்திரன்புத்தி வருஷம்-1 மாதம் 4-க்கும் பல்லக்கு, முத்தாபரணம், வெண்குடை, ஆபரணம் இவை யுண்டாம். மனையாள், மைந்தர், அறிவுள்ளோர், பொருள் இவை முதலானதும் வந்து சேரும். இவை முதலானதும் தெய்வத்தின் கிருபையால் வந்துசேரும் எ-று. 43

குருதிசையில் செவ்வாய்புத்தி

பாங்குள்ளபொன்னிற்செவ்வா பதினொன்றுமதிநாளாறு
தீங்குறும்வினைகளுண்டாந் திருடரால்தீங்குதுன்பம்
ஆங்குறுமுற்றூர்சேத மல்லதுபிணிகளுண்டாம்
நீங்கியேநிலைவிட்டேகும் நினைத்ததுமுடிந்திடாதே.

(இ-ள்) குருதிசையில் செவ்வாய்புத்தி மாதம்-11 நாள் 6-க்கும் தீங்கான வினைகள் நேரும். திருடர்களாலும், அக்கினியினாலும் துன்பமுண்டாகும். உற்றூர் சேதமாகும். அல்லது பிணியுண்டாகும். நிலையைவிட்டுவோட்டும். நினைத்தது முடியாது எ-று. 44

குருதிசையில் ராகுபுத்தி

மாதங்கக்குருவில்ராகு மாதமோரிருபத்தெட்டும்
ஓதியநாள்மூவெட்டி லுடன்பகைசிறுவழக்குச்
சேதமாம்பொருள்விரோதஞ் சேயிழைதனக்குத்துன்பம்
சூதுகண்மிகவுண்டாகுந் தொடர்ந்திடுஞ்செல்வம்போமே.

(இ-ள்) குருதிசையில் இராகுபுத்தி வருஷம்-2 மாதம்-4 நாள் 24-க்கும் பகையுண்டாகும். சிறுவழக்கு உண்டாகும். பொருள் சேதமாகும். விரோதம் நேரும். மனையாளுக்குத் துன்பம் நேரும். சூதுகளினால் தனக்கு உண்டாகியிருந்த செல்வம் போய்விடும் எ-று. 45

சனிதிசையில் சனிபுத்தி

காரியிற்காரிமாதங் கருதியமுப்பத்தாறும்
வீரியமூன்றுநாளு மெய்யினில்வியாதிதோன்றும்
சீரியவடிமைமைந்தர் செல்வமுங்குறையும்பின்னும்
கூரியவுறவுதன்னாற் கொடுமையுந்தானுண்டாமே.

(இ-ள்) சனிதிசையில் சனிபுத்தி வருஷம்-3 நாள் 3-க்கும் திரேகத்தில் பிணியுண்டாகும். அடிமை, மைந்தர், செல்வம் இவைகள் குறை உண்டாகும். உறவினர்கள் தன்னால் கொடுமை யுண்டாகும் எ-று. 46

சனிதிசையில் புதன்புத்தி

பங்கினிற்புந்திபுத்தி நாலெட்டுநாளொன்பானும்
இங்கிதகல்விஞான மெழிலுடைபொருளுஞ்செல்வம்
மங்கையர்மருவிக்கூடும் மைந்தருஞ்சுற்றமுண்டாம்
பொங்கமாய்மன்னராலே புகழ்ந்துவாழ்ந்திருப்பர்தாமே.

(இ-ள்) சனிதிசையில் புதன்புத்தி வருஷம்-2 மாதம்-8 நாள் 9-க்கும் இங்கிதமாகிய கல்வியும், ஞானமும், உடை, பொருள், செல்வம், மாதர்கள் சேர்க்கையுண்டாகும். மைந்தரும், சுற்றமுமுண்டாகும். அரசர்களால் புகழ்ச்சியோடு வாழ்ந்திருப்பார்கள் எ-று. 47

சனிதிசையில் கேதுபுத்தி

படிமிசைசனியிற்கேது பதிமூன்றுமதிநாளொன்பான்
கடியதோர்வலக்கால்வாதங் காணுமேபித்தரோகம்
மிடியதுமைந்தனாலே விஷபயமர்த்தநாசம்
கொடியிடையவராற்றுன்பங் கோளினாற்கலகமாமே.

(இ-ள்) சனிதிசையில் கேதுபுத்தி வருடம்-1 மாதம்-1 நாள் 9-க்கும் வலது காலில் வாதமுண்டாகும். பித்தரோகம் காட்டும். மைந்தனால் இடியுண்டாகும். விஷபயங்காணும். மாதர்களாலும் கோளினாலுந் துன்பமுங் கலகமும் உண்டாகும் எ-று. 48

சனிதிசையில் சுக்கிரபுத்தி

முனிவுறுசனியில்வெள்ளி மாதமோமுப்பத்தெட்டு
இனியதோர்பணிநல்லார்தம் மின்பமும்வெற்றியுண்டாம்

வனிதையர்சேர்வர்லாப மக்களுஞ்சுற்றமுண்டாம்
தனியொருபகையுண்டாகுந் தன்னையும்வெல்லலாமே.

(இ-ள்) சனிதிசையில் சுக்கிரன்புத்தி வருடம்-3 மாதம் 2-க்கும் பணிகள் சேரும். நல்லோருடைய நேசங்கூடும். வெற்றியுண்டாகும். ஸ்திரீகள் சேர்க்கையும் மைந்தர்கள் சுற்றத்தாரு முண்டாகும். ஒரு பகை நேரும் அதனையும் வெல்லலாகும் எ-று. 49

சனிதிசையில் சூரியன்புத்தி

பாவியசனியிற்பானு பதினொன்றுநாளீராறும்
உரமுளரத்தமேக முதரத்திற்சூலைகண்ணோய்
திரமுளமனையாள்மக்கள் வருந்திடும்நோயினாலே
கரமதுவெரிவாங்காலுங் கடுவலிவாதமாமே.

(இ-ள்) சனிதிசையில் சூரியன்புத்தி மாதம்-11 நாள் 12-க்கும் ரத்தமேகங்காணும். உதிரம் பெருகும். சூலைரோக முண்டாகும். கண்ணோய் காணும். மனையாளும் மக்களும் நோயினால் வாதைப்படுகுவர். கையெரியும் காலில் வாதரோகம் சம்பவிக்கும் எ-று. 50

சனிதிசையில் சந்திரபுத்தி

மதமுறுசனியிலிந்து மாதம்பத்தொன்பதுக்கும்
விதமதாங்கலகம்பீடை வீட்டினில்வழக்குச்சண்டை
பதமதாம்பணிபூணாரம் பலவளம்பொருளுஞ்சேதம்
அதமமாந்தலங்கள்விட்டே யவதியால்மீள்வர்தாமே.

(இ-ள்) சனிதிசையில் சந்திரன்புக்தி வருடம்-1 மாதம் 7-க்கும் கலகம், பீடை, வீட்டில் வழக்கு, சண்டை, பணிகள், பலபொருள் சேதமாகும். இருப்பிடம் விட்டு நீக்கும் அவதிப்படுவர் எ-று. 51

சனிதிசையில் செவ்வாய்புத்தி

பலனிலாச்சனியிற்செவ்வாய் பதின்மூன்றுநாளொன்பானும்
குலங்களிலீனமிக்க கொடும்பகைபழியுங்காட்டும்
அலைந்திடும்தேசமெங்கு மனைவரும்விரோதமாவர்
தலங்களிற்பொன்னுற்சோரந் தலம்விட்டுப்பிரியுந்தானே.

(இ-ள்) சனிதிசையில் செவ்வாய்புத்தி வருடம்-1 மாதம்-1 நாள் 9-க்கும் குலத்தில் ஈனமான தொழில் நேரும். கொடுமையாகிய பகை விளைவிக்கும். அலைச்சலாய் தேச சஞ்சாரஞ் செய்குவன். அனைவரையும் விரோதமாக்கி வைக்கும். தலத்திற் பொன்சோரம் போகும். தலம்விட்டுப் பிரிந்துபோம்படிச் செய்யும் எ-று. 52

சனிதிசையில் ராகுபுத்தி

முன்னமேசனியில்ராகு முப்பதுமதிநாளாறும்
சொர்ணமும்சேதமாகும் விஷமதுபற்றித்தீண்டும்
இன்னமுஞ்சரீரமெங்கு மேறுநவியாதியுண்டாம்
அன்னியர்பகையதாகு மல்லலுமிகுதியாமே,

(இ-ள்) சனிதிசையில் இராகுபுத்தி வருடம்-2 மாதம்-10 நாள் 6-க்கும் பொன்சேதமாகும். விஷம்பற்றித்தீண்டும். சரீரத்தில் விஷமேறி வியாதியுண்டாகும் அன்னியர்களுடைய பகையுண்டாகும், அல்லது மிகுத்த வியாதிகாட்டும் எ-று. 53

சனிதிசையில் குருபுத்தி

முன்புறுசனியில்மன்னன் முப்பதுநாளீராறும்
அன்புறுமடியார்சேர்வ ராடையாபரணமுண்டாம்
இன்பமாமரசராலே யெண்ணியகருமமாகும்
மின்கொடியுடனேசுற்ற மிகுதியாம்பலனுண்டாமே.

(இ-ள்) சனிதிசையில் குருபுத்தி வருஷம்-2 மாதம்-6 நாள் 12-க்கும் நண்புள்ள அடியார்கள் சேர்வார்கள், ஆடையாபரணங்களுண்டாகும். அரசர்களால் நினைத்தவேலைகள் யாவுமுடியும். மனையாளுடன் சுற்றமும் மிகுந்த பலனுடன் வாழ்குவன் எ-று. 54

புதன்திசையில் புதன்புத்தி

வலம்புரிதன்னிற்புந்தி மாதமோரிருபத்தெட்டுந்
துலங்குநாள்மூவொன்பானுஞ் சுற்றமுந்துணையுமுண்டாம்
பலன்தருமாதர்லாபம் பாக்கியமிகவுமுண்டாம்
நலம்பெறும்ஞானங்கல்வி நாடியகருமமாமே.

(இ-ள்) புதன் திசையில் புதன்புத்தி வருடம்-2 மாதம்-4 நாள் 27-க்கும் சுற்றத்தாருடன் துணைவர்களுண்டாம். பலன் பெருகத்தக்க மாதர் லாபமுண்டாம். பாக்கியமுண்டாம். நலம்பெறத்தக்க ஞானமுங் கல்வியும் உண்டாகும். நினைத்தகாரியம் முடிப்பான் எ-று. 55

புதன்திசையில் கேதுபுத்தி

பரிந்திடும்புதனிற்கேது பதினோருமாதம்பின்னும்
வருந்துநாள்மூவொன்பானு மாதலந்தனைவிட்டேகும்
பொருந்திடும்வியாதிபீடை பொருட்சேதமுற்றார்கேடு
மருந்திடுங்குணத்தால்துன்ப மனமதுகிலேசந்தானே.

(இ-ள்) புதன்திசையில் கேதுபுத்தி மாதம்-11 நாள் 27-க்கும் தன் இடத்தைவிட்டு நீங்கும். குடியாக வியாதியும் பீடையுமுண்டாகும். பொருள் சேதமாகும். உற்றாருக்குக் கேடுவிளைவிக்கும். மருந்தினால் துன்பம் நேரும். மனக்கிலேச முண்டாகும் எ-று. 56

புதன்திசையில் சுக்கிரன்புத்தி

வாசமாம்புதனில்வெள்ளி மாதமுப்பதுமேநான்கு
நேசமாமக்கட்பேறு நேரிழையுடனேயின்பம்
பாசமாஞ்சுபங்கள்வித்தை பலவணிமற்றுமுண்டாம்
தேசமேபோனார்மீள்வர் சேயிழைமணமுமாமே.

(இ-ள்) புதன் திசையில் சுக்கிரன்புத்தி வருடம்-2 மாதம் 10 க்கும் சந்ததியுண்டாகும். மனையாளுடன் இன்பமாக விருப்பன். சுபகாரியங்கள் முடிப்பன். வித்தை பலதும் உண்டாகும். தேசாந்திரம்போனவர்கள் மீண்டு வருகுவர். மணங்கள் நடக்கும் எ-று. 57

புதன்திசையில் சூரியன்புத்தி

நேருற்றபுதனிற்பானு நீடியமாதம்பத்தும்
சீருற்றநாட்களாறுஞ் செந்தழற்பயங்கிலேசம்
பாருற்றமனையாள்பீடை பகைவருமிடையூறுண்டாம்
வாருற்றகொங்கையாளே மன்னரால்துன்பமாமே.

(இ-ள்) புதன் திசையில் சூரியன்புத்தி மாதம்-10 நாள் 6-க்கும் அக்கினியால் பயம், கிலேசம். மனையாளுக்குப் பீடை பகை நேரும். இடையூறண்டாகும். அரசர்களால் துன்பமும் உண்டாகும் எ-று. 58

புதன்திசையில் சந்திரன்புத்தி

வாரணப்புதனிற்சோமன் மாதமோபதினேழுக்கும்
பூரணமானசோகை கண்டபின்புறங்கால்வீங்கும்
காரணக்கலகம்பெண்ணாற் கனபீடைசிலுகுமுண்டு
தாரணிதன்னில்மாந்தர் தமக்கெலாம்பகையதாமே.

(இ-ள்) புதன் திசையில் சந்திரன்புத்தி வருடம்-1 மாதம் 5-க்கும் பூரணமான சோகைநோய் கண்டு புறங்கால்கள் வீங்கும். கலகம் பெண்பாலால் விளையும். கனமாகிய பீடையுண்டாகும். சிலுகு உண்டாகும். உலகத்தில் யாவருக்கும் பகையாகுவான் எ-று. 59

புதன்திசையில் செவ்வாய்புத்தி

பன்னியபுதனிற்செவ்வாய் பதினொன்றுநாள்மூவொன்பான்
தன்னிலேபித்தரோகங் காமாலைதலைநோக்காடு
அன்னியர்பகைவிரோத மாயுதத்தாலேபீடை
முன்னொருபகையுமுண்டு முடியவேகலகந்தானே.

(இ-ள்) புதன் திசையில் செவ்வாய்புத்தி மாதம்-11 நாள் 27-க்கும் பித்தரோக முண்டாகும். காமாலை ரோகம், தலைநோக்காடு இவையுண்டாகும். அன்னியர்கள் பகை விரோதம். ஆயுதங்களினால் பீடையுண்டாகும். முன்னதாக ஒரு பகையுண்டாகி அதினால் கலகம் நேரும் எ-று. 60

புதன்திசையில் ராகுபுத்தி

நற்புதன்தனிலேராகு முப்பதுநாள்மூவாறும்
நிற்பதோர்நிலைவிட்டேகு நீசரால்விஷத்தாலையம்
மற்பொருபூசலுண்டா மனத்திடரார்த்தவானி
சொற்பனந்தலைநோய்பித்தஞ் சூட்சுமாமன்னனந்தானே.

(இ-ள்) புதன் திசையில் இராகுபுத்தி வருடம்-2 மாதம்-6 நாள் 18-க்கும் தான் இருக்கும் இடத்தைவிட்டு பேர்க்கும். நீசர்களாலும் விஷஜெந்துக்களாலும் ஐயமுண்டாகும். பூசலுண்டாகும். அர்த்த ஆனியாகும். சொப்பனங்கள் காணுதலாகும். தலைநோயுண்டாகும். பித்தமதிகரிக்கும். போஜனங்கொள்ளாது எ-று. 61

புதன்திசையில் குருபுத்தி

புந்தியிற்பொன்னன்மாதம் புகழ்பெறவிருபத்தேழும்
வந்தநாளாறுமின்ப மன்னரால்மகிழ்ச்சியாகும்

சிந்தையிற்கிலேசமில்லை சிறுவருஞ்சுற்றமுண்டாம்
பைந்தொடிமணமதாகும் பாக்கியமிகவுண்டாமே.

(இ-ள்) புதன்திசையில் குருபுத்தி வருடம்-2 மாதம்-3 நாள் 6-க்கும் இன்பமுண்டாகும். அரசர்களால் மகிழ்ச்சி யுண்டாகும். மனதில் கிலேசமில்லை. மைந்தருஞ் சுற்றத்தாருமுண்டாம், பெண்கலியாணமாகும். பாக்கியமுண்டாகும் எ-று. 62

புதன்திசையில் சனிபுத்தி

நன்றிசேர்புதனிற்காரி நாலெட்டுமதிநாளொன்பான்
இன்றிடுநன்மைநாளு மெதிர்த்திடும்பகையுமுண்டாம்
சென்றிடும்வலக்காலேனுயாந் திசையுத்திராடத்துன்பம்
மன்றிடுமுற்றூர்கேடு மனதினில்கிலேசமாமே.

(இ-ள்) புதன்திசையில் சனிபுத்தி வருடம்-2 மாதம் 8 நாள் 9-க்கும் நன்மையானது விலகிப்போகும். பகையானது வந்தணுகும். வலதுகாலில் பிணியுண்டாகும். திசைவருங்காலம் உத்திராடத்தில் துன்பமுண்டாகும். உற்றூர்களுக்குக் கேடு உண்டாகும். மனக்கிலேச முண்டாகும் எ-று. 63

கேதுதிசையில் கேதுபுத்தி

ஈண்டியகேதிற்கேது நாலுநாளிருபத்தேழும்
வேண்டியமனையாள்மக்கள் சகோதரவெறுப்புண்டாகும்
பூண்டிடும்விலங்குகாலில் பூரட்டாதியுள்ளேதீரும்
ஆண்டதுபுருஷர்தார்க்குத் திசையதுயவதிதானே.

(இ-ள்) கேதுதிசையில் கேதுபுத்தி மாதம்-4 நாள் 27-க்கும் மனையாள், மக்கள், சகோதரர் இவர்களுக்கு வெறுப்புண்டாகும். விலங்குகாலிற்பூணும். பூரட்டாதி நட்சத்திரத்திற்குள் நிவர்த்தியாகும். புருஷர்களுக்கு இத்திசை துன்பப்படுத்தும் எ-று. 64

கேதுதிசையில் சுக்கிரன்புத்தி

பூரியேகேதில்வெள்ளி புத்தியீரேழுமாதம்
பாரியமக்கட்பேறு பலித்திடுங்கன்றுகாலி
காரியமெல்லாங்கூடும் கடைசியிற்பீடையுண்டு
வீரியமனையாள்நோயா மீளவுமகன்றுபோமே.

(இ-ள்) கேதுதிசையில் சுக்கிரபுத்தி வருடம்-1 மாதம் 2-க்கும் மனையாளும் மக்களும், நன்மையாக வாழ்குவர். கன்று காலி பலித்திடும். நினைத்தகாரியங்கள் யாவுங்கைகூடும். புத்தி கடைசியில் பீடையுண்டாகும். உடனே தீரும் எ-று. 65

கேதுதிசையில் சூரியன்புத்தி

அந்தமாங்கேதிற்பானு நாற்றிங்களாறுநாளும்
சிந்திடும்பூமிவிட்டுத் தேசம்போய்வருவன்பின்பு
சுந்தரமேனியெங்குஞ் சுரந்தலைநோயுண்டாகும்
மைந்தராலையமாகி மனதினிற்கிலேசந்தானே.

(இ-ள்) கேதுதிசையில் சூரியன்புத்தி மாதம்-4 நாள் 6-க்கும் தான் வாழ்ந்திருந்த தேசத்தைவிட்டு பரதேசம்போய் மறுபடியும் வந்து சேருவன்,

மனையாளுக்கு நிரோகத்தினும் தலையினும் நோயுண்டாம். மைந்தர்களால் ஐயமுங் கிலேசமுமுண்டாம் எ-று. 66

கேதுதிசையில் சந்திரன்புத்தி

சாதகக்கேதிலிந்து தன்புத்தியேழுமாதம்
மாதரால்வழக்குசண்டை மைந்தற்குப்பீடையுண்டாம்
போதவேகன்றுகாலி பொன்னுமாபரணமுண்டாம்
சீதளமுகத்தினுளே தீங்குவந்தகன்றுபோமே.

(இ-ள்) கேதுதிசையில் சந்திரபுத்தி மாதம் 7-க்கும் ஸ்திரீகளால் வழக்கு சண்டையுண்டாம். மைந்தர்களுக்குப் பீடையுண்டாகும். கன்று காலியுடன் ஆபரணாதிகளுண்டாகும். தீங்கானது வந்துநீங்கும் எ-று. 67

கேதுதிசையில் செவ்வாய்புத்தி

கடையரவதனிற்செவ்வாய் கலந்திடுமாதம்நாலு
இடையுறுமிருபானேழ்நா ளிடர்பயமர்த்தவானி
தடையுறும்பெண்ணாற்கேடு தழல்பயமிகவுண்டாகும்
படையுறுவழக்குச்சண்டை பலபலவிரோதமாகும்.

(இ-ள்) கேதுதிசையில் செவ்வாய்புத்தி மாதம்-4 நாள் 27-க்கும் பொருள்சேதம். ஸ்திரீகளினால் கேடுநேரும். அக்கினியால் பயமுண்டாகும். படையினாலும், வழக்காலும், சண்டையுண்டாம். பலபல விரோதங்கள் வந்துசேரும் எ-று. 68

கேதுதிசையில் ராகுபுத்தி

கேதுவில்ராகுபுத்தி கேள்பன்னிரண்டுமாதம்
மீதியீரொன்பாநாளும் விஷபயம்வந்துதீரும்
மாதர்கள்தமக்குப்பீடை மன்னவனுசமாவான்
போதவேயர்த்தநாசம் புகழ்நிலைகுன்றிடாதே.

(இ-ள்) கேதுதிசையில் இராகுபுத்தி வருடம்-1 நாள் 18-க்கும் விஷபயமுண்டாகும். மாதர்களுக்குப்பீடை. மன்னன் நாசமடைவன். பொருள்நாசமாகும். புகழானது குறையும் எ-று. 69

கேதுதிசையில் குருபுத்தி

பரிவுளகேதுவுக்குள் பாங்குள்ளமன்னன்புத்தி
ஒருபதினொன்றுநாட்க ளோராறுமர்த்தலாபம்
மருவியமன்னர்சேர்த்தி விஷபயம்வந்துதீரும்
திருவெனமனையாள்சேர்வள் செல்வமுமிகுதியாமே.

(இ-ள்) கேதுதிசையில் குருபுத்தி மாதம்-11 நாள் 6-க்கும் அர்த்தலாபமுண்டாம். மன்னர்களிடத்தில் சேர்க்கை யுண்டாம். விஷபயம் சம்பவித்துத்தீரும். அழகு பொருந்திய மனையாள் சேர்வள். செல்வமுண்டாம் எ-று. 70

கேதுதிசையில் சனிபுத்தி

சதியுறுகேதுவுக்குள் சனிபுத்தியானமாதம்
பதின்மூன்றுநாளொன்பானி லுயிர்பொருள்சேதமாகும்

மதிதலம்பேதமாகும் அங்கத்திற்சொறிசிரங்கு
மதிமுகத்தரிவைபீடை மனமதுகிலேசமாமே.

(இ-ள்) கேதுதிசையில் சனிபுத்தி வருடம்-1 நாள் 9-க்கும் உயிர், பொருள் சேதமாகும். மனபேதமாகும். சொறிசிரங்குண்டாகும். மனையாளுக்குப் பீடை. மனக்கிலேச மிவைகளுண்டாம் எ-று. 71

கேதுதிசையில் புதன்புத்தி

குலமுளகேதிற்புந்தி குறித்திடும்புத்திமாதம்
நலமுறும்பத்துமொன்று நாளிருபத்தேழுக்கும்
தலமதுவிட்டுப்போகுந் தழலினாற்பயமுண்டாகும்
நிலமையாம்புத்திரசோபம் நினைத்ததுமுடிந்திடாதே.

(இ-ள்) கேதுதிசையில் புதன்புத்தி மாதம்-10 நாள் 27-க்கும் தலம் விட்டு நீக்குவன். அக்கினியினால் பயம் உண்டாகும். புத்திரசோபமாகும். நினைத்தவை முடியாவாம் எ-று. 72

சுக்கிரதிசையில் சுக்கிரபுத்தி

வண்மையாம்புகரில்வெள்ளி மாதங்கள்நாற்பதுக்கும்
உண்மையாம்பணிகண்முத்து முயர்குடைபுரவியானை
நன்மையாம்புன்மைநீங்கி நாளிலேதனமுஞ்சேரும்
எண்மையங்கிசத்திற்றுக்க மெய்துமைப்பிசியிற்றானே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் சுக்கிரன்புத்தி வருடம்-3 மாதம் 4-க்கும் ஆபரணம், முத்துமாலை, குடை, புரவி, யானை இவையுண்டாம். புன்மையானது நீங்கி தனஞ்சேர்க்கையாகும். ஐப்பிசிமாதத்தில் துக்கமுண்டாம் எ-று.

சுக்கிரதிசையில் சூரியன்புத்தி

சிறந்திடும்புகரிற்பானு திங்களீராறுந்துன்பம்
குறைந்திடும்தனமும்நாளிற் கொடும்பகையரசராலே
பரந்திடும்மனையாள்மக்கள் பலருடன்வழக்காமென்க
குறைந்திடும்தெய்வமுற்று றுறவதுபகையதாமே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் சூரியன்புத்தி வருடம் 1-க்கும் அரசரால் பகைநேரும். மனையாள், மக்கள் அலைச்சல்படுவர். பலரிடத்தும் வழக்கு நேரும். தெய்வசகாய மில்லாமல் உறவாகியவர் பகை வந்துநேரும் எ-று. 74

சுக்கிரதிசையில் சந்திரன்புத்தி

மருவியபுகரிற்சோமன் மாதமோரிருபதுக்கும்
கருதியகருமநாளில் வந்துகைகூடுமென்க
அருகுருமனையாளாலே யிடர்பகைவந்துதீரும்
கருவியவொன்பாமாதம் போடுயர்விணக்கமாமே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் சந்திரன்புத்தி வருடம்-1 மாதம் 8-க்கும் நினைத்தவை வந்துகூடும். மனையாளுக்கு வந்த யிடர்தீரும். பகைவிலகும். 9-ஆம் மாதம் துயரமானது தீரும் எ-று. 75

சுக்கிரதிசையில் செவ்வாய்புத்தி

புண்ணியப்புகரிற்செவ்வாய் புகழ்திங்களீரேழுக்கும்
நண்ணியபூமியுண்டாம் நாரியார்கருமநாசம்
எண்ணியதேவர்சேவை யிருவராற்பகையுண்டென்னும்
கண்ணிநோய்மெய்யிற்குட்டங் கண்டதுதீருந்தானே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் செவ்வாய்புத்தி வருடம்-1 மாதம் 2-க்கும் கோரிய பூமிகிடைக்கும். ஸ்திரீகளின் இடர்தீரும். தேவசேவையுண்டாகும். இருவர்களுடைய பகைநேரும். கண்ணோயும், மெய்யிற் குஷ்டமுமுண்டாகி பின்பு தீரும் எ-று. 76

சுக்கிரதிசையில் இராகுபுத்தி

திருந்தியபுகரில்ராகு திங்களோர்முப்பத்தாறும்
பொருந்தியமுனியைப்போலே பூமியிற்றபசுசெய்வன்
வருந்தியேமைந்தராலே வருங்கலகங்கண்மெத்த
அருந்தியமருந்தினாலே விஷமதாலலைவன்றானே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் இராகுபுத்தி வருடம் 3-க்கும் முனிவர்கள் போல் தபசுசெய்குவன். மைந்தர்களால் கலகம் வருகும். சாப்பிடும் மருந்தாலும் விஷத்தினாலும் அலைச்சல் உண்டாகும் எ-று. 77

சுக்கிரதிசையில் குருபுத்தி

முன்புறுபுகரின்மன்னன் முப்பத்திரெண்டுமாதம்
இன்புறுதானியங்க ளெய்துமேயர்த்தலாபம்
அன்புறுமறையோராலே யதிசயமிகவுண்டாகும்
மன்புகழ்தோணிவிட்ட திசையினில்வருத்தமாமே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் குருபுத்தி வருடம்-2 மாதம் 8-க்கும் தனதான்னியங்கள் பலிதமாகும். விருத்தியான இலாபங்கிடைக்கும். பிராமணர்களால் அதிசயமான காரியங்கள்கூடும். இந்த திசைதோற்றிய முதலில் வருத்தமுண்டாகும் எ-று. 78

சுக்கிரதிசையில் சனிபுத்தி

சாலவேவெள்ளிதன்னிற் சனிமாதம்முப்பத்தெட்டும்
மூலமாநோயினாலே முயங்கியேமீளுங்கைகால்
வேலெனும்விழியாள்துன்ப மெய்யினில்ரோகமுண்டு
ஆலமாம்விஷம்போலன்ன மரோசிகமாகுந்தானே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் சனிபுத்தி வருடம்-3 மாதம் 2-க்கும் மூலரோகமுண்டாம். அதினால் மனக்கிலேசம் மனையாளுக்குத் துன்பம். மெய்யில் ரோகமுண்டாகும். அன்னம் விஷம்போல் இருக்கும் எ-று. 79

சுக்கிரன்திசையில் புதன்புத்தி

வெள்ளியிற்புந்திமாதம் விரும்புமுப்பத்திநான்கும்
தெள்ளியமனையாள்மக்கள் சீருடன்பொருளுண்டாகும்
வள்ளியகல்விஞானம் வாக்கினால்பாடலாகும்
நள்ளியசிவப்பினாலே நன்மைகள்பலவுண்டாமே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் புதன்புத்தி வருடம்-2 மாதம் 10-க்கும் மனையாளும் மக்களும் பொருளும் உண்டாகும். கல்வியின் பயிற்சியால் ஞானமுதலானதும் வாக்கால் பாட சக்தியுண்டாகும். சிவந்தபொருளால் பலன் மிகவுமுண்டாகும் எ-று. 80

சுக்கிரன் திசையில் கேதுபுத்தி

இட்டமாம்வெள்ளிதன்னிற் கேதுவீரேழுமாதம்
துட்டமாமிருகத்தாலே துன்பமுமிகவுண்டாகும்
அட்டமாமனையாடன்னி னனுபோகத்தாலேனோயாம்
திட்டமாய்விஷந்தான்வீட்டிற் றீண்டியேமீளுந்தானே.

(இ-ள்) சுக்கிரன்திசையில் கேதுபுத்தி வருடம்-1 மாதம் 2-க்கும் துஷ்டமிருகத்தால் துன்பமுண்டாகும். மனையாளிடத்தில் அனுபோகஞ்செய்தால் நோயுண்டாம். விஷபாம்பானது வீட்டில் தீண்டி உடனே நீங்கும் எ-று. 81

திசைபலன் விபரம்

புத்தியின்பலன்கடம்மைப் பொதுமையாயுரைத்தாரேனும்
சித்தமாய்க்கோள்கள்நின்ற திரிகோணங்கேந்திரமுச்சம்
தத்தியவியமாரெட்டுப் பகைநீசநான்கோரம்சம்
ஒத்தநல்லாதிபத்தியம் வர்க்கமோடவஸ்தைவக்கிரம்.

இதுவுமது

பாவத்திற்கண்டயோக மவயோகந்தன்னைப்பார்த்து
பூவருமானேநல்ல பலன்களைப்புகலவேண்டும்
தாவருசித்திரமுட்த் திரத்திற்கும்புத்திபோலே
ஓவறபலன்கள்சொல்வ ருயர்மதிவல்லோர்தாமே.

பொருத்த நிர்ணயம்

1-வது தினப்பொருத்தம்

பெண்நட்சத்திரமுதலாக புருஷ நட்சத்திரம் வரையில் எண்ணி, கண்டதொகை முதலாவது தாராபலன். 6 ல் கழித்து மிச்சம் 2-4-8-9-ஆனால் உத்தமம், 1-5-ஆனால் மத்திமம், 3-7-ஆனால் அதமம்.

2-வது கணப்பொருத்தம்

சதிபதிகளுடைய நட்சத்திர கணம் ஒன்றாகில் நன்று, தெய்வகணமும் ராட்சதகணமுமாகில் பகை, தெய்வகணமும் மனிதகணமுமாகில் சமம், புருஷன் மனிதகணமும் பெண் ராட்சதகணமுமாகில் கூட்டலாம், பெண் மனிதகணமும் புருஷன் ராட்சதகணமுமாகில் தள்ளுபடி செய்யவும். மற்றும் பலநூலாசிரியரும் கூறியதாவது.

அரக்கருந் தேவர்தாமு மலைப்பகை யரக்கரோடே
பெருக்கவு மனிதர்சேரில் பிணம்படு மக்களோடே

செருக்கிய தேவர்சேரின் மத்திபஞ் செல்வமுண்டா
மிருக்குமேற் கணங்களென்றே யிவைநல மாதுமொன்றே.

(இ-ள்) இராக்ஷதகணமும் தேவகணமுமாகில் சிலுகு, ராக்ஷதகணமும் மனிதகணமுமாகில் மரணம், மனுஷகணமும் தேவகணமுமாகில் மத்திமம், இரண்டும் ஒருகணமாகில் உத்தமம் எ-று.

மேற்சொன்ன வசனத்தில் பெண் ராக்ஷதகணமும், புருஷன் மனிதகணமுமாகில் கூட்டலாம் என்றனர். இச்செய்யுளால் (பொதுவாய் சதிபதிகள் ராக்ஷதகணமும் மனிதகணமுமாகில் மரணம் என்றது மதவேற்றுமையாம்.) இவை மண்டலபுருடனால் கூறியதாகும்.

3-வது மகேந்திரப் பொருத்தம்

ஸ்திரீ நட்சத்திரமுதல் புருஷ நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகை, 1-4-7-10-13-16-22-25-வருமாகில் உத்தமம். அல்லாதவை மத்திமம்.

4-வது ஸ்திரீ தீர்க்கபொருத்தம்

ஸ்திரீ நட்சத்திரமுதல் புருஷ நட்சத்திரம் வரையில் எண்ணிய தொகை 13 க்கு மேற்பட்டால் உத்தமம், அல்லாதவை மத்திமம்.

5-வது யோனிப்பொருத்தம்

சதிபதிநாள் இரண்டும், ஆணாகிலும் பெண்ணாகிலும் தீது. மாறி னிற்கில் கூட்டலாம்.

இந்நூலாசிரியர் பொதுவாய் இரண்டுயோனியும் ஒன்றாயிருக்கின் கூட்டலாகாதென்றும், சதிபதிகள் யோனிபேதமிருக்கின் செய்யலாமென்றும் பொதுவிஷயமாய் கூறியதால் எந்தயோனிக்கு எவை பகையென்பதை கீழேகூறுவாம்.

யானைக்குப் பகை மனிதர், குதிரைக்குப் பகை பசு, எருமை மான் கிடா இவற்றிற்குப் பகை புலி, பாம்புக்குப் பகை ஆடு, குரங்குக்குப் பகை நாய், எலிக்குப் பகை பூனை என்றும் (சதிபதிகள்) இரண்டுயோனியும் புருடயோனியாகில் சண்டையென்றும், இரண்டுயோனியும் ஸ்திரீயோனியாகில் உத்தமம், ஸ்திரீயே பெண்யோனியாயும், புருஷனே ஆண்யோனியாயுமிருக்கில் மகா உத்தமம் என்று கூறியிருப்பதையுங் காண்க. இவை மண்டலபுருடனலருளிய சூடாமணியின்படியாகும்.

யோனிப்பொருத்தம் பார்ப்பது ராசிபொருத்தங்கள் கொள்ளும் விவரம் ஸ்திரீராசியிலிருந்து புருஷராசியளவு மெண்ணினால் ஏழாமிராசியாகினும் ஏழினுக்கு மேற்படினும் உத்தமம்.

6-வது ராசிப்பொருத்தம்

ஸ்திரீயினுடைய ராசிமுதல் புருஷராசிவரையில் எண்ணிய தொகை 7-க்கு மேற்பட்டால் உத்தமம், அல்லாதவை மத்திமம்.

7-வது இராசியாதிபதிப் பொருத்தம்

ஸ்திரீயினுடைய யாசியாதிபதிக்கும் புருஷனுடைய ராசியாதிபதிக்கும் உறவானால் உத்தமம், பகையானால் மத்திமம்.

8-வது வசியப்பொருத்தம்

ஏகாதிபத்திய ராசிகள் ஆனால் வசியம் நல்லது, அல்லாதது தீது.

9-வது வேதைப்பொருத்தம்

ஒருவரையில் நிற்கில் தீது, மாறிநிற்கில் நன்று.

10-வது ரச்சுப்பொருத்தம்

ஒருவரையில் நின்றால் தீது, அல்லாதவைகள் நன்று.

11-வது விருட்சப்பொருத்தம்

இரண்டும் வைரமாகில் தீது, மாறிநின்றாலும் பால் விருக்ஷமாகிலும் உத்தமம்.

12-வது பஞ்சபட்சி

அதற்கு அடுத்தவரில் பகை, ஒன்று இரண்டு யிடைவிட்டு வந்தால் நன்று.

13-வது பட்சிப்பொருத்தம்

பகை யறியும் விவரம் ஒன்றையொன்று விழுங்கும் பக்ஷியாயின் தீது. அல்லாதவை நன்மை எனக்கொள்க.

14-வது சாதிப்பொருத்தம்

பிர்ம - க்ஷத்திரிய - வைசிய - சூத்திரர்-உயர்ந்தசாதி, பாஷாண்டி-வேசி-விப்பிரன்-தாழ்ந்தசாதி, ஆண் உயர்ந்தசாதியும், பெண் தாழ்ந்த சாதியுமாகில் கூட்டலாம், மாறிநிற்கில் தள்ளுபடி, ஒரேசாதியாகிலும் கூட்டலாம்.

15-வது ஏகநாள் பொருத்தம்

சுவாதி-முப்பூரம்-மூலம்-விசாகம்-ஆயிலியம்-கேட்டை-பரணி - அவிட்டம் இந்த 10-நட்சத்திரம் அதமம், திருவாதிரை-ரோகணி-உத்திரட்டாதி-பூசம்-மகம்-ரேவதி-திருவோணம்-அஸ்தம் ஆக 8-நாளும் மகா உத்தமம், உத்திராடம் - அசுவனி - கார்த்திகை-மிருகசீரிடம்-புனர்பூசம்-சித்திரை-அனுஷம்-சதையம்-உத்திரம் ஆக 6-நாளும் மத்திமமாயினும் கூட்டலாம்.

16-வது முற்பாடு பிற்பாடு

ஆண் நாள்முதல் பெண்ணாளளவும், பெண்ணாள்முதல் ஆண் நாளளவும் யெண்ணி 7-ல் கழித்தமிச்சம் குறைந்தது எவரோ அவருக்கு முன்னே மரணஞ் சொல்லவும்.

ஜாதக தெளிவானந்தமணி மூலமும் உரையும்

முற்றிற்று.

பூமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1941.